# தேவனுடைய வழிகள் நாம் காணவேண்டும்



சகரியா பூணன்

# தேவனுடைய வழிகள் நாம் காண வேண்டும்

சகரியா பூணன்

“தாழ்மையுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்”
(சங்கீதம் 25:9).

**Knowing God's Ways - Tamil**
**Zac Poonen**

© Zac Poonen, 1974

tamil.cfcindia.com

7 9 11 13 12 10 8

Paperback ISBN : 978-81-943760-0-2

"Scripture Quotations are from The Holy Bible, BSI-Tamil O.V
Published by: The Bible Society India.
Used by Permission. All rights reserved".

**This book has been copyrighted to prevent misuse.**

**No part of this work may be reproduced or transmitted in any form or by any means - for example, electronic or mechanical, including photocopying and recording without the prior written permission of the publisher.**

For further details please contact:

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

# பொருளடக்கம்


1. என் கண்கள் கண்ட உத்தம தேவ வழிகள்! . . . . . . . . . . . . . . . 7

2. ஊழியத்திற்கு தேவன் விரும்பும் தகுதிகள் வேண்டும்! . . . . . 24

3. இயேசுவின் தாழ்மைகொண்ட ஊழியர்கள் வேண்டும்! . . . . . . 35

4. ஆவிக்குரிய மனிதனை இனம்காண வேண்டும்! . . . . . . . . . . . . 49

5. சபைக்கு அனல் கொண்ட காவலன் வேண்டும்! . . . . . . . . . . . 56

6. மரத்தின் வேரை கோடாரி வீழ்த்த வேண்டும்! . . . . . . . . . . . . . . 62

7. பொறாமை அற்ற ஆபேலின் நல்ல இருதயம் வேண்டும்! . . . . . 79

8. ஒன்றிற்கும் கடன்படா வாழ்க்கை வேண்டும்! . . . . . . . . . . . . . 86

9. சபையில் அக்கினி பற்றியெரிய வேண்டும்! . . . . . . . . . . . . . . . 97

10. தேவனுடைய சபையின் அருமை காண வேண்டும்! . . . . . . . . 111

11. சுத்த இருதயம் கொண்ட தூய வாழ்க்கை வேண்டும்! . . . . . . 121

12. ஞானத்தின் ஏழு தூண்கள் காண வேண்டும்! . . . . . . . . . . . . . 131

13. அந்நிய பாஷையின் மேன்மை காண வேண்டும்! . . . . . . . . . 138

‘புத்திசாலி’ மனுஷனுக்குத் தோன்றும்
வழிகள் ஆயிரம் உண்டு!
சுகம் என்பார்! ஆசீர்வாதம் என்பார்!
ஆகிலும் அந்தோ!.......
அவை இட்டுச் செல்லும் முடிவோ துயரம்!
பாதை விலகி, தூரம் போயினர்!

ஞானம் இன்றும் முச்சந்தியில் நின்று கூவி அழைக்கிறது:
‘மனம் புதிதாகி’ மறுரூபமடைந்து,
அவரது பூர்வ பாதை அறியுங்கள்!

மானிட கவர்ச்சியற்ற அவரது செம்மை வழிகள்,
நீதியும், தூய்மையானவைகள்!
சம்பூரண ஜீவன் தருபவைகள்!
அழைப்பிற்கு செவிகொடுத்து தேவனுடைய வழி காண
ஆவியானவரின் அழைப்பின் குரல்
இன்று, உங்களை அண்டி வந்துள்ளது......!!

# 1

## என் கண்கள் கண்ட உத்தம தேவ வழிகள்!

**40-**ஆண்டுகளுக்கு மேலாய் ஓர் கிறிஸ்தவனாய் வாழ்ந்து வரும் சகரியாபூணனாகிய நான் சில முக்கியமான சத்தியங்களைக் கற்றுக்கொண்டேன். அவைகள் என்னை உற்சாகப்படுத்தியது மாத்திரமல்லாமல், என் வாழ்விற்கு திசை காட்டுவதாகவும் "வாழ்வின் நோக்கத்தைப்" புலப்படுத்துவதாகவும் அமைந்தது. என்னைப்போலவே நீங்களும் இந்த பலனைக் கண்டு கொள்ளவேண்டும் என்பதற்காகவே இவைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

**1) இயேசுவை நேசித்ததைப் போலவே தேவன் நம்மையும் நேசிக்கிறார்:**

"பிதாவே, நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களில் அன்பாயிருக்கிறீர்" என இயேசு கூறினார் (யோவான் 17:23).

*நான் வேதாகமத்தில் கண்டுபிடித்த சத்தியங்களில் இந்த சத்தியமே அதிக மேன்மையானது என நான் கூற முடியும். ஓர் 'பாதுகாப்பற்ற' 'மனமடிந்த' விசுவாசியாயிருந்த என்னை இந்த சத்தியம், தேவனிடத்தில் முழுப்பாதுகாப்பைக் கண்டடையும்படி என்னை மாற்றிவிட்டது! வேதாகமத்தில், "தேவன் நம்மை நேசிக்கிறார்" என எடுத்துக்கூற அநேக வசனங்கள் உள்ளன. ஆனாலும் அந்த அன்பின் உச்சகட்டத்தை* **"இயேசுவை நேசித்ததைப்போலவே** *நம்மையும் நேசிக்கிறார்" என எடுத்துரைப்பது இந்த ஒரே ஒரு வசனம் மாத்திரமே!!*

*நம் பரலோகப் பிதா தன்னுடைய குமாரர்களை நேசிப்பதில் யாதொருவனுக்கும் பாரபட்சம் காட்டுவதே இல்லை. ஆகவே தன் முதற்பேரான குமாரன் இயேசுவிற்கு செய்தது போலவே, நமக்கும் நிச்சயமாய் எல்லா நன்மைகளையும் தவறாமல் செய்வார். ஆம், இயேசுவை பராமரித்து பாதுகாத்ததைப்போலவே நம்மையும் பராமரித்து பாதுகாப்பார்! இயேசுவின் ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை திட்டம் தீட்டுவதற்கு பிதா ஆர்வம் கொண்டதைப் போலவே, நம்முடைய வாழ்க்கையிலும் அவ்விதமே ஆர்வம் கொண்டிருக்கிறார். தேவனை அதிர்ச்சிக்குள்ளாக்கும்படியான*

'திடீரென்று' யாதொரு சம்பவமும் நமக்கு நடைபெறுவதில்லை. ஏனென்றால், ஒவ்வொரு சம்பவங்களையும் அவர் ஏற்கனவே நமக்காக திட்டம் தீட்டி வைத்துள்ளார்.

ஆகவே இனியும் நாம் பாதுகாப்பற்றவர்களாய் வாழ்ந்திட அவசியம் இல்லை. ஓர் திட்டமான நோக்கத்தோடு இயேசுவை தேவன் அனுப்பியதைப் போலவே நம்மையும் ஒரு நோக்கத்தோடுதான் இப்பூமிக்கு அனுப்பியிருக்கிறார்.

இந்த சத்தியங்கள் யாவும் உங்களுக்கு **நிஜமானதுதான்!** ஆனால், நீங்கள் **விசுவாசித்தால் மாத்திரமே** அப்படியாகும்! ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காவிட்டால் அவனிடத்தில் தேவன் எந்த கிரியையும் நடப்பிக்கவே மாட்டார்.

**2) நேர்மையான ஜனங்களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்:**

"அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்" (1யோவான் 1:7).

ஒளியில் நடப்பதற்கு முதலாவது தகுதியாய் இருக்கவேண்டியது, நாம் ஒன்றையும் தேவனிடத்தில் மறைக்காமல் இருக்கவேண்டும்!! அதாவது, அவரிடத்தில் உள்ளதை உள்ளபடியே எல்லாவற்றையும் சொல்வதாகும்! தேவனை நோக்கிச் செல்வதற்குரிய முதல்படி நேர்மை தான் என்பதை நான் ஆணித்தரமாய் கண்டிருக்கிறேன். புரட்டிப்பேசும் உண்மையற்றவர்களை தேவன் அருவருக்கிறார். வேறு எவரையும் கடிந்து கொள்ளாத அளவிற்கு மாய்மாலக்காரர்களையே இயேசு அதிகமாய் கடிந்து கொண்டார் என்பதை நாம் அறிய வேண்டும்.

**நாம் பரிசுத்தமாகவோ அல்லது பூரணமாகவோ இருக்கும்படி முதலாவதாக தேவன் கேட்கவேயில்லை. ஆனால், முதலாவதாக நேர்மையாய் இருக்கும்படியே நம்மிடம் கேட்கிறார்!**

இதுவே உண்மையான பரிசுத்ததின் ஆரம்பமாகும். இந்த ஊற்றுக் கண்ணிலிருந்துதான் மற்ற அனைத்தும் புரண்டுவர முடியும். நாமனைவருமே மிக எளிதாய் செய்யக்கூடிய ஒன்று இருக்குமென்றால், அது **நேர்மையாக** இருப்பதுதான்!

ஆகவே எந்தப் பாவத்தையும் உடனடியாக தேவனிடம் அறிக்கை செய்துவிடுங்கள். பாவமான சிந்தைகளுக்கு மழுப்பலான நாகரீகமான வார்த்தைகளைச் சூட்டாதிருங்கள். நீங்கள் உண்மையில் உங்கள் கண்களினால் விபச்சார மயக்க இச்சை கொண்டுவிட்டு, "நான் தேவனுடைய சிருஷ்டிப்பின் அழகை மாத்திரமே ரசித்தேன்" என்று கூறாதிருங்கள். அதேபோல் கோபத்தை "நியாயமான கோபம்" என்றும்

அழைக்காதிருங்கள்! இவ்வாறு நேர்மையற்றவர்களாயிருந்தால், நீங்கள் ஒருக்காலும் பாவத்திலிருந்து ஜெயம் பெறவே மாட்டீர்கள்!! ஆகவே, ஒருபோதும் பாவத்தை "தவறு" என்று அழைக்காதிருங்கள். ஏனென்றால் இயேசுவின் இரத்தம் உங்களுடைய எல்லா பாவங்களை மாத்திரமே கழுவமுடியும் அல்லாமல், உங்கள் தவறுகளை அவருடைய இரத்தம் கழுவாது! ஆம், நேர்மையற்ற ஜனங்களை அவர் ஒருக்காலும் கழுவி சுத்திகரிப்பதேயில்லை. "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்" (நீதி.28:13). ஆகவே நேர்மையுள்ள ஜனங்களுக்கு மாத்திரமே சுவிசேஷத்தில் நம்பிக்கை இருக்கிறது.

மார்க்கத்தலைவர்களான பரிசேயர்களைக்காட்டிலும் வேசிகளும், கள்வர்களும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் முதலாவது பிரவேசிப் பார்கள் என இயேசு "அவர்கள் மீது" அதிக நம்பிக்கையுடன் கூறினார் (மத்.21:31). ஏனென்றால் வேசிகளும், கள்வர்களும், தாங்கள் பரிசுத்தர் போல ஒருக்காலும் பாவனை செய்யவே மாட்டார்கள் என்பதுதான்!

இன்று அநேக வாலிபர்கள் ஏன் சபையைவிட்டு நழுவிச் செல்கி றார்கள்? ஏனென்றால் சபையிலுள்ள மற்றவர்கள், தங்களுக்கு பாவத்தைக்குறித்த போராட்டமே இல்லாததுபோல அந்த வாலிபர் களுக்கு காட்டியதேயாகும். ஆகவே அந்த வாலிபர்களுக்கு "இந்த பரிசுத்த தூயவான்கள், தங்களுடைய பிரச்சனைகளை ஒருநாளும் புரிந்து கொள்ளமாட்டார்கள்" என்ற விரக்தி ஏற்பட்டுவிட்டது! நம்முடைய நிலை இப்படி இருக்குமென்றால், தன்னிடத்தில் பாவிகளை ஈர்த்துக்கொண்ட கிறிஸ்துவைப்போல் நாம் இல்லை என்பதே உண்மையாகும்.

**3) மிகுந்த மகிழ்ச்சியுடன் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்:**

> "உற்சாகமாய் (மிகுந்த மகிழ்சியுடன்) கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி 9:7).

இதனிமித்தமே, தேவன் மனிதனுக்கு, அவனுடைய மனந்திரும்பு தலுக்கு முன்பாகவும், மனம் திரும்பிய பிறகும்... ஏன் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற பின்புங்கூட அவனுக்கு **முழு சுயாதீனம்** அளித்திருக் கிறார். இவ்வாறு தேவனைப்போலவே நாமும் இருந்திடவேண்டு மென்றால் நாமும் மற்றவர்களை ஆளுகை செய்வதற்கு முயற்சிக்காமல் நம்மைவிட அவர்கள் வித்தியாசமாயிருப்பதற்கும், நம்மைவிட வித்தியாசமான கருத்துக்கள் கொள்வதற்கும், அவரவர் ஓட்டத்தின் விகிதப்படி ஆவிக்குரிய வளர்ச்சியடைவதற்கும் சுயாதீனம் கொடுத்திட வேண்டும்.

எந்த கட்டாயத்திணிப்பும் பிசாசிற்குரியதேயாகும். பரிசுத்த ஆவியானவர் ஜனங்களை "நிரப்புகிறார்" ஆனால் பிசாசுகளோ ஜனங்களைப் "பிடித்துக்கொள்ளுகிறது!". இங்கே வித்தியாசம் என்ன வென்றால், பரிசுத்த ஆவியானவர் ஒருவனை நிரப்பும் போது, அவன் **இன்னமும்** தான் விரும்பியதைச் செய்வதற்கு முழு சுதந்திரத்தையும் தந்து விடுகிறார். ஆனால் பிசாசுகளோ ஜனங்களைப் பிடித்துக் கொண்டால், அவைகள் அவர்களுடைய சுதந்திரத்தை முழுமையாய் பறித்துக் கொண்டு அவர்களை ஆளுகையும் செய்கின்றன!!

நாம் தேவனுக்குச் செய்திடும் எந்த ஊழியமாயிருந்தாலும் அவைகள் உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும், சுயாதீனமாய் தானாகவே மனமுவந்து செய்யப்படாவிட்டால் அவையாவும் **செத்த கிரியைகள்** என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதேபோல், ஏதோ ஒரு பிரதிநலனைக் கருதியோ அல்லது சம்பளத்தின் அடிப்படையிலோ செய்யப்படும் எவ்வித தேவனுடைய ஊழியமும் செத்த கிரியைகளேயாகும்! **மற்றவர்களின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி** தேவனுக்கு கொடுக்கும் எந்தப் பணத்திற்கும், தேவனைப் பொருத்த மட்டில் அவைகளுக்கு எந்த மதிப்பும் இல்லவே இல்லை.

கட்டாயத்தின் பேரிலோ அல்லது மனசாட்சியின் உறுத்தலி லிருந்து தப்பிப்பதற்காகவோ செய்யப்படும் ஏராளமான கிரியைகளைக் காட்டிலும், மிகுந்த மகிழ்ச்சியுடன் அவருக்குச் செய்திடும் ஒரு செயல் அற்பமானதாயிருந்தாலும் அதற்கே தேவன் அதிக மதிப்பு தருகிறார்.

**4) இயேசுவை நோக்கிப் பார்ப்பதின் மூலமே பரிசுத்தம் கிட்டுகிறது:**

"இயேசுவை நோக்கிப்பார்த்து (Looking unto Jesus) நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

தேவபக்தியின் இரகசியம் **மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்து** என்ற அந்த நபரில்தான் இருக்கிறதேயல்லாமல், "கிறிஸ்து நம்முடைய மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்ற உபதேசத்தில் இல்லவே இல்லை. இதை 1தீமோத்தேயு *3:16* மிகத்தெளிவாய் சுட்டிக்காட்டுகிறது. எனவே "அவர்" என்ற தனி நபரின் மூலமேயல்லாமல், அவருடைய மாம்சத்தை ஆராய்ந்து கண்டறியும் உபதேசத்தினால் நாம் பரிசுத்தமாவதில்லை.

நாமாக எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியும் (Self effort) நம்முடைய பாவ இருதயத்தை ஒருக்காலும் பரிசுத்தமாக்கிட முடியாது. அந்த அற்புத மாற்றம் நிகழ்வதற்கு தேவன்தான் நமக்குள் கிரியை நடப்பிக்க வேண்டும். பரிசுத்தம் (நித்திய-ஜீவன்) தேவனால் உண்டாகும் ஈவு, அதை கிரியையினால் ஒருக்காலும் அடைந்திட முடியாது (ரோமர்.6:12). தேவன் மாத்திரமே நம்மை முற்றிலும்

பரிசுத்தமாக்க முடியுமென 1தெசலோனிக்கேயர் 5:12 மிகத்தெளிவாக கூறுகிறது. இந்த வசனங்களை நம்மில் ஒருவரும் தவறு என்று சொல்லிவிட முடியாதே!! இருப்பினும் இன்று எண்ணற்ற விசுவாசிகள் தாங்கள் பரிசுத்தமாகும் பொருட்டு தங்களைத் தாங்களே வெறுப்பதற்குப் போராடிக் கொண்டிருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். அந்தோ, இவர்கள் பரிசுத்தத்தை அடைவதற்குப் பதிலாய் “பரிசேயர்களாகவே” மாறி விடுகிறார்கள்!

எபேசியர் 4:24 குறிப்பிடும் **மெய்யான பரிசுத்தம்** இயேசுமீது கொண்ட விசுவாசத்தினால்...... அதாவது, “இயேசுவை நோக்கிப் பார்ப்பதால்” மாத்திரமே அடைந்திடமுடியும். ஆம், நாம் உபதேசத்தை மாத்திரமே நோக்குபவர்களாயிருந்தால் முடிவில் பரிசேயர்களாகவே முற்றுப்பெறுவோம். இந்நிலையில் நீங்கள் எவ்வளவு தெள்ளத் தெளிவாய் உபதேசங்களைக் கற்றுக்கொண்டீர்களோ அந்தளவிற்கு மிகப்பெரிய பரிசேயர்களாகவே மாறிவிடுவீர்கள்! இந்த உலகில் நான் சந்தித்த பரிசேயர்களில் மிகப்பெரிய பரிசேயர்கள் யாரென்றால் “தங்கள் சுய-முயற்சி மூலமாக மகா உன்னத பரிசுத்த தரத்தைப் பிரசங்கித்தவான்களேயாவர்” இவ்வித கதியை நாமும் அடைந்து விடாதபடி கவனமாயிருக்கக்கடவோம்.

இயேசுவை நோக்கிப்பார்ப்பதின் பொருள் என்ன என்பதை எபிரெயர்.12:2 மிகத்தெளிவாக நமக்கு எடுத்துரைக்கிறது. முதலாவதாக, நாம் அவரை நோக்கிப்பார்த்து “இந்த பூமியில் ஒவ்வொரு நாளும் **சிலுவையை சகித்து வாழ்ந்தவராகவும்** நம்மைப் போல எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராகவும்” காண்பதுதான் (எபிரெயர்.4:15). இவ்வாறு அவர் நமக்கு முன்னோடியானவரான படியால் (எபி.6:20), இப்போது அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாமும் தொடர்ந்து ஓட வேண்டும். இரண்டாவதாக, “பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவராகவும்” நாம் அவரைக் காண வேண்டும். இவ்வாறு பிதாவின் அருகிலிருந்து நமக்காக வேண்டுதல் செய்யவும், நம்முடைய சோதனைகளிலும் உபத்திரவங்களிலும் நமக்கு உதவி செய்யும்படியும் அவர் ஆயத்தத்துடன் இருக்கிறார்.

**5) நாம் பரிசுத்த ஆவியினால் இடைவிடாது நிரப்பப்பட்டிருக்க வேண்டும்:**

“ஆவியினால் தொடர்ச்சியாய் நிரப்பப்பட்டு நிறைந்திருங்கள்” என்பதே எபேசியர்.5:18- ன் சரியான மொழிபெயர்ப்பாகும்.

தேவன் விரும்பும்படியான கிறிஸ்தவ **ஜீவியம்** செய்வதற்கு, நாம் தொடர்ச்சியாய் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாலொழிய

*சாத்தியமாகாது! அதேபோல, நாம் தேவனுக்கு* **ஊழியம்** *செய்ய வேண்டிய பிரகாரமாய் ஊழியம் செய்திட ஆவியின் அபிஷேகம் இல்லாமலும், ஆவியின் வரங்களைப் பெறாமலும் சாத்தியமாகாது!! இயேசுவேகூட ஆவியின் அபிஷேகத்தைப் பெறவேண்டியது அவசியமாயிருந்தது! இதை 2கொரிந்தியர் 3:18 குறிப்பிடும்போது, பரிசுத்த ஆவியானவர், நம்முடைய ஜீவியத்திலும் நம்முடைய ஊழியத்திலும் அவருடைய சாயலுக்கொப்பாய் நம்மை மறுரூபப்படுத்தும்படிக்கே வந்தார் என கூறுவதைப் பார்க்கிறோம்.*

*இவ்வாறு தேவன் நம்மை ஆவியினால் நிறைத்து, கிறிஸ்துவின் சாயலான அவருடைய சுபாவத்தில் நம்மை மறுரூபப்படுத்தவும், இயேசுவைப்போலவே ஊழியம் செய்வதற்கு நம்மை மறுரூபப் படுத்தவும் செய்கிறார். இயேசு பெற்ற அதே ஊழியம் நமக்கு இல்லை! ஆகவே அவர் தன்னுடைய ஊழியத்தில் செய்தவைகளை நாமும் செய்திட முடியாது. ஆனால் நாம் இயேசுவைப் போலவே அபிஷேகத்தில் நிறைந்து முழு ஆயத்தத்துடன் "நாம் பெற்ற* **ஊழியத்தை**" *நிறைவேற்றிட முடியும். இங்கு நம் பட்சத்தில் தேவையாயிருப்பதெல்லாம் தேவன் எதிர்பார்க்கும் போதுமான தாகமும், விசுவாசமும் இருக்கவேண்டும்!. அப்போது நம்மூலமாய் ஜீவ தண்ணீர் கொண்ட நதிகள் நிச்சயமாய் புரண்டோடிவிடும் (யோவான் 7:37-39).*

*பரிசுத்த ஆவியின் வரங்களில்லாத ஒருசபை, உயிருள்ள ஒரு மனிதன் செவிடும், குருடும், ஊமையும், நொண்டியுமாய் இருப்பதைப் போல் உபயோகமற்றதாகவே இருக்கும்!*

**6) சிலுவையின் வழியே ஜீவனைக் கண்டடையும் வழி:**

"நாம் அவரோடே கூட மரித்தோமானால் அவரோடே கூட பிழைத்துமிருப்போம்" (2 தீமோத்தேயு 2:11).

*நம்முடைய சரீரத்தில் இயேசுவின் வாழ்க்கை (ஜீவன்) வெளிப்பட வேண்டுமென்றால், தேவன் ஏற்படுத்தும் எல்லா வாழ்வின் சூழ்நிலைகளிலும் நம் சொந்த ஜீவனில் (சுய-வாழ்க்கையில்) மரணத்தை ஏற்றுக் கொண்டால் மாத்திரம் சாத்தியமாகும் (2கொரி.4:10,11). நாம் ஜீவனைப் பெற இதைத்தவிர வேறு வழி இல்லவே இல்லை! ஆகவே, நாம் பாவத்தை ஜெயித்து வாழ வேண்டுமென்றால், எல்லா சூழ்நிலைகளிலும் "நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவே" கருத வேண்டும் (ரோமர்.6:11). நாம் பரத்தின் உயிர்கொண்டு வாழ்ந்திருப்பதற்கு "நாம் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்திட வேண்டும்" (ரோமர்.8:13). இதனிமித்தமே நம்முடைய ஒவ்வொருநாள் ஜீவியத்திலும் பரிசுத்த ஆவியானவர் நம்மை எப்போதும்*

சிலுவையண்டை நடத்திச் செல்கிறார்.

இவ்வாறு எல்லா சூழ்நிலைகளுக்குள்ளும் நாம் தேவனால் அனுப்பப்பட்டு அங்கே நாம் "எந்நேரமும் (ஒவ்வொருநாளும்) கொல்லப்படுகிறோம்" (ரோமர் 8:36). அதாவது "இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்" (2கொரிந்தியர் 4:11). இது போன்று ஒவ்வொறு சூழ்நிலைகளிலும் நாம் "இயேசுவின் மரணத்தை" (2 கொரிந்தியர் 4:10) மனப்பூர்வமாய் சுமந்து இயேசுவின் ஜீவனை நம்முடைய சரீரத்தில் விளங்கப்பண்ணவேண்டும்!

**7) மனுஷருடைய அபிப்பிராயங்களுக்கு தகுதியான இடம் குப்பைத் தொட்டியே!**

> "நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; (உயர்வாய்) எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்?" (ஏசாயா 2:22).

மனுஷனுடைய சுவாசம் அவனுடைய நாசியிலிருந்து எடுபட்டு போனால், நாம் கால் மிதித்துநடக்கும் தூசியைவிட அவன் மேலானவன் அல்ல! ஆகவே மனுஷருடைய அபிப்பிராயங்களுக்கு நாம் ஏன் மதிப்பு தரவேண்டும்? உங்களைச் சுற்றியுள்ள எல்லா மனுஷருடைய அபிப் பிராயங்களையும் ஒன்று திரட்டினாலும் அவைகள் குப்பைத் தொட்டில் எறியப்படுவதற்கே பாத்திரமானது என்ற சத்தியத்தில் நாம் வேர் கொண்டு நிலை நிற்கவில்லையென்றால், நாம் ஆண்டவருக்கு ஒருக்காலும் வலிமையான ஊழியம் செய்திடவே முடியாது. நாம் "**ஒரே ஒரு மனுஷனைக்கூட**" பிரியப்படுத்துகிறவர்களாய் இருந்தாலும், நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாய் ஒருக்காலும் இருந்திடவே முடியாது (கலா.1:10).

தேவனுடைய அபிப்பிராயங்களோடு ஒப்பிடும்போது எந்த மனுஷனுடைய அபிப்பிராயங்களும் ஒன்றுமில்லாத குப்பையேயாகும்! இந்த உண்மையை தன் இருதயத்தில் ஆழமாய் பதித்துக் கொண்டவன் தன் ஜீவியத்திலும், ஊழியத்திலும் **தேவனுடைய அங்கீகாரம்** ஒன்றை மாத்திரமே எப்போதும் தேடுவான்! அவன் யாரையும் கவர்ச்சிக்க ஒருபோதும் நாடமாட்டான்! அல்லது, ஜனங்களுக்கு முன்பாய் தன்னை நியாயப்படுத்துவதையும் ஒருபோதும் நாடவே மாட்டான்!

**8) இந்த உலகம் மேன்மையாக கருதும் அனைத்தையும் தேவன் அருவருக்கிறார்.**

> "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" (லூக்கா 16:15).

இந்த உலகத்தில் மகா மேன்மையாக எண்ணப்படுபவைகளுக்கு தேவனுடைய பார்வையில் எந்த மதிப்பும் இல்லையென்பது மாத்திர மல்ல.... அவைகளை அவர் அருவருக்கவும் செய்கிறார். இவ்வாறு உலகத்திலுள்ள எல்லாமதிப்பும் புகழும் தேவனுக்கு அருவருப்பாயிருக்கிற

படியால், அவைகள் நமக்கும் அருவருப்பாகவே இருக்க வேண்டும்.

இப்பூமியிலுள்ள ஒவ்வொருவரும் பணத்தை அதிக மதிப்புடையதாய் கருதுகிறார்கள். ஆனால் பணத்தை நேசித்து ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் வெகு சீக்கிரத்திலோ அல்லது சற்று தாமதமாகவோ கீழ்காணும் எட்டு விளைவுகளினால் வேதனையடைவார்கள் என தேவன் கூறினார் (1 தீமோத்தேயு 6:9,10).

1) அவர்கள் சோதனையில் விழுவார்கள்,

2) அவர்கள் கண்ணியில் சிக்குவார்கள்,

3) அவர்கள் மதிகேடான இச்சையில் விழுவார்கள் ,

4) அவர்கள் சேதம் விளைவிக்கும் இச்சையில் விழுவார்கள்,

5) அவர்கள் கேடானவைகளில் அமிழ்ந்து போவார்கள்,

6) அவர்கள் அழிவில் அமிழ்ந்து போவார்கள்,

7) அவர்கள் விசுவாசத்தைவிட்டு வழுவிப்போவார்கள்,

8) அவர்கள் அனேக வேதனைகளினால் தங்களை உருவ குத்திக் கொள்வார்கள்.

மேற்கண்ட இந்த எட்டு அவலங்களும் நான் சென்ற ஒவ்வொரு இடங்களிலும் ஏராளமான விசுவாசிகளுக்குத் திரும்பத்திரும்ப சம்பவித்ததை என் கண்களால் கண்டிருக்கிறேன்!

இன்று நம் தேசத்தில் கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்டுவரும் தீர்க்க தரிசன வார்த்தைகளுக்குப் பஞ்சம் உண்டாயிருப்பதற்கான ஓர் முக்கிய காரணம், ஏராளமான பிரசங்கிகள் பணஆசை கொண்டவர்களாய் மாறியதுதான். பணவிஷயத்தில் உண்மையில்லாதவர்களிடத்தில் தேவன் மெய்யான ஐசுவரியத்தை (தீர்க்கதரிசன வார்த்தையைப் பெறுவது இந்த ஐசுவரியங்களில் ஒன்று) தரவேமாட்டார் என இயேசு கூறினார் (லூக்கா 16:11). இதனிமித்தமே இன்று சபை கூட்டங்களில் ஏராளமான போரடிக்கும் பிரசங்கங்களும், ஏராளமான போரடிக்கும் சாட்சிகளையும் நாம் கேட்கிறோம்.

**9) நமக்கு நாமே தவிர வேறு ஒருவரும் நமக்கு தீங்கு செய்திட முடியாது.**

"நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால் உங்களுக்கு, தீமை செய்கிறவன் யார்? (1 பேதுரு 3:13).

தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு (அதாவது, தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாக இப்பூமியில் எந்த இலட்சியமும் இல்லாதவர்களுக்கு) சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும்படி கிரியை செய்திட, தேவன் சொல்லி முடியா வல்லமை பெற்றிருக்கிறார்

*(ரோமர். 8:28).* இந்த *அற்புதமான வாக்குதத்தத்தை, தங்களுக்கென சுய நலநோக்கம் கொண்டவர்கள் ஒருக்காலும் உரிமை பாராட்டவே முடியாது. ஆனால் நம் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்தை சம்பூரணமாய் ஏற்றுக்கொண்டவர்களாயிருந்தால், இப்பூமியில் நம் ஜீவியத்தின் ஒவ்வொரு நிமிஷமும் இந்த வாக்குதத்தத்தை உரிமை கொண்டாட முடியும்! ஆம், யாதொன்றும் நமக்குத் தீங்கிழைக்கவே முடியாது!!*

> **நமக்கு மற்றவர்கள் தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ செய்திடும் எந்த நன்மையானாலும் அல்லது தீமையானாலும் இந்த ரோமர் 8:28 -ம் வசன வடிகட்டி (FILTER) வழியாய் கடந்துவந்து நமக்கு மிகவும் அருமை யாகவே முடிவில் வந்து சேரும்!**

*இவ்வாறு தேவன் நமக்கென்று திட்டம் தீட்டியுள்ள அதிக நன்மை யானவைகளில் ஒன்று என்னவென்றால், ஒவ்வொரு சமயமும் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் நாம் மாறுவதுதான் (ரோமர் 8:29). இந்த அருமையான வசனத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றிடும் யாவருக்கும் "இந்த வடிகட்டி"* (Filter) *ஒவ்வொரு சமயமும் நன்மையை கிரியை நடப்பித்துக் கொண்டேயிருக்கும்!!*

*இதைக்காட்டிலும் சற்று மேலாக, 1பேதுரு 3:13, "நாம் நன்மை செய்கிறவர்களாய் இருந்தால்" ஒரு மனிதனும் நமக்கு தீங்கு செய்திட முடியாது என மிக நேர்த்தியாய் கூறுகிறது. துரதிருஷ்டவசமாய் இன்று ரோமர் 8:28 அறியப்பட்டிருப்பது போல் இந்த அருமையான வசனத்தை அனேகர் அறியாதிருக்கிறார்கள். இனிவரும் நாட்களிலாவது இந்த வசனத்தின் மேன்மையை நம் ஜீவியத்தின் மூலமாய் உயர்த்திக் காட்டிடக்கடவோம். இருப்பினும் இந்த வாக்குதத்தமோ, தங்கள் இருதயங்களை எல்லா ஜனங்களிடத்திலும் நன்மை நிறைந்ததாய் காத்துக்கொண்டவர்களுக்கு மாத்திரமே சொந்தமானதாகும். இதுபோன்ற ஒரு விசுவாசிக்கு எந்த பிசாசோ அல்லது எந்த மனுஷனோ தீமை செய்வதென்பது ஒருக்காலும் கூடாத காரியம்!*

*ஆகவே, "மற்றவர்கள் எனக்குத் தீங்கு செய்துவிட்டார்கள்" என எந்த ஒரு கிறிஸ்தவன் குறை கூறுகிறானோ, அப்போதெல்லாம் அவன் மறைமுகமாய் ஒத்துக்கொள்வது யாதெனில் "நான் தேவனிடத்தில் அன்புகூரவில்லை! நான் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப் படவில்லை! நான் நன்மை செய்யத்தீவிரம் கொண்டவனுமல்ல!" என்ற அறிக்கையேயாகும். இப்படியில்லாதிருந்தால், அவனுக்கு மற்றவர்கள் எதைச்செய்தாலும் நன்மைக்காகவன்றோ கிரியை நடந்திருக்கும்! அவ்வாறு சகலமும் நன்மையாய் நடந்திருந்தால் அவனிடத்தில்*

யாதொரு குறை சொல்லும் உண்டாயிருக்காதல்லவா!!

உண்மையில், உங்களுக்கு தீமை செய்யக்கூடிய ஒரே நபர் நீங்கள் மாத்திரமே! நீங்கள் **மற்றவர்களிடத்தில்** உண்மையற்றவர்களாய் நடந்து கொண்டதும், **மற்றவர்கள் மீது** தவறான மனப்பான்மை கொண்டதுமே உங்களுக்கு நீங்களே செய்து கொண்ட தீமையாகும்!

66 வயது நிரம்பிய நான் நேர்மையாய் சொல்லும் சாட்சி என்னவெனில் "என் முழு ஜீவியத்திலும், ஒருவர்கூட எனக்குத்தீமை செய்வதில் ஜெயம் பெற முடியவில்லை!" அநேகர் முயற்சித்தார்கள் என்பது உண்மை...... ஆனால் அவைகள் அனைத்தும் என்னுடைய நன்மைக்காகவும், என் ஊழிய நன்மைக்காகவும் மாத்திரமே கிரியை நடப்பித்தன! ஆகவே, நான் அதுபோன்ற ஜனங்களுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்க என்னால் முடிகிறது!! எனக்கு எதிர்ப்பாய் தீமை செய்யும்படி முயற்சித்தவர்களில் பெரும்பாலானோர் தேவனுடைய வழிகளை அறியாத "விசுவாசிகள்" என பெயர் கொண்டவர்கள்தான்! இந்த என் சாட்சியை நான் சொல்வதற்கு காரணம், உங்களை உற்சாகப்படுத்தி, நான் பெற்ற சாட்சி உங்களுடையதாகவும் எப்போதும் இருக்கமுடியும் என்பதை நீங்கள் விசுவாசிக்கும்படிக்கேயாகும்!!

**10) நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஓர் நிறைவான திட்டத்தை தேவன் வைத்திருக்கிறார்:**

> "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்துவுக்குள் (முன்கூட்டியே) சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபேசியர்.2:10).

பல வருடங்களுக்கு முன்பாகவே நம்மை கிறிஸ்துவுக்குள் தேவன் தெரிந்து கொண்டபோது, இப்பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை வரையறை செய்துவைத்துவிட்டார்! இப்போது நம்முடைய கடமை என்னவென்றால், தேவனுடைய அந்த திட்டத்தை ஒவ்வொருநாளும் கண்டுபிடித்து அதன்படி பின்பற்றி நடப்பதுதான்! தேவனுடைய திட்டத்தைக் காட்டிலும் மேலான திட்டத்தை நாம் நமக்கென ஒருக்காலும் வரையறுக்கவே முடியாது!!

> ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தேவன் வித்தியாசமான திட்டங்களை வைத்திருக்கிறபடியால், மற்றவர்கள் செய்வதைப்போலவே நாமும் அப்படியே செய்வதற்கு முயலவே கூடாது!

உதாரணமாய், யோசேப்பைக்குறித்து தேவன் கொண்டிருந்த திட்டம் யாதெனில், "அவன் எகிப்தின் அரண்மனையில் தங்கியிருந்து,

*தன்னுடைய ஜீவியத்தின் பின்பகுதியான எண்பது ஆண்டுகள் மிகுந்த வசதியுடன் வாழவேண்டுமென்பதாயிருந்தது!''*. இப்படியிருக்க, *யோசேப்பின் மாதிரியை மோசே பின்பற்றி வசதியையும், ஆடம்பரத்தையும் விரும்பியிருந்தால்...... அவனுடைய சொந்த வாழ்க்கைக்குரிய தேவனுடைய சித்தத்தை நிச்சயமாய் இழந்திருப்பான்!*

இன்றும் அதைப்போலவே, ஒருசகோதரன் தன் ஜீவிய காலமெல்லாம் அமெரிக்க தேசத்தில் வசதியுடன் வாழ தேவன் விரும்பியிருக்கக்கூடும்! ஆனால் இன்னொரு சகோதரனையோ தன் ஜீவ காலமெல்லாம் வட இந்தியாவின் உஷ்ணத்திலும் தூசியிலும் உழன்று வாழும்படி அவர் வைத்திருக்கக் கூடும்!! இந்த இருவருமே, தேவன் தங்கள் வாழ்வில் கொண்டிருக்கும் திட்டத்தை அறிந்தவர்களாய் திருப்தியுடன் இருக்கவேண்டுமேயல்லாமல், ஒருவரையொருவர் ஒப்பிட்டுப்பார்த்து பொறாமைப்படவோ அல்லது குறைகூறவோ கூடாது! இந்திய தேசத்தில்தான் ஊழியம் செய்யும்படி தேவன் என்னை அழைத்திருக்கிறார் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் என்னைப் போன்ற அழைப்பை மற்றவர்களும் பெற்றிருக்க வேண்டுமென நான் ஒருவரையும் வற்புறுத்தியதேயில்லை.

இருப்பினும், நாம் நம்முடைய சுய கனத்தைத் தேடினாலோ அல்லது பணத்தை நேசித்தாலோ அல்லது சொகுசு வாழ்க்கையை விரும்பினாலோ அல்லது மனுஷர்களுடைய அங்கீகாரத்தை நாடினாலோ, நாம் ஒருக்காலும் தேவன் நமக்கென்று வைத்திருக்கும் அவரது திட்டத்தைக் கண்டுபிடிக்கவே முடியாது!

**11) தேவனை மிகவும் நெருக்கமாய் அறிந்திருப்பதே வலிமையான ஜீவியத்தின் இரகசியமாகும்:**

''தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டிருப்பார்கள்'' (தானி.11:32).

இரண்டாவதாக கைமாற்றுவதுபோல் (Second Hand) பிறர் மூலமாய் நாம் தேவனை அறிந்து கொள்வதை தேவன் விரும்புவதேயில்லை. ஒரு புதிதான இளைய விசுவாசிகூட தன்னைத் தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ளும்படியே தேவன் அவனை அழைக்கிறார் (எபி. 8:11). தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் தனிப்பட்ட விதத்தில் ஒருவன் அறிந்து கொள்வதே நித்திய ஜீவன் என்று இயேசு விளக்கினார். இதுவே பவுலின் வாழ்க்கையில் தீராத ஏக்கமாயிருந்தது! அதுபோலவே, நமக்கும் தேவனை அறிகிற அறிவு தீராத ஏக்கமாய் நமக்குள் இருந்திட வேண்டும் (பிலிப்பியர் 3:10).

தேவனை தீர்க்கமாய் அறிந்திட வாஞ்சை கொண்டவன், எப்போதும் அவர் சொல்வதை கவனிக்க தீவிரம் கொண்டவனாயிருக்க

வேண்டும். ஒரு மனிதன் தன்னை ஆவிக்குரிய ஜீவனோடு காத்துக்கொள் வதற்கு ஒரே வழி "தேவனுடைய வாயிலிருந்து புறப்படும்" ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கேட்பதுதான்! நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவர் கூறுவதை கவனித்துக் கேட்பதே மிக முக்கியமானதென்று இயேசு லூக்கா 10:42-ல் கூறினார்.

இயேசு ஒவ்வொரு நாள் காலையிலும் தன் பிதா சொல்வதை கவனித்துக் கேட்கும் பழக்கம் வைத்திருந்ததைப் போலவே, நாமும் அந்தப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்! (ஏசாயா 50:4). காலையில் மாத்திரம் அல்லாமல்... அந்தப் பகல் முழுவதும்.... நாம் தூங்கும் இரவு நேரங்களிலும் அவ்விதமே இருப்போமென்றால், இரவிலும் நம்மை அதேபோல் 'கவனிக்கும்' மனதுடையவர்களாகச் செய்வார். நாம் எழும்பினாலும், கர்த்தாவே சொல்லும் உமதடியான் கேட்கிறேன்" என கூறிடமுடியும் (1 சாமுவேல் 3:10).

நாம் தேவனை நெருக்கமாய் அறிந்திருப்பதுதான், நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் ஜெயம் பெற்றவர்களாய் மாற்றிவிடும்! ஏனென்றால், நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் தேவனிடத்தில் விடை உண்டு! நாம் அவரை கவனித்துக்கேட்டால் அந்த விடையை அவர் நமக்கு நிச்சயமாய் சொல்லுவார்!!

**12) புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைவிட மகா மேன்மை நிறைந்ததாகும்:**

"இயேசுவோ விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி 8:6).

இன்று அனேக கிறிஸ்தவர்கள், பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் அடிப்படை பூர்வமாய் வித்தியாசம் இருப்பதை இன்னமும் அறிந்து கொள்ளவில்லை (எபிரெயர் 8:8-12). மோசேயைக் காட்டிலும் எவ்வாறு இயேசு மேலானவரோ, அதைப்போலவே பழைய உடன்படிக்கையை காட்டிலும் புதிய உடன்படிக்கை மேலானதாகும்!! (2கொரிந்தியர்.3, எபிரெயர்.3). பழைய உடன்படிக்கையானது, தன்னுடைய நியாயத்தீர்ப்பின் பயத்தின் மூலமாகவோ அல்லது வாக்குதத்தத்தின் ஆசீர்வாதத்தின் மூலமாகவோ ஒருவனுடைய **வெளியரங்க வாழ்க்கையை** மாத்திரமே சுத்திகரிக்க முடிந்தது. ஆனால் புதிய உடன்படிக்கையோ நம்முடைய **உள்ளான அந்தரங்க ஜீவியம்** முழுவதையும் மாற்றுவதாயிருக்கிறது! இந்த மாற்றம் அச்சுறுத்தல் மூலமோ அல்லது ஆசீர்வாத வாக்குதத்தங்கள் மூலமோ நடைபெறாமல், **பரிசுத்த ஆவியின்** மூலமாகவே நடைபெறுகிறது. இந்த மாற்றம், பூரண தூய்மையும் அன்பும் நிறைந்த கிறிஸ்துவின் சுபாவத்தையே நமக்குத் தருகிறது!!

ஒரு பன்றியை சங்கிலியில் கட்டி (நியாயப்பிரமாணத்தின் தண்டனை என்ற பயத்தினால்கட்டி) அதைப்பிடித்து இழுத்து தூய்மையாய் காப்பதற்கும், ஒரு பூனை தன்னுடைய உள்ளான சுபாவத்தி னிமித்தம் தன்னைத்தானே தூய்மையாய் காத்துக் கொள்வதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு! இந்த உதாரணத்தைப் போலவே, பழைய புதிய உடன்படிக்கையின் வித்தியாசம் இருக்கிறது!

**13) நாம் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம்.**

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோத்தேயு 3:12).

இயேசு தன்னுடைய சீஷர்களிடத்தில் கூறும்போது, இந்த உலகத்தில் அவர்கள் துன்பத்தை சந்திக்கவேண்டுமென்பதை திட்டமாய் கூறினார் (யோவான். 16:33). எனவேதான் அவர் பிதாவினிடத்தில் தன் சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளவில்லை" என்றே ஜெபித்தார் (யோவான்.17:15). மேலும் அப்போஸ்தலர்கள் தங்களுடைய விசுவாசிகளுக்குப் போதிக்கும்போது "அநேக உபத்திரவங்களின் வழியாய்தான் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும்" என போதித்தார்கள் (அப்போஸ்தலர் 14:22).

மேலும் இயேசு கூறும்போது, "வீட்டு எஜமானையே 'பெயர்செபூல்' எனக் கூறியிருந்தால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" எனக் கூறினார் (மத்தேயு 10:25). பார்த்தீர்களா, **இந்த அடையாளங்களை (நிந்தைகளை) வைத்துதான்** நாம் அவருடைய உண்மையுள்ள வீட்டாராய் இருக்கிறோமா? அல்லது இல்லையா? என்பதை அறிந்து கொள்ள முடியும்! என்னுடைய ஜீவிய காலத்தில் எத்தனையோ விசுவாசிகள் என்னை "பிசாசு" "பிசாசின் மகன்" "அசுத்தாவி பிடித்தவன்" "கொலை பாதகன்" "தியோத்திரேப்பு" என்றெல்லாம் கூறி அழைத்திருக்கிறார்கள்! இவ்வாறு நாம் இயேசுவின் வீட்டாராய் இனம் கண்டு சுட்டிக்காட்டப்படுவது நமக்கு கிடைத்த மிகப்பெரும் பாக்கியமேயாகும்! இன்று யாரெல்லாம் ஆண்டவருக்கு உத்தமமாய் ஊழியம் செய்கிறார்களோ, அவர்கள் யாவருக்குமே இந்த நிந்தை அனுபவம் நிச்சயம் கிட்டியிருக்கும்!!

ஒரு மெய்யான தீர்க்கதரிசி தன் "சொந்த இனத்தாரால்" ஒருபோதும் கனம் அடையமாட்டான் என்று இயேசு கூறினார் (மாற்கு6:4). எந்தவொரு மெய்யான தீர்க்கதரிசியும் அவனுடைய சொந்த இனத்தாரால் புறக்கணிக்கப்பட்டு கனவீனமும் அடைவான்!

*இதைப்போலவே ஒரு மெய்யான அப்போஸ்தலனும் "தூஷிக்கப் பட்டு..... உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவும்..... கருதப்படுவார்கள்" என பவுல் கூறினார் (1கொரிந்தியர் 4:13).*

**துன்புறுத்தப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும், எத்தனையோ வல்லமை யான தேவனுடைய ஊழியர்களுக்கு தேவன் நியமித்த பங்காகவே இருக்கிறது!**

*இன்று, "சபையானது மகா உபத்திரவ காலத்திற்கு முன்பாகவே எடுத்துக்கொள்ளப்படும்" என்ற போதனை மிக பிரபல்யமாய் காணப்படுகிறது. இவ்வித போதனை ஏராளமான விசுவாசிகளின் மாம்சத்திற்கு ஆறுதலாய் இருக்கிறபடியால், இப்போதனையை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுகிறார்கள்! ஆனால் இயேசுவோ மிகத்தெளிவாக மத்தேயு 24:29-31 வசனங்களில்,* **மகா உபத்திரவம் முடிந்த பின்புதான்** *தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை எடுத்துக் கொள்ளும்படி இயேசு திரும்ப வருவார் எனக்கூறினார். இந்த இயேசுவின் வசனங்களை ஒரு சிறு பிள்ளைகூட நன்றாய் விளங்கிக் கொள்ளமுடியுமே!*

*புதிய ஏற்பாட்டின் முழுபகுதியிலும், ஒரு வசனம்கூட சபையானது "மகா உபத்திரவத்திற்குத் தப்பித்து எடுத்துக்கொள்ளப்படும்" என போதிக்கவே இல்லை! ஆனால் வேத வசனத்திற்கு வேற்றுமையான இந்த போதகம், சுமார் 1800-ஆம் ஆண்டில் இங்கிலாந்து தேசத்தில் சில மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதேயாகும்.*

*நாமோ நம் தேசத்திலுள்ள சபையை வரப்போகும் உபத்திரவத்திற்கு இப்போதே ஆயத்தம் செய்கிறவர்களாகவே இருக்க வேண்டும்!*

**14) தேவன் ஏற்றுக்கொண்ட யாவரையும் நாமும் மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்:**

"தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.... சரீரத்திலே பிரிவினை உண்டாயிராதபடிக்கு இவ்வாறு அமைத்திருக்கிறார்" (1கொரி.12:18,25).

*வெவ்வேறான நாடுகளில் வெவ்வேறான காலத்தில் "தனக்கென தூய்மையுள்ள சாட்சியை எழுப்பும்படி" தேவன் மனுஷர்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆனால் இந்த தேவ மனிதர்கள் மரித்த பின்போ அவர்களைப் பின்பற்றி வந்தவர்கள் தங்கள் குழுவை மார்க்க கண்மூடித்தனம் (Cultisitc) கொண்டதும், விசேஷித்த தனிக்குழுவாயும் மாற்றிவிட்டார்கள்!*

*ஆனால் கிறிஸ்துவின் சரீரமோ எந்தவொரு குழுவைக்காட்டிலும் விசாலம் கொண்டதாகும்! இதை நாம் ஒருபோதும் மறக்கவே கூடாது.*

ஆகவே 'கிறிஸ்துவின் மணவாட்டி' இன்று நாம் காணும் எத்தனையோ பல குழுக்களிலும் படர்ந்து காணப்படமுடியும்.

எனவேதான், ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என நாம் அறியும் யாவரிடமும் நாம் ஐக்கியம் கொள்ள நாட வேண்டும். இவர்களில் அனேகர் சில வேத வசனங்களுக்கு மாறுபாடான வியாக்கியானம் கொண்டிருக்கிறபடியால், அவர்களோடு சேர்ந்து நாம் ஊழியம் செய்திட முடியாதவர்களாய் இருக்கக்கூடும். இருப்பினும், ஆண்டவர் அவர்களை ஏற்றுக்கொண்டிருப்பதை நாம் அறிந்ததினிமித்தமாய் அவர்களோடு ஐக்கியம் கொள்ள நாட வேண்டும்!

**15) எந்த மனிதனையும் கனத்தோடு நடத்தவேண்டும்:**

"நம் நாவினாலே தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷனை சபிக்கிறோம்.... என் சகோதரரே இப்படி இருக்கலாகாது" (யாக்கோபு 3:9,10).

ஒரு மனிதனிடத்தில் நாம் பேசும் வார்த்தையோ அல்லது செயலோ அவனுடைய மதிப்பைக் குறைப்பதாயிருந்தால், அந்த வார்த்தையும், செய்கையும் தேவனிடத்திலிருந்து உண்டானதல்ல! பிறரை அற்பமாய் எண்ணி தரம் குறையச் செய்வதை எப்போதும் சாத்தானே நாடுகிறான்!! ஆனால் நாமோ "யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும்" பேசும்படியே கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (1பேதுரு.3:15). அவர்கள் நம்முடைய மனைவியாகவோ அல்லது நம்முடைய பிள்ளைகளாகவோ அல்லது வயது குறைந்தவர்களாகவோ அல்லது பிச்சைக்காரர்களாகவோ அல்லது சத்துருக்களாகவோ..... ஆகிய யாவரிடத்திலும் நாம் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்!

இவ்வாறாக எல்லா மனுஷரையும் நாம் மிகுந்த கனத்துடன் நடத்த வேண்டும். உதாரணமாய் ஒரு ஏழை சகோதரனுக்கு ஏதாகிலும் அன்பளிப்புக் கொடுத்தால் அதைக் கொடுக்கும்போது, ஒரு மனிதனாயிருக்கும் அவனுடைய கனத்தைப் பறித்துக் கொள்ளாமல் கொடுத்திட வேண்டும். அந்த சகோதரனுக்கு நாம் கொடுப்பது ஒரு 'தர்ம பிரபு' கொடுப்பதைப்போல் கொடுக்காமல் அவனுடைய சகோதரனாய் நம்மைப் பாவித்தே கொடுத்திட வேண்டும்!

**16) நம்முடைய பொருளாதார தேவைகளை தேவனிடம் மாத்திரமே தெரியப் படுத்த வேண்டும்:**

"தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நம் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவிற்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19).

முழுநேர கிறிஸ்தவ ஊழியர்கள் தங்கள் எல்லாப் பொருளாதார

தேவைகளுக்கும் தேவனையே நம்பியிருக்க வேண்டும். மேலும் அவ்வித தேவைகளை தேவனாகிய கர்த்தர் **ஒருவருக்கு மாத்திரமே** தெரியப்படுத்த வேண்டும்! காரியம் இவ்வாறு செம்மையாய் நடந்து விட்டால் அவர்களுடைய தேவையை சந்திக்கும்படி தேவன் தன்னுடைய பிள்ளைகளை அவரே ஏவிவிடுவார். இதற்கு மாறாக, முழுநேர ஊழியர்கள் "தேவனிடத்தில் விசுவாசமாயிருந்துகொண்டே மற்ற விசுவாசிகளிடத்திலும் அறிக்கை சமர்ப்பித்து" ஒருக்காலும் பிழைத்திடக் கூடாது!

"சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாகுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1கொரிந்தியர் 9:14). ஆகவே, ஆண்டவருக்கு முழுநேர ஊழியம் செய்பவர்கள் மற்ற விசுவாசிகளிடமிருந்து அன்பளிப்புகள் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் முழுநேர கிறிஸ்தவ ஊழியர்கள் ஒருபோதும் சம்பளம் வாங்கவே கூடாது! அன்பளிப்பிற்கும் சம்பளத்திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. அன்பளிப்புகளை உரிமையோடு எதிர்பார்த்திட முடியாது...... ஆனால் சம்பளத்தை உரிமையோடு எதிர்பார்த்திட முடியும்!! இன்று ஏராளமான கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் அதன் கலாச்சாலைகளும் பின்மாற்ற நிலைக்குள் இருப்பதற்கு "இந்த சம்பள அடிப்படையே" காரணமாகும்.

முழுநேர ஊழியர்கள் அன்பளிப்புகள் வாங்கலாம் என்று இருந்தாலும், அவர்கள் தங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப உபயோகத் திற்காக தங்களைக் காட்டிலும் ஏழ்மையான ஜனங்களிடமிருந்து ஒருக்காலும் அன்பளிப்புகள் பெறக்கூடாது. அப்படியே அவர்கள் நமக்கு கொடுத்துவிட்டாலும், அவர்களைக் காட்டிலும் ஏழையான ஜனங்களுக்கு கொடுத்துவிடவோ அல்லது ஆண்டவருடைய ஊழியத்திற்கென அந்தப் பணத்தை காணிக்கைப் பெட்டியில் போட்டு விடவோ வேண்டும்!

பண விஷயத்தைக் குறித்த கீழ்காணும் "பத்து கட்டளைகளை" எல்லா முழுநேர கிறிஸ்தவ ஊழியர்களும் கவனத்துடன் பின்பற்றி விட்டால் ஆண்டவருடைய நாமம் எப்போதும் அவர்கள் மூலமாய் மகிமைப்படுவதாயிருக்கும்:

1)ஒருபோதும் உங்கள் பொருளாதார தேவைகளை தேவன் ஒருவருக்கு மாத்திரமே அல்லாமல், எந்த மனிதனுக்கும் தெரியப் படுத்தாதீர்கள்! (பிலிப்பியர் 4:19).

2) ஒருபோதும் அவிசுவாசிகளின் பணத்தை ஏற்றுக் கொள்ளா தீர்கள் (3 யோவான் 7).

*3) ஒருபோதும் எவ்வித அன்பளிப்பையும், எந்த மனிதனிடத்திலும் எதிர்பார்க்காதீர்கள் (சங்கீதம் 62:5).*

*4) ஒருபோதும் பிறருடைய பணம் உங்களைக் கட்டுப்படுத்தி அல்லது உங்கள் ஊழியத்தை பாதிக்கும்படி அனுமதிக்காதீர்கள்.*

*5) ஒருபோதும் உங்கள் ஊழியத்தை அங்கீகரிக்காதவர்களிடத்தில் பணத்தை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.*

*6) ஒருபோதும் உங்களை விட ஏழ்மையானவர்களிடமிருந்து உங்கள் சொந்த அல்லது குடும்ப தேவைகளுக்காக பணத்தை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.*

*7) ஒருபோதும் உங்கள் பொருளாதார தேவைகளுக்காக எந்த மனிதனையும் 'சார்ந்து' கொள்ளாதீர்கள்.*

*8) ஒருபோதும் நீங்கள் தேவனுடைய பணத்தைக் கையாளும் விதம், பிறர் உங்களை சந்தேகப்பட்டு குற்றப்படுத்துவதற்கு ஏதுண்டாக இடம் தராதீர்கள் (1 கொரிந்தியர் 8:20,21).*

*9) ஒருபோதும் நீங்கள் அன்பளிப்பாய் பணம் பெற்ற உடன் பரவசமடையாதீர்கள்.*

*10) ஒருபோதும் நீங்கள் பணத்தை இழக்கும் நேரத்தில் சோர்வு அடையாதீர்கள்.*

*நான் மேற்கூறிய 16-சத்தியங்கள் உங்களை உற்சாகப்படுத்துவது மாத்திரமல்லாமல் ஒரு மாபெரும் விடுதலையை உங்களுக்குத் தந்திருக்கும் என்றே நான் நம்புகிறேன். நீங்கள் ஆண்டவரோடு நடப்பதிலும் உங்கள் ஊழியத்திலும் "சீரியஸாய்" இருப்பவரா யிருந்தால், தயவுசெய்து இந்த சத்தியங்கள் யாவையும் உங்கள் அனுதின வாழ்க்கையில் மிகவும் கவனமாய் கைக்கொண்டு வாழ்ந்து விடுங்கள்! ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்துங்கள்!!*

# 2

## ஊழியத்திற்கு தேவன் விரும்பும் தகுதிகள் வேண்டும்!

தேவன் உங்களை யாதேனும் "ஊழிய பொறுப்பிற்கு" அழைத் திருக்கிறாரா? அப்படியானால், கிறிஸ்தவ ஊழியத்தில் **தலைமைப் பொறுப்பில்** உள்ள நமக்கு இருக்கும் அபாயம் யாதெனில், "நாம் அதிகமாய் ஜனங்களுக்கு முன்பாக நின்று கொண்டிருக்கிறோம்" என்பதுதான். நாம் **ஜனங்களால்** புகழப்படுகிறோம்! இப்போது பொது ஜன சார்பில் நம்மைப் 'பேட்டியும்' காண்கிறார்கள்! நம் பெயருக்கு முன்பாய் நம்மை கனப்படுத்தும் தலைப்பும், நம் பெயருக்குப் பின்பாய் நாம் பெற்ற பட்டமும் மிகுந்த ஜொலிப்புடன் இருக்கிறது! இவ்வளவும் நமக்கு இருக்கிறதே, இனி வேறென்ன வேண்டியிருக்கிறது? ஊழியனே, மேற்கண்ட அனைத்தும் குப்பைகள்! உனக்கு மிக முக்கிய தேவையான ஒன்று இருக்கிறது: **ஆம், "நாம் தேவனுடைய இருதயத்தை நெருங்கிக் கிட்டிச் சேர்வதே இப்போது தேவை!"**

தனக்கு ஒரு வேலைக்காரன் (Servant) வேண்டுமென்பதற்காக தேவன் ஆதாமை சிருஷ்டிக்கவில்லை! அல்லது தனக்கு ஒரு "பண்டிதன்" (SCHOLAR) வேண்டுமென்பதற்காகவும் தேவன் ஆதாமை சிருஷ்டிக்க வில்லை!! "இப்போது" உங்களையும் என்னையும்கூட அவ்விதமே வேலைக்காரன் (ஊழியன்) தனக்குத் தேவை என்றோ, அல்லது ஒரு பண்டிதன் தனக்குத் தேவை என்றோ ஆண்டவர் சிருஷ்டிக்கவில்லை. அவருக்கு ஏற்கனவே அவரைச் சேவிக்கும்படியாக கோடிக்கணக்கான தேவதூதர்கள் போதுமான அளவு இருக்கிறார்கள்.

**ஆம், ஆதாமைத் தேவன் சிருஷ்டித்ததின் பிரதான நோக்கம், ஆதாம் தன்னோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.**

ஆதியிலே தேவன், "ஆறு நாட்கள் வேலைசெய்து, ஏழாம் நாளில் ஒய்ந்திரு" என்ற பிரமாணத்தை ஆதாமுக்குத் தரவில்லை! இந்தப் பிரமாணம் பிற்காலத்தில்தான் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலம் ஏற்பட்டது.

இதற்கு மாறாக, ஆதாம் ஆறாம் நாளில் தான் சிருஷ்டிக்கப்

பட்டான். ஆகவே, தேவனுக்கு ஏழாம் நாளாயிருந்த அந்த நாள், ஆதாமுக்கோ **முதல் நாளாய்** மாறியது! அதாவது, ஆதாம் தன் சிருஷ்டிகரோடு இளைப்பாறி **அவரோடு ஐக்கியம் கொள்ளும் நாளாகவே** ஆதாமுக்கு அந்த முதல் நாள் இருந்தது! இவ்வாறு, அந்த முதல் நாளில் **ஆதாம் தேவனோடு ஐக்கியம் கொண்ட பிறகுதான்,** அவன் வெளியே தோட்டத்திற்குச் சென்று ஆறு நாட்களும் தேவனுக்கு ஊழியம் செய்திடும் நிலையிலிருந்தான்!!

இவ்வாறு தேவன் நமக்கென ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கு வரிசையை உதாசினம் செய்து "முதலாவதாக" தேவனோடு ஐக்கியம் கொள்ளத் தவறிவிட்டு, அந்த இடத்தை அவருடைய திராட்சத் தோட்டத்திற்குச் சென்று அவருக்கு ஊழியம் செய்யும் நிலை மிகவும் பரிதபிக்கக்கூடிய நிலையே ஆகும். இவ்வாறு நமக்கு சம்பவித்திருக்கும் என்றால், நாம் படைக்கப்பட்டதின் பிரதான நோக்கத்தையும், நம்முடைய மீட்பின் பிரதான நோக்கத்தையும் இழந்துவிட்டோம் என்றே கூறவேண்டும்!!

குறிப்பாய், இந்தியா போன்ற ஒரு தேசத்தில், நம்மைச் சுற்றியுள்ள "தேவையினால் ஆட்கொள்ளப்பட்டு" தேவனிடம் ஐக்கியம் கொள்ளுவதற்கோ நேரம் இல்லாதுபோகும் பரிதாபம் ஏற்பட வாய்ப்பு அதிகமாய் இருக்கிறது.

**ஏராளமான தேவைகள் நம்மைச் சுற்றியிருக்க, தேவனோடு ஐக்கியப்பட 'காத்திருக்கும் நேரம்' வீணான நேரமாக நமக்குத் தோன்றிவிடக்கூடாது!**

ஆனால் "தேவை ஏராளம்" என்ற பின்னணியில் நாம் செய்த ஊழியத்தின் பலன் என்ன? ஒருவேளை ஏராளமான ஊழியங்கள் செய்திருக்கலாம்.... ஆனால், அதன் தரமோ மோசமானதாய் இருப்பதையே நாம் காணமுடியும். எண்ணிக்கை விளம்பர புள்ளி (Statistics) விபரங்கள் எப்போதுமே வஞ்சகம் நிறைந்ததாகும். இவ்வுலகத்தில் மூன்று விதமான பொய்கள் உள்ளன. 1) கறுப்புப் பொய்கள் 2)வெள்ளைப் பொய்கள் 3) எண்ணிக்கை விளம்பர புள்ளி விபரங்கள் தரும் பொய்கள்!! இன்று எல்லோருமே இந்த புள்ளி விபரக் கணக்குகளை வைத்தே தங்களை மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுபோன்ற உங்கள் எண்ணிக்கை புள்ளி விபரங்களில் 'இயேசு' ஒருநாளும் ஆர்வம் கொள்வதேயில்லை.

என் வாழ்க்கையில் சில குறிப்பிட்ட **கேள்விக்குறிகளை** சந்தித்திருக்கிறேன். அதில் ஒன்று, என் ஆரம்ப ஜீவியத்தில் நான் சந்தித்த கேள்விக்குறியாகும். அதாவது, நான் கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்தபோது, எனக்கு வசனங்கள் நன்றாய் தெரிந்திருந்தாலும், என்னிடத்திலோ **வல்லமை** (POWER) **இல்லாதிருந்ததைக்** கண்டேன்.

ஆகவே, உன்னதத்தின் வல்லமையால் நான் தரிப்பிக்கப்படும்படி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காய் நான் தேவனைத் தேடினேன். இன்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக்குறித்து பல்வேறு கருத்துக்கள் இருப்பது எனக்குத் தெரியும். ஆகவே இந்த இடத்தில் நான் யாருடைய கருத்தையும் மாற்ற முயற்சித்து இவைகளை எழுதுவதாக தயவுசெய்து எண்ணிவிட வேண்டாம். என் வாழ்வில் நான் சந்தித்த கேள்விக் குறியைத்தான் இப்போது நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ளுகிறேன். ஆம், நான் மறுபடியும் பிறந்திருந்தேன், தண்ணீர் ஞானஸ்நானமும் பெற்றிருந்தேன்...... ஆனால், என் வாழ்க்கையிலோ "உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள்" புரண்டோடவில்லை! இருப்பினும், தன்னை விசுவாசிக்கும் ஒவ்வொருவருடைய ஜீவியத்திலிருந்தும் ஜீவத் தண்ணீருள்ள நதிகள் புரண்டோடும் என்றும், அவர்களிடம் ஒரு போதும் வறட்சி காணப்படாது என்றும் இயேசு வாக்குத்தத்தம் செய்திருப்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் நானோ அநேக சமயங்களில் வறட்சியாக இருந்ததையே கண்டேன். நான் வசனங்களை அறிந்திருந்தாலும்கூட, நான் தொடர்ந்து பிரசங்கங்களை செய்து கொண்டிருந்தாலுமேகூட **வறட்சியாகத்தான்** இருந்தேன். அநேக சமயங்களில் நான் கர்த்தருக்குச் செய்யும் ஊழியம் கையினால் இயங்கும் "அடி-பைப்" போலவே இருந்தது! பல தடவை நாம் கையினால் அடித்தபின்பே குழாயில் இலேசாகத் தண்ணீர் வரும். இவ்விதநிலை, நிச்சயமாய் நதிக்கு ஒப்பானது அல்ல! ஆனால் இயேசுவின் வார்த்தையோ மிகத்தெளிவாக "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, **அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்**" என்றே கூறுவதைக் காண்கிறேன். கடைசியாய் நான் இங்கு சுருக்கமாய் சொல்ல விரும்புவதெல்லாம், "என்னுடைய வறட்சியான நிலையிலிருந்து நான் கர்த்தரைத் தேடினேன்...... அவர் என்னைச் சந்தித்தார்!" என்பதுதான்.

**இவ்வாறு தேவன் தம்முடைய அபிஷேகத்தினால் என்னைச் சந்தித்த நிகழ்ச்சி என் ஜீவியத்தின் முழுதிசையையும் மாற்றிவிட்டது!!**

இவ்வேளையில், நான் ஒன்றும் பெந்தெகொஸ்தே சபையில் சேர்ந்துவிடவில்லை. இன்றும்கூட என்னை நான் ஒரு "பெந்தெகொஸ்தேகாரனாகவோ" அல்லது "கரிஸ்மேட்டிக்காரனாகவோ" (CHARISMATIC) எண்ணுவது இல்லை. "ஆனால், தேவன் என்னைச் சந்தித்து, தம்முடைய **பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பினார்**!" அவ்வளவுதான்.

அடுத்ததாக, சில வருடங்களுக்குப்பின்பு என் வாழ்வில் நான் மற்றொரு கேள்விக்குறியைச் சந்தித்தேன். அந்தக் கேள்விக்குறி என்

வாழ்க்கையின் "**உண்மை நிலையைப்**" (REALITY) பற்றியதாகும். **அதாவது, நான் பிரசங்கிக்கும் யாவும் என் உள்ளான வாழ்க்கையின்படி உண்மையான வைகள்தானா?** நான் ஜனங்களிடத்தில் பேசும்போது, பாரம் கொண்டது போல் பேசியவைகள், உண்மையிலேயே என் இருதயத்தில் பாரமுள்ளதாய் இருந்ததா? என்ற கேள்விக்குறியேயாகும்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக தியாலாலியில் (DIOLALI) நடந்த அகில இந்திய சுவிசேஷ முதல் மாநாட்டில், என்னுடைய செய்திக் கட்டுரையை சமர்ப்பித்தேன். அப்போது நான் 30 வயது நிரம்பிய இளைஞன்! நாம் இளைஞராயிருக்கும்போது எப்படியிருப்போம் என்பது உங்களுக்கே தெரியும். ஆம், நானும் ஒவ்வொருவரையும் கவர்ச்சிக்கவே விரும்பினேன். நான் பல மணிநேரங்கள் பிரயாசப்பட்டு அந்த கட்டுரையை எழுதியபடியால், அந்தச் செய்திகள் அனைத்தும் மிகவும் கவர்ச்சிகரமாகவே இருந்தது! இவ்வாறு கவர்ச்சிக்கும் அடிப்படையிலேயே, என்னுடைய ஊழியத்தில் தொடர்ந்து நான் ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற அநேக நாடுகளுக்குப் பிரயாணமாய் சென்று ஆழ்ந்த ஜீவியக் கருத்தரங்குகளில் பேசினேன்! நான் எங்கு சென்றாலும், என்னுடைய ஒரே நோக்கம் ஜனங்களைக் கவர்ச்சிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது!!

**பின்பு ஆண்டவர் என்னிடத்தில் பேசி, "நீ ஜனங்களை கவர்ச்சிக்க (IMPRESS)விரும்புகிறாயா? அல்லது, அவர்களுக்கு உதவிட (HELP) விரும்புகிறாயா?" எனக் கேட்டார். உடனே நான், "ஆண்டவரே ஜனங்களுக்கு உதவிடவே நான் மெய்யாய் விரும்புகிறேன்" என்றேன்.**

அதற்கு ஆண்டவர், "அப்படியானால் ஜனங்களைக் கவர்சிக்கும் முயற்சியை நிறுத்து!" எனக்கூறினார். இந்த சரியான இடத்தில்தான், "ஆண்டவரே நான் என்ன பிரசங்கிக்கிறேனோ அதற்கு ஏற்றாற்போல் என் உள்ளான ஜீவியம் இல்லையே!" எனக் கதறிடும் இடத்திற்கு நான் வந்துவிட்டேன். வெளிப்புறமாய், எனக்கு நல்ல சாட்சியிருந்தது. ஆனால் என் சிந்தை வாழ்க்கையும், பணம் மற்றும் உலகப் பொருட்களின் மீது கொண்ட மனப்பான்மைகளும் கிறிஸ்துவுக்கு ஒப்பாய் இருக்கவில்லை! இவ்வாறு என் நிலையைக்குறித்து நான் தேவனிடம் "நேர்மையாய்" அறிக்கை செய்தேன்!!

ஆம், தேவனைக் கிட்டிச்சேர்வதற்கு "**நேர்மையாய்** நடந்து கொள்வதே" முதல்படி என்பதை நான் ஆழமாய் விசுவாசிக்கிறேன்.

அந்நாட்களிலேயே நான் அநேகரால் அறியப்பட்டிருந்தேன். நான் புத்தகங்களும் எழுதியிருந்தேன். அப்புத்தகங்கள் யாவும் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டது. வாரந்தோறும் என்னுடைய "வானொலி நிகழ்ச்சியும்" ஒலிபரப்பானது. இங்கும் அங்குமாய் பல இடங்களில்

பிரசங்கிப்பதற்கும் அழைக்கப்பட்டேன். இந்த நிலையில், ஒருநாள் ஆண்டவர் என்னிடம், "உன்னைப் பெருமளவு மதித்து, இங்கு கூடிவந்திருக்கும் ஜனக்கூட்டத்திற்கு முன்பாய் நான் ஓர் நேர்மையாளன் அல்ல! நடைமுறையில் என்னிடத்தில் உண்மையில்லை எனக் கூறிட நீ ஆயத்தமா?" எனக் கேட்டார். அதற்கு நான், "அப்படியே செய்வேன் கர்த்தாவே, ஜனங்கள் என்னை என்ன எண்ணிக்கொள்வார்கள்? என்பதைக் குறித்து அக்கறையில்லை! எப்படியாகிலும் நீர் எனக்கு உதவி செய்து, என் பிரசங்கத்திற்கு ஒப்பாகவே என் உள்ளான ஜீவியமும் இருக்கும்படி என்னை மாற்றும். அது ஒன்றே இப்போது நான் உம்மிடம் மன்றாடும் ஒரே ஜெபம்" எனக் கூறினேன்.

இவ்வாறாகவே நான் 30 ஆண்டுகளுக்கு முன்பாக தேவனிடம் விண்ணப்பம் செய்தேன். என் ஜெபத்தைக் கேட்டு, தேவன் என்னைச் சந்தித்தார்! "தன்னை ஊக்கமாய் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிக்கிறவர்" என்ற வசனம் எத்தனை உண்மையாய் இருக்கிறது! இதற்குப் பிறகுதான் "**மேலே ஏறிவா!**" என ஆண்டவர் என்னைப் பட்சமாய் அழைத்தார்.

என் கடந்த 30 ஆண்டுகளில், தேவனோடு நான் ஐக்கியம் கொள்வது என் வாழ்வின் மிக அருமையானதாய் மாறிவிட்டது! அவரோடு நான் கொண்ட ஐக்கியம், என் முழு ஜீவியத்தையும் மாற்றி, என் ஜீவியத்திலிருந்த எல்லா அதைரியத்தையும் மனச்சோர்வையும் முற்றிலுமாய் அகற்றிவிட்டது.

**தேவனோடு இசைந்து நடக்கும் இரகசியத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன். அந்த இனிய ஐக்கியம், நான் கர்த்தருக்குச் செய்திடும் ஊழியத்தை மகிழ்ச்சி நிறைந்ததாய் மாற்றிவிட்டது! இனியும் என் ஊழியத்தில் வறட்சிக்கு இடமே இல்லை!!**

ஆகவே, உங்கள் முழு ஊழியமும், நீங்கள் எவ்வாறு தேவனோடு தனிப்பட்ட விதத்தில் இசைந்து நடக்கப் போகிறீர்கள் என்பதைச் சார்ந்தே இருக்கிறது! இயேசு ஒருசமயம் மார்த்தாள், மரியாள் வீட்டிலிருந்த நிகழ்ச்சி உங்கள் மனதில் இருக்கும் என நான் நம்புகிறேன். அவர் மார்த்தாளைப் பார்த்து: "நீ அநேக காரியங்களைக்குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" எனக் கூறினார். அவ்வாறு மார்த்தாள் எவைகளைக் குறித்து கவலைப்பட்டு கலங்கினாள்? அங்கே ஒரே ஒரு தேவைதான் அப்போது இருந்தது. ஆம், அவள் தனக்காக அல்ல தன் ஆண்டவருக்கும் அவர் சீஷர்களுக்கும் சமையல்கட்டில் மிகுந்த தியாகத்துடன் சுயநலம் சிறிதுமில்லாமல் வியர்வை சிந்த ஊழியப்பணி செய்து கொண்டிருந்தாள். அவ்வேளையில், அவள் செய்திடக்கூடிய இதைவிட மேலான ஊழியம் வேறு என்ன வேண்டும்? அவளுடைய

ஊழியம் முழுக்க முழுக்க சுயநலம் அற்றது! இன்று அநேக கிறிஸ்தவ ஊழியர்கள் செய்வது போல் அவள் தன் ஆண்டவருக்குச் செய்த ஊழியத்தைப் பணத்திற்காகவோ அல்லது சம்பளத்திற்காகவோ செய்யவேயில்லை!! அப்படி இல்லவே இல்லை!! அவ்வாறு இருந்தும் கூட ஆண்டவர் அவளைப்பார்த்து "நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறாய்" எனக் கூறிவிட்டாரே? அவ்வேளையில் மார்த்தாளின் சிந்தையில் இருந்த எண்ணம், "மரியாள் சுயநலமாய் ஒருவேலையும் செய்யாமல் ஆண்டவரின் பாதபடியில் அமர்ந்து அவரை கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறாளே" என்பதுதான். இங்குதான் இயேசு மிக ஆணித்தரமாய் குறிப்பிட்டு, "மரியாள் செய்து கொண்டிருக்கும் இந்தச் செயலே மிக முக்கியமானதாகும். இது ஒன்றே இப்போது மிகவும் தேவை!" எனக் கூறிவிட்டார்.

**1கொரிந்தியர் 4:2-ல் காணப்படும் வசனம் LIVING BIBLE மொழிபெயர்ப்பில் "ஒரு ஊழியனுக்குரிய முக்கியமான காரியம்: தன் எஜமான் அவனுக்கு என்ன சொல்லுகிறாரோ அதை அவன் அப்படியே செய்வதுதான்!" என மிக அருமையாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

இந்த வசனம் என் இருதயத்திற்கு சொல்லிமுடியா இளைப் பாறுதலைக் கொடுத்திருக்கிறது! தேவை நிறைந்த உலகத்தை நான் காணும்போது, நான் இப்போது என்ன செய்திட வேண்டும்? காணும் தேவைகளுக்கு ஒப்பாய் நான் செயல்படத் துவங்கவேண்டுமா? இவ்வாறு என்னில் கிரியையை முடக்கிவிட இன்று கிறிஸ்தவ உலகில் ஏராளமான திறமை ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால் நானோ, ஆண்டவரிடம் திரும்பி, "**நீர் என்ன சொல்ல விரும்புகிறீர்?**" என்றே கேட்கிறேன். இன்றும் எண்ணற்ற மார்த்தாள்கள் என்னைக் குறைகூறி "பாவத்தில் மாய்ந்து கொண்டிருக்கும் தேவைமிகுந்த இந்த உலகத்தில், உம் பாதத்தில் உட்கார்ந்து கவனித்துக்கொண்டு நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று இவருக்குச் சொல்லும்!" என்றே கூறுகிறார்கள்!!

இந்த உலகத்தின் தேவைகளை நாம் நிச்சமாய் பார்க்க வேண்டும் தான்! இயேசுவும்கூட "அறுவடை மிகுதி! உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்!!" என சொல்லத்தான் செய்தார். நாம் தேவையைக் காண்பது மாத்திரமல்லாமல், மற்றவர்களுக்கும் தேவையை சுட்டிக் காட்டத்தான் வேண்டும். ஆனால் "**அழைப்பு**" மனுஷனிடமிருந்து அல்ல..... "**தேவனிடமிருந்தே**" வரவேண்டும்!! இதுதான் உண்மை என்பதை நான் கண்டுபிடித்திருக்கிறேன்.

"ஒரு இரட்சகர்" இல்லாமல் இந்த உலகம் "தேவையில்" மரித்துக் கொண்டிருக்க இயேசுவோ 4000 ஆண்டுகளாய் பரலோகத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்! பிதா நியமித்த காலத்திற்கு முன்பாக,

*பரலோகத்தைவிட்டு வரும்படி அவரை ஒருவர்கூட நிர்ப்பந்தம் செய்திட முடியவில்லை. ஆனால் "காலம் நிறைவேறியவுடன்" அவர் வந்தார்! அவ்வாறு அவர் உலகத்திற்கு வந்தபிறகும்கூட, உலகம் பாவத்தில் மரித்துக்கொண்டிருக்கையில் அவரோ 30 ஆண்டுகளாய் உட்கார்ந்து ஸ்டூலும், பெஞ்சும் செய்து கொண்டிருந்தார்!! தேவையை மாத்திரமே கருதி அவர் எதுவும் செயல்படவில்லை. ஆனால் ஏற்ற வேளை வந்தவுடன், பிதா அவரைப் "போ" என்றதும் உடனே புறப்பட்டுச் சென்றார்!! மற்றவர்கள் 3000 ஆண்டுகள் செய்ததைக் காட்டிலும் 3½ வருடங்களில் ஏராளமாய் செய்துமுடித்தார்!! ஒரு ஊழியனைக் குறித்த மிக முக்கியமான காரியம், தேவனுக்காக இதையும் அதையும் செய்யும்படி ஓடித்திரிவதல்ல..... மாறாக, அவரை கவனித்துக் கேட்பதுதான்! இவ்வாறு* **தேவனுடைய பாதத்தில் அமர்ந்து கேட்பதுதான்** *இன்று அநேகருக்கு மிகக் கடினமானதாய் இருக்கிறது!*

*என்னுடைய வாலிப நாட்களில் நான் இருந்த சபையில், மிகுந்த கிரமமாய் வேதாகமத்தைக் கற்று, உபவாசித்து, ஜெபித்து வந்தோம். ஒவ்வொருநாள் காலையும் "தியான நேரம்" கைக்கொள்ளவும் போதிக்கப்பட்டோம்.*

**இவ்வாறு காலையில் "தியான நேரம்" கைக்கொள்ள உங்கள் எல்லோ ரையும் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

*அது உண்மையிலேயே ஒரு நல்ல பழக்கம். இருப்பினும், இவ்வாறு என்னதான் ஜனங்கள் நேரத்தை தேவனுடைய சமூகத்தில் செலவழித்தாலும்...... ஜனங்களோ இன்னமும் கசப்பும், குறை கூறுதலும், குற்றம் சாட்டுதலும், சந்தேக மனப்பான்மை கொண்டவர்களுமாகவே இருந்தார்கள்! இது நிச்சயமாய் ஏதோ ஒரு தவறு எங்கோ இருப்பதையே காட்டுகிறது!! நான் ஒரு தேவ மனிதனோடு சுமார் 10 அல்லது 15 நிமிடங்கள் மாத்திரமே செலவழித்து அதன்மூலம் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டு, என் உள்ளம் "சவாலினால்" நிரம்பிய நேரங்களை அறிந்திருக்கிறேன். அவ்வாறிருக்க, இந்த 10 அல்லது 15 நிமிடங்கள் நான் தேவனோடு செலவழித்திருந்தால், அது எத்தனை அதிகம் என்னில் மாறுதலைக் கொண்டுவந்திருக்கும்?! அப்படியிருக்க, நாம் இன்னமும் மாறுதலடையாதிருப்பது எங்ஙனம்? இப்போது ஆண்டவர் என்னிடம் உண்மையைக் காட்டினார்...... ஆம், என் தியானநேரத்தில் நான்* **அவரோடு** *நேரத்தை செலவழிக்கவில்லை! அவ்வளவுதான்.* **எனக்கு நானே** *நேரத்தை எடுத்துக்கொண்டு, புத்தகத்தைப் படித்துக் கொண்டேயிருந்திருக்கிறேன். அந்தப் புத்தகம் வேதப்புத்தகமோ அல்லது ரசாயணப் புத்தகமோ, எல்லாம் ஒன்றுதான்!! நான் "தேவனோடு" நேரம் செலவழித்து "அவரை" கவனித்துக் கேட்காமல், ஒரு புத்தகத்தை*

வாசிப்பதற்கே நேரம் செலவழித்து விட்டேன்!

மரியாளைக் குறித்து இயேசு குறிப்பிடும்போது, "தேவையானது ஒன்று...... அமர்ந்து கேட்பதே" என்றார். இந்த ஒன்றிலிருந்துதான் சகலமும் ஊற்றாகப் புறப்பட்டுச் செல்கிறது. நாம் தேவனுக்கு ஊழியம் செய்திட இதுவே வலிமையான வழியாகும். ஏனென்றால், இவ்வழி மூலமாகவே நாம் என்ன செய்திட தேவன் விரும்புகிறார்? என்பதை அவர் நம்மிடம் கூறிடமுடியும்!

இயேசு என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பிதாதான் அவரிடம் கூறினார். ஒரு சமயம் இயேசு ஆவியானவரால் தூண்டப்பட்டு கலிலேயாவிலிருந்து இஸ்ரவேல் எல்லைக்கு அப்பாலிருந்த சீதோன் பட்டணத்திற்கு சுமார் 50 மைல்கள் நடந்து சென்றார். அவர் நடந்த அந்த இடத்தை அடைந்திட கிட்டதட்ட ஒருநாள்கூட ஆகியிருக்கும். அங்கே தன் மகள் பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு கானானிய ஸ்திரீயை அவர் சந்தித்தார். அந்தப் பிசாசை அவர் துரத்திய சமயத்தில், அந்த ஸ்திரீ பிள்ளைகளின் மேஜையிலிருந்து விழும் அப்பத்தின் துணிக்கைகளைக் கேட்டதை "பெரிய விசுவாசம்" என தன் சீஷர்களுக்கு இயேசு சுட்டிக்காட்டினார். பிறகு அவர் மீண்டும் கலிலேயாவுக்கே திரும்பிச் சென்றார் என்றும் வாசிக்கிறோம். இயேசுவின் ஊழியம் அப்படித்தான் இருந்தது.

**"ஒரு ஆத்துமாவைச்" சந்திப்பதற்காக அத்தனை மைல்கள் நடந்து சென்றார்! இவ்வித ஊழியம் புள்ளி விபரங்களில் நாட்டம் கொண்டவர்களுக்கு கவர்ச்சியாய் தோன்றாது!! ஆனால், இவ்விதமான ஊழியமே தேவனுடைய சித்தமாகும்!!**

ஆம், இயேசு இவ்வாறாகவே 3½ ஆண்டுகள் தேவனுக்கு ஊழியம் செய்தார். ஊழியத்தின் முடிவில், "பிதாவே, நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" (யோவான் 17:4) என மனநிறைவுடன் கூறினார். அப்படியென்ன மனநிறைவு? இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற உலகத்திலுள்ள எல்லா தேசத்து தேவைகளையும் அவர் சந்தித்துவிட்டாரா? அப்படியில்லை...... இல்லவே இல்லை!. ஆனால், **அவர் செய்யும்படி பிதா தந்த** எல்லா ஊழியங்களையும் செய்து முடித்துவிட்டார்!! இனி அவர் இந்த பூமியில் ஒரு நாள்கூட அதிகமாய் தங்கிட விருப்பம் கொண்டிருக்கவில்லை. இவ்விதமே அப்போஸ்தலனாகிய பவுலும் "என் ஓட்டத்தை ஓடி முடித்தேன்" என தன் ஜீவியத்தின் இறுதியில் கூற முடிந்தது!

கிறிஸ்துவின் சரீரத்தில் **நீங்கள்** வித்தியாசமான ஊழியத்தையும், நான் வேறொரு வித்தியாசமான ஊழியத்தையும் பெற்றிருக்கிறோம். ஆனால், நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்

என்பதை நாம் யாவரும் தெளிவாய் அறிந்திருக்க வேண்டும். இன்று நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்கமுடியாதுபோன பரிதாபத்திற்குரிய காரணங்களில் ஒன்று, நம் ஜீவியத்தில் காணும் **நேர்மையற்ற தன்மையும் பாசாங்கு** (Dishonesty and Pretence) செய்வதுமேயாகும்.

இந்த "பாசாங்கான ஜீவியமே" இயேசு என்ன சொல்கிறார்? என கேட்டுவிளங்கமுடியாத பரிதாபத்திற்குப் பரிசேயர்களைக் கொண்டு சென்றது. தாங்கள் தேவபக்தியுள்ளவர்கள்போல மற்றவர்களுக்குத் **தோற்றமளித்தார்கள்.** ஆம், அவர்கள் ஜனங்களுக்கு முன்பாக, அக்காலத் திற்குரிய தலைவர்களைப் போலவும், பண்டிதர்களைப் போலவும் நின்றார்கள்! பேதுருவும், யோவானும் 'இயேசுவை சந்தித்ததற்கு முன்பாக' நீங்கள் அவர்களைச் சந்தித்து "அன்பார்ந்த பேதுருவே, யோவானே! நீங்கள் நன்கு அறிந்திருக்கிற பக்தியுள்ள சில மனிதர்களின் பெயர்களை எங்களுக்குக் கூறமுடியுமா?" எனக் கேட்டிருந்தால், அவர்களின் ஸ்தல ஆலயத்தில் மூப்பராய் இருக்கும் சில பரிசேயர்களின் பெயரையே நிச்சயமாய் கூறியிருப்பார்கள். ஏனென்றால், யார் வேதாகமத்தைக் கற்றுத்தேர்ந்து, உபவாசித்து, ஜெபித்து...... பரிசுத்தமும் பக்தியுமாய் **தோற்றமளித்தார்களோ** அவர்களே உண்மையான பக்தர்கள் என்பதே அவர்களுடைய எண்ணமாய் அன்று இருந்தது! இவ்வித நிலையில் இயேசு எழுந்துநின்று ஆலயத்திலிருந்த "அந்த மூப்பர்களை" மாய்மாலக்காரர்களும், நரகத்திற்குப் பாத்திரர்கள் என்றும் சாடியதைக் கேட்டு, அவர்கள் எவ்வளவாய் அதிர்ச்சியடைந் திருப்பார்கள் என்பதைச் சற்று எண்ணிப்பாருங்கள்!!

**இயேசு தன் சீஷர்களைத் தேர்ந்தெடுத்தபோது, அவர்களில் ஒருவரைக் கூட எந்த "பைபிள்-ஸ்கூலிலிருந்தும்" தேர்ந்தெடுக்கவில்லை!**

அன்று எருசலேமில் "கமாலியேல்" நடத்திய ஒரு பைபிள் ஸ்கூல் இருக்கத்தான் செய்தது. ஆனால் இயேசுவோ, தன் சீஷர்களைக் கலிலேயா கரையோரத்திலிருந்த "**கல்வியறிவில்லாதவர்களையே" தேர்ந்தெடுத்து** அவர்களை தனது அப்போஸ்தலர்களாய் மாற்றினார். இந்த கல்வியறிவில்லாத இவர்கள் புத்தகங்கள் எழுதினார்கள்! இன்று அந்தப் புத்தகங்களை வேத-கலாசாலைகள், தங்கள் மாணாக்கர் களுக்குப் படிக்கக் கொடுத்து, அவர்களை "வேதாகம - டாக்டர் களாகப்" பட்டம் பெறச் செய்கிறார்கள்!? இது நம் கண்களுக்கு விந்தையான காட்சியாய் இருக்கிறதல்லவா? இன்றைய வேத- கலா சாலைகளில் ஒன்றிற்கு "பேதுரு" சென்று கற்றால், அவர் "பாஸ்" பண்ணி பட்டம் பெற்றிட முடியாது என்றே நான் எண்ணுகிறேன்! ஒருவேளை, அந்த 12- இயேசுவின் சீஷர்களில் திறமையும், கெட்டிக் காரனுமாயிருந்த யூதாஸ்காரியோத்து மாத்திமே இதுபோன்ற வேதகலா

சாலை பட்டம் பெற்றிடக் கூடுமோ என்றும் வியக்கிறேன்!!?

இயேசு ஏன் இதுபோன்ற ஜனங்களைத் தேர்ந்தெடுத்தார்? ஏனெனில், இவர்களே எளிய - இருதயமும், இயேசு கூறுவதைக் கவனித்துக் கேட்க விருப்பம் கொண்டவர்களாயுமிருந்தனர்! இந்தச் சாதாரண மனிதர்கள் ஆலயங்களுக்குச் சென்று பிரசங்கித்த போது தான்.... ஆ, எத்தனையாய் எழுப்புதலை ஏற்படுத்திவிட்டனர்! அவர்கள் சென்ற இடங்களில், ஜனங்கள் வழக்கமாய் கேட்டுவந்த செய்திகளைப் பிரசங்கிக்கவில்லை. ஆம், அவர்கள் **தீர்க்கதரிசிகளாய்** நின்றார்கள்!! ஆனால், ஜனங்களோ தீர்க்கதரிசிகளை ஒருபோதும் விரும்பியதே யில்லை. இஸ்ரவேல் தேசத்தின் கடந்த 1500 வருட சரித்திரத்தில், ஸ்தேவான் கூறியதுபோல "தீர்க்கதரிசிகளில் யாரை நீங்கள் துன்புறுத்தா திருந்தீர்கள்?" என்ற நிலையே தொன்றுதொட்டு நிலைத்திருக்கிறது.

அந்த அப்போஸ்தலர்கள் ஒன்றும், மக்களைத் தட்டிக்கொடுத்துப் பேசும் தந்திரப் பிரசங்கிகள் அல்ல! அவர்களோ தீர்க்கதரிசிகளாய் இருந்தார்கள்.

**இன்று நம் தேசத்திற்கும் 'இவ்வாறு' சில தீர்க்கதரிசிகள் இருந்தால், தேவன் இன்று என்ன பேசுகிறார்? என்பதைக் கேட்டிட முடியுமே என வாஞ்சிக்கிறேன்!**

ஆம், இன்றும் மனுஷர் கண்களுக்கு முன்பாக பெரிதும், மேன்மை யுமாய் இருப்பவைகளைக்குறித்து தேவன் ஒரு பொருட்டாய் எண்ணுவதேயில்லை!

இந்தச் செய்திகளைப் கேட்டுக்கொண்டிருக்கும் இதுபோன்ற நூற்றுக்கணக்கில் கூடியிருக்கும் "கிறிஸ்தவத் தலைவர்கள் முகாமிற்கு" நான் ஒன்றும் விரோதியல்ல! ஆனால், நானோ கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாய் இதுபோன்ற கூட்டங்களுக்குச் செல்வதை நிறுத்திவிட்டேன்! எனக்கு வரும் அழைப்புகளை நான் ஏற்றுக் கொள்வதும் இல்லை. இத்தகைய திரள் கூட்டங்களில் வந்து நீங்கள் நிற்பது உங்களுக்குப் புகழ் சேர்க்கும் என்பதை நான் அறிவேன். கேஸட் மூலமாகவும், வீடியோ-கேஸட் மூலமாகவும் நீங்கள் பிரபல்யமும் ஆகலாம்! ஆனால், நம் தேசத்தின் கிராமப்பகுதிகளில் நான் பிரயாணமாய் சென்று (இப்போது என் ஊழியத்தின் பெரும்பகுதி இவ்வித கிராமப் பகுதிகளேயாகும்!) கண்டறிந்தது என்னவென்றால், "உண்மையான ஊழியத்தைச் செய்பவர்கள்" இப்போது நான் பேசிக் கொண்டிருக்கும் இதுபோன்ற "தலைவர்கள் முகாமில்" இல்லை! என்பதுதான். **அந்த உத்தம ஊழியர்கள், அறியப்படாதவர்களாயும், எங்கோ கிராமத்தின் மூலை முடுக்குகளிலுமே இருக்கிறார்கள்.** அவர்களால் "ஆங்கிலம்" பேசத்தெரியாது...... நிச்சயமாய் நீங்கள் செய்வதுபோல்

*“ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதும்” என்னவென்றே அவர்களுக்குத் தெரியாது!! ஆனால் அவர்களோ பரிசுத்த ஆவியில் நிறைந்திருக்கிறார்கள்! ஆண்டவரை முழு இருதயமாய் நேசிக்கிறார்கள்! அழியும் ஆத்துமாக்களைத் தேடிச்சென்று கிறிஸ்துவிடம் சேர்க்கிறார்கள்! இதுபோன்ற உத்தம ஊழியர்களுக்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்!! மற்றவர்களோ, தங்கள் “மிஷன் ஸ்தாபனத்தை” ஸ்தாபித்து, அதற்கு “மிஷன் தலைவர்களாய்” மாறி, கனத்தையும் வாரிக் கொள்கிறார்கள்!! ஆனால்...... இன்று முதலாவதாக இருக்கும் இவ்வித அநேகர், இயேசு வரும்நாளில் பிந்தினோராய் மாறுவார்கள்!*

**ஆகவே, நாம் தாழ்மையாய் இருப்பதே நல்லது! நம்மைக்குறித்து எப்போதும் “சிறிய எண்ணம்” கொண்டிருப்பதே நமக்கு நல்லது! நம்முடைய வேதாகம பட்டங்களையும், சபை பதவி ஸ்தானங்களையும் பார்த்து அநேக மாம்சீக கிறிஸ்தவர்கள் கவர்ச்சிக்கப்படலாம்! ஆனால், நிச்சயமாய் தேவனை இவையாதொன்றும் கவர்ச்சிப்பதேயில்லை!**

இன்னும் சொல்லப்போனால், இவைகள் பிசாசைக்கூட கவர்ச்சிப் *பதில்லை!? ஆம், சாத்தான் அஞ்சுவதெல்லாம், ஓர் பரிசுத்த மனிதனுக்கும்; போலியாய் இல்லாமல் “அசலாய்” இருப்பவனுக்கும்; வெளியரங்க ஜீவியத்திற்கொப்பாகவே உள்ளான ஜீவியத்தில் நிலைநிற்பவனுக்கும்; தான் அப்பியாசப்படுத்தாத எதையும் பிரசங்கிக்கத் துணியாதவனுக்குமே, அவன் அஞ்சுகிறான்! இதைத்தவிர வேறு யாதொன்றையும் தனக்கு ஊழியம் செய்திட தகுதியாக தேவன் காண்பதில்லை!!*

# 3

## இயேசுவின் தாழ்மைகொண்ட ஊழியர்கள் வேண்டும்!

ஜனங்கள் என்னிடம் "சகோதரர் சகரியாபூணனே, நீங்கள் ஏன் வட இந்தியாவிற்கு ஊழியம் செய்ய ஜனங்கள் செல்லும்படி ஊக்குவிக்கக் கூடாது?" எனக் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் "இயேசு செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினார்" என்ற அப்போஸ்தலர் 1:2-ம் வசனத்தையே பதிலாகக் கூறுகிறேன்:

**ஆம், நான் வட இந்தியாவில் ஜீவித்ததில்லை, ஊழியம் செய்ததில்லை! ஆகவே அதை மற்றவர்கள் செய்யும்படியும் என்னால் கூறிட இயலாது!!**

இவ்வாறு வடஇந்திய ஊழியத்தைக்குறித்து பேசக்கூடாது என நான் கூறவில்லை. நான் சொல்வதெல்லாம், "நான் அதைச் செய்ய வில்லை, ஆகவே நான் அதைப் பிரசங்கிக்கவும் முடியாது!" என்பதுதான்.

நானே கிறிஸ்துவின் முழு சரீரமும் அல்ல! நான் அந்த சரீரத்தில் ஒரு அங்கம் மாத்திரமே!! ஆம், **கிறிஸ்துவின் சரீரத்தில் நான் ஒரு "சமநிலையற்ற அங்கமாகவே" இருக்கிறேன்.** என் ஜீவ காலமெல்லாம் இவ்விதம் நான் சமநிலையற்றவனாகவேதான் இருப்பேன்! இப்பூமியில் சமநிலை மனிதனாக நடந்த ஒரே புருஷன் இயேசுகிறிஸ்து மாத்திரமே யாவார். நீங்கள் சமநிலையற்றவர், நானும் அப்படியே! நம்மில் ஒருவராகிலும், "நான் சரீரத்தில் ஒரு அங்கம்" என்பதைவிட அதிகமாய் எண்ணாதிருக்கக்கடவோம்! சரீரத்திற்கு ஒவ்வொரு அங்கமும் தேவையாயிருக்கிறது. ஜனங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாய் மாறி, ஒரே சரீரமாய் கட்டப்பட வேண்டுமென்றால் ... சுவிசேஷகன், போதகன், மேய்ப்பன், தீர்க்கதரிசி, அப்போஸ்தலன் ஆகிய அனைத்து அங்கங்களுமே தேவையாய் இருக்கிறார்கள்!

இன்று நம்முடைய அழைப்பு என்ன? கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் இல்லாத ஒருவரை, **அவருடைய சரீரத்தின் அங்கமாய் மாற்றுவதே** நம் யாவருக்குமுள்ள பொதுவான அழைப்பாகும். இந்த உண்மையை நாம் யாவரும் ஒத்துக்கொள்வோம் என்றே நான் எண்ணுகிறேன்.

பரிசுத்தாவியானவர் "சரீரம்" என்ற வார்த்தையை வேதாகமத்தில் உபயோகித்திருக்கிறபடியால், நம் சரீரத்தை வைத்தே ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன். ஒரு தட்டில் ஒரு உருளைக்கிழங்கு இருப்பதாக வைத்துக்கொள்வோம். இந்த உருளைக்கிழங்கு "ஒரு அவிசுவாசிக்கு" ஒப்பாய் இருக்கிறது. இப்போது இந்த உருளைக்கிழங்கு (அவிசுவாசி) என் சரீரத்தில் ஒரு அங்கமாய் மாற வேண்டும். அது எப்படி நடக்கும்? அது முதலாவதாய் **சுவிசேஷ ஊழியத்தின்** மூலமாகவே துவங்குகிறது. அதாவது, உருளைக்கிழங்கை நோக்கி 'கை' சென்று அதைத் தன் கையில் எடுத்துக்கொள்கிறது!

இவ்வாறு சுவிசேஷ ஊழியமே இப்பணியில் எப்போதும் முதலிடம் வகிக்கிறபடியால், நான் ஒருபோதும் சுவிசேஷ ஊழியத்தைக் குறைவாய் மதிப்பிடுவதேயில்லை. அந்த ஊழியத்தை நான் அதிகமாய் மதிக்கிறேன். குறிப்பாக, வட இந்தியாவின் உஷ்ணத்திலும், தூசியிலும் ஊழியம் செய்பவர்களை நான் பெரிதளவில் மதிக்கிறேன். இவ்வித வட இந்திய ஊழியங்களைப்பற்றிய பல பத்திரிக்கைகளை நான் பெற்று, அங்கே பாடுபடும் என் அருமையான சகோதரர்களின் ஊழியங்களை ஆர்வமுடன் வாசித்து அறிகிறேன். அவ்வப்போது, அங்குள்ள சிலரைச் சந்திப்பதற்கும் நான் சென்றிருக்கிறேன்.

சரி, தட்டிலுள்ள உருளைக்கிழங்கை இப்போது என் கை எடுத்து விட்டது! ஆனால், என் கை (சுவிசேஷகன்) இந்த உருளைக்கிழங்கை நோக்கிச் சென்று, அதை எடுத்து என் வாயில் போட்டால் ஒழிய (சுவிசேஷ ஊழியம் செய்தாலொழிய) அந்த உருளைக்கிழங்கு என் சரீரத்தின் ஒரு அங்கமாய் ஒருபோதும் மாறிடவே முடியாது!

ஆனால் **இந்த கை செய்த சுவிசேஷ ஊழியமே "எல்லாம்" செய்ததாகுமா?** அந்த உருளைக்கிழங்கை நான் வெறுமனே என் வாயில் வைத்துக் கொண்டேயிருந்தால், அது என் சரீரத்தின் ஒரு அங்கமாகிட முடியுமா? ஒருக்காலும் அவ்விதம் மாறிடாது! ஏனென்றால், வாயிலேயே இருக்கும் உருளைக்கிழங்கு அழுகி நாற்றமெடுக்கும், அதை நானும் வெளியே துப்பிவிடுவேன்! இவ்விதமே நம்மிடமுள்ள சில சபைகளில் மனந்திரும்பி வந்தவர்கள், இப்போது அழுகி நாற்ற மெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாயில் கொண்டு செல்லப் பட்டது உண்மைதான்...... ஆனால், **வாயிலேயேதான்** இன்னமும் இருந்து கொண்டிருக்கிறார்கள்!

ஆம், இந்த உருளைக்கிழங்கிற்கு இன்னும் அதிகமான கிரியைகள் சம்பவிக்க வேண்டும். அது என் பற்களால் நசுக்கப்பட்டு சுவைக்கப்பட வேண்டும்! இப்போது, இந்த உருளைக்கிழங்கு எல்லாம் முடிந்து விட்டது என எண்ணலாம். ஆனால், கிரியையோ இன்னமும் முற்றுப்

*பெறவில்லை! இந்த உருளைக்கிழங்கு என் வயிற்றுக்குச் செல்கிறது! அங்கே அந்த உருளைக்கிழங்கின்மீது "அமிலம்" சற்றும் இரக்கமில்லாமல் ஊற்றப்படுகிறது!! இது சபையிலுள்ள* **தீர்க்கதரிசன ஊழியத்தையே** *சுட்டிக் காட்டுகிறது. நம்மீது "அமிலம்" ஊற்றப்படுவது ஒன்றும் நம்மில் ஒருவருக்கும் சுமுகமாய் இருப்பதேயில்லை. தட்டிலிருந்த உருளைக் கிழங்கு முழுவதுமாய் நொறுங்குண்டு, இனியும் அதைப் பார்ப்பதற்கு "உருளைக்கிழங்குபோல்" இருப்பதேயில்லை. ஆனால் சில வாரங்கள் கழித்து, இதோ! இங்கே பாருங்கள்... அந்த உருளைக்கிழங்கு இரத்தமும், சதையும், எலும்புமாய் மாறி, என் சரீரத்தின் அங்கமாகிவிட்டதே!!*

*இப்போது நடந்தேறிய பணியில், யாருடைய வேலை அதிக முக்கியத்துவம் வாய்ந்தது? அல்லது, நம்மில் ஒவ்வொருவரும் வைத்திருக்கும் ஊழியத்தில், நாம் பெற்றுக்கொள்ளாதது எது? நாம் தாழ்மையுள்ளவர்களாயிருந்தால்,* **"நாம் சமநிலையற்றவர்கள்"** *என்பதை இப்போது அறிக்கை செய்திட முடியும்! ஆம், கையானது என் வயிற்றை விட அதிக முக்கித்துவம் எனக்கூறிட முடியாது! ஒவ்வொரு அவயவமும் ஒன்றையொன்று சார்ந்தேயுள்ளது.*

> **ஆனால், துரதிருஷ்ட வசமாய் இன்றைய கிறிஸ்தவ உலகில் ஒவ்வொரு அவயவத்திற்குமிடையே தொடர்ச்சியான போட்டி இருப்பதைத்தானே நாம் காண்கிறோம்?**

*'கை' தனது சொந்த ராஜ்ஜியத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறது! 'வயிறு' தன் சொந்த ராஜ்ஜியத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறது! 'வாய்' தன் சொந்த ராஜ்ஜியத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறது!! ஆக, இப்போது நாம் எதைப் பெற்றிருக்கிறோம்? ஓர் சரீரமல்ல...... "உடற்கூறு சோதனைக் கூடத்தையே" நாம் பெற்றிருக்கிறோம்! அந்தக் கூடத்தில் ஒரு பக்கம் "வாய்" மறுபக்கம் "வயிறு" அங்கொரு "கை" இங்கொரு "கால்" ... இது என்ன? இது நிச்சயமாய் ஒரு சரீரமேயல்ல!!*

*இப்போது நம் அனைவருக்கும் தேவையாயிருப்பது என்ன? சரியான "செய்முறை விளக்கம்" நமக்கு இப்போது தேவை என்பது உண்மைதான். ஆனால், எதைக்காட்டிலும் நம் யாவருக்கும்* **"தாழ்மையே" அதிகமதிகமாய் தேவைப்படுகிறது.** *ஆம், கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாய் இருக்கும் நாம் ஒவ்வொருவரும் சமமான முக்கியத்துவம் கொண்டவர்கள் என்பதை உணரும் தாழ்மையே இப்போது நம் தேவையாயிருக்கிறது!!*

> **இனியும் நம் ஊழியத்தில், ஒழுங்காக ஆங்கிலம் பேசத்தெரியாத...... ஆனால், கிறிஸ்துவண்டை ஆத்துமாக்களைக் கொண்டு வரும் ஒரு ஏழை சகோதரனைக் காட்டிலும், சரளமாய் ஆங்கிலம் பேசும் வேதஞான பண்டிதர் மகா மேன்மையுள்ளவராய் கருதப்படவே கூடாது!**

*இவர்கள் யாவரும் ஒரே சரீரத்திலுள்ள அவயவங்களாகவே இருக்கிறார்கள்!!*

*“மேலே ஏறிவா” என்பதும் “நான் காணும் விதமாய் நீயும் காரியங்களைப் பார்” என்பதுமே நம் ஆண்டவருடைய அழைப்பாய் இருக்கிறது. தேவன் பார்க்கும் விதமாய் நாம் காரியங்களை கண்ணோக்கும் போது அவையாவும் பூமிக்குரிய கண்ணோட்டத்தி லிருந்து முற்றிலும் வித்தியாசமாகவே இருக்கிறது! ஆம், இன்றைய அனேக கிறிஸ்தவ ஊழியர்கள்* **தங்களைக்குறித்து உயர்ந்த அபிப்பிராயங்கள்** *கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? இதற்கு ஊழியர்களாகிய நீங்களே நேர்மையாய் பதில் சொல்லுங்கள்! நீங்கள் தனிமையாய் இருக்கும் போது உங்களைக்குறித்து எவ்விதமாய் சிந்தித்துக் கொண்டிருக் கிறீர்கள்? அந்த சிந்தைகள்* **தாழ்மையின்** *சிந்தைகளாய், உங்கள்* **வெறுமையை** *உணரும் சிந்தைகளாயிருக்கிறதா?*

*நான் சில சமயங்களில் திறந்தவெளியில் அமர்ந்து வானத்திலுள்ள நட்சத்திரங்களை அண்ணாந்து பார்ப்பதுண்டு. வானத்தில் கோடிக் கணக்கான நட்சத்திரங்கள் இருப்பதையும், இந்த அண்டசராசரத்தில் இந்த பூமி ஒரு சிறு துரும்பைப் போல் இருப்பதையும் நான் அறிவேன்! இந்த ஆச்சரியத்தில் நான் மூழ்கி, “ஓ தேவனே, நீர் எவ்வளவு பெரியவர்! இந்த அண்டசராசரமும் எத்தனை மகத்துவமும் பெரியதுமாயிருக் கிறது! இந்த அண்டசராசரத்தில் பூமி என்று அழைக்கப்படும் இந்தச் சிறிய துரும்பில் “நானோ” இன்னும் மிக மிகச் சிறிய ஓர் தூசியாகவே இருக்கிறேன்! அப்படியிருந்தும், இந்த பூமியில் உம் ஸ்தானாதிபதியாய் இருந்துகொண்டு உம்முடைய மகத்துவங்களைப் பிரசங்கிக்கும் பொறுப்புள்ள இடத்தில் இருக்கிறேன்! ஆகவே, ஆண்டவரே,* **என்னைக் குறித்து நான் தாழ்மையான தெளிந்த எண்ணங்கொண்டிருக்க** *எனக்குத் தயவாய் உதவிசெய்வீராக!” என்றே ஜெபிக்கிறேன். இதே ஜெபத்தை நீங்களும்கூட தேவனை நோக்கி ஜெபிக்கும்படி அன்புடன் ஆலோசனை கூறுகிறேன்.*

*ஆம், தாழ்மையுள்ளவருக்கே தேவன் கிருபையைத் தருகிறார்! யார் வேண்டுமானாலும் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்! ஆனால் தாழ்மையுள்ளவர்கள் மாத்திரமே கிருபையைப் பெற்றிட முடியும்.* **நமக்கு அறிவு தேவையாய் இருப்பதைவிட தெய்வ கிருபையே அதிக அதிகமாய் தேவைப்படுகிறது!!**

*தங்கள் வாலிபநாட்களில் ஆண்டவரை ஏற்றுக் கொண்டதி னிமித்தம், அவர்களுடைய விசுவாசத்திற்காக சொந்தக் குடும்பத்தின ரால் சித்திரவதையடைந்தவர்களைக் குறித்து நான் சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். இதுபோன்ற வைராக்கியம் நிறைந்த ஒரு வாலிபன்*

*நம் சபைகளுக்கு வந்தால், அவன் நம்மில் எதைக்காண்பான்? அங்கு* **இயேசு கிறிஸ்துவின் தாழ்மையிலே** *திளைத்து நொறுங்குண்ட ஆவியை அவன் காண முடியுமா? ஆனால் இன்றோ, நம்மைச் சூழ இருப்பவர்கள் நம்மில் கண்டவைகள், கிறிஸ்தவத்தைக் குறித்து தவறான அபிப்பிராயம் கொள்ளும்படியே அவர்களை நடத்தியிருக்கிறது! ஆ, இது துயரம்!*

*சுவிசேஷ ஊழியமானாலும் அல்லது வேறெந்த ஊழியமானாலும், அது மிகுந்த வலிமை கொண்டதாய் இருப்பதற்கு வேண்டிய* **முதல் நியதியை** *எபிரெயர் 2:17-ல் வாசிக்கிறோம், "அவர் எவ்விதத்திலும்* (in all things - *அதாவது, எல்லாவிதத்திலும்) தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது". இவ்வாறு இயேசுவைக் குறித்துக் கூறப்பட்ட இந்தப் பகுதியையே என் ஊழியத்தின் வலிமைக்கு முதல் நியதியாய் நான் வாஞ்சித்து வருகிறேன்.* **"எல்லாவிதத்திலும் தன் சகோதரர்களுக்கு ஒப்பானார்" என்ற வசனம் என் தியானத்தில் நிறைவாய் தங்கியிருக்கும் மேன்மையான வசனமாகும்!**

*நான் பிறருக்கு எவ்வாறு ஊழியம் செய்யவேண்டும்? நான் அவர்களுக்கு ஒப்பாக "எல்லாவற்றிலும்" மாறவேண்டும். அதாவது, நான் அவர்களுடைய ஸ்தானத்திற்கு இறங்கிவர வேண்டும்!*

*தரையில் ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் எறும்போடு நான் ஏன் தொடர்புகொள்ள முடிவதில்லை! ஏனென்றால், நான் அவ்வளவு பெரியவனாயிருக்கிறேன்! நான் மானிடரூபத்தோடு அதனருகில் சென்றால், அவை அஞ்சி விலகியோடிவிடும். நான் அந்த எறும்போடு தொடர்புகொள்ள ஒரேவழி, நான் முதலாவது* **அந்த எறும்பைப்போல்** *மாற வேண்டும். அதேபோல், தேவனும் நம்மோடு தொடர்பு கொண்டிட ஒரேவழி,* **அவர் நம்மைப்போலவே மாறுவதுதான்!** *(பிலி.2:8). இந்த உண்மையை நாம் யாவரும் புரிந்துகொள்வது மிக எளிது. இப்போது அதேபோல், நாம் பிறருக்குச் செய்யும் ஊழியத்திலும்கூட (ஸ்தல சபையோ அல்லது சந்திக்கப்படாத இடமோ), நமக்கு முன்னிருக்கும் முதல் நியதி "எல்லாவற்றிலும் அவர்களுக்கு ஒப்பாக மாறுவதுதான்!" என்பதை மறந்துவிடவே கூடாது! அதாவது, எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறுவதுபோல், "அவர்கள் உட்காருகிற (தாபரிக்கிற) ஸ்தலத்திலே நாமும் உட்கார்ந்து" என்பதே அதன் பொருளாகும்!! (எசே.3:15).*

*நாம் மற்றவர்களைக்காட்டிலும் எந்தவிதத்திலும் நம்மை உயர்த்த விருப்பமற்றிருப்பதே அதன் பொருளாகும். இதனிமித்தமே, இயேசு தன் சீஷர்களுக்குக் கூறும்போது, "ரபீ" என்றோ "பிதா"* (Fr - *தந்தை) என்றோ அல்லது இதுபோன்ற வேறு எந்தப் பட்டங்களையும் அவர்கள் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளவே வேண்டாம் எனக்கூறினார். ஏனென்றால், நீங்கள் ஊழியம் செய்திடும் ஜனங்களைக் காட்டிலும்*

*'மேலாக உயர்ந்திருக்கும்படி' நீங்கள் வைத்திருக்கும் பட்டம் செய்து விடும்! ஆம்,* **அவர்களுக்கு ஒப்பாய்** *நீங்கள் மாறுவதற்குப் பதிலாய் மேன்மையானவர்களாய் அல்லவா இப்போது நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள்!!*

இவ்வாறெல்லாம் எச்சரிப்புகள் வேதத்தில் இருந்த போதும், இன்றைய கிறிஸ்தவ உலகில் ஏராளமான ஊழியர்கள் தங்களுக்கென "பட்டங்களைப்" (TITLES) போட்டுக் கொள்வதைத்தானே நாம் காண்கிறோம்! இவ்வுலகத்தின் வழிமுறையைப் பின்பற்றி, தேவனுக்கு வலிமையாய் ஊழியம் செய்துவிடலாம் என்றே நாம் எண்ணிக் கொள்கிறோம். ஆனால், அது உண்மை அல்லவே அல்ல!!

பழைய ஏற்பாட்டில் ஒரு சமயம், பெலிஸ்தியர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை கைப்பற்றினார்கள். ஆனால் அதனிமித்தம் பிரச்சனை ஏற்பட்டவுடன், உடன்படிக்கைப் பெட்டியை எருது பூட்டிய வண்டியில் வைத்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். பல வருடங்கள் கழித்து, உடன்படிக்கை பெட்டியை வேறு இடத்திற்கு கொண்டு செல்ல தாவீது முன்வந்தபோது, "லேவியர்கள் உடன்படிக்கை பெட்டியை தங்கள் தோளில் சுமந்து செல்லவேண்டும் என நியாயப் பிரமாணம் போதிப்பது சரிதான். இருப்பினும் அதெல்லாம் குறைவான தூரத்திற்குத்தான் பொருத்தமானது. ஆனால், தூர இடத்திற்குச் செல்ல, முன்பு பெலிஸ்தியர் கையாண்ட முறையே சரியானது!" என எண்ணினான். எனவே, அவனும் **பெலிஸ்தியர் செய்ததுபோலவே** உடன் படிக்கை பெட்டியை எருது பூட்டிய வண்டியில் வைத்தான்! பின் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும்!! எருது தடுமாறியபோது, பெட்டி கீழேவிழாமல் அதைத் தாங்கிப்பிடிக்க **ஊசா** தன் கையை நீட்டினான்! அவன் லேவியனாய் இல்லாதபடியினால், தேவன் கடும் கோபம்கொண்டு ஊசாவை அடித்தார். அவன் அந்த இடத்திலேயே செத்துப்போனான்! பார்த்தீர்களா, தேவன் தன் வழிமுறைகளை எக்காலமும் மாற்றுவதேயில்லை. பின் எப்படி இந்த சம்பவம் தோன்றியது? ஆம், பெலிஸ்தியர்களின் வழிமுறையைப் பின்பற்ற இந்த தாவீது எத்தனித்ததின் விளைவேயாகும் ... ஆகவே, அங்கு மரணம் சம்பவித்தது!!

இவ்வுலக வழிமுறையைப் பின்பற்றி செய்திடும் ஊழியத்தில் எவ்வாறு 'மரணம்' சம்பவிக்கிறது என்ற சத்தியத்தை உங்களால் தெளிவாகக் காணமுடிகிறதா? கிறிஸ்தவ சபைகளை நடத்த இன்றைய வியாபார ஸ்தாபனங்களின் வழிமுறையைப் பின்பற்றத் துணிந்து, கிறிஸ்தவ ஊழியத்தின் முதல் ஆதாரமே "**பணம்தான்**" என மாறும் போது...... அங்கு நிச்சமாய் மரணம் சம்பவித்துவிடும்!

ஆகவே, ஒரு கேள்வியை நமக்கு நாமே கேட்டுப்பார்ப்பது மிகவும் நல்லது. அதாவது, நமக்கு வரும் எல்லாப் பணமும் ஒருநாள் நின்று விட்டால், நாம் நடத்தும் சபை அல்லது ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனம் இன்னமும் பிழைத்திருக்குமா? என்ற கேள்வியேயாகும்.

**கேளுங்கள்: ஓர் மெய்யான தேவ ஊழியம் "பணத்தை" உபயோகப் படுத்துமேயல்லாமல், ஒருக்காலும் பணத்தைச் சார்ந்திருப்பதேயில்லை! ஆம், அந்த ஊழியம் "பரிசுத்த ஆவியை" மாத்திரமே எப்போதும் சார்ந்திருக்கும்!!**

"நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று" வேதம் சொல்லுகிறது (யாக்கோபு 4:5). குறிப்பாய், **சபையில் ஆவிக்குரிய ஸ்தானத்தை 'ஏதோஒன்று'** அல்லது 'யாரோஒருவர்' ஆக்கிரமித்துக் கொண்டால் அதனிமித்தம் "வைராக்கிய கோபம்" அடைகிறார்! ஒருவேளை "வாத்தியங்களுடன் கூடிய இன்னிசை" பரிசுத்தாவியின் ஸ்தானத்தை ஆக்கிரமிக்கக்கூடும். நான் ஒன்றும் "இன்னிசைக்கு" விரோதி அல்ல! இவ்வுலக வழிமுறையைப் பின்பற்றாமல், முடிந்த அளவு சிறப்புடன் இன்னிசை இசைத்திட நாட வேண்டும் என்பதை நானும் விசுவாசிக்கிறேன். ஆனால் அதேசமயம், நாமோ "இன்னிசையை ஒருபோதும் **சார்ந்துகொள்ளவே** கூடாது!

உதாரணமாய், ஒரு கூட்டத்தின் முடிவில், ஓர் மெல்லிய பியானோ இசையினால் ஜனங்களைத் தூண்டி ஒரு தீர்மானம் எடுக்கும்படி செய்துவிட்டால்...... அது என்ன? இவையெல்லாம் "மனோதத்துவ வசியமே" அன்றி, பரிசுத்தாவியின் வல்லமை அல்லவே அல்ல!

இயேசு பிரசங்கித்ததுபோல், பேதுரு பிரசங்கித்தது போல், தேவனுடைய வார்த்தை **ஆவியின் வல்லமையோடு** பிரசங்கிக்கப் பட்டால், கூட்டத்தின் முடிவில் நீங்கள் "பியானோவை" மெல்லியதாய் இசைத்திட தேவையில்லை! நீங்கள் விரும்பினால் அவ்வாறு இசைத்து விட்டுப்போங்கள்..... ஆனால், அது எந்த விதத்திலும் ஆன்மீக உதவியைச் செய்திடவே முடியாது!! உங்களிடம் பரிசுத்தாவியின் வல்லமை இல்லையென்றால்...... அது, துயரம்! இப்போது நீங்கள் "பியானோவை" இசைத்துத்தான் மனோ-தத்துவ முறையில் ஜனங்களை வசியம் செய்து 'தீர்மானம்' எடுக்கும்படி தூண்டவேண்டியதா யிருக்கும்!! ஆனால் காலப்போக்கில், இவ்வித மனுஷீக முயற்சியில் எடுக்கப்பட்ட எல்லாத் தீர்மானங்களும் வெறும் உணர்ச்சிப் பிரவாகமும், மேலோட்டமான அனுபவமும் மாத்திரமே என்பதை நீங்களே கண்டுகொள்வீர்கள்!!

பார்த்தீர்களா, பரிசுத்தாவியானவர், தான் சபையில் ஆட் கொண்டிருக்க வேண்டிய ஸ்தானத்தைக் குறித்து எப்போதுமே

வைராக்கிய வாஞ்சை கொண்டவராகவேயிருக்கிறார். அவர் இருக்க வேண்டிய இடத்தில், “**வேத சாஸ்திரத்தைக்**” கொண்டுவைத்திட ஒருபோதும் முடியாது! அவருடைய இடத்தில் “**இன்னிசையை**” கொண்டு வைத்திடவும் முடியாது! அவருடைய இடத்தில் “**பணத்தைக்**” கொண்டு வைத்திடவும் முடியாது, ஒருக்காலும் முடியாது! இருந்த போதிலும் இவையாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி....... அவைகளை நாம் பயன்படுத்திடவும் முடியும். இயேசுவும் பணத்தைப் பயன் படுத்தத்தான் செய்தார். நாமும் பணத்திற்கு எதிராக நிற்பதில்லை. சுவிசேஷத்தில், இயேசுவும் “கீர்த்தனை” பாடினார் என வாசிக்கிறோம்! பிதாவைத் துதிக்கும் துதி ஸ்தோத்திரத்தை **இயேசுவே** சபையின் முன்னின்று நடத்துகிறார் என்றும் எபிரெயர்.2:12 கூறுவதைப் பாருங்கள். ஆகவே நாம் தேவனைத் துதிக்கும்போது, துதியை முன்னின்று நடத்தும் “நம் தலைவரைத் தான்” நாம் பின்பற்றுகிறோம்!

**இவ்வாறெல்லாம் சத்தியம் இருக்கும்போது, நாம் எவ்வாறு ‘இன்னிசைக்கு’ விரோதமாய் இருந்திட முடியும்? ஆம், அவைகளுக்கு நாம் ஒருபோதும் விரோதிகள் அல்லவே அல்ல...... ஆனால், நாம் எவைகளைச் சார்ந்திருக்கிறோம் என்பதே நம்மை அண்டிவரும் கேள்வியாய் இருக்கிறது!**

எடுப்பான தோற்றத்தையும், புகழ்பெற்ற பிரசங்கிகளையும் நாம் சார்ந்திருக்கிறோமா? இதுபோன்ற நிலைகளையெல்லாம், பரிசுத் தாவியானவர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே மாட்டார். அவர், “வைராக்கிய வாஞ்சை” நிறைந்தவர்!!

இயேசுவோ **ஒரு சாதாரண வேலைக்காரனாகவே** வந்தார்! எல்லா கிறிஸ்தவத் தலைவர்களுமே ஒரு ஊழியக்காரனின் ஜீவியம் எப்படி இருக்கவேண்டுமென்று பிரசங்கிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், **நடைமுறையில்** ஒரு “வேலைக்காரனாய்” (ஊழியக்காரனாய்) இருப்பதின் அர்த்தம் என்ன? அந்த நடைமுறைக்கு ஒப்பிட்டே நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்: கிறிஸ்தவத் தலைவர்களே, உங்கள் சக ஊழியர்களை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள்? உங்கள் குழுவோடு நேற்றுத்தான் சேர்ந்த ஒரு இளைய-ஊழியனை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள்? அந்த ஊழியன் மெய்யாகவே உங்களுக்கு ஒரு சகோதரனாய் இருக்கிறாரா? அல்லது அந்த சகோதரன் உங்களுக்கு அஞ்சி ஜீவிக்கிறாரா? காரியம் அப்படியாய் இருக்கும்போது, “ஊழியனின் தகுதி” குறித்து நீங்கள் காலமெல்லாம் பிரசங்கித்துக் கொண்டிருந்தாலும், நீங்களோ அதைப்பற்றி சிறிதும் விளங்கிக் கொள்ளவில்லை என்றே உங்களுக்கு நான் கூற விரும்புகிறேன். ஆம், உங்கள் கண்கள் இன்னமும் இயேசுவைக் காணவில்லை!

*இயேசுவோ அத்தனை எளிமையாய் இருந்தார். அவர் ஒருபோதும் ஜனங்களுக்கு மேலாய் தன்னை உயர்த்தவேயில்லை! அவர் தன்னை "மனுஷ குமாரன்" என்றே கூறினார். அதற்கு அர்த்தம், "அவர் ஒரு சாதாரண மனிதன்" என்பதேயாகும். அவர் அத்தனை பரிசுத்தராய் தன் பிதாவோடு நித்தியகாலமும் "தேவகுமாரனாய்" ஜீவித்தவர்! ஆனால் அவரோ, கீழே இறங்கி வந்து, இந்த பூமியில் ஒரு சாதாரண மனிதனாகவே வாழ்ந்தார்! எல்லாவிதத்திலும் அவர் தன் சகோதரர் களுக்கு ஒப்பாய் மாறினார்!!*

*எல்லாவிதத்திலும் நம் சகோதரர்களுக்கு ஒப்பாய் நாமும் மாறவேண்டுமென்றால், நம்மிலுள்ள "ஏதோ ஒன்று" சாக வேண்டும்! இயேசுவைப்பற்றி இவ்வாறாகவே கூறப்பட்டுள்ளது, "அவர்* **தன்னைத்தானே** *மரணபரியந்தமும் தாழ்த்தினார்". இவ்வாறு நம்முடைய "சுயத்திற்கு" மரிக்கும்போதுதான், நம்முடைய தாழ்மையை நாம் நிரூபித்திட முடியும்!*

*கோதுமைமணியானது நிலத்தில் விழுந்து "சாகும் போதுதான்" மிகுந்த கனிகளைத் தர முடியும் என இயேசு கூறினார். இந்த சத்தியத்தை 30-ஆண்டுகளுக்கு முன்பாக, மெய்யான நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் போராடிய நேரத்தில் நான் கண்டுபிடித்தேன்.*

**நான் இந்தியாவில் ஆண்டவருக்காகச் செய்திடும் வலிமையான ஊழியம் "நிலத்தில் விழுந்து சாவதுதான்" என்பதை அப்போது நான் கண்டு கொண்டேன்!**

*ஆம், என் சுய-சித்தத்திற்கு சாவு! ஜனங்கள் என்னைக் குறித்து என்ன எண்ணுகிறார்கள் என்ற அபிப்பிராயங்களுக்கு சாவு! என் சுய-இலட்சியங்களுக்கு சாவு! சுயமாய் எண்ணிட்ட என் 'இலக்குகளுக்கு' (GOALS) சாவு! என் பண ஆசைக்கு சாவு! இவ்வாறு ஒவ்வொன்றாய் தொகையிட்டு மொத்தத்தில்* **என் "சுயத்திற்கு" செத்திடும் வாழ்க்கையை** *நான் மேற்கொண்டேன்! இந்த வாழ்க்கையை மேற்கொண்டபிறகு எனக்கு* **இயேசுவே எல்லாமுமாய் மாறினார்!!** *இப்போது நான் ஒவ்வொரு நாளும் இயேசுவை நோக்கிப்பார்த்து, சங்கீதக் காரனைப்போல நேர்மை கொண்ட நெஞ்சத்தோடு..... "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில்* **உம்மைத்தவிர** *எனக்கு வேறே விருப்பம் இல்லை!" என என்னால் கூறிட முடிகின்றது!! (சங்கீதம் 73:25).*

*நான் படுக்கையில் படுத்திருக்கும் சமயங்களில், "ஆண்டவரே, என் ஊழியம் எனக்கு 'தேவன்' அல்ல. நீர் ஒருவரே என் தேவன்! உமக்கு நான் தந்த ஸ்தானத்தை வேறு யாதொருவருக்கும் நான் தந்திடமாட்டேன். நீரே எனக்கு எல்லாமுமாய் இருக்கிறீர். என்னுடைய சத்தத்தை நீர் என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளலாம் அல்லது என் சரீரத்திற்கு*

'வாதம்' வர நீர் அனுமதிக்கலாம் அல்லது நீர் விரும்பிய எதையும் எனக்கு நீர் செய்யலாம்! ஆகிலும், நானோ உம்மை என் முழு இருதயத்தாலும் தொடர்ந்து நேசிப்பேன்'' என நான் தேவனைப் பார்த்து அடிக்கடி கூறுவதுண்டு. ஆம், நான் பெற்ற சந்தோஷத்தை யாரும் என்னிடமிருந்து பறித்துக்கொள்ளவே முடியாது....... ஏனென்றால், தேவனுடைய சமூகத்தில்தான் "நித்திய பேரின்பம்" உள்ளதே! இந்த ஒரே ஒரு ஊற்றுக்கண்ணிலுருந்து மாத்திரமே, ஜீவநதிகள் நம்மூலமாய் புரண்டோடிட முடியும்!!

நான் கடைசியாய் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புவது யாதெனில்: பல ஆண்டுகளுக்கு முன்பாக, நான் ஒரு கிறிஸ்தவ வாலிபனாய் இருந்த சமயம், ஆண்டவர் என்னோடு 2 சாமுவேல் 24:24 மூலமாய் பேசினார். அந்த வசனத்தில் "நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் செலுத்தாமல்...... **விலைக்கிரயமாய்** வாங்குவேன்'' என தாவீது ராஜா கூறியதைக் காண்கிறோம்.

அந்த நாளில் இந்த வசனத்தை வைத்து, ஆண்டவர் என்னோடு பேசியது என்னவென்றால், இயேசு இந்த பூமிக்கு வந்தபோது, "தனக்குண்டான அனைத்தையும் விலைக்கிரயமாய் செலுத்தினார்". இப்போது நான் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டுமென்றால், இயேசுவின் இதே ஆவியோடுதான் சேவித்திட வேண்டும்! **என்னுடைய எந்த ஊழியமும் எனக்கு விலைக்கிரயமுடையதாய் இருக்க வேண்டும்!!**

நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வது எப்படிப்பட்டதாய் இருக்கிறது? அதில் விலைக்கிரயம் காணப்படுகிறதா? இன்று இந்திய கிறிஸ்தவ ஊழியங்களில் உள்ள அநேகர், தாங்கள் உலக அலுவலில் சம்பாதித்ததைக் காட்டிலும் ஐந்து அல்லது பத்து மடங்கு அதிகம் சம்பாதிக்கிறார்கள்!

இதில் எங்கே தியாகம் (விலைக்கிரயம்) இருக்கிறது? 35-ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்திய கப்பற்படை வேலையை ஊழியத்தினிமித்தம் ராஜினாமா செய்தபோது, "நான் உலக வேலையில் ஒரு மாதத்தில் வாங்கிய வருமானத்தைக் காட்டிலும் அதிக வருமானம் தரும் எந்தப் பணத்தையும் நான் பெற்றுக் கொள்ளமாட்டேன்'' என்றே தீர்மானம் எடுத்துக்கொண்டேன். அந்தத் தீர்மானமே இந்த 35-ஆண்டுகளாய் என்னைக் காத்து வருகிறது!

நாம் யாரையும் நியாயந்தீர்த்திடக் கூடாது. நானும் உங்களை நியாயந்தீர்த்திட மாட்டேன். ஊழியர்களாகிய உங்களைப்பற்றிய விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாததால், உங்களைப் பார்த்து இவ்வாறு கேட்பது எனக்கு எளிதாய் இருக்கிறது: "**நான் இன்று உலக அலுவலில் இருந்தால், எவ்வளவு சம்பாதிப்பேன்?**'' என்ற கேள்வியை

உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள்.

ஜான் வெஸ்லி தன் உடன்-ஊழியர்களிடம், "நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஐசுவரியவான்களாய் மாறி விட்டீர்கள் என உங்களைப்பற்றி ஒருபோதும் சொல்லப்படாதிருப்பதாக!" என அடிக்கடி கூறுவது வழக்கம்.

இன்று கிறிஸ்தவ ஊழியத்தில் ஏற்பட்டிருக்கும் பெருமளவு பாதிப்பு எங்கிருந்து துவங்கியது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? "**நீங்கள் தேவனுக்கும் – பணத்துக்கும் ஊழியம் செய்திட முடியாது**" என்ற இந்தப் பகுதிதான்! நாம் தீவிரமாய் சீர்ப்படுத்த வேண்டிய முதல் பகுதியே இதுதான்!! சூரியனுக்கு கீழ், நாம் எத்தனையோ விஷயங்களை மையமாய் கொண்டு பேசிக்கொண்டேயிருக்கலாம்... ஆனால், இந்த "பண ஆசை" என்ற பிரச்சனையை சீர்ப்படுத்த தீவிரம் கொள்ளவில்லை யென்றால், நம் எல்லா ஊழியமும் வீணானதேயாகும்!!

இன்று ஜனங்கள் தாங்கள் வசிக்குமிடத்தை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லைதான். இயேசுவும்கூட தன் இருப்பிடத்தை பரலோகத்திலிருந்து இந்த பூமிக்கு மாற்றத்தான் செய்தார்! ஆனால், அவர் அவ்வாறு மாற்றியது, **கீழே இறங்குவதாகவே** இருந்தது!! அது ஏனென்றால், பூமியிலுள்ள ஜனங்கள் மீது அவர் அவ்வளவாய் உண்மையான கரிசனை கொண்டிருந்தார்.

**சரி, நீங்கள் ஏன் உங்கள் இருப்பிடத்தை மாற்றினீர்கள்?**

இவ்வாறு உங்களைக் கேட்கிறேனேயல்லாமல், நான் உங்களை நியாயம் தீர்க்கவில்லை. இவ்வாறு இருப்பிடத்தை மாற்றியதால் இந்திய தேசத்திற்கு கர்த்தருடைய ஊழியத்தை வலிமையாய் நிறைவேற்றி விடலாம் என எண்ணினீர்களோ? "இத்தேசத்தின் பாரம் என்னை அழுத்துகிறது" என நீங்கள் குறிப்பிடும் அந்த பாரம் மெய்யான பாரம் தானா?

அப்படியானால், தென்னிந்தியாவில் சுகபோகமாய் வாழ்ந்து கொண்டு, வடஇந்திய கிராமங்களுக்காக பாரம் கொள்வது சாத்தியம்தானா? ஒருவேளை அது உங்களால் கூடும்! ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அது சாத்தியமாகாது என்றே எண்ணுகிறேன்!!

நீங்கள் அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டு, இந்தியாவுக்காக பாரம் கொண்டிட முடியுமா? அவ்வித பாரத்தை உங்கள் 'அறிக்கை மலர்' பத்திரிக்கையில் வேண்டுமானால் காட்டலாம்! பத்திரிக்கையில் அல்லது கடிதத்தில் நீங்கள் எதற்கு வேண்டுமானாலும் பாரம் கொண்டிட முடியும்!!

ஆம், பிசாசு ஒரு மாபெரும் வஞ்சகன்! முற்றிலுமாய் நம்மை அவன்

*வஞ்சித்துவிடுகிறான்! நமக்கு எதையோ குறித்து பெரிய பாரம் இருப்பதாக எண்ண வைக்கிறான்...... ஆனால், உண்மைப் பூர்வமாய் அங்கு பாரம் அல்ல, "வெறும் சூடான காற்று மண்டலம்தான்" அங்கு உள்ளது!!*

**உங்களைக் குறித்து நீங்கள் "நேர்மையாய்" இருக்கவேண்டுமென்று விரும்பியே இவைகளை நான் உங்களுக்குக் கூறுகிறேன்.**

*இங்கு உங்கள் முன் நான் வெறும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை! என் இருதயத்தில் உள்ளவைகளையே உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.*

*தேவனுடைய இருதயமும், நான் கொண்ட பாரத்திற்கு ஒப்பாய் இருக்குமென்றே நான் நம்புகிறேன்!*

*அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, உங்களில் ஒருவரையாகிலும் நான் நியாயந்தீர்க்கவில்லை! பல வருடங்களுக்கு முன்பாகவே, "நீ பிறரை நியாயந்தீர்த்தால், உன்னை நீயே அழித்துக்கொள்வாய்" என தேவன் என்னை எச்சரித்திருக்கிறார்.*

*நான் தேவனுக்கு சாட்சியாய் அவர் முன்பாக நின்று "நான் ஒருவரையும் நியாயம் தீர்க்கவில்லை" என இப்போதும் என்னால் கூறிட முடியும்! ஆம், நான் என்னையே எப்போதும் நியாயம் தீர்க்கிறேன்...... மனந்திரும்புகிறேன்! இவ்வாறு என் வாழ்வின் பல பகுதிகளில் கிறிஸ்வைப்போல் அல்லாத தன்மையைக் காண்கிறபடியால், என் வாழ்க்கை "தினசரி மனந்திரும்பும்" வாழ்க்கையாய் இருக்கிறது. "ஆண்டவரே, அந்த சகோதரனிடம் நான் அன்பாய் பேசவில்லை. நான் இச்சூழ்நிலையில் எவ்வாறு அன்பாய் பேசவேண்டும் என்பதை எனக்கு கற்றுத்தாரும்" என எத்தனையோ வாழ்வின் பகுதிகளில் நான் தினசரி மனந்திரும்பி வாழ்ந்து வருகிறேன்!!*

*தன் நாவை அடக்குவதற்கு கற்றுக்கொள்ளாதவனின் கிறிஸ்தவ பக்தி வீணானது என்றல்லவா தேவன் கூறிவிட்டார்! (யாக்கோபு 1:26). இந்த வசனத்தை என் கண்களுக்கு முன்பாக எப்போதும் நிறுத்திவைத்து, மனந்திரும்பி வாழ்ந்திடவே நான் விரும்புகிறேன்.*

*பவுல் ஒருசமயம் தன் உடன்-ஊழியர்களைப் பற்றி குறிப்பிட்டார். பிலிப்பி பட்டண ஊழியத்திற்கு யாரையாகிலும் அனுப்பவேண்டும் என பவுல் தீர்மானித்தபோது, தீமோத்தேயு மாத்திரமே அதற்குத் தகுதியுள்ளவனாய் கண்டு, தன்னோடிருந்த மற்ற அனைவருமோ* **தனக்குரியவைகளைத் தேடுகிறவர்களாய்** *இருக்கிறார்கள் என்றே குறிப்பிட்டார்! (பிலி.2:19-21). இங்கு பவுல் "தனக்குரியவைகளைத் தேடியவர்கள்" என அஞ்ஞானிகளைக் குறிப்பிடாமல், தன்* **உடன்-ஊழியர்களையே** *அவ்வாறு குறிப்பிட்டார் என்பதைப் பார்த்தீர்களா?*

*பவுலின் ஊழிய குழுவில் ஒருவன் இணைந்திருப்பதே ஒரு கனத்திற்குரிய ஒன்றாகும். ஏனென்றால், ஒருசமயம் ஊழியத்தில் மாற்கு என்ற சகோதரன் முழுவைராக்கியம் காட்டாதபடியால், அவனைத் தன் குழுவிலிருந்தே நீக்கிவிட்டார்! அப்படியிருந்தும், இன்னமும் தன் குழுவிலிருக்கும் அநேக உடன்-ஊழியர்கள் தனக்குரியவைகளைத் தேடிக் கொண்டிருப்பதாகவே பவுல் உணர்ந்தார்!!*

**இன்று அனேகர், ஏதோ ஆத்துமாக்களுக்காக மிகுந்த பாரம் கொண்டவர்களைப்போல தங்களைக் காண்பித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களோ, தங்கள் லாபத்தையும் சொகுசையுமே நாடுகிறார்கள்! தங்கள் சொந்த நலனைப் பெருக்குவதிலேயே அக்கறை கொண்டிருக்கிறார்கள்!!**

*மேலும், இவர்கள் ஓய்வுபெறும் சமயத்தில் தங்கள் ஊழியப் பொறுப்புகளைத் தங்கள் பிள்ளைகளுக்கோ அல்லது தங்கள் குடும்பத்திலுள்ளவர்களுக்கோ தரும்படியே அவர்களை உயர்த்த முயற்சிக்கிறார்கள்! இதுபோலவேதான் சவுலும் தன் மகன் யோனத்தானை உயர்த்த முயற்சித்தான். ஆனால் தேவனோ, "யோனத்தானல்ல, தாவீதே அடுத்த ராஜாவாய் சிங்காசனம் ஏறுவான்!" எனக் கூறிவிட்டார். இவ்வாறு தேவன் கூறியது சவுலுக்கு மிகுந்த எரிச்சலை உண்டாக்கி, எப்படியாகிலும் தன் சொந்த மகனை உயர்த்தும் பொருட்டு, தாவீதைக் கொலை செய்யும்படி வகை தேடினான்!*

*இதுபோன்ற சம்பவங்கள் இன்றைய கிறிஸ்தவ உலகில் சம்பவிக்கவில்லை என்று எண்ணுகிறீர்களா? இதுபோன்ற சம்பவங்கள் ஏராளமாய் நடப்பதை நாம் கண்டுவருகிறோம்.*

**நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்து, சத்தியத்தை சத்தியமாய் பிரசங்கித்தால், நாம் ஒருக்காலும் பிரபல்யம் அடைந்திடமாட்டோம்! இதற்குமாறாக, நாம் மனுஷரைப் பிரியப்படுத்தி பிரபல்ய ஊழியம் செய்ய நாடினால், நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரனாய் ஒருக்காலும் இருந்திடவே முடியாது!**

*இன்றும் கடினமான சூழ்நிலைகளின் மத்தியில் கர்த்தருக்காய் ஊழியம் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொரு சகோதர, சகோதரிகளுக்காகவும் நான் தேவனுக்கு மிகுந்த நன்றி சொல்லுகிறேன். இவர்கள் செய்திடும் ஏராளமான தியாகங்களை, இயேசு திரும்பவரும் நாள்வரை நாம் அறியப்போவதில்லை! இதுபோன்ற தியாக ஊழியர்கள் இன்றைய கிறிஸ்தவ உலகின் கண்களுக்குப் புலப்படுவதுமில்லை! அவர்கள் பெயர் எக்காளம் ஊதி கூறப்பட்டதுமில்லை! இவர்களுக்கு எவ்வித விளம்பர ஏதுகரமும் இல்லை! ஆனால் இவர்களோ...... தெய்வ பயத்துடன், மிகுந்த* **தாழ்மையுடன், தியாகங்கள் பல செய்து** *நம் தேசத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் தழைத்தோங்க ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள்!*

"அவர்களுக்கு"
என் வீர வணக்கங்கள்!
"அதுபோன்றவர்களுக்காய்"
என் மனதார தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்!
"**அவ்வித தியாக ஊழியங்களை**"
ஒப்பிடும்போது நான் எம்மாத்திரம்!
"அதுபோன்றவர்கள்"
இன்றும் நம் சபைகளில், ஸ்தாபனங்களில்
உழைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்!
"**அவர்களின் அடிச்சுவட்டையே**"
நாம் பின்பற்றி செல்லக்கடவோம்!!

கேட்பதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்! ஆமென்.

# 4

## ஆவிக்குரிய மனிதனை இனம்காண வேண்டும்!

**ப**வுல் கொரிந்தியர்களைக் குறிப்பிட்டு "நான் உங்களை ஆவிக்குரியவர்கள் என்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்திற்குரியவர்கள் என்று எண்ணி பேசவேண்டியதாயிற்று" என மிகுந்த வருத்தத்துடன் கூறினார் (1கொரி.3:1). இத்தனை இழிவான ஆவிக்குரிய நிலையில் இருந்தபோதும், அவர்களோ வேத அறிவிலும், உபதேச பிரசங்கங்களிலும், ஆவிக்குரிய வரங்களிலும் சம்பூரண முள்ளவர்களாக இருந்தார்களென 1கொரிந்தியர் 1:5,7 வசனங்களில் வாசிக்கிறோம். இந்த மூன்று மேன்மையான காரியங்கள் அவர்களிடம் இருந்தபோதிலும், அவர்களோ ஆவிக்குரியவர்களாக இல்லை!!

இவ்வாறு வரம்பெற்ற வல்லமையான பிரசங்கியாயிருந்து, வேதாகம அறிவிலும் பண்டிதம் பெற்று, ஆவிக்குரிய அற்புத வரங்களை கிரியை செய்யும் ஒருவர்கூட **"ஆவிக்குரிய மனிதராய்" இல்லாமல்** இருக்கக்கூடும் எனப் பகுத்தறியும் திறன் கொண்டவர்கள் இன்றைய விசுவாசிகளில் வெகு சொற்பமானவர்களே இருக்கிறார்கள்! பவுல் குறிப்பிடுவதுபோல், இத்தனை அற்புத ஊழியங்களைக் கொண்டவர் களும் "முழுக்க முழுக்க **மாம்சீகம் கொண்டவர்களாய்**" இருந்திட முடியும்!

ஒருவர் பெரிய மாநாட்டு கூட்டங்களை(Conference)நன்றாய் நடத்தி விட்டால், ஜனங்களை சுவராசியப்படுத்துகிறவராய் இருந்து விட்டால், நயம்பட பிரசங்கிக்கிறவராய் இருந்துவிட்டால்...... அதுபோன்ற வர்களை "ஆவிக்குரிய மனிதர்கள்" என திரளான விசுவாசிகள் "இன்றும்" எண்ணுவது மாபெரும் துரதிருஷ்டமேயாகும்! கள்ள தீர்க்கதரிசிகளை, அவர்களின் கனியற்ற குணாதிசயங்களை வைத்து நாம் அடையாளம் காணவேண்டும் என இயேசு மிகத்தெளிவாய் நமக்கு போதித்திருக்கிறார்! (மத்தேயு 7:15-20).

**அப்படியிருந்தும், இன்று வரங்களையுடைய பிரசங்கிகளைத்தான் ஜனங்கள் மிகுந்த கனத்திற்குரியவர்களாக வைத்திருக்கிறார்கள்!**

**"கிறிஸ்துவுக்கு ஒப்பான ஜீவியமாகிய கனியை" குறித்து சற்றும் அக்கறை கொள்வதேயில்லை!!**

ஆண்டவர் இயேசு மேலும் குறிப்பிட்டுக் கூறும்போது, நியாயத்தீர்ப்பின் நாளில் அனேகர் வந்து "ஆண்டவரே உம் நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தோம்! அற்புதங்கள் செய்தோம்!" என்றே கூறி நிற்பார்கள் எனக்கூறினார். ஆகிலும் ஆண்டவரோ "**உங்களை நான் அறியேன்**" என்றே அவர்களுக்கு பதில் கூறிவிட்டார் (மத்தேயு 7:22,23) யார் இவர்கள்? அற்புத அடையாளங்களை நிகழ்த்தியவர்கள்! இவைகள் எல்லாம் இருந்தபோதிலும்...... அவர்களுடைய ஜீவியத்திலோ பாவம் குடிகொண்டிருந்தது! இவை அனைத்தும் நமக்கு கூறும் பாடம் என்ன? எத்தனை திரளான கிறிஸ்தவ ஊழியம் செய்தாலும், ஆவிக்குரிய அற்புதமான கிரியை நடப்பித்தாலும், அவை யாதொன்றும் ஒரு மனிதனை ஆவிக்குரிய மனிதனாய் நிறுத்துவதில்லை என்ற உண்மையையே மிகத்தெளிவாக நமக்கு எடுத்துரைக்கிறது! இன்னுமும் கூறவேண்டுமென்றால், இவர்களின் ஆவிக்குரியவரங்கள், அந்த மனிதனிடம் "மறுபடியும் பிறந்தவர்களுக்குரிய" சிறு அடையாளத்தைக்கூட காட்டவில்லை! அது ஏனென்றால், இதுபோன்ற ஜனங்களை "நான் **ஒருபோதும்** அறியவில்லை" என்றே இயேசு குறிப்பிட்டு கூறியுள்ளார்!!

ஒரு மனிதனை, எவ்வித குணாதிசயங்கள் அவனை ஆவிக்குரியவனாக உருவாக்குகிறது என்பதை அறிந்துகொள்ள, நாம் முதலாவது சாத்தான் பெற்றிருக்கும் எல்லா திறமைகளையும் ஒன்றன்பின் ஒன்றாய் எழுதிப்பார்த்து தெளிவடைவது நல்லது! அப்போதுதான், நாம் மெச்சிக்கொண்ட யாதொரு வரங்களும் "ஆவிக்குரிய மெய்யான அடையாளங்கள் இல்லை" என்ற உண்மையை நாம் கண்டுகொள்ள முடியும்!!

உதாரணமாய் இன்றைய "பல்வேறு ஊழியக் கிரியைகளை" எடுத்துக்கொள்வோம். இவ்விஷயத்தில் சாத்தான் எவ்வாறிருக்கிறான்? இந்த சாத்தானோ இரவு பகலும் கிரியை நடப்பிக்கும் முழுநேர ஊழியக்காரனாகவே இருக்கிறான்! (வெளி.12:9,10). இவன் ஒருநாள் கூட விடுமுறை எடுப்பதில்லை! யாரை குற்றம் சாட்டலாம் என ஜனங்களை சதா தேடி சுற்றி அலைகிறான்! இவனுடைய இந்த ஊழியத்திற்கு 'ஏராளமான உடன் ஊழியர்களும்' அவனுக்குத் துணை நிற்கிறார்கள்! இயேசுவிடத்திலேயும் கூட வேத வாக்கியங்களை வைத்து மடக்குவதற்கு அவனிடம் ஏராளமான வேத அறிவு குவிந்திருந்தது! இயற்கைக்கு அப்பாற்பட்ட பல வரங்கள் பெற்றிருந்தான்! துடிப்பான வைராக்கியம் கொண்டவன்! எண்ணற்ற ஏராளமான உடன்

ஊழியர்களைப் பெற்றவன்! திரளான ஜனங்கள் அவனைப் பின்பற்று கிறார்கள்! திரளான ஜனக்கூட்டத்தின்மீது அவனுக்கு அதிகாரம் உண்டு!...... இவை அத்தனையும் இருந்தபோதும், இந்த சாத்தானோ ஒரு துளிகூட ஆவிக்குரியவன் அல்லவே அல்ல!!

ஒரு மனிதனை "மெய்யான ஆவிக்குரியவனாய்" மாற்றுபவைகள் எவை என்பதை கீழ்காணும் **மூன்று குணாதிசயங்கள்** நமக்கு தெளிவு படுத்துகின்றன. அவன் மேல் நோக்கி காண்பவன், உள்ளந்திரியங் களைக் காண்பவன், வெளியரங்கமானவைகளையும் காண்பவன்! ஆம், ஒரு ஆவிக்குரிய மனிதன் இந்த "மூன்று திசைகளையும்" இடைவிடாது தொடர்ந்து காண்பவனாகவே இருக்க வேண்டும்!

**1) மேல் திசை:** தேவனையும் கிறிஸ்துவையும் பற்றிய தியானமும், ஆராதனையும் நிறைந்தவனாய் இருப்பான்.

**2) உள் திசை:** கிறிஸ்துவைப்போல் அல்லாத தன் அந்தரங்க ஜீவியத்திற்காய் இடைவிடாது மனந்திரும்புவான்!

**3) வெளி திசை:** சுற்றியுள்ள மற்ற ஜனங்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம்? அவர்களை எவ்வாறு ஆசீர்வதிக்கலாம்? என்றே தொடர்ச்சியாக நாடுவான்!

### 1. ஒரு ஆவிக்குரிய மனிதன் பரத்தின் மேலானவைகளைக் கண்ணோக்குவான்!

"தேவனை ஆராதிக்கிறவர்களாகவே" பிரதானமாய் ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். தேவன் மீது பசியும் தாகமும் கொண்ட மனிதர்களாய் இருந்திட வேண்டும்! ஆகவே, ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனை இடைவிடாது ஆராதிப்பவனாயிருப்பான்!!

> **அவனுக்குள்ள ஒரே ஒரு விருப்பம் "தேவன் மாத்திரமே" ஆகும்!! இந்தப் பூமியிலோ அல்லது பரலோகத்திலோ 'தேவனை காட்டிலும்' யாதொன்றையும் அல்லது யாதொருவரையும் 'மேலாக' விரும்பவே மாட்டான் (சங். 73:25).**

'தேவனைக் காட்டிலும்' பணம் அவனுக்கு பெரிதானதாகத் தோன்றுவதே இல்லை! ஒரு மான் நீரோடையை வாஞ்சித்து தவிப்பதைப் போலவே, ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவன் மீது வாஞ்சித்து தவிப்பான். கடும்வறட்சியினால் தாகம்கொண்ட ஒரு மனிதன் தண்ணீருக்காக தவித்துக் கதறுவதைப் போலவே இவன் தேவன் மீது தாக வாஞ்சை கொண்டிருப்பான்! தன்னுடைய சுகத்தையும் சொகுசையும்விட, ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனுடைய ஐக்கியத்தையே மேலாக எண்ணி வாஞ்சிப்பான்! தன்னோடு தேவன் **ஒவ்வொரு நாளும் பேசுவதைக் கேட்பதற்கு** மிகுதியான வாஞ்சை கொண்டிருப்பான்!

*இதற்கு மாறாக, பணத்தையும் தங்களது சொகுசையும் ஆராதனை செய்பவர்களோ தங்கள் வாழ்க்கையில் ஏதாகிலும் ஒன்றைக் குறித்து "எப்போதும்" குறை சொல்பவர்களாகவே இருப்பார்கள்!*

**ஆனால் ஆவிக்குரிய மனிதனோ தேவனை மாத்திரமே நாடுகிறபடியால், தேவன் அவனோடு எப்போதும் இருப்பதினிமித்தம் அவனுக்கோ "யாதொரு குறைச் சொல்லும் இருப்பதில்லை!".**

*மேலும், தனக்கு நேரிடுகிற எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய பலத்த கரத்தை காண்கிறபடியால், அவருடைய கரத்தில் மகிழ்ச்சியுடன் எப்போதும் அடங்கியிருப்பான்!!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனோடு தொடர்ச்சியான தொடர்பு உடையவனாக இருக்கிறபடியால், அவனது வாழ்வை நடத்திச் செல்வதற்கு இனி யாதொரு சட்டதிட்டங்களும் அவனுக்கு அவசியமாய் தோன்றுவதில்லை! ஜீவ விருட்சமாகிய தேவனை அவன் கண்டுகொண்டபடியால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை அவன் மனம் நாடுவதில்லை!! கிறிஸ்துவினிமித்தம் கொண்ட அன்பின் தியானத்தில் ஈர்க்கப்பட்டதினிமித்தம், இரண்டாந்தரமான உலக காரியங்களுக்கு அவன் வழி தவறிச் செல்வதில்லை. இந்த ஆவிக்குரிய மனிதன் இயேசுவை நோக்கிப் பார்த்து, வருடத்திற்கு வருடம் தன் ஆண்டவரைப் போலவே மறுரூபம் அடைவான்!!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன்* **தொடர்ச்சியாக தன்னைத் தாழ்த்துவான்.** *ஆகவே தேவனும் அந்த மனுஷனை தொடர்ச்சியாக உயர்த்துகிறார்! இவ்வாறு உயர உயர உயர்த்தப்பட்டு, தேவனோடு கொண்ட உறவை இவன் அதிகமாக கிட்டிச் சேருகிறான். இவ்வாறு, பரலோக வாழ்வில் மெய்யான ருசியை கண்ட இவன், தன் சகல நற்கிரியைகளையும் மனுஷர் கண்களுக்கு எப்போதும் மறைவாகவே செய்திட நாடுவான்!*

**2. ஒரு ஆவிக்குரிய மனிதன் உள்ளான தன் அந்தரங்கங்களைக் கண்நோக்குவான்:**

*பரத்தின் மேலானவைகளில் கண்ணோக்கமாய் இருப்பவன், நிச்சயமாய் உள்ளான தன் அந்தரங்கங்களைக் காண்பதற்கும் நடத்தப்படுவான்! தேவனுடைய மகிமையைக் கண்ட ஏசாயா "உடனடியாகவே" நீசப்பாவியாகிய தன் அந்தரங்கத்தையும் கண்டு விட்டான் (ஏசா.6:1-5). இதே போலவே யோபுவுக்கும், பேதுருவுக்கும், யோவானுக்கும் சம்பவித்தது! (யோபு 42:5,6, லூக்.5:1, வெளி.1:17).*

**நாம் தேவனுடைய பிரசன்னத்தில் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தால், நம் ஜீவியத்தில் கிறிஸ்துவைப்போல் அல்லாத ஏராளமான நீசத் தன்மைகளை நாம் கண்டுகொள்ளமுடியும்!**

*இவ்வாறு, ஆவிக்குரிய மனிதன் தன் ஜீவியத்தில் மறைந்திருக்கும் பாவங்களைக் குறித்து தொடர்ச்சியான வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்டே இருப்பான்!*

"**பரிசுத்த அலங்காரத்துடனே** *கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்" என்றே நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (சங்கீதம் 29:2)* . *இந்த பரிசுத்தத்தின் அலங்காரமில்லாமல் அல்லது ஆடையில்லாமல் இருப்பது, ஆண்டவருக்கு முன்பாக "நிர்வாணமாய்" நிற்பதற்கு ஒப்பானதேயாகும்! ஆகவேதான், ஆவிக்குரிய மனிதன் தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் தன் மனச்சாட்சியை எப்போதும் சுத்தமுள்ளதாக வைத்திருக்க நாடுவான் (அப்.24:16). ஒரு வியாபாரி அதிக பணம் சம்பாதித்திட தன்னால் இயன்ற முயற்சிகளை செய்வது போல... ஆராய்ச்சி செய்திடும் ஒரு விஞ்ஞானி புதிய கண்டுபிடிப்புகளுக்காக தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வதுபோல... ஆவிக்குரிய மனிதனும், தன் மனச்சாட்சியை எப்போதும் சுத்தமுள்ளதாய் காத்துக் கொள்ள தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வான்!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன், மற்ற விசுவாசிகள் தங்கள் ஜீவியத்தில் ஒருபொருட்டாய் எண்ணாத பகுதிகளிலும் வெளிச்சம் பெற்றவனாய் தன்னை கழுவிக்கொண்டு, தொடர்ச்சியாக தன்னை நியாயந்தீர்த்து வாழ்ந்திடுவான்!!*

**ஒரு ஆவிக்குரிய மனிதன், தான் தேவனுக்கு வலிமையுள்ளவனாக விளங்குவதற்குத் தடையாய் நிற்கும் அனேக காரியங்களுக்கு தன் உள்ளான ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் மரித்திட வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தவனாக இருப்பான்!**

*ஆகவே அவனுடைய ஜீவியபாதை அனுதினமும் சிலுவை சுமக்கும் பாதையாய் மாறி "தன் சரீரத்தில் இயேசுவின் மரணத்தை எப்போதும் சுமந்து திரியும்" நிலைக்கு வந்துவிடுவான் (2கொரி 4:10). ஆவிக்குரிய மனிதன் எந்த மனுஷனுக்கு முன்பாகவும் தன்னைத் தாழ்த்துவதற்கு ஆயத்தமுள்ளவனாய் இருப்பான்! ஒருவன் வயது முதிர்ந்தவனோ அல்லது அவனைக் காட்டிலும் வயதில் இளையவனோ அல்லது* **எந்த ஒரு மனிதனிடத்திலும் மன்னிப்பு கேட்பதற்கு** *அவனுக்கு கஷ்டமாக இருப்பதில்லை! ஏனெனில், அவன் தன் மனைவியிடமோ, தன் சகோதரனிடமோ அல்லது யாதொரு அயலானிடமோ, ஏதாவதொரு வகையில் பாதிக்கும்படி நடந்திருந்தால், அவனுடைய ஜெபத்தையும் ஊழியத்தையும் ஒருபோதும் தேவன் அங்கீகரித்திட மாட்டார் என்பதை அவன் அறிந்திருக்கிறான்! எனவே, யாராகிலும் ஒருவருக்குத் தான் தீங்கு செய்துவிட்டதாக உணர்ந்துவிட்டால், "பலிபீடத்தில்*

உடனடியாக தன் காணிக்கையை வைத்துவிட்டு, அந்த நபரோடு ஒப்புரவாகிப் பின்பு திரும்பி வந்து, தன் பலியை தேவனுக்குச் செலுத்துவான்!" (மத்தேயு 5:23,24).

**3. ஒரு ஆவிக்குரிய மனிதன் வெளியரங்கமானவைகளையும் கண்ணோக்குவான்:**

மேலானவைகளையும், உள்ளான அந்தரங்கங்களையும் கண்ணோக்கிப் பார்த்து வாழ்ந்த ஒருவன் "**தானாகவே**" வெளியரங்கமாய் உள்ளவைகளையும் கண்ணோக்கிப் பார்த்து ஜீவிப்பான்!

ஒரு ஆவிக்குரிய மனிதன், "தேவன் ஒருவனை ஆசீர்வதித்திருப்பதின் ஒரே நோக்கம், **அவன் பிறரை ஆசீர்வதிக்க வேண்டும்** என்பதுதான்!" என்ற உண்மையை அறிந்திருப்பான். தேவன் அவனுக்கு அதிகமாய் மன்னித்திருக்கிறபடியால், தனக்கு தீமைசெய்த அனைவரையும் மகிழ்ச்சியுடன் உடனடியாக மன்னித்துவிடுவான்! தேவன் அவனுக்கு மிகுந்த நல்லவராக இருந்தபடியால் அவனும் பிறருக்கு நல்லவனாகவே இருப்பான்! அவன் தேவனிடம் இலவசமாய் பெற்றபடியால், மற்றவர்களுக்கும் தான் பெற்ற கிருபா நன்மைகளை இலவசமாய் கொடுப்பான்!

ஒரு ஆவிக்குரிய மனிதன் **மற்றவரின் நலன் மீது** மிகுந்த கரிசனை கொண்டிருப்பான்! இழந்தவர்கள் மீதும் துயர் நிறைந்த மானிடர் மீதும் அவன் எப்போதும் மனதுருக்கம் நிறைந்தவனாக இருப்பான்! நல்ல சமாரியன் உவமையில் காணும் லேவியனும், ஆசாரியனும் தேவை நிறைந்த ஒரு சகோதரனைப் புறக்கணித்துச் சென்றுவிட்டதுபோல், அவனால் முடிவதில்லை!! (லூக்கா 10:30-37).

> **வீழ்ச்சியடைந்த மனிதனை சாத்தானின் கட்டுகளிலிருந்து விடுதலை செய்து அவனுக்கு உதவிச் செய்யவும், அவனை ஆசீர்வதிக்கவும், அவனை தூக்கி நிலைநிறுத்தவும், தேவன் எப்போதும் கரிசனை கொண்டவராகவே இருக்கிறார்.**

இதே போன்ற கரிசனையை ஆவிக்குரிய மனிதனும் பெற்றிருப்பான். ஒரு ஆவிக்குரிய மனிதன் தன் எஜமானனைப் போலவே "ஊழியம் கொள்ளாமல் ஊழியம் செய்திடவே" நாடுவான்! சாத்தானின் கட்டுகளிலிருந்து ஜனங்களை விடுதலையாக்கி, அவர்களுக்கு நன்மை செய்கிறவராக இயேசு சுற்றித் திரிந்தார் (அப்.10:38). ஆவிக்குரிய மனிதனும் அவ்வாறாகவே நன்மை செய்கிறவனாகவே எப்போதும் திகழ்வான்!!

ஒரு ஆவிக்குரிய மனிதன், தான் பிறருக்குச் செய்திடும் ஊழியத்திற்காக அவர்களிடமிருந்து யாதொரு பணத்தையோ அல்லது கனத்தையோ **தனக்கு ஆதாயமாக ஒருபோதும் தேடமாட்டான்!** அவன்

*தேவனைப் போலவே, தன் ஜீவியத்தின் மூலமாகவும், ஊழியத்தின் மூலமாகவும் பிறரை ஆசீர்வதிப்பது ஒன்றையே நாடுவான். ஒருவரிடமிருந்தும் தனக்கென பரிசுப் பொருளையோ அல்லது காணிக்கையையோ அவன்* **எதிர்பார்த்திட மாட்டான்.** *ஏனெனில் தன் ஒவ்வொரு தேவைக்கும், தேவனை மாத்திரமே அவன் நம்பியிருப்பான்!!*

*"பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் உபதேசங்கள்" என்ற தலைப்பு கொண்ட புத்தகம் நமக்கு எடுத்துச் சொல்லும் செய்தி யாதெனில்: "விசுவாசிகளே, உங்களிடம் ஏதாகிலும் ஒரு விதத்தில் தங்களுக்கென பணத்தைக் கேட்கும் எந்த பிரசங்கியைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள்! ஏனெனில் அதுபோன்றவர்கள் நிச்சயமாய் கள்ளதீர்க்கதரிசிகளேயாவர்!! இவ்வாறு, இயேசு கற்பித்த சத்தியங்களை நாம் நன்கு அறிந்தவர்களாய் இருந்தால் மாத்திரமே ஏராளமான கள்ளத் தீர்க்கதரிசிகளிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்!*

*மெய்யாகவே, ஒரு ஆவிக்குரிய மனிதன் இவ்வாறு மேலான கண்ணோட்டத்தையும், அந்தரங்க கண்ணோட்டத்தையும், வெளியரங்கமான கண்ணோட்டத்தையும் இணைந்து காண்பவனாய் இருப்பான். அவன் வெறும் மேலானவைகளை மாத்திரமே கண்ணோக்குகிறவனாக இருந்தால், நடைமுறைக்கு ஒவ்வாத கிறிஸ்தவனாய் புறக்கணிக்கப் படுவான்! "பூமியின் நடைமுறை உபயோகத்திற்குப் பயனற்ற பரலோக சிந்தை, ஒன்றிற்கும் பிரயோஜனமற்றது!" என்றே உலகம் பழிக்கும்!! அதுபோலவே, நம்முடைய உள்ளானவைகளை மாத்திரமே கண்ணோக்குகிறவர்களாய் இருந்தால், நாம் வெகு சீக்கிரத்தில் மனச்சோர்வுற்று தைரியமற்றவர்களாய் மாறிவிடவும்முடியும்! அதுபோலவே, வெளியரங்கமானவைகளில் மாத்திரமே அக்கறைகொண்ட கிறிஸ்தவனாக இருந்தால், நம்முடைய சகல ஊழியங்களிலும் யாதொரு வல்லமையும் இருக்காது! யாதொரு பலனும் இருக்காது!!*

*ஆகவேதான் ஒரு ஆவிக்குரிய மனிதன் மேற்கண்ட மூன்று திசைகளிலும் தொடர்ச்சியான கண்ணோக்குடையவனாய் திகழ்கிறான்!*

*இவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து சமநிலைகாணும் இடத்தைக் கண்டடைந்து, ஆவிக்குரியவர்களாய் மாற தேவன் நமக்கு அருள்புரிவாராக!*

# 5

## சபைக்கு அனல்கொண்ட காவலன் வேண்டும்!

"ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறதேசத்துக்குப் பிரயாணம் போக எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, **அவனவனுக்குத்** தன்தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும் படிக்குக் **காவல்காக்கிறவனுக்கு** (Door Keeper) கற்பித்தான்" என ஆண்டவர் இயேசு கூறியதை மாற்கு 13:34-ல் நாம் வாசிக்கிறோம்.

இப்பூமியிலுள்ள தனது வீடாகிய சபையில், தன் ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் ஓர் வேலையையும், விசேஷமாக..... அந்த வீட்டில் ஓர் வாசல் காப்பவனையும் நியமித்து அவன் 'விழிப்பாய்' இருக்கும்படி ஆண்டவர் கட்டளையிட்டார், என இவ்வசனத்தில் நாம் காண்கிறோம். இந்த வாசல் காக்கும் காவலன், ஒரு ஸ்தல சபையிலுள்ள **மூப்பர்களில்** ஒருவன் என்பதை நாம் எளிதாய் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த வாசல் காப்போனின் பணியானது, தன் மந்தையை நடத்திச் செல்லும்படி **ஆண்டவருக்கு வாசலைத் திறப்பதும்,** கூலிக்காரர்களும் ஓநாய்களும் ஆடுகளை வழிவிலகச் செய்து அவைகளை அழித்து விடாதிருக்கும்படி **அவர்கள் சபைக்குள் நுழைந்துவிடாமல்** வாசலைக் கண்டிப்புடன் காப்பதுமே அவன் பணியாகும்! (யோவான் 10:3).

மேலும்,சபைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து அதன் அங்கமா யிருப்பவர்களின் "ஆவிக்குரிய நிலைமையை" கண்காணிப்பதும், பின் மாற்றம் அடைபவர்களை எச்சரிப்பதும் இவர்களுடைய பணியாகவே இருக்கிறது. ஏனெனில், மேய்ப்பனின் பணி ஏற்றிருக்கும் அனைவருக்கும் "உன்ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்து கொள், உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு" என்றே வேதம் கட்டளையிடுகிறது! (நீதி. 27:23).

வாசலைக் காவல்காப்பவன் எல்லா நேரங்களிலும் விழிப்பாய் இருக்கவேண்டும். ஏனென்றால் **லௌகீக நாட்டம்** கொண்ட ஜனங்கள் கூட, இவர்களின் ஸ்தல சபையில் அங்கம் வகிப்பதற்கு நாடுவார்கள்! இதுபோன்றவர்கள் சபையைக் கறைப்படுத்தி அதன் தூயசாட்சியை

*அழிக்கும்படி, "சாத்தானாலேயே" அனுப்பப்படுகிறார்கள்!! இவ்வகை யான ஜனங்களைக் குறித்து* **யூதா** *தன் நிருபத்தில் எச்சரித்து, "பக்தியற்ற வர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்" என முதலாம் நூற்றாண்டு சபையின் நாட்களிலேயே எழுதினார் (யூதா 4).*

**இதுபோன்ற சமயங்களில்தான், வாசலைக் காவல்காப்பவன் இவ்வித பக்தியற்ற ஜனங்களை சபையைவிட்டு அகற்றும்படியான ஓர் கஷ்டமான பணியை நிறைவேற்றிடும் பொறுப்பில் இருக்கிறான்!**

*இதுபோன்ற ரம்மியமற்ற பணியை அநேக மூப்பர்கள் நிறை வேற்றிட விரும்பமாட்டார்கள்! அதுவும் குறிப்பாக, ஆண்டவருடைய நாமத்தின் புகழ்ச்சியையும், சபையின் சாட்சியையும் காட்டிலும் "சாந்தமுள்ள மூப்பர்கள்" என தாங்கள் பெற்ற பெயரை நேசிக்கும் மூப்பர்கள் நிச்சயமாய் இப்பணியை நிறைவேற்றிட மாட்டார்கள்!!*

*ஆகவே வாசலைக் காவல்காப்பவனின் பிரதான தகுதி,* **தேவனுடைய நாம மகிமைக்கென மனப்பூர்வமாய் கண்டிப்புடன் இருப்பதற்கும்,** *தன் சொந்த கனத்தையும், பெயரையும் தேடுவதிலிருந்து விடுதலைபெற்றவனாயும் இருக்கவேண்டும்!*

*தான் போன பின்பு "மந்தையைத் தப்பவிடாதபடி கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" என பவுல் ஏன் கூறினார்? (அப்.20:21). ஏனென்றால், அந்த சபையின் மூப்பர்களில் ஒருவர்கூட வாசலைக் காவல் காக்கும் 'அந்த ரம்மியமற்ற பணியை' ஏற்றுக்கொள்ள ஆயத்தமா யில்லை என்பதைக் கண்டதினிமித்தமே அவ்வாறு கூறினார். அங்கிருந்த எல்லா மூப்பர்களும் "சாந்தகுணமுள்ள சகோதரர்கள்" என்ற தங்கள் சொந்தப் பெயரை விரும்புகிறவர்களாயும், "தங்களைப் புகழ்ந்து பின்பற்றும் சீஷர்களை" நாடுபவர்களாயும் இருந்தார்கள்!*

*இதனிமித்தமே எபேசு சபை பிற்காலத்தில் ஓநாய்களால் மேற் கொள்ளப்பட்டு, ஆண்டவர் தன் பிரசன்னத்தையும், அபிஷேகத்தையும் (குத்துவிளக்கை) அவர்கள் நடுவிலிருந்து எடுத்துக்கொள்ள நேரிடுமோ என்ற அளவிற்கு சாத்தான் சபையைக் கறைப்படுத்தி இருந்தான்! (வெளி.2:5). ஆம், இன்றும் அநேக சபைகளைக் கொடிய ஓநாய்கள் மேற்கொண்டிருப்பதற்கு இவைகளே பிரதான காரணமாகும்.*

*தாவீதோ தன்னுடைய பொறுப்பை குறிப்பிட்டுக் கூறும்போது, "நான் ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின்* **வாசற்படியில்** *காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்" என்றார்! (சங்கீதம்.84:10). தேவனுடைய வீட்டில் வகிக்கும் எந்த ஸ்தானத்தையும்விட வாசலைக் காவல்காக்கும் ஸ்தானம் விரும்பப்படாத ஸ்தானமாய் இருப்பதையே தாவீது கூறிய இந்த வசனம்*

வெளிப்படுத்துகிறது. ஆனால் இந்த ஸ்தானத்தையே பொறுப்பி லிருக்கும் சகோதரர்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஆண்டவர் இன்று விரும்புகிறார்!!

இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனாகிய **ஏலி**, தேவனுடைய கூடாரத்தின் தூய்மையைக் காக்கும்படியான பொறுப்பிலிருந்தான். ஆனால் ஏலியோ தன் குமாரர்கள் தேவனுடைய வீட்டைத் தங்கள் வேசித் தனத்தினால் கறைப்படுத்திட அனுமதித்தவனாய், அவர்களைக் கூடாரத்தை விட்டு இன்னமும் விரட்டாதவனாய் இருந்தான்! அவர்களைச் செல்லமாய் கடிந்துகொண்டான்.... ஆகவே, அவர்களும் தொடர்ந்து பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருந்தார்கள்! (2சாமு.2:22-25).

ஏலியின் நாட்களில், "கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது" என்றே வாசிக்கிறோம் (1சாமுவேல். 3:1). இன்றும் இதே நிலைதான் அநேக சபைகளில் காணப்படுகிறது. ஏன்...... புதிய உடன்படிக்கையைப் பிரகடனம் செய்திடும் அநேக சபைகளிலும்கூட இந்நிலைதான் உள்ளது! அதுஏனென்றால், இந்த ஏலியைப்போலவே அனேக மூப்பர்கள் தங்கள் பிள்ளைகளை அதிகமாய் நேசிக்கிறபடியால் அவர்களைக் கண்டிக்காமலே விட்டுவிடுகிறார்கள்.

**ஒரு மூப்பனுடைய பிள்ளைகள் விசுவாசிகளாய் இல்லையென்றால், அவன் தொடர்ந்து "மூப்பனாய்" இருப்பதற்கு எந்த உரிமையும் இல்லை! (தீத்து 1:6).**

ஏனென்றால் தன் சொந்த வீட்டின் வாசலைக் காவல்காத்து தன் சொந்தப் பிள்ளைகளைச் செம்மையாய் வளர்க்காதவன், சபையில் ஓர் உத்தம வாசல் காப்போனாய் இருப்பது எப்படி? (1 தீமோத்தேயு. 3:4,5).

இத்தகைய மூப்பர்கள் தேவனுக்கு எவ்வாறு செவிகொடுத்து கேட்பது என்பதை அறியாமல், தங்கள் சொந்த குடும்பத்தினரை நியாயப்படுத்தவே அறிந்திருப்பார்கள். இவர்கள் இன்னமும் ஏலியைப் போல சிங்காசனத்தில் அமர்ந்திருந்தாலும்...... அபிஷேகத்தையோ இழந்துவிட்டார்கள்! இத்தகைய மூப்பர்கள், தங்கள் ஜீவியத்தில் "தங்கள் அபிஷேகத்தை இழந்து போனார்கள்" என்பதை தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் தெளிவுபடுத்தும்படியே நாம் இப்போது ஜெபித்திட வேண்டும்!!

ஒரு மூப்பனுடைய ஊழியம் போரடித்து, சலிப்பும், ஜீவனு மற்றதாய், தான் சொன்னதையே அடிக்கடித் திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டிருப்பதாய் இருக்குமென்றால்...... அந்த மூப்பன் ஏலியைப் போலாகிவிட்டான் என்பதை நீங்கள் உறுதிசெய்துவிடலாம். கடந்த காலங்களில் தேவன் அவனோடு இருந்தாலும், இப்போதோ தேவன் அவனோடு இல்லை! ஒருவேளை, அவன் ஆண்டவரையும், அவர்

*சபையையும் நேசிப்பதைக்காட்டிலும் இப்போது பணத்தை அதிகம் நேசிக்கிறவனாய் மாறியிருக்கக்கூடும். இது சமயங்களில், விசுவாசிகள் பகுத்தறிய முடியாதவர்களாய் இருந்து, இவர்களை "தேவ மனிதர்கள்" என எண்ணிவிடக்கூடாது. ஆம்,* **அபிஷேகத்தை இழந்த இவர்கள்** *நிச்சயமாய் தேவமனிதர்கள் அல்லவே அல்ல!!*

*இன்றும் புதிய உடன்படிக்கை சபைகளில் உள்ள அநேக மூப்பர்கள், சபையின் ஆரம்பத்திலிருந்தே மூப்பர்களாய் இருக்கிற படியால் இருந்து கொண்டிருக்கிறார்கள்! இவர்கள் "சீனியாரிட்டி"* (Seniority) *அடிப்படையில் தங்கள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்களே யல்லாமல், அவர்கள் ஜீவியத்தில்* **தேவனுடைய தொடர்ச்சியான அபிஷேகம்** *இருப்பதின் தகுதிப்படி அல்ல!*

*ஏலியின் பிள்ளைகள் "பேலியாளின் (ஒன்றுக்கும் உதவாத) மக்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை அறியவில்லை" என வாசிக்கிறோம் (1சாமு.2:12). இவ்வாறு இருந்தும்கூட கர்த்தருடைய வீட்டில் அவர்களுக்குப் பொறுப்புள்ள ஸ்தானம் வழங்கப்பட்டிருந்தது. 'இன்றும்' இதே கொடியநிலைதான் காணப்படுகிறது.*

**அநேக சபைகளில், "கர்த்தரை அறியாதவர்கள்" பொறுப்புள்ள ஸ்தானத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்!**

*இவ்வாறு உத்தம வாசல் காவலனாய் இவர்கள் இல்லாதபடியால், சாத்தான் இதுபோன்ற சபைகளில் தன்னுடைய நோக்கத்தை நிறை வேற்றிக் கொள்கிறான். ஆம், பாதாளத்தின் வாசல்கள் இவ்வித சபை களை மேற்கொள்வதையே நாம் காண்கிறோம்.*

*கொரிந்திய சபையில் ஒருமனிதன் வேசித்தனத்திற்குரிய பாவத்தை செய்தான் எனக் கேள்விப்பட்டபோது, பவுல் எவ்வளவு கண்டிப்புடன் இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? பவுல் கொரிந்துவில் இல்லாதிருந்தும் சகோதரன் குலோவேயாள் மூலம் (1கொரி. 1:11) இச்செய்தியைக் கேள்விப்பட்ட உடனே, "நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும் ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக்குறித்து நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில், அப்படிப் பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே* **அவனைச் சாத்தானுக்கு** *ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்" என கண்டிப் பாய் கூறினார் (1கொரிந்தியர்.5:3,5).*

*இத்தனை வைராக்கியமான கண்டிப்புடன் பவுல் நடந்து கொண்டதினிமித்தமே, அன்றைய கொரிந்து சபை தீட்டுப்படாமலும், ஆண்டவருடைய நாமம் கனவீனமடையாமலும் காக்கப்பட்டது! மேலும், இவ்வித கண்டிப்பான நடவடிக்கை, முடிவில் அந்த மனிதனின் இரட்சிப்பிற்கும் வழிவகுத்தது! (2 கொரிந்தியர். 2:5-8).*

*இவ்வாறு, பவுலைப்போன்ற கண்டிப்பான காவல்காரர்கள் சபையைத் தூய்மையாய் பாதுகாத்து, பின்மாற்றக்காரர்கள் தங்கள் 'உண்மை நிலையை உணர்ந்து' தேவனிடத்தில் திரும்பும்படியும் செய்வார்கள்! அவ்வாறு இல்லாமல், தங்கள் சொந்தப்பெயரையும் பிரஸ்தாபத்தையும் நாடுபவர்கள் ஆண்டவருக்காய் எதையும் சாதித்திட மாட்டார்கள்!*

*இச்செய்தியை வாசிக்கும் சில மூப்பர்கள், இப்போது "மனுஷீக வைராக்கியத்தினால்" மூட்டப்பட்டு, இனிவரும் நாட்களில் தங்கள் "சபைகளிலிருந்து ஒவ்வொரு பாவிகளையும் விரட்டியடிப்போம்" என தீர்மானம் எடுத்தாலும் எடுப்பார்கள்! ஆனால் இதன் விளைவாய் அவர்களின் சபையிலுள்ள ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டு "சபை காலியாவது" மாத்திரமே சம்பவிக்கும்! ஏனெனில், "மனுஷனுடைய வைராக்கியம் (கோபம்) தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" (யாக்கோபு. 1:20).*

**ஆம், இதுபோன்ற கண்டிப்பான நடவடிக்கைகளுக்கும் ஒருவன் தேவ ஆவியினால் நடத்தப்பட வேண்டியது அவசியமயிருக்கிறது!**

*தேவாலயத்தில், பல சந்தர்ப்பங்களில் காசுக்காரர்களையும், புறா விற்கிறவர்களையும் இயேசு பார்க்கத்தான் செய்தார். ஆனால், அவர்களைக் காண்கிற வேளையிலெல்லாம் இயேசு அவர்களைத் துரத்த வில்லை! அவருடைய பிதா, அவர்களைத் துரத்தும்படி கூறிய சமயத்தில் மாத்திரமே அவர்களை வெளியே துரத்தினார். ஆம், ஊழியத்தின் ஆரம்பத்தில் ஒருசமயமும் (யோவான் 2:15), ஊழியத்தின் இறுதியில் ஒரு சமயமும் (மாற்கு 11:15) இயேசு அவ்வாறு செய்தார். பார்த்தீர்களா, இயேசு தன் பிதாவின் வீட்டில் எத்தனை உண்மையுள்ள வாசல் காவலனாய் இருந்தார்!!*

*இதற்கு மாறாய், மனுஷீக வைராக்கியத்தில் நாம் செயல்பட்டால், தடுமாறிய "தேவனுடைய பெட்டியை" பிடிப்பதற்குத் தன் கையை நீட்டி, "அவனுடைய துணிவினிமித்தம்" தேவனால் அடிக்கப்பட்டு செத்துப்போன ஊசாவின் கதியே நமக்கும் நேர்ந்திடும்! (2சாமு.6:7).*

*மேலும், சபையின் சாட்சியைக் கறைப்படுத்தும் லௌகீக விசுவாசி களுக்கு மாத்திரமல்ல, வைராக்கியமான வாலிப சகோதரர்கள் தங்கள்*

*மனுஷீக வைராக்கியத்தைக் கொண்டு மற்ற வாலிபப் பிள்ளைகளை* **தவறான நூதன வழிகளில்** *நடத்திச் சென்று விடாதபடிக்கும், நாம் விழிப்புடன் கர்த்தருடைய வீட்டில் வாசல் காவலனாய் இருந்திட வேண்டும். உணர்ச்சி பொங்கும் எழுச்சியை உண்டுபண்ணும் "புது நாகரீக - புதிய அலை" தந்திர முறைகளுக்கும் நாம் விழிப்பாய் இருந்திட வேண்டும். இல்லாவிட்டால், வளர்ச்சியடையாத சீஷர்கள் இதுபோன்ற வைகளில் எப்போதும் நாட்டம் கொண்டிருக்கிறபடியால், தவறாய் நடத்தப்பட்டுவிட முடியும்!*

*ஆம், "சீஷராக்கி, ஆண்டவர் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணும்" (மத்தேயு.28:19,20) முக்கியத்துவத்திலிருந்து சபை வழிதவறி....*

**இப்போது இசைக்கோ அல்லது சமூக சேவை புரிவதற்கோ அல்லது வேறெதற்குமோ முக்கியத்துவம் கொடுத்துவிடாதிருக்கவும் நாம் விழிப்பாய் இருக்க வேண்டும்.**

*ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்ட வுடன், ஒருவரும் ஜீவவிருட்சத்தை நெருங்காதபடி "நாலாபக்கமும்" சுழன்றுகொண்டிருக்கும் சுடரொளிப்பட்டயம் தாங்கிய கேருபீன் களைத் தேவன் "***காவலாய்***" வைத்தார்! இதுபோன்ற ஊழியத்தைத்தான் இன்று ஒவ்வொரு சபையிலிருக்கும் "வாசல் காவலாளிகள்" பெற்றிருக்க வேண்டும். இருப்பினும், இத்தகைய "வாசல் காவலாளிகள்" முதலாவதாய் அந்தப் பட்டயத்தை தங்கள் சொந்த மாம்சத்தில் வீசி, தங்கள் ஜீவியத்திலுள்ள அறிந்த பாவங்கள் யாவையும் அழிப்பதற்கும், தங்கள் எல்லா மனுஷீக வைராக்கியத்தை அழிப்பதற்கும், தன் சொந்த குடும்பத்தினர்கள் மற்றும் நண்பர்களிடம் கொண்ட எல்லா பார பட்சத்தை அழிப்பதற்கும் அனுமதித்திருக்க வேண்டும்!*

*காரியம் இவ்வாறாயிருக்கிறபடியயால், இன்று இந்தியாவிலுள்ள சபைகளின் வாசல்களில் "பட்டயத்தோடு" நிற்பதற்கு யார் ஆயத்தமாய் இருக்கிறார்கள்?*

*இவ்வித ஏராளமான "வாசல் காவலாளிகளைத்" தேவன் நம் தேசத்தில் எழுப்புவாராக!! ஆமென்.*

# 6

## மரத்தின் வேரை கோடாரி வீழ்த்த வேண்டும்!

*ஒரு பறவைக்கு இரண்டு செட்டைகள் இருப்பதைப் போலவே தேவனுடைய சத்தியமும் இருக்கிறது!* "**இப்படி** எழுதப்பட்டிருக்கிறதே" *என்பது ஒரு செட்டையாகவும்,* "**இப்படியும்** எழுதப்பட்டிருக்கிறதே" *என்பது இன்னொரு செட்டையாகவும் இருக்கிறது. நீங்கள் ஒரு "செட்டையை" மாத்திரமேயுடையவராய் இருந்தால் அதை வைத்து தொடர்ச்சியாய் ஒரே வட்டத்திற்குள் மாத்திரமே சுற்றி வந்து கொண்டிருப்பீர்கள்.... அநேகமாய், பாதை மாறியும் சென்று விடுவீர்கள்! ஆனால், உங்களுக்கு வேதம் கற்றுத்தரும் இரண்டு செட்டைகளும் இருந்தால், தடையேதுமின்றி முன்னோக்கிப் பறந்து கொண்டேயிருப்பீர்கள்!!*

*உதாரணமாய், "கிறிஸ்து சிலுவையில் ஏன் மரித்தார்?" என்ற கேள்வியை கேட்டுப் பாருங்கள். பொதுவாய் இக்கேள்விக்கு கிடைக்கும் உடனடியான பதில், வேதத்தில் எழுதியிருக்கிறபடி "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்" (1கொரி.15:3) என்றே அநேகர் கூறுவார்கள். ஆனால், அது பாதி சத்தியம் மாத்திரமே! வேதத்திலோ,* "**பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல்,** *தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தார்" (2கொரி.5:15) என இப்படியும் எழுதப்பட்டிருக்கிறதே..... இதை நீங்கள் கண்டீர்களா? இவ்வாறு இந்த இரண்டு வேத வாக்கியங்களையும் ஒன்றாய் சேர்க்கும் பொழுதுதான் நாம்* **சத்தியத்தின் இரண்டு சிறகுகளையும் பெறுகிறோம்!**

*கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்று நாம் வாசிக்கும் பொழுது, "பாவம் என்றால் என்ன?" என்பதை நாம் நன்கு அறிந்தவர்களா யிருக்க வேண்டும். இதை சரியாய் அறிந்து கொள்வதற்கு வேத வாக்கியங்கள் நமக்கு உதவி செய்கிறது.* "**நமக்காக வாழும் ஒரு வாழ்க்கையே**" *பாவம் என வேதம் சுட்டிக்காட்டுகிறது (2கொரி.5:15). ஆனால் வேதத்தின் இந்த விளக்கத்தையோ அநேக விசுவாசிகள் அறியவேயில்லை!*

**"இனிமேல் நான் பாவம் செய்ய விரும்பவில்லை" எனக் கூறும் நீங்கள், உண்மையிலேயே "இனி எனக்காக நான் வாழ விரும்பவில்லை" என்ற பொருளை உணர்ந்துதான் கூறுகிறீர்களா?**

*நாம் தேவனையும் அவருடைய வேதவாக்கியங்களையும் நெருங்கிய உறவில் அறிந்திருந்தால், பாவம் என்பது கொலையோ; விபச்சாரமோ; திருடோ அல்ல என்பதையும்.... நமக்காக வாழும் வாழ்க்கைதான் பாவம் என்பதையும் நாம் நன்றாய் விளங்கியிருக்க முடியும். ஆம், நாம் நமக்காகவே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பட்சத்தில் நாம் எவ்வளவு பெரிய கெட்ட பழக்கவழக்கங்களை விட்டிருந்தாலும் நாம் 'இன்னமும் பாவத்தில்தான்' ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்!*

*"ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்றே வேதம் கூறுகிறது (2கொரி.5:17). அதாவது, நம்முடைய பழைய மனப்பான்மை மாறுதல் அடைந்து விட்டது என்பதே இந்த வசனத்தின் பொருளாகும். இன்னும் தெளிவாய் கூறவேண்டுமானால் "இவன் தனக்காக வாழும் வாழ்க்கையை நிறுத்திவிட்டான்" என்பதேயாகும். இவன் இன்னமும் கிறிஸ்துவைப் போலாகும் இலக்கை அடையவில்லைதான்! இருப்பினும் இவன், தன் பழைய நிலையிலிருந்து திரும்பி, இப்போதோ தேவனுடைய மகிமைக்காக ஜீவிப்பதையே நாடுகிறான். இதுதான்... இதுமாத்திரமேதான், உண்மையான மனந்திரும்புதல்!*

*நீங்கள் ஒருவேளை சூதாடுவதையும், புகைபிடிப்பதையும், குடிப்பதையும் நிறுத்தியிருக்கலாம். இருப்பினும், இந்த எல்லா பாவங்களுக்கும் வேர்போல இருக்கும்* **"உங்களுக்காகவே வாழும்"** *வாழ்க்கையிலிருந்தோ நீங்கள் உண்மையாய் மனந்திரும்பவேயில்லை. ஆனால் இன்றைய பிரசங்கிகளில் அனேகர் உங்களை மகிழ்வூட்டுவதற்காக "நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள்" எனக் கூறுவார்கள்!? இப்படிப்பட்ட பிரசங்கிகளுக்கு, நீங்கள் அவர்களுடைய கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சென்று, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்டால் அதுவே அவர்களுக்குப் போதுமானதாய் இருக்கும்! இது சாத்தானுடைய கொடிய வஞ்சகமாகும்.*

**அதாவது "ஒருவன் இன்னமும் தனக்காக வாழ்ந்து கொண்டே" தான் இரட்சிக்கப்பட்டுவிட்டதாகவும், முடிவில் பரலோகம் சென்றுவிடுவோம் என்பதாகவும், அவர்களை விசுவாசிக்க வைத்திருப்பது கொடிய வஞ்சகம் அல்லவா?**

*ஒரு மனிதன் தன் ஜீவியத்தைப் பாழ்படுத்தும் தீயபழக்கங்களை*

விட்டுவிட்டுத் திரும்பி இருக்கலாம். ஆனால் அதுவும் அவன் இப் பூமியில் உள்ள தன் வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி என்பதைத்தானே சுட்டிக்காட்டுகிறது? சிகரெட் பெட்டிகளில், சட்டபூர்வ எச்சரிக்கை: "புகைபிடிக்கும் பழக்கம் உடல் நலத்திற்கு கேடு" என எழுதப்பட்டிருக்கும். ஆகவே தான், சிலர் புகை பிடிப்பதில்லை! இதே காரணத்திற்காகவே ஜனங்கள் குடிக்காமலும், சூதாடாமலும் இருக்கக்கூடும்! தங்களுக்கு "எய்ட்ஸ்" நோய் வந்துவிடுமோ என்ற பயத்தினிமித்தம் இன்று அனேகர் விபச்சாரமும் செய்வதில்லை!! ஆனால் வேதப்புத்தகம் திட்டமும் தெளிவுமாய் கூறுகிறபடி இதுபோன்ற ஜனங்களில் ஒருவர் கூட **"தங்கள் பாவத்தை விட்டு" மெய்யாய் மனந்திரும்பவேயில்லை!!**

நாம் தேவனுடைய மகிமைக்காய் வாழும்படியே சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். இவ்வாறு வாழாமல், நம்முடைய சுய வசதிக்காகவும், சுய பெருமைக்காகவும் வாழுவோமென்றால் நாம் உண்மையாய் மனந்திரும்பவுமில்லை, இரட்சிக்கப்படவுமில்லை! எனவேதான், இவ்வித **நமக்காக வாழும் பாவ வழியிலிருந்து** நம்மை மீட்பதற்காகவே இயேசு மரித்தார் (2கொரி.5:15). உதாரணமாய், ஒருவன் தன்னை சபையில் மற்றவர்களால் மதிக்கப்படத்தக்க பெரியவனாய் இருக்க விரும்பினால் அல்லது மற்றவர்கள் தனக்கு மரியாதை செலுத்த வேண்டும் என விரும்பினால்... இவன் தனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதில் ஒரு துளியும் சந்தேகமே இல்லை. இவன் வேண்டுமானால், ஏதோ "மார்க்க விஷயத்தில்" தன்னை "வெள்ளையடித்து" வைத்திருக்கலாம். ஆனால் அடிப்படை பூர்வமாய் அவனிடம் எந்த மாறுதலுமில்லை! இவன் ஒருவேளை "மறுபிறப்பு" "ஞானஸ்நானம்" போன்ற **கிறிஸ்தவ மொழிகளையும்** பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவனுடைய **உள்ளான மனிதனோ** இன்னமும் அப்படியே தான் இருக்கிறான்!!

மெய்யான மனந்திரும்புதலின் சத்தியம் இவ்வாறிருக்க, இதை ஏன் இன்று பிரசங்கிகள் பிரசங்கிப்பதில்லை? அதற்கு விடை "பளிச்சென்று" தோன்றத்தான் செய்கிறது. ஆம், இவ்வாறு உண்மையாய் பிரசங்கித்தால் அவர்களின் சபைக்கூட்டம் பாதிக்குமேல் குறைந்து விடும்! சத்தியத்தை சத்தியமாய் பிரசங்கிக்கும் இவர்களை, ஒவ்வொரு வருடமும் கன்வென்ஷன் கூட்டங்களுக்கு வரும்படி அழைக்கவும் மாட்டார்கள்! அவ்வளவுதான் காரணம்!!

இன்று நம்முடைய புத்தகங்களை அநேக பிரசங்கிகள் பல வருடங்களாய் வாங்குகிறார்கள். அதன் ஒரே நோக்கம், பிரசங்கக் குறிப்புகளைப் பெறுவதற்காக மாத்திரம்தான்! பரவாயில்லை, ஆனால்

இவர்களோ நம் செய்தியின் கடினப்பகுதிகளையெல்லாம் மிக கவனமாய் தூக்கி எறிந்துவிட்டுப் பிரசங்கிக்கிறார்கள்! தங்கள் பிரபல்யத்தையும் பாதுகாக்கிறார்கள்!!

**நான் உங்களுக்கு மிகுந்த ஆணித்தரமாய் ஒரு உண்மையைச் சொல்லுகிறேன்: ஒரு பிரசங்கி தேவனுடைய முழு ஆலோசனைகளையும் செம்மையாய் பிரசங்கிக்கும்படி "ஒருவன் தனக்காக வாழ்வது பாவத்தில் ஜீவிப்பதென்றும்" "ஒருவன் பணத்தை நேசித்தால் தேவனை நேசிக்க முடியாது"என்றும் சுமார் 6 மாதங்கள் பிரசங்கித்துக் கொண்டேயிருந்தால்...... ஒன்று, அவர் தன்னுடைய 'பாஸ்டர்' வேலையை இழந்து விடுவார்...... அல்லது, அவருடைய சபையிலிருந்து 75% ஜனங்கள் சபையை விட்டு வெளியே சென்றுவிடுவார்கள்!!**

*தேவன் நம்முடைய இருதயத்தையேப் பார்க்கிறார். ஆகவே, நம்முடைய ஜீவியத்தின் அடித்தள நோக்கம் மாறவில்லையென்றால், நாம் உண்மையாய் இரட்சிக்கப்படவேயில்லை! ஆனால் இன்றைய விசுவாசிகளிடம் நாம் காணும் ஒரே மாறுதல்யாதெனில்: இவர்கள் முதலில் "எந்த மார்க்க வெள்ளையடிப்புமில்லாமல்" தங்களுக்காகவே வாழ்ந்தார்கள்... இப்போதோ, ஏராளமான "மார்க்க வெள்ளைப் பூச்சோடு" தங்களுக்காக வாழ்கிறார்கள்!! அவ்வளவுதான். இதற்கு முதல் நிலையே எவ்வளவோ தேவலாம்! ஏனெனில் அந்நிலையில் தாங்கள் பாவிகள்தான் என நன்கு அறிந்திருந்தார்கள். ஆனால் இந்த இரண்டாவது நிலையில், இவர்கள் தங்களைப் 'பரிசுத்தவான்கள்' என்று எண்ணிக்கொண்டு தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள்!!*

*விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயை இயேசுவிற்கு முன்பாக கொண்டு வந்தபோது அவளை அவர் ஆக்கினைக்குள்ளாய் தீர்க்க வில்லை என்ற உண்மையை நீங்கள் கவனித்தீர்களா? இயேசு ஒரு நூதனமான தீர்க்கதரிசி!* **விபச்சாரத்தில் பிடிபட்டவளை,** *ஒரு வார்த்தை கூட கடிந்துகொள்ளாமல், தலைநிமிர்ந்து செல்லும்படி விடுவித்து விட்டார்! ஏனென்றால், அவளுடைய மனந்திரும்புதலை அவர் கண்டபடியால் அவளை மன்னித்துவிட்டார். அதற்குப் பிறகு, ரோம அரசு சிலுவையில் அறையத் தீர்மானித்த* **ஓர் கொடிய கொலைகார கள்ளன்,** *அவன் தன் பாவங்களை ஒத்துக்கொண்டு அறிக்கை செய்ததினிமித்தம், இயேசு அவனை மன்னித்தது மாத்திரமல்லாமல், அவனைப் பரதீசிக்கும் அழைத்துச் சென்றார்! பாருங்கள், இவன் தன் முழு வாழ்நாளிலும் ஒரு சிறு நன்மையைக் கூட செய்ததில்லை. அவன் செய்த அனைத்தும் கொலை, திருட்டுபோன்ற, தீமைகள்தான். ஆனால் அவன் மரித்த போதோ அவனை இயேசு பரதீசியில் வரவேற்றார். இது ஆச்சரியம் இல்லையா?!*

ஆனால்.... கையில் பைபிளோடு ஒவ்வொரு ஓய்வுநாளும் ஆலயத்திற்குச் சென்ற பக்தகோடிகளை "விரியன் பாம்புக்குட்டிகளே, வரும் கோபாக்கினைக்கு எப்படி தப்பித்துக் கொள்வீர்கள்" என்றே இயேசு கடிந்து பேசினார். இது என்ன, இயேசுவின் பிரசங்கம் தலை கீழாய் இருக்கிறதே? இன்று அநேக பிரசங்கிகள் கொலையாளிகளும், விபச்சாரக்காரர்களும்தான் நரகத்திற்குப் பாத்திரர்கள் என்று பிரசங்கிக்கும் பொழுது, இயேசுவோ வெளித்தோற்றத்தில் பக்தகோடி களாய் காணப்பட்டவர்களை நரகாக்கினைக்கு உரியவர்கள் என பிரசங்கிக்கிறாரே?!

**இவ்வாறு இயேசு ஏன் பிரசங்கித்தார்? ஏனென்றால் கொலையையும் விபச்சாரத்தையும் விட மாய்மாலமும், ஆவிக்குரிய அகங்காரமுமே பலகோடி மடங்கு தேவனுடைய பார்வையில் மோசமானது என்பதை இயேசு திட்டமாய் அறிந்திருந்தார்!!**

ஆம் இயேசு ஜனங்களின் இருதயத்தை தான் பார்த்தார்! அவர்களிடமிருந்த வெளித்தோற்றமான மார்க்க வெள்ளையடிப்பு களைக் குறித்து ஒரு துளியும் அக்கறை காட்டவேயில்லை! நம் ஆண்டவர், நாம் பேசும் "பாவத்தின் மேல் வெற்றி" "பூரணத்தை நோக்கி கடந்து செல்வோமாக" போன்ற நம்முடைய ஆவிக்குரிய வசனிப்புகளைக் கேட்டு ஒரு துளியும் கவர்ச்சிக்கப்படுவதேயில்லை! ஒரு மனிதன் இன்னமும் தனக்கானதையே தேடிக்கொண்டு தன்னை "மறுபடியும் பிறந்தவன்" என கூறிக்கொண்டால் அவனை ஆண்டவர் "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை" என்றும் "விரியன் பாம்பு" என்றுமே இன்றும் அழைப்பார்! இன்று ஆண்டவர், தங்களுடைய ஆவிக்குரிய உன்னத நிலையைப் பேசிக்கொள்பவர்கள் மீது நோக்கமாயில்லை! ஆனால், தங்களுடைய பாவங்களுக்காய் மனம் வருந்தி இருதயத்தில் நொருங்குண்ட ஜனங்களின் மீதே நோக்கமாயிருக்கிறார்! பவுல் தன் ஜீவ காலமெல்லாம் பரிசுத்தமாய் வாழ்ந்து, தன் ஆண்டவருக்காய் பல வருடங்கள் ஊழியம் செய்த பின்பும் தன்னை இந்த பூமியில் "பாவிகளுக் கெல்லாம் பிரதான பாவி நான்" என்றல்லவா குறிப்பிட்டார்!

பார்த்தீர்களா, யாரெல்லாம் மெய்யான விருப்பத்தோடு தங்கள் சுயநலமான ஜீவியத்திலிருந்து திரும்பிவந்து, தங்களுடைய **தோல்வியை நேர்மையாய் ஒத்துக்கொண்டு,** வேறு யாரையும் குற்றம் சாட்டாமல் தங்கள் பாவங்களை மாத்திரமே காண்கிறார்களோ, அவர்களுக்கே ஆண்டவர் தமது இரக்கத்தையும், மன்னிப்பையும் அருளுவதற்கு ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறார். இதன் தொடர்பாய், விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயையே சற்று சிந்தித்துப் பாருங்கள். அவளிடத்தில் என்ன தகுதி காணப்பட்டது? அவளுடைய ஊரில் அவளைக் குறித்து

ஏதாவது ஓர் நற்சாட்சி இருந்ததா? அப்படி எதுவுமேயில்லை. **ஆனால்.... அவள் நேர்மையுள்ளவளாய் இருந்தாள்!** அவள் தான் நிரபராதி என்றும், மற்றவர்கள் தான் தன்னைத் தவறாய் குற்றம் சாட்டுகிறார்கள் என்றும் பாசாங்கு செய்யவில்லை. உண்மையில், அச்சூழ்நிலையில் தன் வாயைக்கூட திறக்காமல் தன் பாவங்களை மௌனமாய் ஒத்துக் கொண்டாள்! ஆகவேதான் அவளுக்கு திரளான நம்பிக்கையின் வழி திறக்கப்பட்டது!!

**ஆனால், தங்கள் பார்வைக்கு யாரெல்லாம் நீதிமான்களாய் இருக்கிறார் களோ, அவர்கள் இரட்சிப்பை கண்டடைவது அரிதிலும் மா அரிது!**

அந்த பரிசேயர்கள், அந்த ஸ்திரீயின் மீது கல்லெறிய ஆயத்தமாய் இருந்தார்களேயொழிய, அச்சமயத்தில் அவர்களுடைய சொந்த இருதயத்தில் குடிகொண்டிருந்த பாவங்களில் எதையுமே அவர்கள் பார்க்கவில்லை!

மனம் திரும்புதல் என்பது "ABOUT TURN-அதாவது முற்றிலுமாய் திரும்புதல்" என்பதே பொருளாகும். நம்முடைய முதுகை நமக்காக வாழும் வாழ்க்கைக்கு திருப்பிவிட்டு, தேவனுக்காக மாத்திரம் வாழத் தீர்மானிப்பதே மனம் திரும்புதல் ஆகும்! இதற்குப் பொருள், நீங்கள் முழுநேர ஊழியராய் மாறவேண்டும் என்பதல்ல! சுமார் 1000 விசுவாசிகளில் ஒரு நபரைத்தான் முழு நேர ஊழியராய் தேவன் அழைக்கிறார். மற்ற அனைத்து தன் பிள்ளைகளும் உலக அலுவல்களில் இருப்பதற்கே தேவன் விரும்புகிறார். இவ்வாறு தங்கள் பிழைப்பிற் கடுத்த சம்பாத்தியத்தைப் பெற்றுக்கொண்டே, அதே சமயம் ஒருவன் தனக்காக ஜீவிக்காமல் தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே ஜீவித்திட நிச்சயமாய் முடியும்!!

இவ்விதமாய், **தனக்காக வாழ்வதிலிருந்து** அடையும் மனம் திரும்புதலை "**விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனம் திரும்புதல்**" என 1தெசலோனிக்கேயர்.1:9 கூறுகிறது. இன்று அனேக 'விசுவாசிகள்' தங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு இன்னமும் திரும்பவே யில்லை! நம் இந்திய தேசத்தில் அநேக புறஜாதி மக்கள் கிறிஸ்துவைத் தங்கள் தெய்வமாக ஏற்றுக் கொள்ள மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்! ஆனால், இவர்கள் ஏற்கனவே ஆராதித்துக் கொண்டிருக்கும் மற்ற தெய்வங்களோடு ஒரு தெய்வமாக மாத்திரமே கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். இவ்வாறு இருப்பது ஒருக்காலும் சாத்தியப் படாது என்பதை நாம் அறிந்துகொள்வோமாக! ஆம், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்பும் ஒருவன் மற்ற எல்லா தேவர்களையும், விக்கிரகங்களையும் கண்டிப்பாய் விட்டுவிடத்தான் வேண்டும்!!

அவ்வாறிருக்க, விசுவாசிகளாகிய **நம்மைப் பார்த்து** பரிசுத்தாவியானவர் கூறும்போதும், "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக" (1யோவான்.5:21) என்றே கூறினார் என்பதைப் பார்த்தீர்களா? ஒரு புறஜாதி மனிதன் தான் ஏற்கெனவே வணங்கும் தெய்வங்களோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புவதற்கும்...... தன்னை விசுவாசி என அழைத்துக் கொள்பவன் தொடர்ந்து பணத்தை (இதுதான் இவனுக்கு இப்போது விக்கிரக தெய்வம்) நாடிச் சென்று கொண்டு கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ள விரும்புவதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை! இது எப்படியெனில், ஏற்கெனவே திருமணம் செய்து கொண்ட பெண் ஒருத்தி, இப்போது இரண்டாவதாக ஒரு புருஷனைத் திருமணம் செய்ய விரும்புவதற்கே ஒப்பாகும்! இதுபோன்ற திருமணத்தை 'இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொள்வார்' என விசுவாசிகள் எண்ணி தங்களையே வஞ்சித்துக் கொள்வது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தையே உண்டாக்குகிறது! நம்மில் எத்தனை பேர் ஏற்கெனவே வேறொரு மனிதனை திருமணம் செய்த ஒருவளை மனைவியாய் ஏற்றுக்கொள்ள விரும்புவோம்? இருப்பினும் நீங்களோ, இன்னும் உலகத்தின் மீது கொண்ட சிநேகத்தையும், அதன் கனத்தையும், அதன் இன்பத்தையும், அதன் செல்வத்தையும் வெறுத்துத் தள்ளாமலே, கிறிஸ்து உங்களைத் திருமணம் செய்துகொள்வார் என எதிர்பார்ப்பது நியாயம்தானா?

**நாம் காணக்கூடிய மரம், கல் போன்ற விக்கிரகங்களைவிட, நாம் காணக் கூடாத "பணம், புகழ்ச்சி" போன்ற விக்கிரகங்களே அதிக வஞ்சனையுள்ளது!**

ஏனென்றால், ஒருவன் வெளித்தோற்றமான விக்கிரகங்களை வணங்குவதை விக்கிரக ஆராதனை எனத் தெளிவாய் கண்டுகொள்ள முடியும்! அதாவது, ஒரு மனிதன் ஒரு அறைக்குச் சென்று புறஜாதி விக்கிரக சிலையை வணங்கிவிட்டு, அடுத்த அறைக்குச் சென்று இயேசு கிறிஸ்துவிடம் ஜெபம் பண்ணினால் அவனை கிறிஸ்தவன் என நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்! ஆனால் வாரம் முழுவதும் பணம், புகழ்ச்சி, உலக அந்தஸ்து போன்ற விக்கிரகங்களை ஆராதித்துவிட்டு ஒருவன் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ சபைக்கு வந்து இயேசு கிறிஸ்துவை ஆராதித்தால், 'அதை' இன்றைய கிறிஸ்தவம் ஏற்றுக் கொள்வது கொடுமையல்லவா? இதுபோன்ற ஒரு இழிவான "விசுவாசியைவிட" புத்தரை ஆராதிப்பவன்மேல் நாம் அதிக நம்பிக்கை வைக்க முடியுமென்றே நான் எண்ணுகிறேன். ஏனென்றால் "இந்த விசுவாசி" ஞாயிற்றுக்கிழமை சபையில் வந்து பாடும்போது :

"என் பொன்னும் வெள்ளியும் உமக்கே!

*அதில் ஒரு சல்லியும் எனக்கல்ல.*

*அர்ப்பணித்தேன் முழுமையும் உமக்கே!!"*

*என்றே பாடுகிறான். அதாவது, இவன் தேவனிடம் பொய் சொல்லு கிறான்! இன்று இப்படித்தான் கிறிஸ்தவர்கள் வாரத்தில் வேறு எந்த நாட்களைவிட, ஞாயிற்றுக்கிழமைகளில் தேவனிடத்தில் அதிகமான பொய் சொல்லுகிறார்கள். அன்று இவர்கள் "அர்ப்பணித்தேன் ... எங்கு சென்றாலும் பின்பற்றுவேன்......" என்றெல்லாம் தேவனிடம் பாடல் பாடி, பொய் சொல்லுகிறார்கள்! தேவன் இவையெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் அவரை ஒருவரும் வஞ்சித்திட முடியாது! இதை தேவன் குறிப்பிடும்போது, "அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் (விக்கிரகத்தைப்) பின்பற்றிப் போகிறது" எனக் கூறினார் (எசே.33:31). இவ்வாறு விசுவாசிகள் பாடுகிற பாடலைக் கவனிக்கும்போது, இவர்கள்தான் இந்த பூமியில் மகா பரிசுத்தவான்கள் போல் எண்ணத்தோன்றுகிறது. ஆனால் இவர்களில் பெரும் பாலானோர் மிகப்பெரிய மாய்மாலக்காரர்களாகவே இருக்கிறார்கள்! ஆனால் தேவனையோ ஒருவனும் ஒருக்காலும் ஏமாற்றவே முடியாது!!*

**ஒருவன் தனக்காகவே வாழும் ஓர் வாழ்க்கை, ஒரு மிருகத்தைப் போல் வாழ்வதற்கே ஒப்பாகும்.**

*ஏனெனில், எல்லா மிருகங்களும் தங்களுக்காகவும், தங்கள் குட்டிகளுக்காகவுமே வாழ்கின்றன. இதுபோன்றவர்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு எந்த அளவு அதிக ஆதாயம் கிடைக்கு மென்றே தேடுகிறார்கள். ஒரு காட்டில் வாழும் சிங்கம், "நான் இந்த மானைக் கொன்றால் அது எனக்கு உணவாகுமா? அப்படியானால் அதைக் கொல்லுவேன்" என்றே கூறுகிறது. இவ்வாறாக, எந்த மிருகம் வலிமை கொண்டதோ அந்த மிருகமே பிழைத்து வாழ முடியும்! ஆனால் நாம் மிருகங்கள் அல்லவே? நாயைப் போலவும், பன்றியைப் போலவும் புசித்து; குடித்து; உறங்கி; பிள்ளைகளைப் பெற்றெடுத்து...... பின் மரிப்பதற்கென தேவன் நம்மை சிருஷ்டிக்கவேயில்லை. ஆம், மனுஷன் தன் முழு வாழ்க்கையிலும் தேவனுடைய மகிமைக்காக வாழும்படிக்கே சிருஷ்டிக்கப்பட்டான்!*

*தங்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற சிலரிடமிருந்து நான் கடிதங்கள் பெறுவதுண்டு. அவர்கள் தங்கள் ஓய்வு வருடங்களைத் "தேவனுடைய ஊழியத்திற்கென" அர்ப்பணிக்க விரும்புவதாக எனக்கு கடிதம் எழுதுவார்கள். இது எப்படியெனில், "ஒரு கனவான் உங்கள் வீட்டிற்கு வந்தபோது, அவருக்கு முன்பாக தேனீர் அருந்திக் கொண்டிருக்கும்*

நீங்கள், முடிவில் டீ கப்பிலிருக்கும் மண்டியை அவருக்குத் தருவதற்கே" ஒப்பாகும்! இவ்வாறாகத்தான், இன்று ஜனங்கள் தேவனுக்குச் செய்கிறார்கள்!!

**இந்த உலகத்தில் பணம் சம்பாதிப்பதற்கென்றே தங்கள் முழு ஜீவியத்தையும் செலவழித்துவிட்டு, இப்போதோ தங்கள் வாழ்வில் எஞ்சிய "மண்டியை" தேவனுக்குத்தர விரும்புகிறார்கள்.... இது எத்தனை கொடிய அவமரியாதை!!**

நாம் வாலிபமாய் இருந்த நாட்களிலேயே நம்முடைய ஜீவியத்தைத் தேவனுக்கு அர்ப்பணித்திருக்க வேண்டும். இவ்வாறு முழு ஜீவியத்தையும் அவரிடம் அர்ப்பணித்துவிட்டு, "அவர் என்ன கட்டளையிடுகிறாரோ" அதற்குப் பிரியமாய் வாழ்வதே உத்தமமானதாகும்! நீங்கள் மெய்யாகவே உங்கள் ஜீவியத்தில் **இவ்விதமாய்** உங்களுக்கானதைத் தேடுவதிலிருந்து திரும்பி விட்டீர்களா? ஆண்டவராகிய இயேசு திரும்பவருகையில், எண்ணற்ற விசுவாசிகள் மிகப்பெரும் அதிர்ச்சிக்குள்ளாவார்கள் என்பது திண்ணம்! இவர்கள் பூமியில் சம்பாதித்துக் குவித்த பணம் முழுவதும், சிறுபிள்ளைகள் தாங்களாகவே "10-லட்சம்" "10-கோடி" என பேப்பரில் எழுதி "பிஸினஸ்" விளையாட்டில் சேர்த்த 'பேப்பர் பணத்திற்கு' ஒப்பாகவே அவர்களின் ஆஸ்தி, எந்த மதிப்பும் இல்லாதிருப்பதை அந்த நாளில் கண்டு திகைப்பார்கள்! ஆனால், இப்போது என்ன செய்ய முடியும்? 'வாழ்க்கையின் பந்தயமோ' முடிவடைந்துவிட்டது! தாங்கள் சேர்த்துக் குவித்த பிரயோஜனமற்ற குவியல்களைத் தவிர, இவர்களோ "நித்திய மதிப்புடைய" எதையும் சேர்த்து வைக்கவில்லையே! மேலும், இவர்கள் பூமியில் தேடி நாடியதெல்லாம் "**மனுஷர் புகழ்ச்சிக்காகவே**" இருந்ததால், அவையாவும் நித்தியத்தின் பிரகாசிக்கும் வெளிச்சத்தில், கனப்பொழுதில் "ஆவியாய்" மறைந்து போவதைக் காணும்போது, இவர்களின் ஏமாற்றம் சொல்லி முடியாததாய் இருக்கும்!!

ஆனால், தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தம் ஒன்றையே செய்து, தேவனுடைய மகிமைக்காக மாத்திரம் வாழ்ந்தவர்களோ, அந்நாளில் சொல்லிமுடியா மகிழ்ச்சியில் திளைத்திருப்பார்களே!!

உலகப்பொருட்கள் நம்முடைய "உபயோகத்திற்காக" மாத்திரமே இப்பூமியில் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இதைத்தவிர இவ்வுலகப் பொருட்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை! இவைகளை நாம் உபயோகப்படுத்தும் வரை அதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால் இவைகள் நமக்கு ஒருக்காலும் **எஜமானாய்** மாறுவதற்கு அனுமதிக்கவே கூடாது! ஆகவே பணத்தை உபயோகிப்பது என்பது ஒன்று.... அவைகளால் நாம் ஆளுகை செய்யப்படுவதோ முற்றிலும் மாறான வேறொன்று! **ஆம்,**

**பணம் ஒரு சிறந்த வேலைக்காரன். ஆனால், பயங்கரமான எஜமான்!** உதாரண மாய், ஒரு ஸ்திரீ மிகச்சிறந்த ஒரு கனவானை திருமணம் செய்து கொண்டாள். ஆனால் அவளோ, தன் புருஷனைக் காட்டிலும் தன்னுடைய கார் டிரைவரையே (வேலைக்காரனையே) அதிகமாய் நேசித்து தன்னுடைய அதிகமான நேரத்தையும் அவனோடு செலவழித்தாள். இதுபோன்ற ஒரு ஸ்திரீயை நீங்கள் என்னவென்று எண்ணுவீர்கள்? இதற்கு ஒப்பாகவே, எவ்வளவு அதிகமாய் தன் ஆண்டவருக்கு வலிமை கொண்டவனாய் மாறமுடியும் என சிந்திப்பதற்குப் பதிலாய், தன்னுடைய அத்தியாவசிய தேவைக்கு மிஞ்சி "இன்னும் அதிகமாய் பணம் சம்பாதிக்க வேண்டுமென" எண்ணிக் கொண்டிருக்கிற ஒரு விசுவாசியும் இருக்கிறான்!!

தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது, முழு பூமியையும் அவன் ஆண்டுகொள்ளும்படியே கூறினார்! ஆனால் ஆதாமோ ஒரு அடிமையாய் மாறிவிட்டான் என்பதை நாம் யாவரும் அறிவோம். கிறிஸ்துவோ, நம்மை மீண்டும் "ஆண்டுகொள்ளும் ராஜாக்களாய்" மாற்றும்படிக்கே இப்பூமிக்கு வந்தார். இப்பூமியில் நாம் அனுபவிப்பதற்கென ஏராளமானவைகளை தேவன் நமக்குத் தந்திருக்கிறார். ஆனால் அவைகளில் யாதொன்றும் நம்மை ஆளுகை செய்துவிட்டால், அவைகளுக்கு நாம் அடிமைகளாய் மாறிவிடுவோம்! அப்படியானால், இப்போது நாம் ராஜாக்களா? இல்லவே இல்லை. ஆம், தேவன் நம்மைக் குறித்து கொண்டிருந்த விருப்பத்தை நாமே இப்போது குலைத்து விட்டோம்.

> **ஏதேன் தோட்டத்தில் தேவன் சர்ப்பத்தைப் பார்த்து "நீ மண்ணைத் திண்பாய்" என சர்ப்பத்தின் உணவாக மண்ணைக் கூறினார். காரியம் இவ்வாறாக இருப்பதால், நீங்கள் மதிப்பிடுகிற தங்கம் உண்மையில் என்ன தெரியுமா? அதுவும் தேவன் இந்த பூமியில் சிருஷ்டித்த மண்ணின் ஒரு பகுதிதான்!**

ஒருவேளை அது சற்று கட்டியாகவும், சாதாரண மண்ணைவிட சற்று அரிதாய் கிடைப்பதாயும் இருக்கலாம்..... எப்படியிருந்தாலும் அது மண்தான்! ஆனால் இன்று மனிதன் இந்த பிசாசின் உணவிற்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் துயரமான காட்சியைத் தானே இன்று நாம் காண்கிறோம். இவ்வாறு உலகில் எங்கு பார்த்தாலும் மனிதர்கள் "தங்க-மண்ணிடம்" அடிமைப்பட்டு சுருண்டுகிடப்பதையே நாம் பார்க்கிறோம்!

ஒரு மனிதனை ஏதேனும் கெட்ட பழக்கத்தின் மூலமாய் தனக்கு அடிமையாய் மாற்றமுடியாததைக் காணும் பிசாசானவன், வேறு சில "நடுநிலையானவைகள்" மூலமாய் அவனைத் தனக்கு அடிமைப்படுத்து

கிறான். அவைகள் ஒருவேளை "ஒரு நல்ல" பாதிப்பில்லாத டெலிவிஷன் நிகழ்ச்சியாய் இருக்கக்கூடும்! இவ்வாறு தீமையல்லாதது போல் தோன்றுகிற காரியங்கள் மூலமாய் அவர்களை அடிமைப்படுத்தி, தேவனைத் தேடுவதற்கும், வேதம் வாசிப்பதற்கும், ஐக்கியம் கொள்வதற்கும் அவர்களுக்கு நேரமில்லாதபடி செய்துவிடுகிறான். இவ்வாறு, தாங்கள் விரும்பும் களியாட்டுகள்; தங்கள் சொந்த லாபங்கள் **போன்ற தங்களுக்கானவைகளையே தேடும் விசுவாசிகளை** சாத்தான் மிக எளிதில் வீழ்த்திவிடுகிறான். இவ்வாறாக, ஒரு மனிதனை அவன் தேவனை விட்டு தூரமாய் விலக்கிவைப்பதற்கு சாத்தானிடத்தில் நூற்றுக் கணக்கான "தனக்கானதைத் தேடும்" வழிகள் உள்ளன! எனவேதான் நாம் பாவத்தை, குடிப்பது; சூதாடுவது; விபச்சாரம் செய்வது; கொலை செய்வது போன்று சாதாரணமாய் எடுக்காமல் "**நாம் நமக்காக ஜீவிப்பதையே**" பாவம் என காண்பதற்குக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆம், நமக்குப் பிரியமானதை நாம் செய்வதுதான் பாவம்! அதுவே, "நம்முடைய சுயசித்தம்" என்பதை நாம் அறியவேண்டும்! இந்த வேரிலிருந்துதான் ஏராளமான பாவக்கனிகள் தோன்றுகின்றன. இக் கொடிய நிலையிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காகவே இயேசு நமக்காக மரித்தார்.

இயேசு வரும்போது, அவர் கோடாரியை வேரின்மீதே வீசுவார் என யோவான்ஸ்நானகன் கூறினார். அவ்வாறு இயேசு கோடாரி கொண்டு தகர்க்க விரும்பும் வேர் "நாம் நமக்காக வாழ்ந்து, நம் சுய சித்தத்தை செய்திட விரும்பும்" விருப்பமேயாகும். நாம் எல்லோருமே, அவ்வப்போது மரத்திலிருந்து தோன்றும் 'கெட்ட பழங்களைப்' பிடுங்கி அகற்றுகிறவர்களாகவே இருக்கிறோம். ஆனால் அவ்வாறு செய்வதால் பிரச்சனை தீர்வதேயில்லை. இவ்வாறு **மற்றவர்கள் காணும்படியான "கெட்ட பழங்கள்" பிடுங்கப்பட்டு விட்டதால்,** நம்முடைய ஜீவியம் மிகவும் நேர்த்தியாய் இருப்பதுபோல் காட்சி தரலாம். ஆனால், இன்னமும் "மரம்" மாறவில்லையே! மரம் நல்ல மரமாய் மாறினால் ஒழிய, ஒருக்காலும் கனி நல்லதாய் மாறமுடியாது என்றே இயேசு கூறினார். இவ்வாறு மரத்தை மாற்ற வேண்டுமென்றால், "முந்திய (பழைய) மரத்தின்" வேர்களில் முதலாவது கோடாரி வீசப்பட வேண்டும்!

**இன்று அநேக குடும்பங்கள் "யுத்த களமாய்" இருப்பதற்கு காரணம் என்ன? ஏனென்றால், கணவனும் மனைவியும் அவரவர் தங்களுக்காக வாழ விரும்புவதேயாகும்!**

எனவேதான் இன்று கிறிஸ்தவ உலகில் அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதென்னவெனில்: இன்று தங்களை "மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள்" என அழைத்துக்

கொள்ளும் அநேகர் தங்கள் வாழ்க்கைத் துணையை விவாகரத்து செய்து விட்டு, துணிவுடன் மறுமணம் செய்து கொள்ளுகிறார்கள்! கேவலம் என்னவென்றால், இன்று அநேக பாஸ்டர்களும் பிரசங்கிகளும்கூட தங்கள் மனைவியரை விவாகரத்து செய்துவிட்டு வேறு பெண்களை திருமணம் செய்து கொள்ளுகிறார்கள்!? சில பிரசங்கிகள் தங்கள் மனைவி யரை விவாகரத்து செய்வதில்லை.... ஆனால், இரகசியமாய் விபச்சாரம் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.இவையாவும் இந்த 20-ம் நூற்றாண்டில் "பளிச்சென்று" காணப்படும் அவலட்சணங்கள்! உலகிலுள்ள மற்ற தம்பதியர்கள் எல்லா நூற்றாண்டுகளிலுமே விவாகரத்து செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இவைகளை இன்று கிறிஸ்தவர்கள் செய்கின்றபடியால், "விசுவாசத்தி லிருந்து வழிவிலகும்" **விசுவாச துரோகம்** நம் காலத்தில் தொடங்கி விட்டது என்பதை உணர்த்தும் கடைசி காலமாய் இருக்கிறது.

இவை அனைத்திற்கும் காரணம், "ஒருவன் தனக்காக ஜீவிப்பதை" பாவம் என இன்றைய விசுவாசிகள் காணக்கூடாமல் இருப்பதேயாகும். இந்த விசுவாசிகள் இவைகளை ஏன் காணவில்லை? ஏனென்றால் அவர்கள் சரியான விதத்தில் போதிக்கப்படவில்லை. தவறு அவர்களின் தலைவர்களிடமும், அவர்களின் இரத்தபழி அவர்களை நடத்தியவர்கள் கைகளிலுமே இருக்கிறது...... ஒருநாள் இதுபோன்ற தலைவர்கள் தேவனுக்கு முன்பாக கணக்கொப்புவிக்கத்தான் வேண்டும்!!

"ஜீவனுக்குப் போகிற வழியை வெகுசிலரே கண்டுபிடிப்பார்கள்" என இயேசு கூறினார். ஏன் தெரியுமா? அதனுள் பிரவேசிக்கும் வாசலும் இடுக்கமாய் இருப்பதே காரணமாகும்.

இன்றைய கிறிஸ்தவ உலகம் பார்க்கிறபடி நாம் பார்த்தால், அன்று இயேசுவிடம் வந்த பணக்கார வாலிப அதிபதியிடம் சபையின் அங்கத்தினராய் மாறுவதற்குரிய 4-அருமையான தகுதிகள் காணப் பட்டன. 1) அவன் வாலிபன் 2) ஐசுவரியவான் 3) மதிக்கத்தக்க அதிபதி 4) கற்பு ஒழுக்கத்தில் நேர்மையானவன்! இன்று உள்ள எல்லா சபை களுமே, இதுபோன்ற ஒருவனை தங்கள் அங்கத்தினராய் ஏற்றுக் கொள்வதற்கு ஆசையாய் இருப்பார்கள். இன்று அநேக பெந்தெ கொஸ்தே சபைகளில் இதுபோன்ற ஒருவனை "போர்டு மெம்பராயும்" ஆக்கியிருப்பார்கள். ஆனால் இயேசுவோ, அவனை சாதாரண சீஷனாய் இருப்பதற்குக்கூட தகுதியுள்ளவனாய் கருதவில்லை!! இது மெய்யாகவே, ஆச்சரியம் இல்லையா?

அவனுடைய செல்வத்தினிமித்தமும் அல்லது அவனுடைய உலக அந்தஸ்தினிமித்தமும் இயேசு சிறிதும் கவரப்படவேயில்லை! ஒரு

மனிதன் **இன்னமும் பணத்தை நேசித்துக் கொண்டிருந்தால் அவன் இயேசுவின் சீஷனாய் இருப்பதற்கு தகுதியற்றவன்!!** அவன் இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிப்பதற்கு முன்பாக, தான் **பணத்தின்மீது கொண்ட நேசத்தை** அவன் வெறுத்துவிட வேண்டும். அந்த மனிதனோ மிகுந்த மனவருத்தத்துடன் திரும்பிச்சென்றான். அவன் போகும்படி இயேசுவும் விட்டுவிட்டார். இயேசு அவன் பின்பாக ஓடிச்சென்று, "பரவாயில்லை, நீ முதலாவது 10% பணத்தை வெறு...... பின்பு படிப் படியாய் பார்த்துக்கொள்ளலாம்!" என 'தாஸா' பண்ணவேயில்லை.

**ஆம், சீஷத்துவத்திற்கு எந்தவித பேரமும் இல்லவே இல்லை. ஒன்று, எல்லாம் வெறுக்கவேண்டும் அல்லது எதையும் வெறுத்திட அவனால் முடியாது..... அவ்வளவுதான்!**

பணத்தையும், தேவனையும் ஒருவன் ஒரேசமயத்தில் நேசித்திட ஒருக்காலும் முடியாது. "இரண்டில் ஒன்று" என்பதையே அவன் முடிவு செய்ய வேண்டும்! அவன் தன் விக்கிரகமாகிய பணத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவோடு மாத்திரமே இணைந்திருக்க வேண்டும்!!

நீங்கள் உங்களுக்காகவே வாழ்ந்திட விரும்பினால், நீங்கள் அவ்விதமே தாராளமாய் வாழுங்கள். அந்தப் பணக்கார வாலிபன் நிகழ்ச்சியைப் போலவே, ஆண்டவரும் உங்களை தனியே விட்டு விடுவார். உங்களுக்கு சௌகரியமான ஒரு சபையை நீங்கள் தேர்ந் தெடுத்து, அங்குள்ளவர்கள் உங்களைப் பார்த்து "நீங்கள் மெய்யாகவே பரலோகவாசிகள்" என ஆசி கூறினாலும், தேவன் அங்கு வந்து உங்களைத் தொந்தரவு செய்யவேமாட்டார். உங்கள் வாழ்நாளெல்லாம் உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வதற்கு அவர் அனுமதித்து விடுவார். கடைசியாக, 'உங்கள் உண்மை நிலையை' நரகத்தில் கண் விழிக்கும் நேரத்தில்தான் காண்பீர்கள்!

**இன்று ஜனங்கள் வஞ்சிக்கப்படும்படி தேவன் அனுமதிப்பதற்குக் காரணம், அவர்கள் தங்களைப்பற்றிய சத்தியத்தை (உண்மையை) அறிந்து கொள்வதற்குரிய பிரியம் இல்லாததேயாகும். என்றாவது ஒருநாள், ஒரு தீர்க்கதரிசி அவர்களைப் பற்றிய உண்மை நிலையைக் கூறிவிட்டால், அந்த தீர்க்கதரிசியிடம் இப்படிப்பட்டவர்கள் சொல்லொண்ணா கோபம் கொண்டு விடுகிறார்கள்!!**

யோயாக்கீம் ராஜாவின் நாட்களில் எரேமியா தீர்க்கதரிசனம் கூறினான். இவ்வாறு எரேமியா ஒரு தோல்சுருளில் எழுதிய தீர்க்கதரிசன வார்த்தைகளை ஜனங்கள் படித்தபோது, மிகவும் பயந்தார்கள்! ஏனென்றால் பழைய ஏற்பாட்டின் நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளில் எரேமியா ஓர் கடினமான தீர்க்கதரிசியாய் இருந்தான். அவன் ஒரு

சமயத்தில் கூட "மிருதுவான செய்தியைப்" பிரசங்கித்ததேயில்லை! அவன் வாய்திறந்து உரைத்ததெல்லாம் நியாயத்தீர்ப்பு.... நியாயத்தீர்ப்பு ... இன்னும் அதிகமான நியாயத்தீர்ப்புமாகவே இருந்தது (எரே 20:8). எரேமியாவின் தோல்சுருளை வாசித்த ராஜா, கடுங்கோபங்கொண்டு அதை வெட்டி, கசக்கி, நெருப்பில் தூக்கியெறிந்தான் (எரேமியா 36). இருப்பினும், மீண்டுமாய் தோல்சுருளை எழுதும்படி எரேமியாவிற்கு தேவன் கூறினார். இதினிமித்தமே எரேமியாவின் புத்தகத்தை இன்று நாம் பெற்றிருக்கிறோம்! முதலாவது தடவை இவைகள் எழுதப்பட்ட போது, 'தன்னைக்குறித்த உண்மைநிலையைக் கேட்க விரும்பாத' ஒரு கோபமான ராஜாவினால் அவைகள் கிழித்து எறியப்பட்டன! இன்றும், இதுபோன்ற ஜனங்கள் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கிறார்கள்.

இருப்பினும், ஒவ்வொரு காலத்திலும் சத்தியத்தில் அன்புகொண்ட ஒரு சிறுகூட்ட ஜனங்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**இவ்வாறு சத்தியத்திற்கு செவிகொடுக்கக்கூடிய காதுகளை நாம் பெற்றிருப்பது தேவனுடைய மிகுந்த கிருபை என்றே சொல்ல வேண்டும்.**

நாம் பிறப்பதற்கு முன்பே தேவன் நம்மில் அன்புகூர்ந்து, வாழ்வில் மிகச்சிறந்தவைகளையே நாம் அடையவேண்டுமென்று தேவன் விரும்பியிருக்கிறார். நம்முடைய ஜீவியத்தை நாம் வீணாக்கி, முடிவில் நித்தியத்தில் நம்முடைய "வெறுமையைக்" கண்டு துயரமடைய தேவன் விரும்புவதேயில்லை. மாறாக, நாம் இப்போதே ஞானமுள்ளவர்களாய் இருந்து நித்தியமானவைகளுக்காக வாழும்படிக்கே தேவன் விரும்புகிறார்.

பணமோ, வீடுகளோ, ஆடம்பரங்களோ போன்ற மனுஷனால் உண்டான எல்லா படைப்புகளும் ஒருநாளில் அசைக்கப்பட்டு அகன்று போய்விடும். அந்நாளில் "படைக்கப்படாதவைகள்" மாத்திரமே நிலைத்து நிற்கும். ஆகவே ஆதியிலிருந்தே நித்தியமாய் நிலைத்திருப்ப வைகளுக்காக மாத்திரமே நாம் நம்முடைய நேரத்தையும், சக்தி களையும் செலவழிக்க ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இதற்குப் பொருள், நீங்கள் யாவரும் முழுநேர ஊழியர்களாய் மாற வேண்டும் என்பதல்ல! ஆனால் அதேசமயம், நீங்கள் எதைச் செய்தாலும் **இனியும் நீங்கள் உங்களுக்காக வாழாமல்** தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே வாழவேண்டும் என்ற சத்தியத்தையே நீங்கள் ஒருபோதும் மறக்காதிருக்க வேண்டும்! நீங்கள் நிச்சயமாய், உங்களால் முடிந்த அளவு உயர்ந்த பணியில் ஈடுபட்டு நல்ல வருமானத்தைத் தாராளமாய் பெறலாம்! அவைகள் மூலமாய் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு ஆண்டவருடைய ஊழியத்தையும் நீங்கள் தாங்கிட முடியும்.

ஆனால் உங்கள் ஜீவியத்தின் முடிவான இலக்கோ "தேவனுடைய மகிமையாகவே" இருக்கவேண்டும். ஆண்டவரைப் பிரியப்படுத்துவது ஒன்றே உங்கள் வாழ்க்கையின் பிரதான நோக்கமாயிருக்க வேண்டும்.

இதினிமித்தம், இன்றிலிருந்து நாம் "பிக்னிக்" செல்லவோ, உல்லாசமாய் நேரம் செலவழிக்கவோ முடியாதென்றும் நான் கூற வில்லை. அப்படிச் செல்வதில் எந்த தவறுமில்லை! மானிடர்களாகிய நமக்கு விளையாடுவதோ அல்லது இன்னிசை கேட்டு மகிழ்வதோ போன்றவைகள் தேவையாகத்தான் இருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் 'மாசில்லாத' ஆரோக்கியமான களியாட்டுகளாய் இருந்தால் அவைகள் முற்றிலும் சரியானதேயாகும்.

**ஆனால் இவைகளில் யாதொன்றாகிலும் நம்மை ஆளுகை செய்து நம் ஜீவியத்தின் ஆர்வத்தை ஆட்கொண்டுவிட்டால்...... இப்போது நாம் சிகப்பு எல்கையைத்தாண்டி அபாய நிலத்திற்குள் சென்றுவிட்டோம்!**

இவ்வாறு, நம்முடைய வியாபாரமோ அல்லது ஒரு ஸ்தலமோ அல்லது 'தீமையற்ற' சில களியாட்டு நிகழ்ச்சிகளோ ஒருவனுடைய ஜீவியத்தில் நீங்காத இடம்பெற்று, அதுவே அவனுடைய வாழ்வின் பிரதானமாய் மாறிவிட முடியும். ஒருவனுக்கு இவ்வாறு சம்பவித்து விட்டால், அவனை ஈர்த்த அக்குறிப்பிட்ட 'ஏதோ ஒன்று' அவனுக்கு எஜமானாய் மாறிவிட்டது என்பது திண்ணம்!

**ஆண்டவர் தன் சபையை நம்மூலமாய் கட்டவேண்டுமென்றால், நாம் நமக்காக ஜீவிப்பதிலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும்.** ஏனெனில், சபையின் மாதிரியை தேவன் நித்தியகாலங்களுக்கு முன்பாகவே கவனமாய் திட்டம்தீட்டி வைத்துள்ளார். இதுபோன்ற மகிமையான சபையை, தனக்கானதைத் தேடாத ஜனங்கள் மூலமாகவும், அவருக்காக பலிபீடத்தில் சகலத்தையும் அர்ப்பணம் செய்ய ஆயத்தம் கொண்ட ஜனங்களைக் கொண்டுமே அவர் கட்டமுடியும்!

பழைய ஏற்பாட்டு ஆலயம், ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை தேவனுக்கு பலிசெலுத்திய மோரியா மலையின்மீதே கட்டப்பட்டது (2நாளாகமம்.3:1). அச்சமயம் ஆபிரகாமிடம், அவனுடைய இருதயத் திற்குப் பிரியமான ஒரே மகன் ஈசாக்கே மீதமிருந்தான்! இந்த ஈசாக்கு ஆபிரகாமின் வாழ்வில் விக்கிரகமாய் மாறியிருப்பானோ என ஆபிரகாமின் அர்ப்பணத்தை தேவன் அந்நாளில் சோதித்தார். ஆபிரகாம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்றால், "அவன் தன் எல்லா விக்கிரகாராதனையிலிருந்தும் திரும்பவேண்டும்" என தேவன் அவனிடம் கூறியதைப் போலவே நாம் காண்கிறோம். எனவேதான் **தனக்கு விக்கிரகமாய் மாறிவிட்ட மகனை** ஆபிரகாம்

*பலிபீடத்தில் கிடத்தி தேவனுக்கு சமர்ப்பித்தான். தேவன் ஈசாக்கை எடுத்துக் கொள்ளவில்லை...... ஆபிரகாம், ஈசாக்கிடம் கொண்டிருந்த அபூர்வமான பிடிப்பிலிருந்து மாத்திரமே ஆபிரகாமை தேவன் பிரித்தெடுத்தார், அவ்வளவுதான்! இச்சம்பவம் நிகழவில்லையென்றால், அவன் தேவனோடு இசைந்து நடந்திடும் வாழ்வும் வெகுவாய் பாதிக்கப்பட்டிருக்கும்!!*

*இதே நிகழ்ச்சியைத்தான் தேவன் நம்மிடமும் செயல்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆம், நமக்கு மிகவும் அருமையாகத் தோன்றும் யாவையும் தேவனுக்கே சமர்ப்பணம் செய்திட வேண்டும்.*

*அந்தப்பணக்கார வாலிபன் நிகழ்ச்சியில் "அவனுடைய பணமே"அவனுக்கு மிகவும் அருமையானதாய் இருந்தது. எவ்வாறு ஈசாக்கைத் தரும்படி ஆபிரகாமிடம் தேவன் கேட்டாரோ, அதைப் போலவே அந்தப் பணக்கார வாலிபன் தன்னுடைய 'பணத்தை விட வேண்டும்' என தேவன் கேட்டார். அந்த பணக்கார வாலிபன் மாத்திரம், "நீர் சொல்லுகிறபடியே செய்கிறேன் ஆண்டவரே, இதோ! என்னுடைய யாவையும் உமக்கு முன் அர்ப்பணித்துவிட்டேன்!!" எனக் கூறியிருந்தால், ஆண்டவர் என்ன செய்திருப்பார் என்பதை நாம் அனைவருமே யூகம் செய்திட முடியும். ஆம் எவ்வாறு ஈசாக்கை மீண்டுமாய் வைத்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்குத் தேவன் கூறினாரோ .... அதேபோலவே, தன்னுடைய பணத்தை அவனோடு வைத்துக் கொள்ளலாம் என தேவன் கூறியிருக்கக்கூடும்!! இருப்பினும், 'முதலாவது அவன் அவைகளை வெறுத்திட' வேண்டுமே!?*

*ஆகவே நீங்கள் தெய்வ கிருபையை மாத்திரம் நாடுகிறவர்களாய் இருந்தால், கீழ்காணும் விதமாய் நீங்கள் யாவரும் என்னோடு சேர்ந்து ஜெபித்திட முடியுமா?*

**"ஓ என் ஆண்டவரே! என் ஜீவியத்தின் எல்லையெங்கும் எந்த 'ஈசாக்கு' என்னிடமிருந்தாலும் அவைகள் யாவையும் இதோ இப்போது உம் பலிபீடத்தில் சமர்ப்பிக்கிறேன். இனியும் என் வாழ்வில் எந்த விக்கிரகங்களும் உமக்கும் எனக்கும் நடுவில் தோன்றுவதற்கு நான் விரும்பவில்லை. இனி எனக்காக நான் வாழ விரும்பவில்லை! மெய்யாகவே நான் உமக்காக மாத்திரமே வாழ விரும்புகிறேன். ஆம், நான் தேவனுடைய மகிமைக்கென்றே வாழ விரும்புகிறேன். இன்றிலிருந்து, இனியும் நான் என் ஜீவியத்தை வீணாக்க விரும்பவில்லை!" ஆமென்.**

*இவ்வுலகில் நாம் பெற்றிருக்கும் மிக உன்னதமான செய்தி யாதெனில்: இனியும் நம் சொந்த இலட்சியங்களுக்கும், ஆசைகளுக்கும் அடிமையாய் நாம் வாழ்ந்திடத் தேவையேயில்லை என்பதுதான்!*

*இவ்வாறு, இவ்வுலகில் என் வாழ்வு வீணாகிவிடாமல் தேவனுடைய மகிமைக்காய் மாத்திரமே வாழ்ந்து என் வாழ்க்கை பயனுள்ளதாய் மாறக்கடவது! நாம் நமக்காக ஜீவிக்கும் வாழ்க்கை, அடிமைத்தனத்தின்* **விலங்குபூட்டிய வாழ்க்கையாகும்.** *இதற்குமாறாக, தேவனுடைய மகிமைக்காக வாழும் வாழ்க்கையோ உயர ஆகாயமண்டலத்தில்* **சுதந்திரமாய் சிறகடிக்கும் கழுகுக்கு** *ஒப்பானதேயாகும். ஆம், நம் யாவரையும் அண்டிவரும் நற்செய்தி யாதெனில், உங்களின் எல்லா அடிமைக் கட்டுகளின் விலங்கையும் "இன்றே" இயேசு முறித்திட முடியும்!!*

*என் வாலிப வயதிலேயும், நான் இரட்சிக்கப்பட்ட பிறகும் கூட பிரயோஜனமற்றவைகளைப் பின்தொடர்ந்து அநேக நாட்களை நான் வீணாக்கியிருக்கிறேன். ஆனால், கடந்துபோன நாட்களைக் குறித்து நான் இப்போது ஒன்றும் செய்திட முடியாதே! ஆகவேதான் இன்று என் வாழ்வில் மேலானவைகளைப் பற்றிக்கொள்ளும்படி முன்னேறிச் செல்கிறேன்!!*

*நம் யாவருக்குமே இன்னமும் அதிக காலம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறபடியால், நாம் யாவரும் தீர்க்கமான முடிவோடு கீழ்காணும் விதமாய் மனந்திரும்பி ஆண்டவரிடம் ஜெபித்திடக் கடவோம்:*

**"என் ஆண்டவரே, என் ஜீவியத்தில் கடந்துபோன வருடங்களைக் குறித்து நான் எதுவும் செய்திட இயலாது. ஆனால், என் எஞ்சிய வாழ்க்கையை உமக்காக மாத்திரமே வாழ விரும்புகிறேன்! ஆண்டவரே, என் வாழ்க்கையை நீர் ஆராய்ந்து பார்த்து நான் ஆராதித்துக் கொண்டிருக்கும் ஏதேனும் விக்கிரகம் எங்காகிலும் உண்டா என்பதைக் கண்டறியும். ஏனென்றால், என் வாழ்வில் காணும் ஒவ்வொரு விக்கிரகத்தையும் தள்ளிவிட்டு உம் ஒருவரையே நான் ஆராதித்து, உமக்கு மாத்திரமே ஊழியம் செய்திட விரும்புகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, குறிப்பாக, என்னை அறியாமலே நான் கொண்டிருந்த விக்கிரகாராதனையாகிய எனக்காகவே நான் வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து நான் மனந்திரும்புகிறேன், ஆமென்!"**

*ஆண்டவர் நம் யாவருக்கும் உதவி செய்வாராக!*

*கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ, அவன் கேட்கக்கடவன்!!*

# 7

## பொறாமை அற்ற ஆபேலின் நல்ல இருதயம் வேண்டும்!

ஒரே வீட்டில், ஒரே வாழ்க்கை சூழ்நிலைகளில், மெய் தேவனைக் குறித்த ஒரே போதனையில், வளர்ந்து வந்த இரு பிள்ளைகள்! அப்படியிருந்தும், இவர்கள் இருவரின் வாழ்க்கையின் முடிவும் ஒருவருக்கொருவர் முற்றிலும் வித்தியாசமான முடிவை அடைந்தது!! இயேசுவும் தன் மணவாட்டிக்காய் திரும்ப வரும்போது, ஒரே படுக்கையில் இருவர் இருந்தாலும் ஒருவர் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒருவர் கைவிடப்பட முடியும் என்றே எச்சரித்தார். ஓர் சபையில் இருவர் ஐக்கியப்பட்டிருந்தாலும், ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்டும் ஒருவர் தள்ளப்படவும் முடியும்! ஆபேலுக்கும், காயீனுக்கும் இதுவே சம்பவித்தது!!

ஆபேலைத் தேவன் அங்கீகரிக்கும்படி காரியம் நன்றாய் நடந் தேறியதால், ஆபேலின் மேல் காயீன் **பொறாமையும் கோபமும்** கொண்டான்!

**நீங்கள் மிகவும் நெருங்கிப் பழகும் ஒருவருக்கு சகல காரியமும் நன்றாய் நடந்தேறுகிறது என்பதைக் காணும்போது, உங்களின் மனோபாவம் எப்படியிருக்கிறது?**

'அந்த' சகோதரன் எப்போதும் பாவத்தின்மேல் வெற்றியைக் குறித்தே பிரசங்கிப்பதையும் காண்கிறீர்கள்! மெய்யாகவே அச்சகோதரனின் வாழ்வில் பதட்டமோ கோபமோ, பொறுமை யின்மையோ ஓர் சிறு தடயம்கூட இல்லாதிருப்பதையும் காண்கிறீர்கள்! அதற்குப் பதிலாக, அவர் வாழ்வில் தொடர்ச்சியான வெற்றியும், சந்தோஷமும் பெருகிக்கொண்டே போவதையும் காண்கிறீர்கள்!! ஆனால் அந்தோ, இதற்கு நேர் எதிரிடையாக உங்கள் வாழ்க்கையோ துயர்நிறைந்ததாயும், பதட்டத்தின் புகையால் சூழப்பட்டதாயும், இவ்வுலகில் வெற்றி வாழ்க்கை வாழமுடியும் என்பதை நீங்கள் விசுவாசியாததினிமித்தம் தோல்வியின் படுகுழிக்குள் தடுமாறிக் கொண்டிருப்பதையும் காண்கிறீர்கள்!? 'இப்போது' உங்களுக்குள் பொறாமையின் வேர் மெதுவாய் தழுவிப் படர்கிறதல்லவா?

*அச்சகோதரன் வீழ்ச்சியடைந்தால் மகிழும் பொருட்டு,* **எங்காவது ஓர் இடத்திலாவது அவர் விழ மாட்டாரா என்ற ஆர்வம்** *உங்களைப் பற்றியிருக்கிற தல்லவா? எப்படியாவது அச்சகோதரனை சிலருடைய கண்களுக்கு முன்னால் கீழே இழுத்து தள்ள வேண்டும் என்ற ஆசையால் நிறைந் திருக்கிறீர்களல்லவா? நன்றாய் அறிந்து கொள்ளுங்கள்..... இதுவே காயீனை துரத்திப் பிடித்துக்கொண்டிருந்த துன்மார்க்கத்தின் ஆவி!!*

*இந்த அருவருப்பான ஆவியை உடையவராய் இருந்து கொண்டே, உங்களை நீங்கள் "நான் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருக்கிறேன்" எனவும் சொல்லிக்கொள்கிறீர்கள்! சரியான பித்தலாட்டம்!! நன்றாய் வஞ்சிக்கப்பட்டுவிட்டீர்கள்!! அன்பான நண்பனே கேளுங்கள்! உங்களின் இந்த மனோபாவம் திட்டவட்டமாய் காயீனின் ஆவியே அன்றி அது கிறிஸ்துவின் ஆவி அல்லவே அல்ல! நீங்கள் சேற்றில் சிக்கி அமிழ்வதை விட, எவ்வளவு சீக்கிரம் இந்த "அருவருப்பின் நாற்றத்தை" உங்களால் உணர முடிகிறதோ அதுவே உங்களுக்கு நல்லது.*

*காயீன் வாழ்வில் சந்தோஷமேயில்லை!* அவன் தேவனிடமும், தன் சகோதரன் ஆபேலிடமும் கோபமாயிருந்தான். இதைவிட, தன்னோடு இருந்தவன் தன்னைக் காட்டிலும் "இளையவன்" என்ற காரணமானது, எரிகிற அவன் கோபத்திற்கு எண்ணை ஊற்றுவதாக இருந்தது. ஓர் மூத்த சகோதரனிடம் காரியம் சரிப்பட்டு நடந்திருந்தால் அதைத் தாங்கி கொண்டிருக்கலாம். ஆனால் தன்னைக் காட்டிலும் இளையவனிடம் காரியம் மிக அருமையாய் நடந்தேறுவதைக் காண அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!?

**நில்லுங்கள்! காயீன்மேல் கல் எறிவதற்கு முன்பாக, உண்மையாய் நாம் நம்மையே நியாயம்தீர்த்து ஆராய்ந்து பார்ப்பதே மிகவும் அவசியமாயிருக்கிறது!**

புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில், என்னைக்காட்டிலும் முன்னேறிச் செல்லும் இளைய சகோதரர்களைக் கண்டு நான் உண்மையாய் மகிழ்ந்திருக்க முடிகிறதா? அவர்களுக்கு எப்போதுமே நன்மை செய்து, அவர்கள் எப்போதுமே எனக்கு முன் செல்வதையே காண வைராக்கிய வாஞ்சைகொண்டிருக்கிறேனா? அப்படியானால் மாத்திரமே நான் கிறிஸ்துவின் சிந்தை உடையவனாயிருக்கிறேன்.

**அவர் சிந்தை என்ன? தன் சீஷர்கள், குருவாகிய தான் செய்த கிரியைகளை விட பெரிய கிரியைகளைச் செய்வார்கள் என்றே மகிழக்கூடிய சிந்தை!! (யோவான்.14:12).**

*ஆனால், பொறாமையும், சுய-நலநோக்கமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச்செய்கைகளுமுண்டு (யாக்கோபு.3:16). இது சரியே!* **காயீனின் ஆவி** *எங்கிருக்கிறதோ....... அங்கு துர்ச்செய்கை என்று நாம் எண்ணும் அத்தனையும் உடனடியாகவோ அல்லது சற்றுத்*

தாமதித்தோ ஆட்கொண்டுவிடும்!!

காயீனைக் குறித்து காரியம் இப்படியாயிருந்தும், நம்மை மெய்சிலிர்க்கச் செய்யும் ஆச்சரியம் என்னவெனில், இக்கேடுகெட்ட மனிதனையும் தேவன் "எச்சரிக்கை" செய்யாமல் அப்படியே ஒதுக்கித் தள்ளிவிடவேயில்லை! கெட்ட குமாரனின் தகப்பன், வெளியே கோபத்தோடு நின்று கொண்டிருந்த தன் மூத்த குமாரனை உள்ளே வரும்படி அழைப்பதற்காக வெளியேவந்ததுபோலவே, தேவனும் காயீனிடம் நெருங்கி வந்தார். ஆம், இயேசு யூதாஸ்காரியோத்தைக் கடைசிமட்டும் நேசித்தது போலவே, தேவனும் காயீனை நேசித்து அவன் அழிந்து போவதை விரும்பவேயில்லை.

தேவன் காயீனிடம் வந்து, "**உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று?**" "நீ நன்மை செய்தால், நீயும் அங்கீகரிக்கப்படுவாயல்லவா?" என்றே நயந்து கேட்டார் (ஆதி.4:7). தேவனுடைய இந்த புத்திமதிக்கு செவி கொடுத்து நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தோடு காயீன் வந்திருந்தால், அவனையும் தேவன் அங்கீகரித்திருப்பார்! தேவனிடம் ஒரு துளிகூட பட்சபாதமே இல்லை!!

மனிதர்கள் மத்தியில் தேவன் ஓர வஞ்சகம் காட்டவே மாட்டார். அவர் பிரமாணமோ என்றென்றும் நிலைத்து நிற்கிறது! தன்னைத் தாழ்த்துகிறவன் "எவனோ" அவன் உயர்த்தப்படுவான்! தன்னை உயர்த்துகிறவன் "எவனோ" அவன் தாழ்த்தப்படுவான்! தன் ஒரே புதல்வனான இயேசுவிடம்கூட தேவன் எந்த "ஸ்பெஷலும்" காட்டவில்லை. இயேசு தம்மைத்தாமே தாழ்த்தினபடியால் மாத்திரமே, தேவன் அவரைத் தன் வலதுபாரிசம் மட்டும் மேலாக உயர்த்தினார் என பிலிப்பியர் 2:8,9-ல் நாம் தெளிவாய் வாசிக்கிறோம். அவர் தேவ குமாரன் என்பதற்காக அல்லவே அல்ல...... ஓர் மனுஷனாக அவர் தன்னைத் தாழ்த்தியபடியால் அப்படியாயிற்று!! நாம் மனுவர்க்கமாய் எவ்வாறு தேவனுடைய இயற்கை பிரமாணங்களுக்கு கீழ்ப்பட்டிருக்கிறோமோ, அதேபோல இயேசுவும் **ஓர் மனிதனாக** அதே பிரமாணங்களுக்குக் கீழ்ப்பட்டு வாழ்ந்தார். எந்த மனிதனையும் தேவன் நடத்துவது போலவே தன் சொந்த குமாரனையும் நடத்தினார். இயேசுவுக்கு தேவன் என்ன செய்தாரோ அதையே அவர் நமக்கும் செய்வார்! இயேசு வாழ்ந்தது போலவே நம்மை நாமே தாழ்த்தினால், நாமும் நிச்சயமாய் அவரைப்போலவே உயர்த்தப்படுவோம்!! அதில் சந்தேகமேயில்லை.

நாம் நன்மை செய்தால் நம் முகமும் உயர்த்தப்பட்டு, மகிழ்ச்சியினால் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும்! "ஆனால்" இப்போது தேவன் காயீனை எச்சரிக்கிறார்...... "**நீ நன்மை செய்யாதிருந்தால்,** பாவம் உன் வாசற்படியில் முண்டிக்கொண்டு படுத்திருக்கும்". அவனை

பீறியெறியக் காத்திருக்கும் சிங்கத்தைப்போல, பாவம் அவன் அருகில் மிக சமீபமாயிருந்தது. காயீனோ இதை அறியவில்லை, ஆனால் தேவன் உண்மையுள்ளவராயிருந்து அவனை எச்சரித்தார்! காயீனோ இப்போது 'பொறாமையினாலும்' 'கோபத்தினாலும்' நிறைந்து விட்டான். ஆனால், இதைவிட மோசமான "கொலை வெறியின் ஆவி" காயீனைப் பற்றிக் கொள்ளும்படி வாசற்படியில் தயாராய் காத்திருந்தது. இருப்பினும், காயீனோ பாவத்தை ஜெயித்து ஆள வேண்டும் என்றே தேவன் வாஞ்சித்துக் கேட்டுக் கொண்டார். இன்றும், மனிதன் பாவத்தை ஜெயித்து ஆளவேண்டும் என்பதே தேவனின் நிரந்தரமான ஆசை!

ஆனால், தேவனின் இந்த எச்சரிப்பானது மற்ற வசனங்களில் கூறப்பட்ட அனேக எச்சரிக்கைகள் போலவே 'இதுவும்' செவிமடுக்க மறுத்துத் தள்ளப்பட்டது. அந்தோ! காயீன் தேவனின் அழைப்பிற்கு இணங்கவில்லை. **தேவனுடைய பலத்த கரத்திற்குள் அடங்கி** தன்னைத் தாழ்த்துவதற்குப் பதிலாக தன்னைத்தானே உயர்த்தி தன் மாம்சத்தின் இச்சைகள் கூவிய அழைப்பிற்கு இணங்கிவிட்டான்!!

நம் மாம்சத்தில் குடிகொண்டுள்ள பாவத்தைக் காணும்படி தேவன் எத்தனை அழகாய் நமக்கு சூழ்நிலைகளை ஒழுங்கு செய்கிறார் என்பதை உங்களால் காணமுடிகிறதா? ஒருவேளை காயீன் தன் பெற்றோருக்கு **ஒரே புதல்வனாய்** இருந்திருந்தால், தன் மாம்சத்தில் குடிகொண்டிருந்த பொறாமையை ஒருபோதும் கண்டிருக்கவே மாட்டான்! ஆனால் **ஆபேலின் பிரவேசமும்,** தேவன் ஆபேலை **அங்கீகரித்த சம்பவமும்,** காயீன் மாம்சத்தில் குடிகொண்டிருந்த தீமையை வெளியே கொண்டுவந்து, அதை காயீன் தெளிவாய் காணும்படி செய்து விட்டதே!! இப்போது காயீன், ஆபேலின் மேல் கோபம் கொள்ளுவதற்குப் பதிலாகத் தன்னைத்தானே நியாயம் தீர்த்திருக்க முடியும். அப்படியிருந்திருந்தால் அவன் இரட்சிக்கப்பட்டிருப்பான்! இதுவே நமக்கும் பொருந்தும். நம் மாம்சத்தில் குடிகொண்டிருப்பது இன்னது என தெளிவாய் காணும் பொருட்டு தேவன் நம்மை மற்ற ஜனங்களோடு உறவாட ஒழுங்கு செய்யும் சூழ்நிலைகளுக்காய், நாம் ஆண்டவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!! இந்த சரியான சந்தர்ப்பத்தில் நாம், ஆண்டவரிடமிருந்து வரும் எச்சரிக்கைகளை கவனமாய் கேட்டு, தாழ்த்தி, நம்மை நாமே நியாயம் தீர்த்துக் கொண்டால், காரியம் நமக்கு நன்றாய் நிறைவுபெறும். இல்லாவிட்டால், நம்மைப் பீறிப்போடும்படி, நம் வாசலிலேயும் பாவம் முண்டிக்கொண்டு படுத்திருக்கும்!

பார்த்தீர்களா, நம் எல்லா மாம்ஷீகத்தையும், மேல்தட்டிற்கு பகிரங்கமாய் இழுத்துக்கொண்டு வரும்படி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஆண்டவரின் **வெளிச்சம் நிறைந்த ஓர் சபையில்** நாம் பங்கு பெற்றிருந்தால்

*அதற்காக நன்றியுள்ளவர்களாய் இருப்போமாக!*

*இதற்குமாறாக, ஆண்டாண்டுகளாய் நம் மாம்சத்தில் உள்ள பொல்லாங்கை நாம் ஒருபோதும் கண்டு கொள்ள முடியாமல் நம்மை சொகுசாய் உட்கார வைத்திருக்கும் ஓர் சபையில் பங்கு பெற்றிருந்தால் .... ஆ, அது கொடுமை!!*

*பொறுப்புள்ள நல்ல சகோதரர்கள் அல்லது சகோதரிகளின் புத்திமதி மூலமாக தேவன் தரும் எச்சரிக்கைகளை நாம் 'சீரியஸாக' எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், தேவ எச்சரிப்பைப் புறம்பே தள்ளின காயீனின் முடிவையே நாமும் அடைவோம்.*

**தன்னைக் கொலை செய்யத் தயாராயிருந்த காயீனை கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ளாத ஆபேலின் நல்ல இருதயத்தைப் பாருங்கள்! காயீனை அல்ல, தன்னையே நியாயம் தீர்த்து தாழ்மையில் நொறுங்கியிருந்த ஆபேல், நாம் யாவரும் பின்பற்ற வேண்டிய நல் மாதிரி:**

*ஆபேலோ, காயீனின் மனோபாவத்திற்கு முற்றிலும் மாறுபட்டவனாய் இருந்ததைப் பார்த்தீர்களா?*

*காயீன், ஆபேலைத் தன்னோடு வயல்வெளியில் "வாக்கிங்" அழைத்தபோது, ஆபேல் தன் இருதயத்தில் ஒரு துளிகூட சந்தேகம் கொள்ளாமல் தன் சகோதரனோடே நடந்தான்! (ஆதியாகமம்.4:8). காயீன் தன்மீது பொறாமை கொண்டிருக்கிறான் என்பதில் அவனுக்குச் சிறிதும் சந்தேகக் கண்ணோட்டமே இல்லை. ஆபேல் தன் இருதயத்தில் எவ்வளவாய் கபடற்று இருந்தான் பார்த்தீர்களா! அவன் தன்னையே நியாயம் தீர்த்து, இருதயம் நொறுங்கி இருந்தான். ஆனால் தன் சகோதரன் காயீனையோ நியாயம் தீர்க்கவேயில்லை. இந்த சுபாவமே நாம் பின்பற்றக்கூடிய நல்ல மாதிரியாய் இருக்கிறது!*

*தங்கள் காரியம் நன்றாய் நடந்தேறியதால், "என்மீது மற்றவர்கள் பொறாமை கொண்டிருப்பார்களோ? என் மீது கெட்ட அபிப்பிராயம் வைத்திருப்பார்களோ? எங்கே என்னைக் கீழே இழுத்துத் தள்ளி விடுவார்களோ?" என்றெல்லாம் ஓயா சந்தேகம் நிறைந்தவர்களாய் இன்று அனேகர் இருக்கிறார்கள்! மற்றவர்களுக்கு விரோதமாய் நமக்கு ஏதும் மனதில் இல்லாமல் இருக்கலாம்..... ஆனால், மற்றவர்கள் என்மீது விரோதம் வைத்திருப்பார்களோ என்ற* **சந்தேகத்தோடு** *நாம் காணப்பட முடியும். ஆ, இங்குதான் நாம் கறைப்பட்டுப் போகிறோம்!*

**ஆபேலோ, தன்னைக் கொலை செய்யத் தயாராய் இருந்தவன் மீது கூட கிஞ்சித்தும் சந்தேகம் அற்று இருந்தான். அவனுக்கு எத்தனை நல்ல இருதயம் பாருங்கள்! இதே இருதயமல்லவா நமக்கும் தேவை!!**

*நெருக்கமான ஜீவ வழியில் இரு குன்றுகளின் அபாய முனைகள் உள்ளன. ஒரு குன்றின் முனை "***பொறாமை***" இன்னொரு குன்றின் முனை*

*"**சந்தேகம்**". இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றில் நாம் வீழ்ந்து பாதாளத்தை அடையும் வாய்ப்பு உண்டு!*

**ஆபேலுக்கோ, காயீன் மீது பொறாமையோ அல்லது அவனைக் குறித்த சந்தேகமோ கொஞ்சமும் இல்லவே இல்லை! நம் சக சகோதரர்களோடு கொள்ளும் உறவில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய பாதையும் இதுவே ஆகும். சந்தேகத்தினால் நம் இருதயம் கறைபட்டு 'ஜீவிப்பதைவிட' ஆபேலைப்போல் சிறிதும் சந்தேகிக்காத இருதயத்தோடு 'சாவது' நல்லது!**

*தன்னை ஆண்டவர் அங்கீகரித்ததினால் ஆபேல் மகிழ்ந்திருந்தான்! ஆனால் அம்மகிழ்ச்சி அவன் இருதயத்தை காயீனுக்கு விரோதமாய் பெருமை கொண்டு உயர்த்தவே இல்லை! ஆம், இல்லவே இல்லை!! இவ்வுத்தம ஆபேல், தன்னை காயீனோடு ஒப்பிட்டு மகிழவோ அல்லது காயீன் வாழ்க்கையில் உள்ள குறைகளை காண்பதற்கு ஆர்வம் நிறைந்த வீண் அலுவல்காரனாகவோ மாறவே இல்லை!!*

*தேவ எச்சரிப்பைப் புறம்பே தள்ளின காயீன் நாசமடைந்தான்! இக் "காயீன் வழியிலிருந்து" தப்பும்படி, நம் மனதை, சக விசுவாசிகளைக் குறித்த* **நல் எண்ணத்தால்** *எப்போதும் நிறைத்து, நாள்தோறும் நம்மை நாமே சுத்திகரித்து ஜீவிப்போமாக!*

*காயீன் பொறாமையினால் நிறைந்து, தேவ எச்சரிப்பைப் புறம்பே தள்ளினான். எனவே அவன் வாசல் கதவண்டையில் முண்டிப்படுத் திருந்த பாவம் உள்ளே நுழைந்துவிட்டது! அந்த பொறாமை என்னும் பாவம் 'தலைவிரிகோல' பேயாக அவனை ஆளுகை செய்து, அவனை அழித்துப் போட்டது! உண்மையில், அழிந்து போனவன் ஆபேல் அல்ல, ஏனென்றால் ஆபேல் தேவ சந்நிதிக்கு நேராய் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டான். ஆனால், "காயீனோ கர்த்தருடைய சந்நிதியை விட்டு" (ஆதி.4:16) நித்தியகாலமாய் தூர விலகி நாசமடைந்தான்!*

*ஓர் கூட்டத்தில் அளிக்கப்பட்ட பிரசங்க புத்திமதி மூலமோ (குறிப்பாக அது இளைய சகோதரர்கள் மூலம் இருக்கலாம்!) அல்லது நீங்கள் வாசிக்கும்படி உங்கள் கைக்கு வந்து சேர்ந்த ஒரு பத்திரிக்கை மூலமோ, ஓர் வார்த்தையை அனுப்பி நம்மை தேவன் எச்சரிக்கும் போது, "ஹே! இந்த புத்திமதி எனக்குத் தேவையானது அல்ல!" என நீங்கள் எண்ணிக் கொள்ளலாம். அப்படியானால், நீங்கள்* **"காயீன் வழியில் நடக்க"** *ஆரம்பித்து விட்டீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள் (யூதா.11). "உங்கள்* **இருதயத்தின் அகந்தை** *உங்களை மோசம் போக்கி விட்டது" (ஒபதியா 3) அவ்வளவுதான்.*

*காயீன் செய்ததுபோல, ஒருவரை நாம் கல்லினால் கொன்று போடாமல் இருக்கலாம். ஆனால் அதே கொலையை நம் "நாவினால்" செய்திட முடியும். இந்நாவிற்கு மரணத்தைக் கொண்டு வரும் வலிமை*

*உள்ளது என்றே வேதாகமம் எச்சரிக்கிறது (நீதி.18:21). ஓர் மனிதனின் சரீரத்தைத் தொடாமலேயே அம்மனிதனின் கண்ணியத்தை, அவன் குணத்தை நாம் கொலை செய்திட முடியும். ஐயோ!... இன்று விசுவாசிகள் என சொல்லிக்கொள்ளும் திரளானோர், வாராவாரம் இக்கொலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், வாரத்தின் இறுதியில் ஞாயிற்றுக்கிழமை வந்து விட்டால், ஒரு தீமையும் செய்யா அப்பாவிபோல் சபையில் கலந்து கொள்ளவும் இவர்களால் முடியும். இப்போது இவர்களைப் பார்த்து தேவன் "(நீ கொலை செய்த) உன் சகோதரனின் நிர்கதியான குரல் என்னை நோக்கிக் கூப்பிடுகிறது" என்றே பேசுவார்! ஆனால் இந்த அவரின் சத்தத்தைக்கூட இவர்கள் கேட்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்களின் மனசாட்சி அவ்வளவு அதிகம் கடினப்பட்டுவிட்டது.... முடிவில்... கிறிஸ்துவைப்போல மாறும் வளர்ச்சி சிறிதும் இல்லாமல், காயீனைப்போல ஆவிக்குரிய பலனற்று, நிலையற்று அலைகிறவர்களாய் போய்விடுகிறார்கள்! (ஆதி. 4:10,12).*

*மெய்யாகவே நம் வாசல் கதவண்டையில் பாவம் முண்டிப் படுத்துக் கிடக்கிறது. இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரே வழி, நம் சகவிசுவாசிகளைக் குறித்த* **புகழுக்குரிய காரியங்களாலும், நல் எண்ணத்தாலும் நம் மனதை எப்போதும் நிறைத்து** *வைத்திருப்பது மாத்திரமேயாகும்! (பிலிப்பியர்.4:8).*

*கிறிஸ்து திரும்ப வருவார் என்றும், தன்னை அவரது தூய ராஜ்ஜியத்திற்கு எடுத்துச் செல்வார் என்றும் யாரெல்லாம் நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே நாளுக்குநாள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டே இருப்பார்கள்! (1யோவான் 3:3). தங்களை அதிக அதிகமாய் தாழ்த்தியிருக்கவும் வாஞ்சிப்பார்கள்!! மீதியாய் எஞ்சியிருப்பவர்களோ, மேலும் மேலும் "மோசம் போக்குகிற வர்களாகவும், மோசம் போகிறவர்களாகவும்" இருப்பார்கள்!! (2தீமோ.3:13). ஆம், காயீன் அந்த நல்ல ஆபேலை மோசம் போக்கியதைப்போல் செய்தாலும், உண்மையிலும் உண்மையாய் மோசம் போனவன் இந்த காயீனே ஆவான்!*

**ஆபேலோ, அன்று தொடங்கி "இன்று வரை".....அந்த மரித்தவன், ஒப்பற்ற தெய்வ குணத்தை பேசிக்கொண்டேயிருக்கிறான்!!**

*கொடிய பொறாமையின் துர்குணத்திலிருந்தும், சந்தேகக்கண் கொண்ட தீமையிலிருந்தும் விலகி..... அந்த நல்ல ஆபேலைப்போலவே, ஒருவருக்கொருவர் நல்ல எண்ணங்களால் நிறைந்துவாழ தேவன் அருள்புரிவாராக!*

*ஆவியானவர் பேசும் சத்தத்தை கேட்பதற்கு*
*காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன்!*

# 8

## ஒன்றிற்கும் கடன்படா வாழ்க்கை வேண்டும்!

எந்த மனிதனுக்கும் தேவன் ஒருபோதும் கடன்பட்டதே கிடையாது! புதிய உடன்படிக்கையில், அவரின் திவ்விய சுபாவத்தில் பங்குபெறும்படியே நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம்!! எனவே தான், "ஒன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என நாமும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (ரோமர்.13:8).

இன்னொருவரிடம் கடன் வாங்கி அவரிடம் கடனாளியாவது நியாயப்பிரமாண சாபங்களில் ஒன்றாகும். இந்த சாபமானது, நியாயப் பிரமாணத்திற்கு இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியாமலிருக்கும் போது அவர்கள் மீது வந்திறங்கும் என தேவனே கூறியதாகும் (உபா.28:43-48). ஆம், 48-ம் வசனம் கூறுகிறபடி, இஸ்ரவேலர்கள் "சகலமும் குறைவுபட்டு" போகும் பரிதாபத்திற்கே தள்ளப்பட்டு விடுவார்கள்!!

இதற்குமாறாக, இஸ்ரவேலர்கள் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது அவர்களை ஆசீர்வதிப்பேன் என தேவன் வாக்குதத்தம் செய்த ஆசீர்வாதங்களில் ஒன்று என்னவென்றால், "நீ அநேகம் பேருக்கு கடன் கொடுப்பாய், **நீயோ கடன் வாங்காதிருப்பாய்**" என்பதாகும் (உபா.28:12, 15:16). பிறருக்கும் கொடுத்து ஆசீர்வதிப்பதற்கென தேவையான கையிருப்பு வைத்திருப்பது, தேவன் தன் ஜனத்தை ஆசீர்வதிக்கும் விதத்தில் ஓர் வழியாகும்.

**ஆனால், நீங்களோ ஓர் "தொடர்ச்சியான" பொருளாதார தேவையில் உழன்று கொண்டிருப்பவராயிருந்தால், உங்களையே ஓர் ஆவிக்குரிய பரிசீலனை செய்து, என்ன தவறு என்றும் அது எங்கு நிகழ்ந்தது என்றும் கண்டறியவேண்டியது மிகவும் அவசியமாகும்.**

"கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை" (நீதி.22:7) என வேதம் விளம்புகிறது. 'கடன் வாங்குதல்' (Borrowing) என்ற வார்த்தை எபிரெய பாஷையில், கடன் கொடுத்தவனுக்கு கடன் வாங்கினவன் "கட்டப்பட்டு இருத்தல்" என்றே பொருள்படுகிறது. பார்த்தீர்களா,

*உங்களுக்கு கடன் தந்தவரால் நீங்கள் மேற்கொள்ளப்பட்டு ஒரு சங்கிலியால் பிணைக்கப்பட்டு விட்டீர்கள்! தேவனுடைய பிள்ளைகள் ஒருவராகிலும் இவ்வாறு பிறரால் மேற்கொள்ளப்பட்டிருப்பது, ஒருபோதும் தேவனுடைய சித்தம் அல்லவே அல்ல! நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் தேவனுக்கென கிரயத்திற்குக் கொள்ளப்பட்டபடியால், எந்த மனுஷருக்கும் நாம் அடிமையாகக்கூடாது என நமக்கு ஆணித் தரமான கட்டளை தரப்பட்டிருக்கிறது (1கொரிந்தியர்.7:23).*

*“சிறைப்பட்டவர்களை” (கடன்பட்டு சங்கிலியால் கட்டப்பட்ட வர்களை) விடுதலை செய்வதற்காக இயேசு வந்தார் என எழுதியிருக் கிறதே! (லூக்கா.4:18). இது நம்மை பரவசமூட்டும் நற்செய்தி அன்றோ!*

**கடன்பட்ட யாராயிருந்தாலும், அவர்கள் தங்களைத் தாங்களே பரிசீலனை செய்து விடுதலை அடையும்படி கீழ்காணும் 5-குறிப்புகள் சத்தியத்தின் ஆதாரத்தில் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது:**

1. **தப்பானவற்றிற்கு முதலிடம் தருதல்!**

*“முதலாவது” தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவர்கள் தங்கள் பூமிக்குரிய வாழ்விற்குத் ‘தேவையான’ எல்லா உலகப்பொருட்களும் தங்களுக்கு கூட்டி வழங்கப் படுவதைக் காணும் பாக்கியத்தை அடைவர் என இயேசு திட்டமாய் கூறினார் (மத்.6:33). ஆம், இது ஓர் வாக்குதத்தம்!! இவ்வாக்குதத்தம் எத்தேசத்தினருக்கும் எந்த சூழ்நிலைகளிலும் பொருந்தும். தானே கொடுத்த வாக்கை நிறைவேற்றாமல் இருப்பது தேவனால் கூடாத காரியம்! எனவே ஏதேனும் குறைவு ஏற்படுமென்றால், அதற்குரிய தவறு மனிதனின் பட்சத்திலேதான் நிச்சயம் இருக்கும். தாவீது தன் 70-வயது அனுபவத்தில் கூறினார், “நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன்; ஆனால் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்திற்கு பிச்சை எடுத்து திரிகிறதையும் (கடன் வாங்குதல் பிச்சை எடுப்பதற்கே சமம்) நான் கண்டதில்லை. அதற்கு மாறாக, இந்த நீதிமானோ கடன்கொடுக்கிறான்” (சங்கீதம். 37:25,26).*

**நம் ஜீவியத்தின் எல்லை எங்கும் தேவனுடைய இராஜ்ஜியத்தை “முதலாவது” தேடியிருக்கிறோமா?** *தேவனுடைய பணியும் அவருக்குப் பிரியமானதும் எனக்குப் பிரியமானதாய் மாறி உள்ளதா? அப்படி இல்லையென்றால், நான் தப்பான வேறு காரியத்திற்கே முதலிடம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு இதுவே ஓர் காரணமாய் இருக்கக்கூடும்!*

*நாம் “முதலாவது” தேவனுடைய நீதியைத் தேடியிருக்கிறோமா? எவைகளை தேவனுடைய நீதியென வேதம் குறிப்பிடுகிறது?*

*முதலாவதாக, நாம் பண விஷயத்திலேயே நீதியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! இவ்வாறு நீதியாய் இருப்பதற்கு, நம் கடந்தகால வாழ்வில் தவறான முறையில் சொந்தம் கொண்ட பணம் அல்லது பொருட்கள் கண்டிப்பாக திருப்பித் தரப்படவேண்டும். அநேகம் விசுவாசிகள் இவ்விதம் திருப்பித்தராமல் இருக்கிறபடியால், தங்கள் ஜீவியத்தில் ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும் இழந்து காணப்படுகிறார்கள். சகேயுவின் வீட்டில் இயேசுவானவர் நுழைந்த அடுத்த கணமே, தன் கடந்த வாழ்வின் பொருளாதார சீர்கேட்டை ஒப்புரவு செய்வேன் என அவன் தீர்மானித்தான் (லூக்கா. 19:1-10). என்ன ஆச்சரியம், அவன் ஐசுவரியவானாய் இருந்தபோதும்கூட "ஊசிமுனையின் காது வழியாய்" நுழைந்து விட்டானே!* **ஆம், தன் அநீதியான "எல்லா" பொருளாதார சீர்கேட்டையும் ஒப்புரவு செய்து விட்டான்!!** *தான் தவறாய் எடுத்துக் கொண்டவற்றை, வட்டியுடன் திரும்பச் செலுத்தினான். இந்த வட்டி குறைவாய் இருந்து விடக்கூடாதே என அதை நாலத்தனையாய் திரும்பச் செலுத்தினான். அவன் ஏமாற்றியிருந்த அனேகர் மரித்தோ அல்லது தங்கள் தூர ஸ்தலங்களுக்கோ சென்றுவிட்டபடியால் அவர்கள் முகவரியை சகேயுவினால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படிப் பட்ட பணத்தை சகேயு என்ன செய்யவேண்டும்? 'நல்லதாப்போச்சு' என அதை அவன் மறந்து விடலாமா? ஒருபோதும் இல்லை! இப்பணங் களை தனக்காக எடுத்துக் கொள்ள சகேயுவுக்கு கொஞ்சமும் உரிமையே கிடையாது. எனவே அப்படிப்பட்ட பணத்தை ஏழைகளுக்கு கொடுத்து விட தீர்மானித்தான். அதன் மதிப்பு எவ்வளவு தெரியுமா? அது, அவன் ஆஸ்தியில் பாதி இருந்தது! எத்தனை ஆணித்தரமான மனிதன் பாருங்கள்!!*

> **எனவேதான் இயேசு கூறினார், "இரட்சிப்பு (பண ஆசையிலிருந்து விடுதலை) சகேயுவின் வீட்டிற்கு வந்துவிட்டது" (லூக்.19:9). இதே அறிக்கையை இயேசு நம் சார்பாகவும் கூற முடியுமா?**

*மேலும், நாம் நம் பணத்தை நூற்றுக்கு நூறு நேர்மையான வழியில் சம்பாதிக்கிறோமா? என்ற கேள்வியையும் கொண்டு நம்மை நாமே கேட்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நேர்மையற்ற வழியில் சம்பாதித்த ஆஸ்திகள் ஒருபோதும் தேவனால் ஆசீர்வதிக்கப்படவே முடியாது. நீங்கள் நேர்மையாய் சம்பாதித்த 5- அப்பங்களும் 2- மீனும் போதும்! அதை 5000-பேர்களுக்கு போஷிக்கும்படி ஆசீர்வதித்துவிட அவரால் முடியும்!! (நீதிமொழிகள்.13:11).*

*நம்முடையதல்லாத அல்லது நேர்மையாய் சம்பாதிக்காத "ஒரு பைசா" கூட நம்மிடமோ அல்லது நம் பேங்க் அக்கவுண்டிலோ*

*வைத்திருக்கவே கூடாது. அரசாங்கத்திடம் "வரி ஏய்ப்பு" செய்து தக்க வைத்துக்கொண்ட பணம் நேர்மையற்றதும், அழுக்கானதும் மாத்திர மல்லாமல், சீக்கிரமே காலாவட்டத்தில் நமக்கு சாபத்தையும் கொண்டு வரும்!*

*இப்போது, இந்த முதல் கேள்வியை உங்களிடமே கேட்டுப் பாருங்கள்!! நான் தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவர் நீதியையும் "முதலாவது" தேடியிருக்கிறேனா?*

2. **கொடுக்காமலே வாங்கிக் கொண்டிருத்தல்!**

*நாம் தேவனிடத்தில் பெற்றுக்கொண்டு, அதை சுயநலமாய் இறுகப் பற்றிக்கொண்டிருக்கும் தருணத்தில்தான் ஆவிக்குரிய மரணம் நமக்கு சம்பவிக்கிறது! "முஷ்டி எழும்ப தன் வசமாய் பற்றியிழுக்கும் புஜமே" ஆதாம் வம்சத்தை இனம்காணும் சரியான அடையாளமாகும்!! கிடைத்ததை வாரிக்கொண்டு, அதை இறுக தனக்கெனப்பற்றி யிழுப்பது!!*

**ஆனால் இயேசுவோ, கல்வாரிச் சிலுவையில், தனக்கென ஏதும் வைத்துக்கெள்ளாத "விரித்து வைத்த கரமுடையவராகவே" காணப்பட்டார். இந்த சுயநலமற்ற கரமே நமக்கும் வேண்டும்.**

*"தசமபாகத்தின் நோக்கமானது, இஸ்ரவேலர்கள் தங்கள் ஜீவியத்தில் ஆண்டவருக்கே முதலிடம் தரவேண்டும் என போதிப் பதற்கே" என்று இஸ்ரவேலருக்கு கூறப்பட்டது (உபா.14:23-LIVING). ஆனால், புதிய உடன்படிக்கையின் கீழோ, நாம் தசம பாகம் தரும்படி எந்தக் கட்டளையும் இப்போது கிடையவே கிடையாது. ஏனென்றால், ஒருவன் தனக்கு சீஷனாய் இருக்க விரும்பினால் அவன் "தனக்கு உண்டானவைகளையெல்லாம்" அல்லது* **அவனது 100 சதவீதமானதையும் (வெறும் 10% அல்ல)** *வெறுக்க வேண்டும் என்றே இயேசு கூறினார் (லூக்கா.14:33). ஆம், நம் பணத்தில் ஒரு பங்குகூட நமக்குச் சொந்த மானதல்ல. நம் 'முழுமைக்கும்' தேவனே முதலாவதாகிவிட வேண்டும். அதற்காக, நம் பணம் அத்தனையையும் ஆண்டவரின் ஊழியத்திற்கே நாம் கொடுத்துவிட வேண்டும் என்பது அல்ல! மாறாக, நம் உடைமை யாவும் இப்போது கர்த்தருக்கே சொந்தம் என்ற அறிவை அடைந்த வர்களாய் இருக்க வேண்டும். நாம் நமக்காகவே செலவழித்தாலும், அதையும் தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே செய்திடவேண்டும் (1கொரிந்தியர்.10:33). அதேசமயம், தேவனுக்கும் அவர் தூய பணிக்கும் உதாரத்துவமாய் கொடுத்திட வேண்டும். அப்படி எவ்வளவு கொடுக்கவேண்டும்? நாம் "உற்சாகமாய்" எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்தால் போதுமென்று வேதம் நமக்கு*

*கற்றுத்தருகிறது (2கொரிந்தியர்.9:7).* பழைய உடன்படிக்கையில் காணப்படும் **'அளவு' அல்ல,** நாம் கொடுக்கும் **'தரமே'** இப்போது புதிய உடன்படிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இதே வசனத்தின் பகுதியில், நாம் விதைக்கும் அளவின்படியே தான் அறுக்க முடியும் எனவும் கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள் (2கொரி.9:6). நாம் ஆண்டவருக்காக கொடுப்பது, விதைக்கும் விதைக்கு ஒப்பானது! சிறுக விதைத்தால், சிறுகத்தான் அறுப்போம். இன்று அனேக விசுவாசிகள் ஏன் தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடியில் இருக்கிறார்கள் என்பதற்கு இதுவும் ஓர் முக்கிய காரணமாகும். **ஆம், இவர்கள் "தேவனிடத்தில் ஐசுவரியவான்களாய்" இல்லை!** *(லூக்கா12:21).* தேவனிடத்தில் ஐசுவரியவானாய் இருக்கும் ஓர் மனிதனுக்கு நேரிடும் இக்கட்டான தேவையின்போது, அவனுக்குத் தராமல் 'கடனாளியாய்' இருப்பதென்பது தேவனால் கூடாத காரியமாகும்!

"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்றல்லவா இயேசு கூறினார் (அப்போஸ்தலர். 20:35). இதற்குமாறாக, நாம் பிறரிடம் இருந்து ஏதேனும் அன்பளிப்பை பெறுவதற்கே நாம் விரும்புகிறோமா? அப்படியானால், நாம் ஆதாமின் புத்திரர்களாகவே தான் இன்னமும் இருக்கிறோம். ஆனால், தேவபுத்திரர்களின் ஓர் முக்கியமான குணாதிசயம் என்னவெனில், வாங்குவதைக் காட்டிலும் **கொடுப்பதற்கே முதலிடம்** தருவார்கள்! வேதம் சொல்லுவதைக் கேளுங்கள், "அன்பளிப்பை (GIFTS) வெறுக்கிறவனோ பிழைப்பான்!" (நீதிமொழிகள். 15:27). இவ்வசனத்திற்கேற்ப, இனிமேலாவது நம் மனம் புதிதாகுவதாக!! ஆம், தேவனுக்கு கொடுக்க கற்றுக்கொள்ளாததி னாலேயே இன்று அனேகர் தொடர்ச்சியான கடனுக்குள் சிக்கி யிருக்கிறார்கள்! (நீதி.21:26 - LIVING BIBLE வாசித்துப்பாருங்கள்).

நம் சகவிசுவாசிகள் தேவையில் இருக்கும்போது, அவர்களுக்கு கொடுக்க மனதில்லாமையும் பொருளாதார நெருக்கடிக்கு ஓர் காரணமாகும். "ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான்" (நீதிமொழிகள். 21:13). இதற்கு நேர்மாறாக "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் 'அற்புதமான வட்டியோடு' திரும்பக் கொடுப்பார்" (நீதி.19:17 LIVING). இவ்விதமாய் நாம் கொடுக்கும்போது அதை ஞானமாயும் செய்திட வேண்டும். இவ்வாறு கொடுப்பதற்குத் தேவையான ஞானம் ஒருவனிடத்தில் குறைவுபட்டால், அந்தப் பணத்தைத் தங்கள் 'நம்பிக்கைக்குப் பாத்திரமான' மூப்பர்களிடம் கொடுத்து, அதை ஞானமாய்

பகிர்ந்து கொடுக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஆதி சபையில் இம்முறையையே கையாண்டார்கள் (அப்.4:34,35).

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்..... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அதே அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்பது தேவனுடைய மாறாத சட்டமாகும் (லூக்கா.6:38) . இதை நாம் ஒருபோதும் தாண்டிச் செல்ல அல்லது தவிர்த்து விட முடியவே முடியாது. நாம் கொடுக்காவிட்டால் நிச்சயம் தேவையில் சிக்குவோம்! **பிறருக்குப் பிசினித்தனம் பண்ணினால், நமக்கும் தேவன் பிசினித்தனம் பண்ணுவார்!!**

'பணஆசை' என்ற சூத்திரமே இன்று அனேக கிறிஸ்தவர்களைத் தேவை என்ற சுழலில் வீழ்த்தியுள்ளது. ஆதாமின் புத்திரர்கள் பணத்தை நேசிக்கிறார்கள். நாம் மறுபடியும் பிறந்தவுடன், இந்த பணஆசை நம்மை விட்டு ஏதோ மாயமாய் மறைந்து விடுவதில்லை! ஆனால், இவ்விஷயத்தில் நம்மை நாமே நியாயம் தீர்த்து நம்மைக் கழுவிக் கொள்வதற்கு உண்மையுள்ளவர்களாய் இருப்போமென்றால், இப்பண ஆசை கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து, இறுதியில் முழுவதுமாய் நம்மைவிட்டு மறைந்து ஒழிந்தே போகும்!

3. **வீணாக்குதல்!**

பணவிசயத்தில் **நீதியாய் இருப்பதென்பது**, நாம் அடையவேண்டிய இலக்கிற்கு முதல்படி மாத்திரமே! அதற்குப் பின்பு நாம் "**உண்மை யுள்ளவர்களாய்**" இருக்க கற்றுக்கொள்ள வேண்டும்!! இன்று அனேகர் தங்கள் பணத்தை வீணான வழியில் செலவழிப்பதின் காரணத்தால் 'கடன் குழியில்' விழுகிறார்கள். இவர்கள் தங்கள் செலவீனத்தைத் தங்கள் மாத வருவாய்க்குள் அடங்கும்படி ஒழுங்கு செய்ய கற்றுக் கொள்ளாதவர்கள். மாதா மாதம் தங்களால் ஆன சிறு தொகையைச் சேமிக்கும்படி "எறும்பினிடத்தில்" போய் இவர்கள் இன்னமும் ஞானத்தை கற்றுக்கொள்ளவில்லை! (நீதி.6:6-11). இவ்வசனம் போதிக்கும் புத்தியின்படி இவர்கள் எறும்புபோல சேமித்திருந்தால், ஓர் அவசர சூழ்நிலையில் பிச்சை எடுக்க அல்லது கடன் வாங்க நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காதே!! (நீதி. 21:20 LIVING). அப்படியானால் ஒவ்வொரு மாதமும் நாம் எவ்வளவு சேமிக்க வேண்டும்? இந்த விஷயம் அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியான (ரோமர்.12:13) முழுக்க முழுக்க அம்மனிதனின் விசுவாச அளவைப் பொறுத்த தனிப்பட்ட காரியமேயாகும்! சிலர், ஒவ்வொரு மாதமும் தங்களுக்கு மீதமான எல்லாவற்றையும் ஆண்டவருடைய ஊழியத் திற்கும், அவரின் சொந்த ஜனத்திற்கும் கொடுத்துவிட்டு ஒன்றும் சேமிக்காமல் இருந்துவிடும் ஆச்சரியமான விசுவாசத்தை உடைய

வர்களாய் இருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் "தேவை" என்ற இடத்தை சந்திக்கும்போது, தேவனும் அவர்களை அப்படியே விட்டுவிடாமல் **அற்புதமான வழியில்** அவர்கள் தேவையை சந்திப்பார்! "ஆனால்" இப்படிப்பட்ட விசுவாசம் நமக்குத் தேவனால் பகிர்ந்தளிக்கப்படவில்லையென்றால், நம்மை நாமே தாழ்த்தி இத்தகைய விசுவாசம் நமக்கு இல்லை என்பதை நேர்மை உள்ளத்தோடு ஒத்துக்கொள்ள வேண்டும். காரியம் இப்படியாய் இருக்கும் போது, நம் தேவை நேரத்தில் 'பிச்சை' எடுக்கவோ அல்லது கடன் வாங்கவோ அல்லது எந்த சகோதர சகோதரிகளாவது அன்பளிப்பாய் தரமாட்டார் களா? என காத்திருக்கவோ வேண்டிய அவலநிலை ஏற்படாதபடி, ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் சேமித்து வைப்பது மிகவும் நல்லது!!

இயேசு அப்பத்தையும் - மீனையும் திரளாய்ப் பெருகச் செய்திருந் தாலும், தன் சீஷர்களை நோக்கி, "ஒன்றும் சேதமாகாதபடிக்கு மீதியான துணிக்கைகளை சேர்த்து வையுங்கள்" என கட்டளையிட்டார்! (யோவான்.6:12). பார்த்தீர்களா, ஆண்டவர் வீணாக்குதலை வெறுக்கிறார்!! அனேக விசுவாசிகள் தங்கள் குடும்ப செலவீனத்தில் ஊதாரிகளாகவே இருக்கிறார்கள்.

**நீங்கள் அப்படியிருந்தால், ஒவ்வொரு மாதமும் வரவு-செலவு கணக்கு எழுதிப்பார்த்து, உங்கள் பணம் எவ்வழியில் வீணாகிறது என்பதைக் கண்டுபிடியுங்கள்.**

இவ்விஷயத்தை நீங்கள் "சீரியஸாக" எடுத்துக்கொள்ளவில்லை யென்றால், நீங்கள் தொடர்ந்து எக்காலமும் கடனுக்குள்ளேயே புதைந்து கிடப்பீர்கள்.

இன்று விசுவாசிகள் அனாவசியமான அனேக செலவீனங்களில் ஈடுபடுவதற்கு முக்கிய நோக்கம், "இவர்களுக்கு மனிதர்களின் புகழ்ச்சி வேண்டும்" அவ்வளவுதான்!...... குறிப்பாக திருமண வைபவம்!! தடபுடலாகத் திருமணம் நடத்த வேண்டும் என்பதற்காகவே இன்று அனேகர் கடனுக்குள் வீழ்கிறார்கள். இது என்ன? மதியீனம்... மதியீனத்தின் உச்சக்கட்டம்! இதைப்போலவே தங்கள் வீட்டிற்கு ஆடம்பரப் பொருட்களை தருவிக்கிறார்கள். பிறரைத் தங்களின் தடபுடல் விருந்திற்கும் அழைக்கிறார்கள். எதற்காக? தங்களுக்குப் புகழ்ச்சிவேண்டும் என்பதற்காகத்தான்! இவையனைத்தும் மதியீனத்தின் மொத்த உருவம்!! நாம் விடுதலையோடு தேவனுடைய பார்வையில் மாத்திரமே ஜீவிக்கவேண்டுமென்றால் மனுஷர்களின் புகழ்ச்சிக்கு கண்டிப்பாகச் சாக வேண்டும். அப்போது மாத்திரமே நாம் கடனிலிருந்தும் விடுதலையாகியிருக்க முடியும்!!

நாம் பணம் செலவு செய்வதில் உண்மையற்றவர்களாயிருந்தால், தேவன் தன் இராஜ்ஜியத்தின் மெய்யான ஐசுவரியத்தை நமக்கு ஒருக்காலும் தரவே மாட்டார் (லூக்.16:11). இன்றைய அனேகமான பிரசங்கிகளின் வறண்டுபோன பழங்கதைப் பிரசங்கங்களைக் கவனிக்கும்போது இவர்களுக்கு மெய் ஐசுவரியமான "**தேவனுடைய வார்த்தையில் வெளிப்பாடு**" இல்லை என்பதை மிகத் தெளிவாய் அறிந்து கொள்ள முடிகிறது.

இவர்கள் பணவிஷயத்தில் உண்மையில்லா திருப்பதே இதற்குக் காரணம்! தேவன் தன் வார்த்தையிலிருந்து நமக்கு வெளிப்பாடு தரவில்லையே என உணரும்போது, நாம் பணவிஷயத்தில் உண்மையில்லாதிருக்கிறோமா என நம்மைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஒருவேளை அது அநீதியாய் இல்லாமல் இருக்கலாம், ஆனால் 'கவனக்குறைவும்' 'வீணாக்குதலுமாய்' இருக்கக்கூடும்.

4. **பிறரை நியாயம் தீர்த்தல்!**

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். யாரையேனும் குறித்து நாம் குறைகூறி, நியாயம் தீர்த்திருப்போமென்றால் நாம் பொருளாதார கஷ்டத்திற்குள்ளாய் சிக்குவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அபிஷேகிக்கப்பட்ட தேவஊழியர் யாரையேனும் குறை கூறியோ அல்லது மனதிற்குள்ளேயே நியாயம் தீர்க்கவோ செய்திருக்கிறோமா? நாம் செய்கிற மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் இச்செயல் மிகப்பெரிய அபாயகரமானது!

**தேவன் எச்சரிக்கிறார், "நான் அபிஷேகம் பண்ணினவனைத் தொடாதே! என்னுடைய தீர்க்கதரிசி களுக்கு தீங்கு செய்யாதீர்கள்!!" (சங்கீதம். 105:15). தன் ஊழியர்களைக் குறைகூறி அல்லது நியாயம் தீர்ப்பவர்கள்மீது தேவன் கடுமையான நடவடிக்கை எடுப்பார்.**

எவ்வளவோ நாட்களுக்கு முன்பாகக்கூட இவ்ஊழியர்களுக்கு விரோதமாக நீங்கள் பேசியிருக்கலாம். அல்லது இவ்ஊழியர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக் 'குதர்க்கம்' காணும்படி உங்களையே நீங்கள் ஓர் கண்காணியாளராய் உயர்த்தி அவர்களை நியாயம் தீர்த்திருக்கலாம். இச்செயலுக்காய் நீங்கள் மனந்திரும்பி அப்பாவங்களை அறிக்கையிடாமல் இருந்து கொண்டிருப்பீர் களென்றால், இதுவே இப்போது நிலவும் பொருளாதார சிக்கலுக்குக் காரணமாய் இருக்கக்கூடும்!

இவ்விஷயத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே சோதித்து அறியக்கடவன். இன்று தேவ பிள்ளைகளிடம் காணப்படும் அனேக

*வியாதிகளுக்கு இதுவே காரணமாகும். பொருளாதார நெருக்கடியையும்; வியாதியையும் பயன்படுத்தி நாம் அஜாக்கிரதையாய் பேசிய வார்த்தைகளை தேவன் நமக்குச் சுட்டிக்காட்டுவார். நம் வீட்டில் அமர்ந்து கொண்டு அபிஷேகிக்கப்பட்ட தேவமனிதர்களுக்கு விரோதமாக கவனயீனமாய் பேசிய வார்த்தைகள் அம்புபோல் புறப்பட்டு இப்போது அதே அம்புகள் நம் முதுகுக்கு நேராய் திரும்பி வந்து கொண்டிருக்கிறது! இதிலிருந்து தப்பிக் கொள்வதற்கு நம்மைத் தாழ்த்தி, சம்பந்தப்பட்ட நபரிடம் மன்னிப்பு கேட்டாலொழிய தப்பிக்கும் மார்க்கம் இல்லவே இல்லை!*

5. **அவிசுவாசம் கொண்டிருத்தல்!**

*கடைசியாக, அவிசுவாசமும் கடனுக்கு காரணமாயிருக்கக்கூடும். இவ்வுலகில் ஓர் நாத்திகனுக்குப் பொருளாதார சிக்கல் ஏற்பட்டால், அவன் உடனே வேறு ஒரு மனிதனிடம் உதவி தேடி ஓடுவான்! ஏனென்றால் இவன் 'தேவன் இருக்கிறார்' என்பதை நம்புவதில்லை! இப்போது நம்மில் காரியம் எப்படியிருக்கிறது? நமக்குத் தேவை ஏற்படும்போது நாம் என்ன செய்கிறோம்? பொருளாதார நெருக்கடியைக் கொடுத்தும் தேவன் நம்மை சோதிக்க முடியும். அப்போஸ்தலர்களும் அடிக்கடி பொருளாதார தேவைக்குள் பிரவேசித்திருக்கிறார்கள் (1கொரிந்தியர். 4:11). "ஆனால்" அவர்கள் ஒருபோதும் பிச்சை எடுக்கும் அல்லது கடன் வாங்கும் நிர்பந்தத்திற்குள்ளாக வீழ்ந்ததே கிடையாது.*

*மாறாக, தேவன் தங்கள் தேவைக்குத் தருவார் என அவரையே நம்பியிருந்தார்கள், தேவனும் அவ்விதமே தந்தருளினார். அருமை ஆண்டவர் தன் உண்மையுள்ள பிள்ளைகளை ஒருபோதும் கைவிடவே மாட்டார்! அவசியமானால், தன் தாசன் எலியாவைப் போஷித்தது போல, காகங்களைக் கொண்டும் எப்படியாவது போஷித்து விடுவார்!*

**இஸ்ரவேலர்கள் 'உதவி நாடி' எகிப்துக்குத் திரும்பியபோது, அவர்களுக்குத் துன்பமே எஞ்சியது! தேவனோ அவர்கள் தன் பக்கம் திரும்ப வேண்டும் என்றே விரும்பினார்.**

*நம் பொருளாதார தேவைக்காகத் தேவனிடம் மாத்திரமே ஓடி 'விசுவாசித்து' ஜெபித்திருக்கிறோமா? அல்லது அந்த நாத்திகனைப் போல நடந்து கொள்கிறோமா? (இது குறித்து ஏசாயா. 30:7-21, சங்கீதம். 121 கூறும் வசனங்களை வாசித்துப் பாருங்கள்). நம்மை மற்ற விசுவாசிகளோடு மதியீனமாய் ஒப்பிட்டுப் பார்க்காமல், தேவன் நமக்கு மகிழ்வுடன் கொடுத்ததைக் கொண்டு 'போதுமென்ற மனதுடன்' வாழக் கற்றுக் கொள்ளும்போதுதான், "நான் உன்னை விட்டு விலகுவது*

மில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை'' என தேவன் உரைத்த வாக்குத்தத்தம் நம்மில் நிஜமாய் மாறுகிறது (எபிரெயர். 13:5).

இப்போது கடனுக்குள் வீழ்ந்திருக்கும் ஒவ்வொருவரும், மேற்கூறிய எல்லா காரியங்களிலும் தங்களையே நியாயம்தீர்த்து, தன் காரியங்களை ஒழுங்குபடுத்த வேண்டியது மிக மிக முக்கியம். ஒருவேளை நீங்கள் ஓர் ஆவிக்குரிய தலைவனாகவோ அல்லது மூப்பராகவோ இருந்து கடன்பட்டிருந்தால், நீங்கள் இன்னமும் பத்து மடங்கு அதிகமாய் உங்களை நீங்கள் நியாயம்தீர்த்து அறிய வேண்டியது அவசியமாகும். கடனுக்குள் வீழ்ந்திருக்கும் எந்த ஒரு நபரும் தேவனுடைய ஜனத்திற்கு ஓர் மூப்பனாய் இருப்பதற்கு எந்த உரிமையும் கிடையவே கிடையாது!!

நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்? ஆம், நாம் ஆழமான ஓர் ஆணித்தர உறுதி கொள்ளல் வேண்டும். கடனுக்குள்ளாய் வீழ்வ தென்பது, ரோமர் 13:8-ம் வசனத்தின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாத தினிமித்தம் பாவம் செய்தவர்களாய் மாறுகிறோம். கடனுக்குள் ஜீவிப்பது பாவத்தில் ஜீவிப்பதேயாகும்.

ஆணித்தர உறுதி என்றால் என்ன? பாவம் செய்யாமலிருப்பதற்கு வலது கையை வெட்டி! வலது கண்ணைப் பிடுங்குவதாகும்!! நாம் உடனடியாக கடனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதே இதன் பொருள். முதல் நடவடிக்கையாக நம் பேங்க் அக்கவுண்டில் உள்ள பணத்தை 'காலி' செய்து (அந்த மாதத்திற்கு தேவையான ஏதோ ஒரு சிறிய தொகையை மட்டும் வைத்துக் கொண்டு) நம் கடனைக் கட்ட ஆரம்பித்து விட வேண்டும். அடுத்த கட்டமாக, நம்மிடம் ஏதாகிலும் தங்கமோ, வெள்ளியோ இருந்தால் அதை உடனே விற்று கடனைத் தீர்க்கவேண்டும்.

**"கடனை அடைப்பதற்குத் தேவையான எல்லா பணமும் வரட்டும்" என ஒருக்காலும் காத்திருக்கவே கூடாது! நம்மிடம் இருப்பதைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும்!!**

நாம் இவ்வித ஆணித்தர உறுதிபூண்டு விட்டதைத் தேவன் கண்டால், நமக்கு நிச்சயமாய் அவர் கை கொடுப்பார். இன்று அனேகர் தங்கள் கடனைத் தீர்ப்பதற்கு ஏனோ-தானோ என்று இருப்பதால், தேவனும் அவர்களுக்கு உதவுவதே கிடையாது. முழு இருதயத்தோடு கீழ்ப்படிபவர்களுக்கே அவர் உதவுவார் (எரேமியா.29:11-13). தன்னை கனம் பண்ணுகிறவர்களைத் தேவன் நிச்சயம் கனம் பண்ணுவார்!

கடந்த காலத்தில் தோல்வியுற்றதைக் குற்றப்படுத்துவதற்காக யாரையும் சாடி இச்செய்தி எழுதப்படவில்லை. ஜீவனுள்ள சபையில்

*இறந்த காலத்தை அல்ல, இனி வரும் எதிர்காலத்தையே பேசுகிறோம்!. கடந்த காலத்திற்கு தேவனிடம் மன்னிப்பு உண்டு. "ஆனால்" அதுவும் நாம் வருங்காலத்தில் அவருக்குப் பயந்து, கடனற்ற வாழ்க்கை வாழ தீர்மானம் கொண்டவர்களையே அவர் மன்னிக்கிறார் (சங்கீதம். 130:4).*

*கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ, அவன் கேட்கக்கடவன்!*

# 9

## சபையில் அக்கினி பற்றியெரிய வேண்டும்!

"*நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறாரே" (எபிரெயர்.12:29) என்பதும் தேவனுக்குரிய ஓர் முக்கியமான குணாதிசயமேயாகும்!*

*நாம் பொதுவாய்* "**தேவன் அன்பாகவே இருக்கிறார்**" *என்ற வசனப் பலகை அநேக வீடுகளில் தொங்க விட்டிருப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால்,* "**தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார்**" *என்ற வசனப் பலகையை எங்காவது கண்டிருக்கிறோமா? அநேகமாய் நாம் கண்டிருக்க முடியாது! ஏனென்றால், தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார் என சிந்திப்பது நமக்கு விருப்பமாய் இருப்பதில்லை. ஆகிலும் இந்த இரு வசனங்களுமே புதிய ஏற்பாட்டில்தான் உள்ளது. நாம் வேத வாக்கியத்தின் முழுமையையும் ஏற்றுக்கொள்ளாவிட்டால், தேவனைக்குறித்து நாம் கொண்டிருக்கும் சத்தியம் சமநிலை அற்றதாகவே மாறிவிடும். அதைத் தொடர்ந்து நம் கிறிஸ்தவ ஜீவியமும் சமநிலை அற்றதாகவேமாறி...... முடிவில் ஓர் மாம்சீகக் கிறிஸ்தவர்களாகவே நாம் முற்றுப்பெறுவோம்!*

*ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில், "சீயோனில் உள்ள பாவிகள் திகைக்கிறார்கள்;* **மாயக்காரரை** (HYPOCRITES) *நடுக்கம் பிடிக்கிறது; பட்சிக்கும் அக்கினிக்கு முன்பாக நம்மில் தரித்திருப்பவன் யார்? நித்திய ஜூவாலைக்கு முன்பாக நம்மில் தாபரிப்பவன் (தொடர்ந்து இருப்பவன்) யார்? என்கிறார்கள். நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் (அநீதி) செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை (லஞ்சம்) வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தம் சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் (புறங்கூறுதலைக் கேளாதபடிக்கு) தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் (தீமையானவைகளைக்) காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவன் எவனோ அவனே* **சீயோனில் வாசம் பண்ணுவான்**" *என வாசிக்கிறோம் (ஏசாயா* ***33:14,15****).*

*பார்த்தீர்களா, சீயோனில் (சபையில்) பாவிகளும், மாய்மாலக் காரர்களும் இருந்தார்கள் என வாசிக்கிறோமே! அதே வேளையில்* “**பட்சிக்கும் அக்கினிக்கு** *முன்பாக சீயோனில் தரித்திருப்பவன் யார்?” என்றும் இந்த வசனம் கேள்வி தொடுப்பதை நாம் காண்கிறோம். ஒரு சபையில் ஆண்டவர் மெய்யாகவே இருப்பாரென்றால், அங்கு பட்சிக்கும் அக்கினியும் இருக்கும்... எல்லா நேரங்களிலும் தொடர்ச் சியாய் எரிந்து கொண்டிருக்கும் நித்திய ஜூவாலையும் இருக்கும்!!*

*இன்று தங்களை* “**புதிய ஏற்பாட்டின் சபைகள்**” *என கூறிக்கொள் பவர்கள் எடுத்துரைக்கும் சான்றுகள் என்ன தெரியுமா? விசுவாசிகளின் முழுக்கு ஞானஸ்நானம்... அந்நிய பாஷைகள் பேசுதல்....... துதி ஆராதனைகள்...... வாரந்தோறும் அப்பம் பிட்குதல்...... இன்னும் இது போன்ற பலகாரியங்களை சான்றுகளாய் கூறுகிறார்கள். ஆனால் இவைகளில் ஒன்றுகூட புதிய ஏற்பாட்டு சபையை சுட்டிகாட்டும் அடையாளம் அல்லவே அல்ல! கேளுங்கள், பழைய ஏற்பாட்டின் ஆசாரிப்புக் கூடாரத்தைப் போலவே கானானியர்களும் செய்துவிட முடியும்! ஆனால், அந்த மகா பரிசுத்த ஸ்தலத்தின் மீது தங்கியிருந்த* **அக்கினி ஸ்தம்பத்தையோ** *(ஷெகினா மகிமையையோ) அவர்களால் ஒருக்காலும் கொண்டுவந்துவிட முடியாது!! இன்றும் அதைப் போலவே, ஓர் மாம்சீகமான எந்த சபையும், புதிய ஏற்பாட்டு சபையின் வெளியரங்கமான தோற்றத்தையும் உபதேசங்களையும் கொண்டு வந்துவிட முடியும்......*

> **ஆனால், ஜீவனுள்ள தேவனுடைய சபையின் எக்காலத்தும் மாறாத அடையாளமாய் இருப்பதெல்லாம் பட்சிக்கும் அக்கினியின் நடுவில் வாசம் செய்யும் தேவனுடைய சமூகமேயாகும்! அந்த அக்கினியோ பாவிகளை திகைக்கச்செய்து, மாய்மாலக்காரர்களை நடுங்கச்செய்கிறது!!**

*நம்முடைய சபையை விட்டு மாய்மாலக்காரர்களும், மாம்சீக எண்ணங்கொண்டவர்களும் “இவ்வளவு உயர்ந்த சபையின் தரத்தின்படி வாழமுடியாது” என குறைகூறி விலகிச்செல்லும்போது, அதனிமித்தம் நான் ஆச்சரியப்படுவதே இல்லை. ஏனென்றால், தேவன் நம் மத்தியில் ஓர் பட்சிக்கும் அக்கினியாய் இன்னமும் தொடர்ந்து இருக்கிறார் என்பதற்கு, இதுபோன்றவர்கள் விலகிச்செல்வதே ஓர் நல்ல நிரூபணமாய் இருக்கிறது. ஆம், மாய்மாலக்காரர்கள் விலகிச் செல்வது ஓர் மங்களம் நிறைந்த அடையாளமேயாகும்! ஏனென்றால், அன்று சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தீனாவிலிருந்த ஆண்டவருக்கு முன்பாக அதுபோன்ற ஜனங்கள் நிற்க முடியவில்லை! அதுபோலவே ஆண்டவருடைய சமூகம் இருக்கும் ஓர் சபையில்* **இன்றும்** *இவர்கள்*

நின்றிட முடியாது!! இதனிமித்தம், தேவன் அந்த சபையில் வல்லமையாய் கிரியை செய்கிறார் என்றுகூட நாம் கூறிட முடியும்.

ஆனால் அதேசமயம் ஆவிக்குரிய மனதுடைய, தெய்வபயம் நிறைந்த ஜனங்கள் ஒரு சபையை விட்டு விலகினால், அந்த சபை 'உட்கார்ந்து' தன்னுடைய நிலையைக்குறித்து கூர்ந்து ஆராய வேண்டும்! இது எப்படி என்றால், முதல் தரமான மாணவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தை விட்டு அந்த வீதியிலேயே இருக்கும் மற்றொரு பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு ஒப்பாகும்! இவ்வித நிலையில், அந்த முதல் பள்ளிக்கூடம் "இவர்கள் ஏன் நம் பள்ளிக்கூடத்திலிருந்து சென்றார்கள்?" என்ற கேள்வியை தங்களுக்குள் கேட்டுப் பார்க்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

தேவனுடைய அக்கினி நம் மத்தியில் ஜுவாலையுடன் எரியாவிட்டால், அநேக ஜனங்கள் இன்னமும் நம்மோடு "தொடர்ந்து" இருக்கத்தான் செய்வார்கள். நம்முடைய சபைகளில் இன்றும் சில பெருமைக்காரர்களும், உண்மையற்ற மாய்மாலக்காரர்களும் இருக்க முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் நான் தேவனாய் இல்லாதபடியால், அவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது! ஆனால் ஒன்றை நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். அது என்னவெனில்,

> **தேவன் நம் மத்தியில் ஓர் பட்சிக்கும் அக்கினியாய் தொடர்ந்து வாசம் செய்வாரென்றால், "மாய்மாலக்காரர்கள் மனந்திரும்பி, தங்கள் காரியத்தை சரிசெய்யாத பட்சத்தில்" என்றாவது ஒருநாள் அவர்கள் வெளியரங்கமாக்கப்பட்டு சபையை விட்டே வெளியேற வேண்டியதாய் இருக்கும்!**

ஏனெனில், "பாவிகள் நீதிமான்களின் சபையில் நிலை நிற்பதில்லை" என்றல்லவா வேதம் கூறுகிறது (சங்.1:5). பரிசேயர்கள் கூடியிருக்கும் ஓர் இடமல்ல...... **தாழ்மையும் தெய்வ பயமும் நிறைந்த ஜனங்களே** நீதிமான்களின் சபையாய் இருக்கிறார்கள். இந்த வசனத்திற்கு தேவன் ஒருபோதும் பாரபட்சம் காட்டுவதேயில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் நாம் காண்கிறபடி, மாய்மாலக்காரர்களாய் இருக்கும் மூப்பர்களைக் கூட தேவன் ஒருநாள் சபையில் வெளியரங்கமாக்குவார்!

தேவன் நீடிய பொறுமை கொண்டவர் என்பது உண்மையாய் இருந்தாலும், ஓர் நாளில் அவர் தன் பொறுமைக்கு நிச்சயமாய் முற்றுப் புள்ளி வைத்திடுவார். வேதம் கூறுகிறபடி, "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்" (2 கொரி 3:17). தேவன் தன்னுடைய சபையிலிருந்து பூரணமற்றவர்களையோ அல்லது பாவத்தால் தோற்கடிக்கப்பட்டவர்களையோ ஒருபோதும் அகற்றிடவே மாட்டார்! ஆனால் **உண்மையற்றவர்களை** அவர் நிச்சயமாய் அகற்றி விடுவார்!!

*ஓர் பட்சிக்கும் அக்கினியாய் இருக்கும் தேவனோடு நாம் வாசம் செய்வதற்குரிய* **முதல் தகுதி,** *"நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் (உண்மையானவைகளைப்) பேசுவதே ஆகும்" (ஏசாயா 33:15). அதாவது நம் தனிப்பட்ட ஜீவியத்தில் நாம் பெற்ற வெளிச்சத்திற்கு ஏற்ப உண்மையாய் நடப்பதே இதன் பொருளாகும். நாம் ஒருக்காலும் மாய்மாலக்காரர்களாக இருக்கவே கூடாது! நாமோ எக்காலத்தும் உண்மையுள்ளவர்களாகவே இருந்திட வேண்டும்!!*

**சபையில் வேறு எதைக் காட்டிலும் நாம் அதிகமாய் பயந்திருக்க வேண்டியது என்னவென்றால், "உண்மைக்குப் புறம்பாக நம் ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறித்த கவர்ச்சியை ஜனங்களுக்குத் தருவதே ஆகும்".**

*உங்களிடம் ஜெப வாழ்க்கை மந்தமாய் இருக்கும் போது ஏதோ 'அதிகம் ஜெபிப்பவர்களாக' உங்களை ஜனங்களுக்கு முன் காட்டுகிறீர்களா? நீங்கள் உண்மையில் உபவாசிக்காதபடி இருந்து கொண்டு...... ஏதோ 'அதிகமாய் உபவாசிப்பதைப்போல்' ஜனங்களுக்கு முன் காட்டுகிறீர்களா? நீங்கள் மிகவும் பண ஆசை கொண்டவர்களாய் வாழ்ந்து கொண்டு...... 'பண ஆசையிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றவர்' என ஜனங்கள் கருதிட நீங்கள் விருப்பம் கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் வீழ்ச்சியடையும் அபாய முனையில் நின்று கொண்டிருக்கிறீர்கள்! ஆம், நீங்கள் பூரணமற்றவர்கள் என்பதற்காக அல்ல, நீங்கள்* **உண்மையற்றவர்களாய்** *இருப்பதினிமித்தமே இந்த நிலையாகும்!! எல்லாவற்றிற்கும் முதலாக "உள்ளத்தில் உண்மை இருக்கவே தேவன் விரும்புகிறார்" (சங் 51:6). ஆகவே, சீயோனிலே மாய்மாலக்காரர்களுக்கு நடுக்கம் பிடித்தற்கு ஒரே காரணம், "தாங்கள் வெளியரங்கமாக்கப்படுவோம்" என்ற அச்சமேயாகும்!*

*பட்சிக்கும் அக்கினியான தேவனோடு வாசம் செய்வதற்கான* **இரண்டாவது தகுதி** *"அநீதியாய் பெற்றிடும் ஆதாயத்தை வெறுப்பதே ஆகும்" (ஏசா.33:15). அதாவது* **பண விஷயத்தில்** *நீதியாகவும், உண்மையாகவும் நடந்து கொள்வதே இதன் பொருளாகும். தேவனுக்கு அடுத்ததாக இருக்கும் எஜமான் "சாத்தான்" என நாம் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் இயேசு இதைக்குறித்து கூறும்போது,* **தேவனுக்கு அடுத்த எஜமான் "உலகப் பொருள்"** *என்றே குறிப்பிட்டார் (லூக்.26:13). நாம் தேவனையும் சாத்தானையும் ஒரே நேரத்தில் அன்புகூர முடியும் என "ஒரு விசுவாசி கூட" சிந்திக்கத் துணியமாட்டான். ஆனால் அதற்குப் பதிலாக, இன்று எண்ணற்ற விசுவாசிகள் தாங்கள் பணத்தையும் தேவனையும் ஒரே நேரத்தில் அன்புகூர முடியும் என மிக எளிதில் தங்களுக்குள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு விசுவாசியும் தாழ விழுந்து சாத்தானை ஆராதிக்கமாட்டார்கள்! ஆனால், இன்று பல்லாயிரக்கணக்கான*

விசுவாசிகள் 'உலகப் பொருட்களை' ஆராதனை செய்து கொண்டு...... அதேசமயம் தேவனுக்கும் ஆராதனை செய்ய முடியும் என துணிந்து எண்ணுகிறார்கள்! ஆம் இவர்கள் பணத்தை நேசித்தால் தேவனை ஒருக்காலும் தொழுது கொள்ளவே முடியாது.

**ஜீவனுள்ள தேவனை விட்டு உலகப் பொருட்கள் தங்களைப் பிரிக்கிறது என்பதை இவர்கள் இன்னமும் அறியாமலேதான் இருக்கிறார்கள்!!**

ஓர் பட்சிக்கும் அக்கினியாயிருக்கும் தேவனோடு வாசம் செய்வதற்குறிய **மூன்றாவது தகுதி** "இரத்தம் சிந்துவதற்கான யோசனை களைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்துக் கொள்வதேயாகும்" (ஏசாயா 33:15). இதன் பொருள், **புறங்கூறுவதைக் கேட்பதற்குக்கூட விருப்பமற்றவர்களாய்** இருப்பதேயாகும். தெய்வபயம் கொண்டதோர் மனுஷன், "சகோதரர்களைக் குற்றம் சாட்டுகிறவனுக்கு" மாத்திர மல்லாமல் (வெளி 12:10), அந்த பிரதான குற்றம் சாட்டுகிறவனின் "ஏஜெண்டுகளுக்கும்" தங்கள் செவிகளை அடைத்துக் கொள்வார்கள்!

இன்று நாம் வானத்திலிருந்து இந்த பூமியைப் பார்க்க முடியு மென்றால், பல கோடி மக்கள் தங்களுக்கு அடுத்தவர்களை ஒவ்வொரு நாளும் தாங்கள் செல்லும் இடங்களிளெல்லாம் தங்கள் நாவினால் அவர்களை அழித்துக் கொண்டிருப்பதையே நாம் காணமுடியும். நீங்கள், ஓர் பட்சிக்கும் அக்கினியாய் இருக்கும் தேவனோடு வாசம் செய்ய விரும்புகிறவர்களாக இருந்தால் இதுபோன்ற குற்றச் சாட்டுகளைக் கேளாதபடி உங்களை நீங்கள் கட்டுப்படுத்துகிற வர்களாய் இருக்கவேண்டும். ஒரு இக்கட்டான சூழ்நிலையில் உங்களிடம் குற்றம் சாட்டிப் பேசிக்கொண்டிருப்பவர்களின் அறையை விட்டு நீங்கள் வெளியே போகமுடியவில்லையென்றால், அவரை கவனித்துக் கேட்கும் உங்கள் "மனதின் ஸ்விட்சை" அணைத்து விடுங்கள். இவ்வாறு உள்ளே இருக்கும் "மனதின் ஸ்விட்சை" அணைக்கும் திறனை நம் யாவருக்கும் தேவன் தந்திருக்கிறார். அதை நீங்கள் செய்துவிடுங்கள்! 'உங்கள் செவிகளால்' இரத்தம் சிந்துவதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். உங்களைச் சூழ இருக்கும் ஜனங்கள் கறைபட்டவர்களாய் இருந்து விட்டுப் போகட்டும்...... நீங்கள் ஏன் உங்கள் வாழ்க்கையில் தங்கியிருக்கும் தேவகிருபையை இழக்க வேண்டும்? தேவனோடு வாசம் செய்யும் வாழ்க்கையில் நீங்கள் மெய்யாகவே அக்கறை கொண்டிருந்தால், இவ்வித எல்லா புறங்கூறுதலுக்கும், குற்றஞ்சாட்டுதலுக்கும் கவனித்து கேட்பதை நிறுத்தி விடுங்கள்!

பட்சிக்கும் அக்கினியாய் இருக்கும் தேவனோடு வாசம்

*செய்வதற்குரிய* **நான்காவது தகுதி** *"பொல்லாப்பைக் காணாதபடிக்கு நம் கண்களை மூடுவதேயாகும்" (ஏசா.33:15).* கேட்பதும், பார்ப்பதுமாகிய இந்த இரண்டுவிதமான சரீர உணர்வுகள் மூலமாகவே நன்மையும் தீமையும் நம் மனதிற்குள் நுழையும் வாய்ப்பு இருக்கிறது! எவை நம் மனதிற்குள் நுழைந்திட அனுமதிக்க வேண்டும்? என்பதை நாம்தான் தீர்மானம் செய்திட வேண்டும். தேவனோடு வாழும் ஒருவன் தன் மனதையோ அல்லது ஆவியையோ கறைப்படுத்தும் யாதொன்றையும் பார்க்கவோ அல்லது கேட்கவோ அல்லது வாசிக்கவோ கூடாது!

இவ்வாறு மேற்கண்ட லௌகீகமானவைகளை உங்கள் ஜீவியத்தை விட்டு எரித்துவிடுவதற்கு தேவனுக்கு நீங்கள் இடம் கொடுத்தால் மாத்திரமே, ஓர் பட்சிக்கும் அக்கினியாய் இருக்கும் தேவனோடு நீங்கள் வாழ்ந்திட முடியும்! இப்போது உங்களுக்குள் எஞ்சி இருப்பவைகள் யாவும் "எரிக்கப்பட முடியாதவைகள்" மாத்திரமேயாகும்!!

**ஆம், தங்களுக்குள் எரிக்கப்படவேண்டிய யாதொன்றையும் மீதியாய் வைத்திராத ஜனங்களைக் கொண்டே தேவன் தன் பரலோகத்தை நிரப்பவிரும்புகிறார்!**

இவ்வாறாகவே தேவன் நம்மை பரலோகத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். "விண் மகிமை இறங்கி என் ஆத்துமாவை நிறைத்தது!" எனப் பாடுகிறோமே, அதன் பொருள் என்ன? ஆம், பட்சிக்கும் அக்கினி என் ஆத்துமாவில் இறங்கி, எரிக்கப்பட வேண்டிய அனைத்தையும் எரித்துவிடுவதே அதன் பொருளாகும்! நீங்கள் ஆண்டவரிடத்தில் திரும்பி, உங்களை மனப்பூர்வமாய், "ஆண்டவரே! நீரும் நானும் எக்காலத்தும் ஐக்கியமாய் வாழ்வதற்கு எரிக்கப்பட முடியாதவைகள் மாத்திரமே என் வாழ்வில் எஞ்சியிருக்க நான் விரும்புகிறேன்" என உங்களால் கூறிட முடியுமா?

கடைசிநாளிலே, ஆண்டவர் எல்லாவற்றையும் தன்னுடைய **அக்கினியினால் சோதிப்பார்** என 1 கொரிந்தியர் 3:11-15 வசனங்கள் கூறுகிறது. அந்நாளில் எரிவதற்கு ஏதுவான மரம், வைக்கோல், புல் ஆகிய யாவும் எரிந்து அழிந்துவிடும். எரிந்திட முடியாத பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் மாத்திரமே நிலைத்து எஞ்சியிருக்கும்!

**இதுதான்** கடைசி நாளில் நிகழப்போகும் சம்பவமாய் இருந்தால், நாம் இன்றே **பரிசுத்த ஆவியின் அக்கினியை** நமக்குள் பெறுவது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்பதை எண்ணிப்பாருங்கள்! ஆம், அந்த நாளுக்கு முன்பாக "எரிக்கப்பட வேண்டிய அனைத்தும்" இப்போதே நம் வாழ்க்கையில் எரிந்து சாம்பலாகிட முடியுமே!!

இன்னும் 'எவையெல்லாம் எரிக்கப்பட வேண்டும்' என்பதை தேவனுடைய வார்த்தை வரிசைப்படுத்திக் குறிப்பிடவில்லை! இன்றைய உலகில் நாம் சந்திக்கும் தீமைகள் முதலாம் நூற்றாண்டில் இல்லாதபடியால் அவைகளை தேவனுடைய வார்த்தை குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆனால் அதற்குப் பதிலாய் நாம் பெற்ற பரிசுத்த ஆவியானவர் "இந்த காரியத்தை **கிறிஸ்துவின் ஐக்கியத்தோடு** நாம் செய்திட முடியுமா அல்லது முடியாதா?" என்பதை நமக்கு நிச்சயமாய் எடுத்துக் கூறுவார். மேலும் தொடர்ந்து, "எரிக்கப்பட வேண்டியவைகளையும்" அவர் நமக்கு சுட்டிக் காட்டுவார்!

ஆகவேதான், நாம் ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசுவதைக் கேட்பதற்குரிய உணர்வுள்ளவர்களாய் இருப்பது மிகவும் அவசியமாய் இருக்கிறது. இவ்வாறு பரிசுத்த ஆவியானவருக்கு எப்போதும் செவிகொடுத்து, அதன்படி தெய்வபயத்துடன் துரிதமாய் செயல்படுகிறவர்கள் மாத்திரமே ஓர் பட்சிக்கும் அக்கினியாய் இருக்கும் தேவனோடு ஜீவித்திட முடியும்!!

**தேவன் நம்மோடு, தன் வார்த்தை மூலமாகவோ அல்லது பரிசுத்த ஆவியானவர் மூலமாகவோ அல்லது ஒரு சகோதரன் மூலமாகவோ அல்லது நம்மைப் பகைக்கும் "சத்துருவின்" மூலமாகவோ பேசி, அதனிமித்தம் 'நம்மைக்குறித்த உண்மையை' நாம் கேட்க வேண்டி யிருந்தால்...... நாம் என்ன செய்யப் போகிறோம்? நம்மை நியாயப்படுத்தத் துணிவோமா? அல்லது நம்மை நியாயம் தீர்த்திட ஆயத்தமாய் இருப்போமா?**

துல்லியமாய் நோயைக் கண்டுபிடிக்க இன்று "MRI - ஸ்கேன்" மருத்துவக்கருவி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியின் மூலமாய் சரீரத்தில் உள்ள நோயைக் கண்டுபிடிக்க பல ஆயிரங்கள் கட்டணம் செலுத்த வேண்டும். அவ்வாறு இருக்க, நம்முடைய இருதயத்தை யாரோ ஒருவர் இலவசமாய் "ஸ்கேன்" எடுத்துக் கூறிவிட்டால் அது நல்லதுதானே! அந்த ஸ்கேன் கருவியை, நம்மை வெறுக்கும் சத்துரு கொண்டு வந்து வைத்தாலும்...... உற்சாகமாய் கர்த்தரைத் துதித்து 'அந்த ஸ்கேனுக்கும்' நாம் மனப்பூர்வமாய் இணங்கக்கடவோம்! ஒருவேளை நம் இருதயத்தில் எந்த நோயும் இல்லாதிருந்தால், இவ்வித ஸ்கேன் மூலமாய் நாம் இழக்கப்போவது எதுவும் இல்லையே!!

ஒரு சமயம் அவபக்தியான அபிமலேக்கு என்ற புறஜாதி மனுஷன், ஆபிரகாம் சொன்ன பொய்யைக் கடிந்துகொண்டான் (ஆதி 20:9). இந்த ஆபிரகாமோ தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு தீர்க்கதரிசி! இருப்பினும், அவனுடைய பாவத்தினிமித்தம் ஒரு தேவனற்ற மனிதனால் அவர் கடிந்து கொள்ளப்பட வேண்டியதும்

*அவசியமாய் இருந்தது!! இன்று ஆபிரகாம் பரலோகத்திலிருக்கிறார் ...... அந்த அபிமலேக்கு ஒருவேளை நரகத்தில்கூட இருக்கலாம்! இருப்பினும், அந்த நாளில் "இந்த அபிமலேக்குதான்" ஆபிரகாம் தன்னுடைய பாவத்தைக் காண்பதற்கு உதவி செய்தான்!!*

*காரியம் இவ்வாறு இருப்பதால், நம்மை நாமே தாழ்த்தக் கடவோம்! ஒருவேளை ஒரு அஞ்ஞானிகூட உங்கள் வாழ்க்கையில் ஒன்றைக் காணும்படி உதவி செய்து, அதினிமித்தம் உங்களுக்குள் இருந்த ஏதோ ஒரு தீயப்பழக்கத்தை உங்கள் இருதயத்திலிருந்து நீங்கள் கழுவிக்கொள்ள முடியுமே!!*

*நீங்கள் தாழ்மையுள்ளவர்களா? பெருமையுள்ளவர்களா? என்பதே காரியத்தின் கடைத்தொகை:*

*பட்சிக்கும் அக்கினி சுட்டெரிக்க வேண்டிய ஏராளமான பகுதிகளை நாம் உற்று கவனிக்கும்போது, தேவனுக்கு முன்பாக* **இருவகை ஜனங்கள் மாத்திரமே** *தொகையாகப் பிரிக்கப்பட்டிருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும். சரியாய் செய்தவர்கள் யார்? தவறு செய்தவர்கள் யார்? என்ற இருவகையல்ல! மாறாக,* **தாழ்மையில்** *இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள்! பெருமையில் சாத்தானைப் பின்பற்றுகிறவர்கள்!!*

*எனவே நாம் என்ன சொல்லுவோம்? "நம் இருதயத்திலிருக்கும் பெருமையையே" தேவன் தன்னுடைய பட்சிக்கும் அக்கினியினால் பிரதானமாகச் சுட்டெரிக்க விரும்புகிறார். ஆம், பெருமையும் அகங்காரமும் கொண்டவர்களையே தேவன் தன் சீயோன் பர்வதத்திலிருந்து அகற்றுவார்! இதை ஆண்டவர் கூறும்போது, "பெருமையைக் குறித்து களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கி விடுவேன்; இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ள மாட்டாய்" எனக்கூறினார் (செப்பனியா. 3:11). இந்த அவருடைய நடவடிக்கை முடிந்த பின்பு சபையில் மீதியாயிருப்பவர்கள் "சிறுமையும் எளிமையுமான ஜனமே" என அடுத்த வசனம் (வச. 12) கெம்பீரிக்கிறது! ஆம், இத்தகைய தாழ்மையுள்ளோர் கொண்ட சபையே சாத்தானை ஜெயித்து நிலைத்தோங்கும்!!*

*மானிடர்களாகிய நாம், ஜனங்கள் நன்மையைச் செய்தார்களா? அல்லது தீமையைச் செய்தார்களா? என்பதை வைத்துப் பொதுவாய் நியாயம் தீர்க்கிறோம். ஆனால், கடைசிநாளில், நன்மை செய்த அனேகர் "பெருமை கொண்டவர்களாய்" இருப்பதினிமித்தம் தேவனால் புறக்கணிக்கப்படுவதை நாம் காணப்போகிறோம்! இதைவிட ஆச்சரியமாய் நாம் காணப்போவது யாதெனில், தவறு செய்த அனேகர்*

தாழ்மையும், உண்மையும் கொண்டவர்களாய் இருந்ததினிமித்தம் தேவனால் மன்னிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள், என்பது தான்!!

இதற்கு உதாரணமாய், நாம் "சிறிய பாவம்" என கருதுவதைச் செய்த ஒருவனை தேவன் புறக்கணித்ததையும், நாம் "பெரிய பாவம்" என கருதுவதைச் செய்த ஒருவனையோ தேவன் ஏற்றுக்கொண்டதையும் பற்றிய நிகழ்ச்சியை நாம் இங்கு தியானிப்பது நல்லது!

**ராஜாவாகிய சவுலே** நாம் கருதும் "சிறிய பாவத்தைச்" செய்தவன்! தேவன் கூறியபடி அமலேக்கியரின் எல்லா ஆடுகளையும் கொல்லாமல், அவனோ மோசமான ஆடுகளை மாத்திரமே கொன்று, நல்ல ஆடுகளைத் தேவனுக்குப் பலி செலுத்த உயிருடன் வைத்திருந்தான். இதற்காகப்போய் நீங்கள் சவுலை குற்றப்படுத்துவீர்களா? நீங்கள் ஒரு வேளை இதைக் குற்றப்படுத்த மாட்டீர்கள்! ஆனால் தேவனோ அதைக் குற்றப்படுத்திவிட்டார்!! சவுலை உடனடியாக விலக்கி, அவனிட மிருந்து ராஜ்ஜியத்தையும் எடுத்துக்கொண்டார்!!

இதன் மறுபுறமாக, **தாவீது ராஜா** செய்ததைப் பாருங்கள். ஒரு மனுஷன் ஊரில் இல்லாதிருந்தபோது (அவன் தாவீதின் சேனையில் யுத்தத்திற்கு சென்றிருந்தான்) அவனுடைய மனைவியினிடத்தில் இந்த தாவீது விபச்சாரம் செய்தான்! மேலும், தன்னுடைய பாவத்தை மறைப் பதற்காக, அவளுடைய கணவனை போர்க்களத்தில் கொலையாகும் படிச் செய்துவிட்டு அவனுடைய மனைவியை மணந்து கொண்டான்!! இத்தகைய தாவீதுக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் ஒருவேளை, அவனை உடனே நரகத்திற்கு ஆக்கினைத்தீர்ப்பு செய்திடக்கூடும். ஆனால் தேவனோ அவ்வாறு அவனுக்குச் செய்யவில்லை! ஆம், அவருடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல!! **தேவனுடைய வழிகளை** நம்முடைய மனுஷீக காரணங்களால் ஆராய்ந்து முடியாது!! ஜனத்தை "பெருமை கொண்டவர்கள்" (உண்மையற்றவர்கள்) என்றும், "தாழ்மை கொண்டவர்கள்" (உண்மையுள்ளவர்கள்) என்றும் பிரித்துப் பார்க்கும் தேவன், தாவீதை அவனுடைய பாவத்தினிமித்தம் அவனைத் **தண்டித்த பின்பு...... அவனை ஏற்றுக் கொண்டார்!!**

அது மாத்திரமல்ல, தேவன் தாவீதைத் "தன் இருதயத்துக்கு ஏற்றவன்" என அழைத்து, "அவன் தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின் படி அவருக்கு ஊழியம் செய்தான்" என்றும் கூறினார்!! (அப். 13:22,23)

**தாவீதின் முடிவு, சவுலின் முடிவைப்போல் சம்பவிக்கவில்லை... அதற்கு ஒரே காரணம், தாவீது தாழ்மையுள்ளவனாயிருந்தான்!! என்பதேயாகும்.**

கிறிஸ்தவர்களின் வீழ்ச்சியையும், கிறிஸ்தவத் தலைவர்களின்

*வீழ்ச்சியையும் நான் உற்று நோக்கும்போது, சிலரை வெளியரங்கமாக்கத் தேவன் அனுமதிப்பதையும், சிலரை அவ்வாறு வெளியரங்கமாக்கா திருப்பதையும் கவனித்திருக்கிறேன். சிலருடைய குற்றங்கள் மிகச் சிறியதாய் (மனுஷர் பார்வையில்) இருந்தபோதும்கூட, அவைகள் வெளியரங்கமாக்கப்பட்டு மற்றவர்களுக்கு முன்பாக சிறுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்! ஆனால் வேறு சிலருடைய குற்றங்களையோ (நான் நம்பிக்கை பூர்வமாய் அறிந்துகொண்ட அவர்களின் பெரிய பாவங் களையோ) தேவன் வெளிப்படுத்தாமலே விட்டுவிட்டார்!! இவ்வாறு தேவன் அவர்களின் வீழ்ச்சியை மூடியது மாத்திரமல்லாமல், அவர்களை ஆசீர்வதித்து அவர்களை வல்லமையாயும் பயன்படுத்துகிறார்!! அது ஏன்...... ஏன்?*

**இது நமக்கு ஒருவேளை நியாயமற்றதுபோல் தோன்றலாம்! ஆனால், அப்படி அல்லவே அல்ல. ஏனென்றால், தேவன் பிரதானமாய் காண்பதெல்லாம் ஒரு மனிதன் தாழ்மையுள்ளவனா? அல்லது பெருமை கொண்டவனா? என்பது மாத்திரமேயாகும். ஆகவே, அவர் பெருமை கொண்ட, மாய்மாலக்காரனை அம்பலப்படுத்தி...... தாழ்மை கொண்ட உண்மை உள்ளம் கொண்டவனின் பாவத்தையோ மூடிவிடுகிறார்!!**

*“யார் செய்தது சரி?” “யார் செய்தது தவறு?” என தேவன் இரு வகையாய் ஜனங்களைப் பிரிக்காமல் “தாழ்மை உள்ளவர்கள் யார்?” “பெருமை கொண்டவர்கள் யார்?” என்றே இருவகையாகப் பிரித்துப் பார்க்கிறார்! இந்த நல்ல ஆண்டவருக்கே சதாகாலமும் ஸ்தோத்திரம் உண்டாவதாக! ஏனெனில், இதுவே நம் யாவருக்கும் மிகுந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தருவதாய் இருக்கிறது! ஜனங்கள் பிரித்துப் பார்ப்பது போல் தேவன் நம்மை பிரிப்பாரென்றால்? “எங்கே தடுமாறி தவறு செய்யும் குழுவோடு சேர்ந்து விடுவோமோ?” என்ற தொடர்ச்சியான அச்சத்தோடுதான் நாம் ஜீவிக்க வேண்டியதாய் இருக்கும்! ஏனென்றால், நாம் யாவருமே தவறு செய்கிறவர்களாகத்தான் இருக்கிறோம். குறைந்தபட்சமாய், அவ்வித தவறுகளை நாம் வேண்டு மென்றே செய்யாவிட்டாலும் “தற்செயலாய்” தவறு செய்து விடுகிறோமே!*

*ஏதேனும் “ஒரு தவறு செய்தால்கூட” ...... அப்பப்பா, மனுஷர்கள் நம்மீது கடினமாய் படையெடுத்து விடுகிறார்கள்! இருந்தாலென்ன....... முடிவில் நாம் இவ்வித இரக்கமற்ற மனிதர்களோடு இடைபட வேண்டியதாயிராமல்...... இரக்கமுள்ள நம் சிருஷ்டிகராகிய தேவனிடம் மாத்திரமே இடைபட்டு “அவருக்கு மாத்திரமே” நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருப்பதால், தேவனை ஸ்தோத்தரிக்கக் கடவோம் (எபி. 4:13). ஆம், நீங்கள் மாத்திரம் எப்போதும் தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட்டு நொறுங்கி வாழுங்கள்! மற்றவர்களைக்*

காட்டிலும் உங்களை மேன்மையானவர்களாய் ஒருபோதும் எண்ணாதிருங்கள்! அதற்கு மாறாக, நீங்கள்தான் பாவிகளுக்கெல்லாம் பிரதான பாவி என்ற உணர்வுடன் எப்போதும் இருங்கள்! ஒருவரையும் ஆளுகை செய்ய நாடாமலும், இப்பூமிக்குரிய யாதொன்றையும் (அது ஊழியமேயானாலும்) பற்றி பறித்துக் கொள்ளவும் நாடாதிருங்கள்! நீங்களோ, மற்றவர்களுக்காக "இரண்டு மைல்" நடப்பதற்கும் ஆயத்தமாய் இருங்கள்! உங்களுக்கு மாபெரும் தீமை இழைத்த மனுஷர்களையும் மன்னிப்பதற்கு ஆயத்தமாயிருங்கள்!...... **அதுபோதும்,** உங்கள் தோல்விகள் எதுவாயிருந்தாலும் அவைகளைத் தேவனே மூடிவிட்டு உங்களைத் தொடர்ந்து ஆசீர்வதிப்பார்! இவ்வேளையில் மனுஷர்கள் நம்மைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள் அல்லது நம் முதுகிற்குப்பின்பாய் என்ன பேசுகிறார்கள் என்பதெல்லாம் தேவனுக்கு ஒரு பொருட்டு அல்ல!!

ஆங்கில வேதாகமம் கூறுகிறபடி, வேலைக்காரர்கள் "நியாயமற்ற எஜமான்களுக்கும்" (Unreasonable Masters) அடங்கி இருக்க வேண்டும்! (1பேதுரு 2:18,19). பார்த்தீர்களா, நாம் இந்த உலகத்தில் வாழும் காலம் வரை "நியாயமற்ற ஜனங்களையே" எப்போதும் சந்திக்க வேண்டியதாய் இருக்கிறது. நியாயமான ஜனங்களோடு மாத்திரமே நம்மால் ஜீவிக்க முடியுமென்றால், இயேசுவின் சீஷர்களாய் இருப்பதற்கு நாம் துளியளவு கூட தகுதியற்றவர்கள்!

**ஏனெனில், நியாயமற்ற ஜனங்களால் நாம் கரடு முரடாய் நடத்தப்படுவதின் மூலமாகவே, தேவன் நம்முடைய "பெருமைகளை" எரித்து அழிக்கிறார்!**

இதுபோன்ற ஜனங்களின் கையில் நாம் பாடுபட்டு, அந்த பாடுகளை மிகுந்த பொறுமையுடன் சகித்திருப்போமென்றால் மாத்திரமே, தேவன் நம்மிடத்தில் மகிழ்ச்சியாயிருப்பார். ஏனெனில், இதேபோல்தான் இயேசுவும் பாடுபட்டார்!! நாம் ஏதாகிலும் தவறு செய்து அதனிமித்தம் வரும் பாடுகளில் பொறுமையாக இருந்தால், அதில் எந்த கீர்த்தியும் இல்லையே! ஆம், அவ்வேளையில் தேவனிடமிருந்து நமக்கு கிடைக்கும் மதிப்பெண் "பூஜ்யமே" ஆகும். இதற்குப்போய் நாம் எவ்வாறு தேவனிடம் மதிப்பெண்கள் வாங்க முடியும்? ஆனால், நம்முடைய அலுவலகத் திலோ அல்லது சபையிலோ அல்லது வேறு எந்த ஸ்தலத்திலோ நாம் நன்மை செய்து பாடுபடும் போது பொறுமையோடே சகித்தால், அதினிமித்தம் தேவன் நம்மீது 'பிரியமாய் இருப்பார்' என்றே 1 பேதுரு 2:20 கூறுகிறது. "நான் உன்னிடம் பிரியமாய் இருக்கிறேன்" என்ற தேவனுடைய அங்கீகரிக்கும் வார்த்தைதான் எத்தனை பரவசம் நிறைந்ததாய்

*இருக்கிறது! இயேசுவைக் குறித்து தேவன் கூறும்போது "இவர் என் நேசக்குமாரன், இவரில் நான் 'மிகவும்' பிரியமாயிருக்கிறேன்* (Well Pleased)" *என்றே கூறினார். அதேபோலவே, அவர் நம்மைக் குறித்தும் கூறுவார் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை!*

**"தாழ்மைக்குத்தான்" தேவன் எவ்வளவாய் மதிப்பு வைத்திருக்கிறார்!** *இதை 1 பேதுரு 3:4 கூறும் போது "சாந்தமும் அமைதலும் உள்ள ஆவி ஒரு ஸ்திரீயினிடத்திலோ அல்லது ஒரு புருஷனிடத்திலோ காணப் பட்டால், அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது!" என்ற வசனம்தான் சங்கநாதமாய் ஒலிக்கிறதே!! தாழ்மையும், சாந்த இருதயமும் கொண்டவராகவே இயேசு இருந்தார். அது மாத்திர மல்லாமல், தன்னிடமுள்ள இந்த திவ்விய சுபாவத்தை சகோதர சகோதரிகளாகிய நாம் அவரிடம் வந்து கற்றுக்கொள்ளும்படியும் அழைத்தார்! (மத்தேயு.11:28).*

*சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியின் அர்த்தம் என்ன? ஆம், ஒரு போதும் எதிர்ப்பில்லாததும் அல்லது ஒருபோதும் அமைதி இழக்காதது மான தன்மையே சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகும். சில 'வாஷிங் மெஷினில்' இந்த 'எதிர்த்துப் போராடும் கருவி'* (Agitator) *பொருத்தப்பட்டுள்ளது! அது தொடர்ச்சியாக இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் திரும்பி சுழன்று கொண்டேயிருக்கும்! இவ்வாறு சற்றேனும் அமைதியாய் இராமல் அந்தக் கருவி எப்பொழுதும் எதிர்த்து* (Agitating) *சுழன்று கொண்டேயிருக்கும்! ஆம், யாராகிலும் சிலர் அவர்களுக்குத் தவறு செய்து உரசல் ஏற்படுத்திவிட்டால் "இவர்களின் எதிர்ப்புக் கருவி" இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் எதிர்த்து சுழல ஆரம்பித்துவிடும்!!*

**ஆனால் தங்கள் ஆவியில் தாழ்மையையும் சாந்தத்தையும் பெற்றவர்கள், இந்த "எதிர்ப்புக் கருவியை"** (Agitator) **சிலுவையில் அறைந்து, அதின் பிடியிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றிருப்பார்கள்!**

*எனவே மற்றவர்கள் எதைச் செய்தாலும் அல்லது செய்யாமல் போனாலும், அதனிமித்தம் இவர்கள் ஒருபோதும் பாதிக்கப்படவோ அல்லது மனம் புண்படவோ மாட்டார்கள்.*

*இதைக் குறித்து 1 பேதுரு 3-ம் அதிகாரம் தொடர்ந்து கூறும்போது "சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியின் அலங்காரம்" அழியாத அலங்கரிப்பாய் இருக்கிறது! என வியப்புடன் எடுத்துரைக்கிறது. இவ்வுலகத்திலுள்ள பெண்கள் "தலை நரைத்துப்போனாலும்கூட" தங்களை இளமையும் அழகும் உடையவர்களாய் காட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால்* **"அழியாத அலங்கரிப்பின்"** *மெய் ரகசியத்தை இன்று கேளுங்கள்...... ஆம்,* **சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியே**

*என்றென்றும் அழியாத அலங்கரிப்பாய் இருக்கிறது!! இந்த உண்மையை எத்தனை ஸ்திரீகள் (அல்லது புருஷர்கள்) கண்டிருக்கிறார்கள்?*

*எக்காலத்தும் மதிப்புடையதாய் தேவன் காண்பதெல்லாம் "சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியே ஆகும்".*

**அதாவது, ஒருபோதும் 'எதிர்த்து' கொதிப்படையாத அல்லது மனம் புண்படாத, ஒருபோதும் மனநிம்மதி இழக்காத, ஒருபோதும் நீண்ட முகமாய் இராத அல்லது எரிச்சல் அடையாத...... அதற்கு பதிலாய் தனக்குத்தானே சுய அடக்கம் நிறைந்ததாய் இருப்பதே, இந்த சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியாகும்!**

*"எதிர்ப்பு கருவி கொண்ட" ஜனங்கள் இந்த உலகம் முழுவதும் இருந்துவிட்டுப் போகட்டும்! ஆனால் நாமோ, இந்த எதிர்ப்புக் கருவியை நிரந்தரமாய் சிலுவையில் அழித்து ஒழியச் செய்வோமாக! ஆ, அந்த நல்ல ஆண்டவருக்கே துதி உண்டாகட்டும்!!*

*எபிரெயர். 4:1-ல், நாம் இந்த* **எதிர்ப்புக் கருவியிலிருந்து** *(கொதிப்படைவதிலிருந்து) விடுதலை அடைந்து* **"இளைப்பாறுதலுக்குள்" (அமைதிக்குள்)** *பிரவேசியாமல் இருக்கும் நிலை ஏற்பட்டுவிடாதபடி பயந்திருக்கக்கடவோம் என புத்தி சொல்கிறது! மேலும் 11-ம் வசனத்தில் "நாம் இந்த இளைப்பாறுதலில் (சாந்தமுள்ள ஆவிக்குள்) பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்" என்றும் நாம் அழைக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.*

*இந்த இளைப்பாறுதலுக்குள் நீங்கள் பிரவேசித்து விட்டீர்களா? உங்களை ஏமாற்றிய, உங்களுக்கு தவறு செய்த யாவரையும் நீங்கள் மன்னித்து விட்டீர்களா? அவர்கள் மீது கொண்டிருந்த எல்லா மனக்கசப்புகளையும் உங்களை விட்டு அகற்றிவிட்டீர்களா? இப்போதோ, உங்கள் எல்லாப் பிரச்சனைகளையும் "நீதியாய் தீர்ப்பு செய்யும் தேவனிடத்தில்" மாத்திரமே ஒப்புவித்துவிட்டீர்களா?*

*நீங்கள் மெய்யாகவே ஒரு இயேசுவின் சீஷனாய் இருப்பீர்களென்றால் ரோமர் 8:28 கூறுகிற "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" என்ற வசனமும் 1 கொரி. 10:13 கூறுகிற "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடார்" என்ற வசனமும் உங்கள் வாழ்க்கையில் சம்பூரணமாய் நிறைவேறுவதற்கு எந்த ஒரு நபரும் அல்லது உலகத்திலுள்ள எந்த சூழ்நிலையும் தடையாய் இருந்திட ஒருக்காலும் முடியாது! ஆம், உங்கள் திராணிக்கு மேலாய் நீங்கள் ஒருபோதும் சோதிக்கப்படவே மாட்டீர்கள்! ஏனென்றால் அவ்விதமாய்*

*வாக்குரைத்த தேவன் மகா உண்மையுள்ளவர்! சகலமும்...... அதாவது 'ஒன்றும் பாக்கியில்லாது' சகலமும் உங்களுக்கு மிகுந்த நன்மைக்கு ஏதுவாகவே நடந்தேறும்!!*

*தேவன் நம்முடைய பெருமைகளை எரித்து மெய்யாகவே நம்மைத் தாழ்மையுள்ளவர்களாகச் செய்துவிட்டால், நாம் ஒருபோதும் வீழ்ச்சி யடையவே மாட்டோம்! அது ஏனென்றால்...... நம்முடைய முகம் 'தரைமட்டத்தில்' புழுதியில் பதிந்திருப்பதே அதற்கு காரணமாகும்! தரைமட்ட நிலையிலிருக்கும் ஒருவன் எவ்வாறு வீழ்ந்திட முடியும்? ஜான்பணியன் தன்னுடைய* **மோட்ச பயணத்தில்** *கூறும்போது "கீழே, புழுதியில் இருப்பவனுக்கு வீழ்ந்துவிடுவோம் என்ற அச்சத்திற்கு இடமேது?" எனக் கூறினார். நம்மைநாமே மீண்டுமாய் உயர்த்தும் போதுதான் நாம் வீழ்ச்சி அடைவோம். இவ்வாறு, "நம்மை வழுவாதபடி காக்க தேவன் வல்லவராய் இருக்கிறார்" என யூதா.24-ல் தேவன் வாக்குரைத்திருக்கிறாரே...... அதை எப்படி நிறைவேற்றுவார்?*

**ஆம், நம் பெருமைகளை எரித்து அவருக்கு முன்பாய் தாழ்வான புழுதிக்கு நம்மைக் கொண்டு வருவதின் மூலமாகவே நம்மை வழுவாதபடி (கீழே விழாதபடி) காக்கிறார்!**

*ஆனால், தேவன் இந்த ஒப்பற்ற கிரியையைத் தங்களுக்குள் செய்து நிறைவேற்றுவதற்கு அனுமதிக்காதவர்களோ திரும்பத் திரும்ப வீழ்ந்து கொண்டே இருப்பார்கள்!! ஓர் பட்சிக்கும் அக்கினியாயிருக்கும் நமது ஆண்டவர் நம் இருதயங்களின் மூலைகளில் ஒளிந்திருக்கும் மிகச்சிறிய பெருமைகளைக்கூட எரித்துவிடுவதற்கு ஆர்வம் உள்ளவராயிருக் கிறார்...... ஆனால், அந்த வல்லமையான கிரியையை நிறைவேற்று வதற்கு நம் இருதயத்தை அவருக்குத் திறந்து தந்திட நாம் ஆயத்தமாய் இருக்கிறோமா? அப்படியானால், ஏதாகிலும் ஒருவகையில் ஜனங்களையும், சூழ்நிலைகளையும் அவர் ஒழுங்குசெய்து நம்முடைய ஒவ்வொரு பெருமையையும் தன் அக்கினியால் சுட்டெரித்துவிடுவார்! அவருடைய இந்த மகா கிரியைக்கு நாம் ஒத்துழைக்கக்கடவோம்! அவருடைய தூய ஆவியானவர் நமக்குள் பூரண கிரியை செய்யும்படி அவருக்கு இடம் தரக்கடவோம்!!*

# 10

## தேவனுடைய சபையின் அருமை காண வேண்டும்!

“**கி**றிஸ்து சபையில் அன்புகூர்ந்து...... **தம்மைத் தாமே** அதற்காக ஒப்புக்கொடுத்தார்” என்ற ஆச்சரியமான வசனத்தை எபே.5:25-27 வசனங்களில் நாம் வாசிக்கிறோம்.

நம்மையே, அதாவது நம்முடைய ஜீவனை ‘எல்லோருக்கும்’ நாம் கொடுப்பதில்லை. ஆம், குறிப்பிட்ட ஒரு சிலருக்காக நம்முடைய சொந்த ஜீவனையும் தருவதற்கு நாம் ஆயத்தமாயிருக்க முடியும். உதாரணமாய் உங்கள் குழந்தை சாகும் தருவாயில், அது பிழைத்திட “சிறுநீரகம்” தேவையாயிருந்தால் நீங்கள் எவ்வித தயக்கமுமின்றி உங்கள் சிறுநீரகங்களில் ஒன்றை உங்கள் குழந்தைக்கென தானம் செய்யத் தயங்கமாட்டீர்கள். இவ்வாறு தருவது உங்கள் சொந்த ஜீவனுக்கே ‘ஆபத்தானதாய்’ இருந்தாலும் நீங்களோ அதைப்பொருட்படுத்தாமல் தந்துவிடுவீர்கள்! ஆனால் இதுபோன்ற செயலை நீங்கள் “யாரோ ஒருவருக்காக” அல்லது உங்களுக்கு மிகவும் நெருக்கமான பக்கத்து உறவினருக்காகக்கூட செய்யமாட்டீர்கள். ஆம், நாம் பிறரை எந்த அளவிற்கு மதித்திருக்கிறோமோ அந்த அளவின்படியே நாம் அவர்களுக்குச் செய்திடும் செயலின் வலிமையும் சார்ந்திருக்கிறது.

மேலே நாம் கண்ட வசனத்தில், கிறிஸ்து சபையை அன்புகூர்ந்தார், அதாவது...... கிறிஸ்து உங்களையும் என்னையும் அன்புகூர்ந்து, நமக்காகத் தன் **சொந்த ஜீவனையும் கொடுத்தார்** என வாசித்தோம். இப்படியொரு அபூர்வ அன்பை அவர் நம்மீது ஏன் காட்டினார்?

**ஆம், நம்முடைய அருமையான மதிப்பை அவர் உணர்ந்தபடியால் அவர் ஏதோ தனது “சிறுநீரகத்தை” மாத்திரமல்ல... நமக்காகத் தன் முழு ஜீவனையும் தந்துவிடுவதற்கே துணிந்து விட்டார்!**

நாம் எல்லோருமே “நான் இயேசுவைப் பின்பற்றி நடந்திட ஆயத்தமாயிருக்கிறேன்!” என்றுதான் கூறுகிறோம். ஆனால் நாம் அவரை எப்படிப் பின்பற்றி நடந்திட வேண்டும்? நாம் ஆண்டவரோடு பரலோகத்தில் இருப்பதற்காக மாத்திரமே அவரைப்பின்பற்றி

நடப்பதா? அல்லது இயேசு நடந்த பாதையைப்போல "அவருடைய சபையில் உள்ள ஒவ்வொருவரையும் அன்புகூர்ந்து, அவர்களுக்காக நம் ஜீவனையே கொடுத்துவிடுவதற்கும் ஆயத்தமுள்ள மனதோடு" இயேசுவின் அடிச்சுவடுகளைப்பின்பற்றி நடப்பதா?

பல மைல்களுக்கு அப்பால்...... ரஷ்யா, அமெரிக்கா போன்ற தேசத்திலுள்ள சகோதர சகோதரிகளை அன்புகூருவது மிகவும் எளிது! ஏன் தெரியுமா? அவர்களைத்தான் நாம் ஒருபோதும் கண்டதில்லையே..... அவர்களில் ஒருவரும் உங்களுடைய பொறுமையை சோதித்ததுமில்லையே!! இவ்வாறு நாம் காண முடியாதவர்களுக்கு நம் சொந்த ஜீவனை தந்துவிட வாய்ப்பு ஏதும் இல்லையே!?

இயேசு தூரமாய் பரலோகத்தில் அமர்ந்து கொண்டு "நான் யாவரையும் அளவில்லாது அன்புகூருகிறேன்" என ஒரு செய்தியை அனுப்பவில்லை! ஆம், அவர் வானத்திலிருந்து பூமிக்கு இறங்கிவந்து நமக்காகத் தம் சொந்த ஜீவனையே கொடுத்துதான் அன்புகூர்ந்தார். இன்று நாமும் கூட இதேவிதமாய் நம்முடைய அன்பை சபைக்குக் காட்டிட வேண்டும்! வெறும் வார்த்தையினால் அல்ல..... சபையில் தேவன் வைத்திருக்கும் ஜனங்களுக்கு நம் சொந்த ஜீவனையும் இழந்து அன்புகூருவதாகும்!!

ஆம், தேவன் நம்முடைய ஸ்தல சபையில் வைத்திருக்கும் சகோதர சகோதரிகளுக்காக நம்முடைய சொந்த "சுய மரியாதை" "சுய கௌரவம்" "சுய உரிமைகள்" "சுய எதிர்பார்ப்புகள்"...... இன்னும் இது போன்ற "சுயம்" உள்ளடங்கிய எல்லாவற்றையும் இழப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? இவ்வாறு நாம் ஆயத்தமாயிருந்தால் மாத்திரமே, ஆண்டவராகிய இயேசு நம்மோடு "ஒருமன ஆவி" கொண்டிருக்கவும், ஐக்கியப்படவும் முடியும்!

"நாம் எவைகளை நித்தியத்தில் நினைவுகூருவோம்?" என்ற தலைப்பில் **சகோ.வில்லியம் பூத்** (இரட்சண்ய சேனை சபையின் ஸ்தாபகர்) எழுதிய செய்தியில், தான் கண்ட ஒரு கனவைப் பற்றி எழுதியிருக்கிறார். அக்கனவில் அவர் தன்னை ஒரு முழுஇருதயம் கொண்ட சகோதரனாய் காணாமல், சாதாரண விசுவாசியாகவே தன்னைக் கண்டார். இக்கனவில் தான் மரித்து, பரலோகத்தில் நுழைவதைப் போன்ற காட்சிகளையும் கண்டார்.அங்கே பரலோகத்தில் வில்லியம்பூத், தன்னுடைய "ஜீவ புத்தகத்தைக்" கண்டார். அந்த ஜீவ புத்தகத்தின் பதிவேட்டில் "**மன்னிக்கப்பட்டான்!**" என்ற வார்த்தை மாத்திரமே பெரியதாக எழுதப்பட்டிருப்பதையும் கண்டார். வில்லியம் பூத் முதலில், தான் மன்னிக்கப்பட்டு இப்போது பரலோகத்தில் இருப்பதற்காக பேரானந்தம் கொண்டார்! "ஆனால்" பரலோகத்தில்

வேறொரு விசுவாசிகளின் குழுவையும் கண்டார்...... அவர்களோ சொல்லிமுடியா விசேஷித்த மகிமை கொண்டவர்களாய் இருந்தார்கள். யார் இவர்கள்? இந்த பூமியில் தங்கள் சொந்த ஜீவனை அருமையாய் எண்ணாதவர்கள்! இவர்கள் ஆண்டவருக்காகவும் அவருடைய சபைக்காகவும் சகலத்தையும் இழந்திருந்தார்கள்! பணத்தை, பதவியை, கௌரவத்தை...... இன்னும் இவ்வுலகம் அதிக மதிப்புடையதாய் கருதும் யாவற்றையும் இவர்கள் இழந்து தியாகம் செய்திருந்தார்கள்!!

இவர்களின் சொல்லி முடியா மகிமையைக் கண்ணுற்ற "பூத்" அவர்கள் மீது பொறாமை கொண்டார்! அச்சமயத்தில் இயேசு, வில்லியம் பூத்திடம் (கனவில்) வந்து, "வில்லியம் பூத், நீ காணும் சொல்லி முடியா மகிமையில் ஜொலிக்கும் இந்த ஜனங்களோடு ஒன்றாய் சேர்ந்து கொள்ளுவதற்கு உன்னால் ஒருக்காலும் முடியாது! **ஏன் தெரியுமா? நீ இந்த மகிமையான ஜனங்களைப்போல் அல்லாமல், இந்த பூமியில் உனக்காகவே ஒரு வாழ்க்கையை வாழ்ந்தாய்!**" என மனம்வருந்தி கூறினார். இயேசு இவ்வாறு வில்லியம் பூத்திடம் கூறவும், வில்லியம் பூத் கனவிலிருந்து விழித்தெழவும் சரியாய் இருந்தது. அப்போதுதான், தான் இன்னமும் உயிரோடிருப்பதையும், தான் கண்டது யாவும் கனவு மாத்திரமே என்பதையும் அறிந்தார். அச்சமயத்தில் அவர் எப்படி யெல்லாம் உணர்த்தப்பட்டார் தெரியுமா? அன்றிலிருந்து, எஞ்சியுள்ள **தன் முழு ஜீவியத்தையும்** தன் ஆண்டவருக்காகவே வாழ்ந்து விடுவதற்கு உறுதியான தீர்மானம் பூண்டார்!!

நாம் மரிக்கும்போது, ஏதோ முழு இருதயமான இயேசுவின் சீஷர்களைப்போல் "மாயமாய் மறுரூபம்" அடைந்திட ஒருக்காலும் முடியாது! ஏனென்றால் தேவன் ஒருபோதும் இன்னொருவருடைய விருப்பத்திற்கு விரோதமாய் யாரையும் மாற்றுவதேயில்லை. நாம் முழு இருதயம் கொண்டவர்களாய், பரிசுத்த ஆவியின் கிரியைக்கு நாம் வாழும் இந்த நாட்களில் நம்மை விட்டுத்தந்து ஒத்துழைத்தால் மாத்திரமே, அவர் நம்மை மாற்றி மறுரூபப்படுத்துவார்!! இவ்வாறு **நம்மை திவ்விய சுபாவத்தில் அதிகமதிகமாய் பங்குபெறச் செய்யும்படியே பரிசுத்தாவியானவர் அருளப்பட்டிருக்கிறார்.** அவருடைய மறுரூபமாக்கும் கிரியையை ஒரு வரைபடத்தின் மூலமாய் நாம் விளங்கிக்கொள்ளலாம். உங்களுடைய மாம்சத்தை, அதாவது நாம் யாவரும் பெற்றிருக்கும் "ஆதாமின் ஜீவனை" ஓர் கருப்பு வட்டமென எண்ணிக்கொள்ளுங்கள். இயேசுவை நம்முடைய ஜீவியத்தில் இரட்சகராய் ஏற்றுக்கொண்டது, இந்த கருப்பு வட்டத்தின் மையத்தில் ஒரு சிறிய வெண்மையான வட்டம் தோன்றியதற்கு ஒப்பாகும்! பின்பு நம்மை நாமே நியாயந்தீர்த்து, நம் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஆண்டவருக்கு

முதலிடம் தரும்போது நாம் கோபத்திலிருந்தும், பாலிய இச்சையிலிருந்தும், பண ஆசையிலிருந்தும் விடுதலையாகிறபடியால் இந்த வெள்ளைவட்டம் நாளுக்கு நாள் விரிவடைந்து பெரிதாகிறது. கடைசியாக நாம் மரிக்கும் போது, நம் வாழ்வில் இன்னமும் எஞ்சியுள்ள கருப்புபகுதிகள் உதிர்ந்துவிழுந்து விடும்! நாம் பெற்றிருக்கும், வெள்ளை வட்டத்தின் பகுதி மாத்திரமே இப்போது எஞ்சியிருக்கும்!! இவ்வாறாகவே, நித்தியத்தில் நம்மில் ஒருவரும் கருப்பு வட்டத்தின் பகுதியைப் பெற்றிருக்க மாட்டோம். இருப்பினும், சாதாரணமான கிறிஸ்தவ ஜீவியம் செய்தவரைவிட, தன் ஜீவியத்தில் அதிகமான முழு இருதயம் கொண்டு வாழ்ந்தவருடைய வெள்ளைவட்டம், மற்றவருடைய வெள்ளைவட்டத்தை விட நிச்சயம் பெரியதாகவேயிருக்கும். இவர்களில் ஒருவரிடத்திலாவது கருப்பு வட்டத்தின் பகுதிகள் காணப்படாது! ஆனால், நித்தியத்தில் இவர்கள் பெற்ற மகிமையின் அளவு (வெள்ளைவட்டம்) ஒருவருக்கொருவர் வித்தியாசமானதாய் இருக்கும்!!

ஆகவே, இப்பூமியில் எவைகளுக்கெல்லாம் அதிக மதிப்பு இருக்கிறதோ, அவைகளுக்குப் பரலோகத்தில் எவ்வித மதிப்பும் இருக்காது என்பதை நாம் எப்போதும் நினைவுகூர்ந்தவர்களாய் இருக்க வேண்டும்.

**இப்பூமி அதிக மதிப்புதரும் சிலவற்றை நீங்கள் இழப்பதனால், அவை நித்தியத்தில் யாதொரு பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை!**

இதற்கொப்பாகவே, இப்பூமியில் அதிக மதிப்புடையவைகளை நீங்கள் இலாபமாய் பெற்றிருந்தால், அவைகளும் பரலோகத்தில் உங்களுக்கு எந்தவித ஆதாயத்தையும் தரப்போவது இல்லை!!

இச்சமயத்தில் நான் குறிப்பாக வாலிபர்களுக்கே பேச விரும்புகிறேன், "வாலிபனே! நீங்கள் **உங்கள் நண்பர்களிடம்** கொண்டிருக்கும் இப்பூமிக்குரிய பிரபல்யத்திற்கு பரலோகத்தில் ஒரு துளியும் மதிப்பு இருக்காது!" என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

வாலிபனே, நீங்கள் பரீட்சைக்காக கஷ்டப்பட்டு படிப்பது நல்லதுதான். இருப்பினும் நீங்கள் பெற்ற நல்ல மார்க்குகள் நித்தியத்தில் நீங்கள் பெறப்போகும் மகிமையை கூட்டுவதற்கு கடுகளவும் பிரயோஜனப்படாதே! நீங்கள் முழு இருதயம் கொண்டு **தேவனுக்காகவே வாழவிரும்பினால்,** நீங்கள் கல்வியில் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு குறைவாய் இருந்து...... தகுதியற்றவர்கள் போல் இருந்தாலும், உங்களுக்கு ஏற்றதோர் உத்தியோகத்தைத் தந்து உங்களை கனப்படுத்த அவரால் முடியும்!!

நீங்கள் ஏதோ கணக்குப் பாடத்தில் மோசமாய் இருப்பதால் தேவன்

உங்கள் வாழ்வில் கொண்ட நோக்கத்தை இழந்து விடுவீர்கள் என்பது ஒருக்காலும் கூடாததாகும்! ஆனால், நீங்கள் பிறரை மன்னித்து, தீமை செய்தோர்க்கு நன்மைசெய்து, உங்களை சபிப்போரை ஆசீர்வதித் திருந்தால், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய உங்களைக் கொண்டு அவர் தன் சபையைக் கட்டிவிடுவார்! ஆ, அதேசமயத்தில் இப்பூமிக்குரிய வாழ்விற்குத் தேவையான யாவையும் உங்களுக்கு தேவன் வழங்கியிருப்பதையும் உங்கள் கண்கூடாகவே நீங்கள் காண்பீர்கள்!!

ஆகவே, உங்கள் சபையில் நீங்கள் பெற்றிடும் ஆவிக்குரிய ஆகாரத்திற்கு நன்றியுள்ளவர்களாய் இருந்திருக்கிறீர்களா? இவ்வாறு வருடா வருடங்களாய் சபையில் நீங்கள் பெறும் ஆவிக்குரிய ஆகாரத்தின் மதிப்பை நீங்கள் உணர்ந்தவர்களாயிருந்தால், நிச்சயமாய் நீங்கள் சபைக்கு அதிக நன்றியுள்ளவர்களாய் இருப்பீர்கள்! எப்படி யெனில், உங்களை என்றைக்கோ ஒருநாள் "ஒருவேளை விருந்திற்காய்" அழைத்தவர்களிடம் நீங்கள் எத்தனை நன்றியுள்ளவர்களாய் இருக்கிறீர்கள்....

**அவ்வாறு இருக்க, நீங்கள் சபையில் பல வருடங்களாய் பெற்றுக் கொண்டிருக்கும் "ஆவிக்குரிய உணவு அல்லது விருந்திற்கு" அதைக் காட்டிலும் அதிக நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் அல்லவா?**

இந்த விஷயத்தை வேறு விதமாய் சிந்தித்துப் பாருங்கள். அதாவது, உங்கள் பிள்ளைகளை யாரோ சிலர் விபத்திலிருந்து பாதுகாத்து; வியாதியாயிருந்தபோது அக்கறை காட்டி; சோர்ந்திருக்கும்பொழுது உற்சாகப்படுத்தி; அவர்கள் படிக்கும் பாடங்களில் அதிக மார்க்குகள் எடுக்கும்படி டியூசன் கொடுத்து...... உதவியவர்களுக்கு, நீங்கள் என்ன செய்வீர்கள்? அதுவும், இவ்வளவு உதவிகளையும் ஏதோ ஒன்று அல்லது இரண்டு நாட்கள் செய்யாமல் பல வருடங்கள் செய்திருந்தால் அவர்களுக்கு சொல்லி முடியா நன்றியுள்ளவர்களாய் இருந்திருப்பீர்கள் அல்லவா?

இதற்கு ஒப்பாக, சபை உங்கள் குழந்தைகளை தன் அரவணைப்பில் பாதுகாத்துக் கொண்டதற்காவது 'குறைந்தபட்சம்' நீங்கள் நன்றியுள்ள வர்களாய் இருந்திருக்கிறீர்களா? இன்று அனேக விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி அடையாதிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் என்ன தெரியுமா? கேளுங்கள் "இவர்கள் தாங்கள் சபையி லிருந்து பெற்றுக்கொண்ட உசிதமான நன்மைகளுக்கு **நன்றியுள்ளவர் களாய் இல்லை!**" என்ற காரணமேயாகும். இன்று சபையிலிருந்து வழி விலகிப்போனவர்கள் யார் தெரியுமா? "பல வருடங்களாய் சபையில் தாங்கள் பெற்ற எல்லா நன்மைகளுக்கும் முற்றிலும் நன்றியற்றவர்களாய்

இருந்தவர்களே" சபையை விட்டு வழி விலகி வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள்.

லூக்கா 17:15ம் வசனத்தில் 10 குஷ்டரோகிகள் சுகமான நிகழ்ச்சியை வாசிக்கிறோம். ஆனால் சுகமானவர்களில் ஒரே ஒருவன் மாத்திரமே ஆண்டவரிடத்தில் நன்றி கூறி தேவனை மகிமைப் படுத்தும்படி வந்தான். இவர்கள் தேவையோடு இருந்தபோது, இரக்கத்திற்காக ஒரே குரலில் ஏகமாய் 10-பேரும் சத்தமிட்டார்கள், ஆனால் சுகம் பெற்ற பின்போ, அவர்களில் ஒன்பதுபேர் தாங்கள் பெற்ற நன்மைக்கு நன்றியற்றவர்களாய் போய்விட்டார்கள்! ஆம், அவர்களில் ஒருவன் மாத்திரமே உரத்த சத்தமாய் தன் நன்றியைத் தெரிவித்தான்!!

இதைப்போலவே பாலஸ்தீன நாட்டில் தாங்கள் பெற்ற சுகத்திற்காக **ஆண்டவருக்கு நன்றி சொல்ல அக்கறையற்ற** ஆயிரக் கணக்கான ஜனங்கள் இருந்திருக்கக்கூடும்! ஆனால் இந்த சமாரியனோ திரும்ப வந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினான். அவன் ஆண்டவரிடம் "ஆண்டவரே, நான் சுகமாகும்படி என்னைத் தொட்டு விட்டீரே! எதிர்காலத்தில் என் ஒளிமயமான வாழ்வை எண்ணி உள்ளம் பூரிக்கிறேன்! ஆம், இனி நான் நகரத்திற்குள் செல்ல முடியும்....... விட்டு வந்த என் குடும்பத்தையும் காண்பேன்! என் வாழ்வில் இழந்த மகிழ்ச்சியை திரும்பவும் எனக்குத் தந்துவிட்டீரே! ஏதோ, வழக்கமான ஆசீர்வாதம் கிட்டியதைப்போல் என் வாழ்வில் நீர் செய்தவைகளை நான் சாதாரணமாய் எடுத்திட துணியமாட்டேன். ஆம், என் ஆண்டவரே! என்னுடைய முழுமையையும் உமக்கே தந்திட நான் கடமைப்பட்டிருக்கிறேன்...... நீர் எனக்குச் செய்த எல்லா ஆசீர்வாதங் களுக்காகவும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மிகுந்த நன்றியுள்ள வனாய் இருக்கிறேன்" என்றே கூறியிருந்திருப்பான். இவ்வாறு தன் **நன்றியுள்ள ஆவியை** வெளிப்படுத்திய இந்த மனிதனை ஆண்டவர் இயேசு மெச்சிக்கொண்டார் என்றே வாசிக்கிறோம்.

இப்போது என்ன நடந்தது தெரியுமா? சுகம் பெற்ற இந்த சமாரிய குஷ்டரோகிக்கு இன்னும் அதிகமான நன்மைகளை இயேசு கொடுத்தார்! ஆம் அவனை நோக்கி, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார்.

**இவன் ஏற்கனவே சுகத்தைப் பெற்றான்! அதனிமித்தம் இவன் நன்றியுள்ள வனாய் இருந்தபடியால் இப்போது "இரட்சிப்பையும்" பெற்றுக் கொண்டான்!**

இந்த நன்றியுள்ள சமாரியனை நான் நிச்சயமாய் பரலோகத்தில் காண்பேன். ஆனால் மீதியுள்ள நன்றியில்லாத ஒன்பது பேரை பரலோகத்தில் காண்பேனா என்பதில் எனக்கு அவ்வளவு நிச்சயமில்லை. பார்த்தீர்களா, நீங்கள் பெற்றுக் கொண்டவைகளுக்காக **நன்றி கூறும்படி** ஆண்டவரிடம் நீங்கள் திரும்ப வரும்போது மற்றவர்கள் பெற்றதைவிட

*இன்னும் அதிகமான விசேஷத்தை அவர் உங்களுக்குத் தருகிறார் அல்லவா!*

*இன்றும், இந்த பூமியில், தன்னுடைய சரீரமாயிருக்கும் சபையின் நடுவில் ஆண்டவர் வீற்றிருக்கிறார்! இன்று அவருடைய சரீரத்திற்கு (சபைக்கு) நாம் கொடுக்கும் மதிப்பின் மூலமாகவே நம் நன்றியையும் காண்பித்திட முடியும். இவ்வாறு சபையின் மதிப்பை உணர்ந்து நீங்கள் நன்றி செலுத்திடவில்லையென்றால், நஷ்டம் சபைக்கு அல்ல, நீங்கள் தான் பெரும் நஷ்டம் அடைவீர்கள்!!*

**இன்று தேவன் யாரை அளவில்லாமல் ஆசீர்வதித்திருக்கிறார் தெரியுமா? யாரெல்லாம் சபையை மதித்து, சபையிலிருந்து பெற்றுக்கொண்ட நன்மை களுக்காக நன்றியுடையவர்களாய் இருந்தார்களோ, அவர்களையே தேவன் அபரிதமாய் ஆசீர்வதித்திருக்கிறார்!**

*இவ்வுலகத்தின் தீமையிலிருந்து நம் பிள்ளைகளை சபை பாதுகாத்திருக்கிறதே...... இதற்காகக்கூட நாம் எத்தனை அதிகம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! இதைக் குறித்து என் சொந்த சாட்சியை நான் கூற முடியும்: என்னுடைய மூத்தமகன் ஆறு வயதாய் இருக்கும்போது தொடங்கி என்னுடைய எல்லா நான்கு மகன்களும் சபையிலிருந்த வாலிபர்கள் மத்தியில்தான் வாழ்ந்து வந்தார்கள். இத்தனை பெரிய சிலாக்கியத்திற்காக என் நன்றியை தேவனுக்கு செலுத்திட எனக்குப் போதுமான வார்த்தையே இல்லை! சபையிலிருந்த வாலிப சகோதரர்கள் பூரணமற்றவர்கள்தான். அவர்களிடம் அனேக பலவீனங்கள் இருந்தன. இருப்பினும்* **அந்த சகோதரர்கள் உண்மையுள்ள வர்களாய் இருந்தபடியால்,** *அவர்கள் மூலமாய் என்னுடைய நான்கு மகன்களும் கிறிஸ்தவ ஜீவியத்தில் சொல்லிமுடியா அளவிற்கு ஊக்கம் பெற்றார்கள்! இவ்வலிய செயலை பெற்றோர்கள் மாத்திரமே நிறைவேற்றிட முடியாது. ஆம், நம்முடைய பிள்ளைகளை தேவ பக்தியில் வளர்த்திட சபையில் உள்ள சகோதர சகோதரிகளின் உதவி நமக்கு மிகவும் தேவையாய் இருக்கிறது!!*

**துரதிருஷ்டவசமாய் இன்று அனேக விசிவாசிகள் தங்கள் ஸ்தல சபையை விட்டு வேறிடங்களுக்குச் செல்லும் போதுதான் தங்கள் சபையின் மதிப்பை உணருகிறார்கள்!**

*ஒரு சமயம் தாவீது தன் சொந்த ஊரான பெத்லகேமின் கிணற்றுத் தண்ணீரின் மீது ஆவலாய் இருந்தான் என வாசிக்கிறோம் (2சாமுவேல்.23:15). ஏனெனில் அந்த கிணற்றுத் தண்ணீரின் ருசி வேறு எந்த இடத்திலுள்ள தண்ணீரைக்காட்டிலும் விசேஷித்த ருசியுடையதாய் இருந்தது! இதைப்போலவே இன்று அநேகர், வேலை விஷயமாய் வேறு ஊர்களுக்கு மாற்றுதலாகிப் போகும்போது அல்லது*

*வேறு தூரமான தேசத்திற்குப் போகும் போது மாத்திரமே தங்கள் ஸ்தலசபையின் கூட்டங்களுக்காக ஏங்கி நிற்கிறார்கள்! இவ்வா றெல்லாம் உங்களுக்கு சம்பவிக்காமல், இன்றே சபையை மதித்து சபையில் உள்ள சகோதர சகோதரிகளுக்காய் நன்றியுள்ளவர்களாய் இருந்து விடுங்கள்!!*

*உங்கள் ஸ்தல சபையில் உள்ள சகோதர சகோதரிகளின் மதிப்பை உணர்ந்திட உங்களுக்கு ஏன் கஷ்டமாய் இருக்கிறது? இதற்கான காரணத்தை நீங்கள் கூறும்போது, "அவர்களிடம் ஏராளமான குறைகள் இருக்கிறதே!" என நீங்கள் கூறலாம்.*

*கண்களில் ஏதாகிலும் பிரச்சனை வரும்போது, ஜனங்கள் தங்கள் கண்களுக்கு முன்பாக ஏதோ* **கருப்புப்புள்ளி** *எப்போதும் இருப்பதைப் போல் காண்பார்கள்! இதனிமித்தம் இவர்களின் கண்களுக்கு முன்பாக எல்லா சகோதர சகோதரிகளின் முகங்களும் கறைபட்டது போலவே தோன்றும். இதை வாசிக்கும் உங்கள் நிலையும் இப்படித்தானென்றால், பிரச்சனை சகோதர சகோதரிகளிடமல்ல...... உங்கள் சொந்த கண்ணில்தான் இருக்கிறது!! உங்கள் சொந்த கண்களிலேயே புள்ளிகள் இருக்கிறபடியால், பிறருடைய முகங்களில் கறைகளைப் பார்க்கிறீர்கள். இதுபோன்ற உங்களுக்கு நான் ஒற்றைச் சொல்லிக் கொள்ளட்டும்: ஆம், சகோதர சகோதரியே, "உங்கள் கண்களை இயேசு சுகப்படுத்தினா லொழிய உங்கள் பார்வை ஒருக்காலும் தெளிவடையாது!".*

*இதற்கு இயேசுவையே மாதிரியாய் நோக்குங்கள். இயேசு தன்னுடைய சீஷர்களின் உத்தம சிநேகத்தை எவ்வளவு மதித்தார் என்பதை சுவிசேஷத்தில் கண்டிருக்கிறீர்களா? ஒரு சமயம் அவர் சீஷர்களிடம் கூறும்போது, "நீங்கள் சிதறுண்டு என்னைத் தனியே விட்டு விடும் காலம் வரும். ஆனால் நான் தனித்திரேன்.* **பிதா என்னுடனேகூட** *இருக்கிறார்" எனக் கூறினார் (யோ.16:32). பார்த்தீர்களா, பிதாவின் சமூகத்திலிருந்த இயேசுவுக்கு சீஷர்கள் தன்னோடு இருக்க வேண்டியது அவருக்கு அவசியமில்லைதான்! இருப்பினும் லூக்கா 22:28-ம் வசனத்தில் இயேசு என்ன சொன்னார் தெரியுமா?*

> "எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே!" என தன் நன்றியை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

*இந்த இயேசு மகிமையின் கர்த்தர்.... அவரோடு துணை நிற்க யாரும் அவருக்குத் தேவையில்லை.... ஆயினும், சீஷர்களின் உத்தம சிநேகத்தை இயேசு எவ்வளவாய் மெச்சிக்கொண்டார் பார்த்தீர்களா!! சீஷர்களிடம் இயேசு கூறியதை கீழ்கண்டவாறு விவரித்துக் கூறலாம், "என் அருமை சீஷர்களே, உங்கள் பழைய யூத முறைமைகளிலிருந்து வெளியேறி* **பழைய திராட்சரசத் துருத்தியை**" *எவ்வளவு தைரியமாய் விட்டு*

விட்டீர்கள்! மணவாட்டியின் ஆவிக்கும், வேசியின் ஆவிக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாய் கண்டு அவைகளை விட்டுவிட்டு...... என்ன விலைக் கிரயமானாலும் அதைச் செலுத்துவதற்கு ஆயத்தமாய் என்னோடு சேர்ந்து உறுதியாய் நின்ற உங்களுக்கு ஒப்பாய் வேறு யாருண்டு!!" என்றே பாராட்டி அகமகிழ்ந்தார்.

கடைசிநாளில், அன்று சீஷர்களிடம் கூறிய இதே வார்த்தைகளை இயேசு நம்மிடமும் கூறுவாறென்றே நான் நம்புகிறேன். ஆம், நாம் அவர்நிமித்தம் வெட்கமடையாமல் அவரோடு இணைந்து நின்றதையும், அவர் நம்மை வைத்திருக்கிற சபையை நேசித்ததையும், நம்மையே சபைக்காக ஒப்புக்கொடுத்ததையும்...... இன்று எத்தனையோ பேர் சபையை குறைகூறி சென்றதைப் போல நாம் இல்லாதிருந்ததையும்... குறிப்பிட்டு, இயேசு நிச்சயமாய் நம்மை மெச்சிக் கொள்வார்!!

அன்பான சகோதர சகோதரிகளே நாமும் நம்முடைய பிள்ளைகளும் சபையில் பெற்றுக்கொண்ட சொல்லி முடியா பாதுகாப்பிற்காக நன்றியுள்ளவர்களாய் இருக்கக்கடவோம்!

**அன்பார்ந்த வாலிபர்களே, சபையின் கண்டிப்பான பரிசுத்தத்தின் தரம், நீங்கள் உலகத்தில் வழிவிலகி உங்களை நீங்களே அழித்துக் கொள்வதிலிருந்து எவ்வளவாய் பாதுகாத்துக் கொண்டது என்பதை, நீங்கள் 'அந்நாளில்' ஆண்டவருக்கு முன்பாக நிற்கும்போதுதான் தெளிவாய் உணருவீர்கள்!**

கடைசிநாளில், நீங்கள் சபையில் பல வருடங்களுக்கு முன்பாகவே கேட்ட சத்தியங்கள், பிற்கால ஆபத்துகளிலிருந்து உங்களை எவ்வளவாய் பாதுகாத்துக் கொண்டது என்பதையும் தெளிவாய் காண்பீர்கள். உங்கள் பிள்ளைகள், சபையில் கேட்ட சத்தியங்கள் அவர்களை பல ஆவிக்குரிய வீழ்ச்சிகளிலிருந்தும் ஆபத்துகளிலிருந்தும் எங்ஙனம் காத்துக் கொண்டன என்பதையும் ஆண்டவர் அந்நாளில் உங்களுக்குத் தெரியப்படுத்துவார்!

இவ்வாறெல்லாம் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்த போதும், இன்று மிகவும் கொஞ்சபேர்களே **சபையை மதித்து** அதற்கு **நன்றியுள்ளவர்களாய்** இருக்கிறார்கள்!

நீங்கள் உங்கள் ஜீவியத்தில் "**பிறரை ஆசீர்வதிக்கும்**" **உன்னத வளர்ச்சிக்குள்** வளரவிரும்புகிறீர்களா? அப்படியானால், நீங்கள் முதலாவது, ஆண்டவர் உங்களுக்காக செய்த யாவற்றிற்கும் நன்றியுள்ளவர்களாய் இருங்கள்! "ஏதோ ஒரு சபையில் இருக்கிறோம்" என தேவன் உங்களுக்குத்தந்த சிறந்த சபையை மெத்தனமாய் எண்ணிவிடாதிருங்கள்!!

இன்று நம்மில் அநேகர், "பெற்றோர்கள் **மரித்த பின்பு** அவர்களுடைய அருமையை உணரும்" பிள்ளைகளைப் போலவேதான் இருக்கிறோம்!

இவ்வாறு காலம் கடந்து போவதற்கு முன்பாக "இப்போது"

*சபையில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் நன்றியுள்ளவர்களாய் இருப்பதற்கு ஆண்டவர் நம் யாவருக்கும் உணர்வுள்ள இருதயத்தைத் தருவாராக!!*

# 11

## சுத்த இருதயம் கொண்ட தூய வாழ்க்கை வேண்டும்!

*ஒரு சமயம், ஆண்டவர் தன்னைப் பற்றி கூறும்போது, "நான் உலகத்தில் இருக்கையில் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்" எனக் கூறினார் (யோவான் 9:5). ஆனால் இயேசு இவ்வுலகத்தை விட்டு சென்ற பின்போ* **"உலகத்திற்கு வெளிச்சமாக" நம்மையே நியமனம் செய்தார்!** *(மத்தேயு 5:14). இதுவே எந்த உத்தம கிறிஸ்தவனுக்கும் உரிய மிகப்பெரிய பொறுப்பாகும்!!*

1. **தேவனுடைய ஜீவனை வெளிப்படுத்த வேண்டும்:**

*இயேசு வெளிப்படுத்தின ஒளியானது சில உபதேசங்களோ அல்லது போதனைகளோ அல்ல! அது, புதிய உடன்படிக்கை சத்தியம் கூட அல்ல!!* **தன்னுடைய ஜீவியத்தையே** *ஒளியாகப் பிரகாசித்தார். இயேசுவினுடைய ஜீவியத்திலிருந்துதான் தெய்வ சுபாவங்கள் நமக்கு ஒளியாக வீசியது!! "நாங்கள் வெளிச்சம் பெற்றிருக்கிறோம்" எனக்கூறி...*

> **பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும், பாவத்தின் மேல் பெற்றிடும் ஜெயத்தையும், இன்னும் இதுபோன்ற சத்தியங்களையே நாம் பெற்ற வெளிச்சமாக கூறிக்கொள்கிறோம். ஆனால் அது அல்ல.... "இயேசுவின் ஜீவியத்தையே" நாம் வெளிச்சமாக பிரகாசித்திட வேண்டும்!**

*புதியஏற்பாட்டில் இரண்டு முறை "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என எழுதப்பட்டிருக்கிறது. ஆம், முதன் முதலாக நமக்கு தேவனைப்பற்றி இயேசுவே வெளிப்படுத்தினார் (யோவான்.1:18). இயேசு தன் கரங்களை ஒரு குஷ்டரோகியின் தோளோடு வைத்து அணைத்துக் கொண்டபோது "தேவன் எப்படிப்பட்டவர்" என்று வெளிப்படுத்தினார்! அவர் காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து துரத்திய போதும் "தேவன் எப்படிப்பட்டவர்" என்பதை வெளிப்படுத்தினார்!.... இவ்வாறாக,* **"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"** *என்றே இயேசு தன் சீஷர்களிடம் திட்டமாகக் கூறினார். அந்த இயேசுவோ இப்பொழுது பரலோகத்திற்குச் சென்று விட்டார்!*

*பிதாவை, இயேசுவிடத்தில் சீஷர்கள் கண்டதைப்போலவே "நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாய் இருந்தால்" தேவன் நமக்குள் நிலைத்திருப்பதையும், நம் சபையில் தேவன் இருப்பதையும் இன்றும் ஜனங்கள் காணமுடியும்! (1 யோவான் 4:12).*

**சபையில் நம்மை கவனித்துப் பார்ப்பவர்கள் "கிறிஸ்து எப்படிப்பட்டவராக இருப்பார்!" என்பதை நம் மூலமாய் அறியக்கூடியதாக இருக்க வேண்டும்! இவ்வாறு நம் ஜீவியத்தின் மூலமாய் "இயேசுவின் ஜீவனை" நாம் வெளிச்சமாக பிரதிபலிக்கத் தவறியிருந்தால், நம்முடைய பிரதான அழைப்பிலிருந்தே தவறிவிட்டோம்!**

*நம்மில் ஒருவராகிலும் தனிப்பட்ட விதத்தில் தேவனுடைய ஒளியை (ஜீவியத்தை) பூரணமாய் வெளிப்படுத்திட முடியாது! ஆனால், "தேவனுடைய மிகுதியான அனந்த ஞானத்தை" இப்போது* **ஓர் சபையாக** *நாம் சேர்ந்துதான் மற்றவர்களுக்கு தேவனின் அந்த அனந்த ஞானத்தை வெளிப்படுத்திட முடியும்! இருப்பினும், நம்முடைய சரீரங்களில்* **"இயேசுவின் மரணத்தை" நாம் சுமந்தால் மாத்திரமே,** *"இயேசுவின் ஜீவனை" நாம் வெளிப்படுத்திட முடியும்! ஒரு வீட்டில் கணவனும் மனைவியுமாகிய இருவருமே தங்களிடமுள்ள "ஆதாமின் ஜீவனுக்கு மரித்துவிட" ஆயத்தமாய் இருந்தால், அந்த வீட்டில் "சமாதானத்தின் ஆளுகை" நிச்சயமாய் அபரிதமாய் ஆளுகை செய்திட முடியும்!! அந்த வீட்டின் நெருக்கங்களும், துன்பங்களும், உபத்திரவங்களும், சோதனைகளும் எத்தனை அழுத்தமாய் ஏற்பட்ட போதும், அது அவர்களின் சமாதானத்தைப் பாதித்துவிடாது! அதற்குப்பதிலாக, "***மரணம் எங்களிலும் கிறிஸ்துவின் ஜீவன் உங்களிலும்*** *கிரியைச் செய்கிறது" என்றே கெம்பீரமாய் முழங்கிட முடியும்! ஆம், இதுவே நம் ஒவ்வொருவருக்கும் உள்ள அழைப்பு ஆகும்.*

2. **இருதயத்தில் நேர்மைவேண்டும்:**

*ஆதியாகமம் 20-ம் அதிகாரத்தில், அபிமலேக் ராஜா ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை தனக்கென வைத்துக் கொள்ள தன் அரண்மனைக்கு அவளை அழைத்து வந்துவிட்டான். இருப்பினும் வழக்கத்திற்கு மாறாக அந்த புறஜாதி அரசன் "அவளைத் தொடாமலே" அந்த இரவில் தூங்கிவிட்டான்! அவனுக்கு தேவன் சொப்பனத்தில் தோன்றி "வேறொரு மனுஷனுடைய மனைவியை உனக்கென அபகரித்தபடியால் நீ சாகவே சாவாய்" என்று கூறிவிட்டார். அபிமலேக்கோ சற்று தைரியத்தோடு தேவனைப்பார்த்து "உத்தம இருதயத்தோடுதான் நான் இதைச் செய்தேன்! அந்த ஆபிரகாம் இவளை தன்னுடைய சகோதரி என்று கூறியபடியால்தான் நான் அவளை*

அழைத்து வந்தேன்" என பணிவுடன் கூறினான். அவனுடைய வார்த்தைகளை அங்கீகரித்த தேவன் "**அபிமலேக்கின் உத்தம இருதயத்தை** மெச்சிக்கொண்டு 'இதனிமித்தமே' அந்த ராத்திரியில் நீ பாவம் செய்யாதபடிக்கு நான்தான் உன்னை தடுத்தேன்" என தெரிவித்தார்!! இவ்வாறு ஒரு அஞ்ஞானியான ராஜாவின் இருதயத்தின் உத்தமத்தைக் கண்டு, அவனைப் பாவம் செய்யாமல் இருந்திட தேவன் தடுத்திட முடியுமென்றால், இன்று புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ள நம்மை எத்தனை அதிகமாய் அவர் பாதுகாத்திட முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த உத்தம இருதயத்தை எண்ணற்ற விசுவாசிகளிடம் காண முடியாது இருப்பதால் மாத்திரமே, இன்று எண்ணற்ற விசுவாசிகளை "வழுவாமல் காத்துக் கொள்ள" தேவனால் முடியவில்லை!!

3. **'தொடர்ச்சியான பரீட்சைகளில்' ஜெயித்திட வேண்டும்:**

தேவன் ஆபிரகாமை திரும்பதிரும்ப சோதித்தார்! ஆகிலும் ஒவ்வொரு அந்த சோதனையிலும் ஆபிரகாம் உண்மையுள்ளவராக திகழ்ந்தார்!! இவ்வாறு பல்வேறு சோதனைகளில் ஆபிரகாம் உண்மையாக இருந்ததினிமித்தமே, தேவன் ஆபிரகாமை மீண்டும் மீண்டுமாய் சோதித்தார்!! தன் தேசமாகிய "ஊரை விட்டு" ஆபிரகாம் வெளிவரும்படி தேவன் அழைத்தார்! அந்த முதலாவது அழைப்பிற்கு ஒப்பாகவே, மிக கடினமான சோதனையாக ஈசாக்கை தனக்கு பலி செலுத்தும்படி ஆபிரகாமை மீண்டுமாய் அழைத்து சோதித்தார்! ஆபிரகாமோ, இதற்கு முன்பு கடந்த ஐம்பதாண்டு காலமாய் ஏற்பட்ட ஒவ்வொறு சோதனையிலும் கீழ்ப்படிந்தது போலவே, இந்த கடினமான சோதனைக்கும் முழு இருதயமாய் கீழ்ப்படிந்தார்!

**பார்த்தீர்களா, நாம் பலவருடங்களாய் தேவனுக்கு உண்மை உள்ளவர்களாய் ஜீவித்ததினிமித்தம் தேவன் நம்மை சோதிப்பதை அல்லது பரீட்சிப்பதை நிறுத்தி விடுவதே இல்லை! ஆம், இவ்வாறு முடிவுபரியந்தம் தேவனுடைய அன்பில் நிலைத்திருப்பவர்கள் மாத்திரமே இரட்சிக்கப் படுவார்கள்!!**

நம் சொந்த சபை விசுவாசிகள் நம்மை புறக்கணிப்பதின் மூலமாயும் தேவன் நம்மை சோதித்திட முடியும்! இயேசுவுக்கும் இவ்வாறு நடந்ததாக வேதம் குறிப்பிட்டு, "அவர் தமக்கு சொந்த மானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (யோவான் 1:11) எனக் கூறுகிறது. இயேசு இந்த பூமியில் கற்றுக் கொண்ட அதே பாடங்களை நாமும் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களாக இருந்தால், அவர் அனுபவித்தது போலவே நாமும்

**“புறக்கணிக்கப்படுதலை”** அனுபவிக்கும்படி நம்மையும் அவ்வாறு நடத்துவார். அதுபோன்ற அனுபவத்தை சந்திக்கும்போது, இயேசு செய்ததைப்போலவே நம்முடைய பிரதிபலிப்பும் முற்றிலுமாய் அன்பின் செய்கைகளாகவே இருந்திட வேண்டும்!

ஒரு சபையில் இருந்த வாலிப சகோதரன், தேவனுடைய வார்த்தையில் அதிக வரம்பெற்றவராய் இருந்தார்! அதனிமித்தமாய் அந்த சபையில் உள்ள மூத்த சகோதரர்களில் ஒருவர், தன்னைவிட 20-வயது குறைந்த வாலிபனிடமிருந்த ‘வார்த்தை வளத்தைக்கண்டு’ அந்த வாலிபனின் ஊழியத்தில் பொறாமை கொண்டார்! அதன் விளைவாய், சபையில் அந்த வாலிபன் பிரசங்கிப்பதை தடைசெய்து, கூட்டங்களில் அமைதியாக உட்காரும்படி செய்துவிட்டார். இவ்வாறு சம்பவிப்பதே “புறக்கணிக்கப்படும்” சோதனையாகும். அந்த வாலிபனோ, எந்த முரட்டாட்டமும் செய்யாமல் மூப்பர்களின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து அமர்ந்து விட்டார். அதுமாத்திரமல்லாமல், அந்த மூப்பரோடு நல்ல ஐக்கியத்தையும் பாதுகாத்துக்கொண்டார்! அந்த வாலிபனுக்கு இத்தோடு சோதனை நின்று விடவில்லை! முப்பது வருடங்களுக்குப் பின்பு வயதான அந்த நிலையில், தேவன் அவரை **“இந்தப் பகுதியில்” மீண்டுமாய் அவரை சோதித்தார்!** ஆம், ஒரு சபையில் அவர் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அந்த சூழ்நிலையையும் மௌனமாய் ஏற்றுக்கொண்டு, எந்த முரட்டாட்டத்திற்கும் இடம் கொடாமல் அந்த சபையின் மூப்பர்களுக்கு அடங்கியிருந்தார். அவரோடு நல்ல ஐக்கியத்தையும் காத்துக்கொண்டார்! இப்போது ஏற்பட்ட சூழ்நிலையோ, இவரை புறக்கணித்த மூப்பர்கள் இவரைக் காட்டிலும் 20-வயது குறைவானவர்களாய் இருந்தார்கள்!!

இவ்வாறு, நம் ஜீவியத்தின் முடிவுபரியந்தமும் பல்வேறு வழிகளில் நம் யாவரையும் தேவன் **தொடர்ச்சியாக சோதித்தறிகிறார்!** நாம் கவனம் கொண்டிருப்போமாக!!

### 4. ஆவியானவரின் சத்தத்திற்கு செவிகொடுத்தல் வேண்டும்:

நம் ஜீவியத்தில் ஏற்படும் சில சூழ்நிலைகளில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்ன தீர்மானம் எடுக்க வேண்டும்? என திட்டமாய் அறிந்திட முடியாத நிலையில் நாம் பலமுறை இருந்திருக்கிறோம். எத்தனையோ விஷயங்களைக் குறித்து வேத வாக்கியங்கள் மௌனமாகவே இருக்கிறது. அதுபோன்ற சமயங்களில், ஆலோசனை கேட்பதற்கென ஒரு பக்தியுள்ள சகோதரனை தேடிப்போவது நமக்கு எப்போதும் சாத்தியமாயிருப்பதில்லை!

தேவபக்தி நிறைந்த சகோதரர்களின் செய்கையை வைத்தோ

அல்லது அவர்கள் சொன்ன வாக்கியங்களை வைத்தோ ஒப்பிட்டு, தாங்கள் செய்த செயலை நியாயப்படுத்துகிறவர்கள், தங்களின் கெட்ட மனசாட்சியைத்தான் நிரூபணம் செய்கிறார்கள்! நம் யாவரையும் 'தனித்தனியாய்' நடத்திச்செல்வதற்கு "பரிசுத்தாவியானவரையே" தேவன் நமக்கு வழங்கியிருக்கிறார்!!

உதாரணமாய், சபையின் ஒரு கூட்டத்தில் "உலகத்தில் அன்பு கூராதிருக்கும்படியான" ஒரு புத்திமதியை ஒரு சகோதரி கேட்டிருக்கக் கூடும். இது ஒரு பொதுவான புத்திமதியே அல்லாமல் 'எதையும் குறிப்பாக' அது கூறவில்லை! புதிய ஏற்பாடு எப்போதுமே இதுபோன்ற பொதுவான புத்திமதிகளைத்தான் நமக்கு கூறுகிறது. இச்சமயத்தில் ஒரு திருமண வைபவத்திற்கு செல்லவிருந்த அந்த சகோதரி, அந்த வைபவத்தில் விலை உயர்ந்த பளபளப்பான ஆடையை உடுத்த வேண்டுமா அல்லது வேண்டாமா? என்பதை தீர்மானிக்கும் இக்கட்டான நிலையில் இருந்தார். அந்த கவர்ச்சியான சேலையை உடுத்தலாமென அவளின் மனது எத்தனையோ காரணங்களை அவளுக்கு கூறியிருக்கக்கூடும்! இந்த தருணத்தில்தான் அவளின் **மனநோக்கத்தை சோதித்து அறிந்திட வல்ல பரிசுத்தாவியானவர்** அவளிடம், "நீ இந்த ஆடம்பர உடுப்பை உடுத்த விரும்பிய ஒரே காரணம், உன் உலக நண்பர்களிடமிருந்தும், உறவினர்களிடமிருந்தும் நல்ல மதிப்பைப் பெறலாம் என்பதேயாகும்!" எனக் கூறினார். இவ்வாறாக, ஆவியானவர் அவளைக் குறித்த உண்மையைச் சொல்லுவதற்கு மிகுந்த பொறுப்புள்ளவராக இருக்கிறார். இருப்பினும் தனக்கு கீழ்ப்படியும்படி அவளை ஒருநாளும் கட்டாயப்படுத்தவே மாட்டார்! எல்லாவற்றிற்கும் கடைசி முடிவானது அவளையே சார்ந்துள்ளது!!

நமக்குள் இருக்கும் அந்த அபிஷேகம், சபையிலுள்ள எந்த ஒரு சகோதரனும் அல்லது சகோதரியும் போதிக்காத எண்ணற்ற காரியங்களை நமக்குப் போதிக்கும்! இருப்பினும், நாம் ஆவியானவருக்கு செவிகொடுத்திட மிகவும் கவனமாய் இருந்திட வேண்டும். இதற்கு மாறாக, அவருடைய குரலை நாம் திரும்பத்திரும்ப புறக்கணித்து விட்டால், சிலகாலத்திற்குப்பிறகு அவர் நம்மோடு பேசுவதையும் நிறுத்திவிடுவார்! இந்நிலையில்தான் நாம் பின்மாற்றம் அடைந்து, உலகத்தாரோடு ஒத்துப்போகும் மாம்சீகமானவர்களாய் மாறி விடுவோம்!!

5. **ஆவிக்குரிய அதிகாரத்திற்கு அடங்கியிருத்தல் வேண்டும்:**

சபையானது, உபதேசங்கள் அடங்கிய **அறிவினால் அல்ல, ஞானத்தினாலேயே** கட்டப்படுகிறது (நீதி.24:3). உத்தமமுள்ள ஞானமானது, ஒரு சகோதரன் மீது தேவன் நியமனம் செய்த

அதிகாரங்களுக்கு.... அது வீடோ அல்லது சபையோ அல்லது அவன் வாழும் சமுதாயமோ ஆகிய யாவற்றிற்கும் அடங்கியிருக்கும்படியே அவனை நடத்தும்!

இப்பூமியில் தனக்கு அருளப்பட்ட பெற்றோர்களாகிய யோசேப்பும் மரியாளும் எவ்வளவுதான் குறைவுள்ளவர்களாக இருந்தாலும், இயேசு நாசரேத்தில் வசித்த காலங்கள் வரை அவர்களுக்கு தாழ்மையுடன் அடங்கியிருந்தார் (லூக்கா 2:51). அதுஏனென்றால், அவ்வாறு அடங்கியிருக்கும்படி அவருடைய பரமபிதா விரும்பினார், அவ்வளவுதான்! ஆகவே, யோசேப்பும் மரியாளும் குறைவுள்ள வர்களாய் இருந்தார்களா? என்பது கேள்வியல்ல! மாறாக, அடங்கி யிருக்கும்படி பிதாவானவர் யாரை இயேசுவுக்கு நியமனம் செய்து வைத்திருந்தார்? என்பதே முக்கியமான கேள்வியாய் இருக்கிறது. யோசேப்பும் மரியாளும் தேவனுக்குப் பயந்து வாழ்ந்தவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகிலும், அவர்கள் பழைய உடன்படிக் கையின் கீழ் வாழ்ந்தவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அதாவது, அவர்கள் இன்னமும் கிருபைக்கு கீழாக வரவில்லை! ஆகவே அவர்களுக்குள் பாவத்தின் மீது வெற்றிகொண்ட வாழ்க்கை கிட்டி யிருக்காது என்பதை நாம் நிச்சயிக்கமுடிகிறது. இன்றும், புதிய உடன்படிக்கையில் இன்னமும் பிரவேசிக்காத தம்பதியர்கள் தங்களுக்குள் சண்டையும் கசப்பும் கொண்டிருப்பது போலவே, இயேசுவின் பெற்றோரும் இருந்திருக்கக்கூடும்!

**அப்படி இருந்தும், பூரணம் நிறைந்த தேவமைந்தனாகிய அவர், பூரணமற்ற அந்த இருவருக்கும் முற்றிலுமாய் அடங்கியிருந்தார்! இவ்வாறு பூரணமற்ற அதிகாரங்களுக்கு அடங்கியிருந்ததே அவர் நமக்கு வழங்கிய முதல்-மாதிரி அடிச்சுவடுகளாய் இருக்கிறது!!**

இயேசு சென்ற அதே பாதையில் நாமும் சென்றிட மனதுள்ள வர்களாய் இருந்தால், தேவன் நமக்கு மேலாய் நியமனம் செய்த எந்த அதிகாரத்திற்கும் நாமும் அடங்கி நடப்பதற்கு ஆர்வம் கொண்ட வர்களாய் இருக்கவேண்டும்.... அந்த அதிகாரங்கள் எவ்வளவு குறைவுள்ளவர்களாய் இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல! இதுவே பிள்ளைகளாய் இருப்பவர்களுக்குத் தரப்பட்ட **முதல் கற்பனையாகவும்** இருக்கிறது! இவ்வாறு அதிகாரங்களுக்கு அடங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு "**நன்மை உண்டாயிருக்கும்**" என்றே தேவன் வாக்குரைத் திருக்கிறார்! (எபே.6:2,3). இதிலிருந்து, அதிகாரங்களுக்கு அடங்கியிருக்கும் விஷயத்தில் தேவன் அதிகமான முக்கியத்துவத்தை வைத்திருக்கிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

நம்முடைய பிள்ளைகளின் வாழ்வில் "நன்மை நடக்கும்படி விரும்புகிறவர்களாய்" இருந்தால், நம் பிள்ளை களுக்கு கீழ்ப்படியவும் அடங்கியிருக்கவும் நாம் கற்றுதர வேண்டும்!

இதைப்போலவே, நமக்கும் நன்மையே நடந்திட நாம் விரும்புகிற வர்களாய் இருந்தால், சபையில் தேவன் நியமனம் செய்து வைத்திருக்கிற குறைவுள்ள ஆவிக்குரிய அதிகாரங்களுக்கும் நாம் அடங்கியிருத்தல் வேண்டும்! கர்த்தருக்குள் நமக்கு மூப்பர்களாய் இருப்பவர்கள் நிச்சயமாய் பூரணங்கொண்டவர்களாய் இருந்திட மாட்டார்கள். இருப்பினும், **தேவன் தந்த ஓர் சரியான ஸ்தல சபையில்தான் இருக்கிறோம்** என்பதை நம்மால் நிச்சயிக்க முடியுமென்றால், அந்த சபையில் தேவன் நியமனம் செய்த மூப்பர்களுக்கு நாம் அடங்கி நடந்திடவேண்டும்! இதற்கு மாறாக, நீங்கள் இப்போது இருக்கும் ஸ்தல சபையானது தேவனுடைய நியமனத்தின்படி சரியானதல்ல என நீங்கள் நிச்சயித்துவிட்டால், அந்த சபையைவிட்டு வெளியேறுவதற்கே நீங்கள் தேவனுடைய உதவியை நாடவேண்டும்!!

எப்படியிருந்தாலும் அதிகாரங்களுக்கு விரோதமான முரட்டாட் டங்களை தேவன் ஒருபோதும் அங்கீகரிக்கவேமாட்டார்!!

**நம் சபைகளில் உள்ள மூப்பர்களும் கர்த்தருக்கென்று ஓர் தூய்மையான சாட்சி வாழ்க்கை வாழ்ந்திடவே போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஓர் தூய்மையான சாட்சி வாழ்க்கையை தொடர்ச்சியாய் காத்து வாழ்வது அத்தனை எளிதான காரியமல்ல! ஆனால், தங்கள் மூப்பர்களிடம் குறைகளைக்கண்டு, அவர்களை குற்றம் கூறி, அவர்களுக்கு விரோதமாய் முரட்டாட்டம் செய்வது, சபைகளில் உள்ள எந்த சகோதர சகோதரிகளுக்கும் மிக எளிதான செயலாகும்!!**

ஆம், மற்றவர்கள் பிள்ளைகள் வளர்க்கும் விதத்தை குறை சொல்வது, பிள்ளைகளே இல்லாதவர்களுக்கு மிக எளிதான செயலேயாகும்! இவ்விஷயத்தில், ஞானவான்கள் மாத்திரமே வாய் புதைத்து மௌனமாய் இருப்பார்கள். ஏனெனில், தேவபக்தியின் வழியில் பிள்ளைகளை வளர்ப்பது எத்தனை கடினம் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்!!

இதுபோன்ற சமயங்களில் "எங்கேயாவது ஒரு சபையை நடத்தும்படி, எப்போதாவது, தேவன் என்னை தெரிந்துகொண்டதுண்டா?" என்ற கேள்வியை நமக்கு நாமே நேர்மையுடன் கேட்டுப்பார்ப்பது மிகவும் நல்லது!

இவ்வாறு, எந்த ஒரு இடத்திலும் "ஆவிக்குரிய அதிகாரத்தை" செயலாற்றும்படி தேவன் உங்களைத் தகுதியுள்ளவராக காணாத

பட்சத்தில், **மெய்யாகவே ஆவிக்குரிய அதிகாரத்தை தேவனிடமிருந்து பெற்ற மற்றொருவரை நீங்கள் ஏன் நியாயந்தீர்க்க வேண்டும்?** அப்படி நீங்கள் செய்தால், தேவனுடைய நியமனத்திற்கு எதிராகவே நீங்கள் முரட்டாட்டம் செய்தவர்களாய் இருப்பீர்கள்! அந்த மூப்பர்கள் அநேக வழிகளில் குறைவுள்ளவர்களாய் இருக்கலாம். இருப்பினும், உங்களைவிட மேன்மையான சகோதரனாகவே தேவன் அவரைக் கண்டறிந்தார் என்பதை மறந்து விடாதீர்கள்! ஆதலால்தான் தேவன் அவர்களை மூப்பர்களாய் தெரிந்துகொண்டிருக்கிறார். அந்த ஸ்தல சபைக்கு நீங்கள் வந்துசேர்வதற்கு முன்பாகவே "அந்த மூப்பரைத்தான்" தேவன் முதன்முதலாகத் தெரிந்துகொண்டார்! ஆனால் நீங்களோ எதையும் நடைமுறைப்படுத்த இயலாத பல கருத்துக்களைக்கொண்ட சகோதரனாயிருக்கும்..... **வளர்ச்சியற்ற முரட்டாட்டம்** கொண்டவராகவே இருக்கிறீர்கள்! ஒரு ஸ்தல சபையைக்கூட தேவனுக்காக கட்டும்படி ஏற்ற கிருபையை தேவன் உங்களுக்குத் தந்திருக்காத பட்சத்தில், உங்களுக்கு மிகமிக ஞானமுள்ள செயல் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது.... அது, நீங்கள் அந்த மூப்பர்களுக்குத் தாழ்மையுடன் அடங்கியிருப்பது மாத்திரமேயாகும்!!

ஒரு சபையில், ஏராளமான தீங்கு நிறைந்த பிரச்சனைகள் கொண்ட மூப்பர்கள் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. அதுபோன்ற சமயங்களில், நீங்கள் தீமைநிறைந்த அந்த பிரச்சனைகளை, அந்த சூழ்நிலையில் உதவி செய்திட **ஞானமுள்ள முதிர்ச்சிபெற்ற வேறொரு மூப்பரிடம்** அவைகளைச் கூறலாமேயல்லாமல், சபையிலுள்ள மற்றவர்களிடம் புறங்கூறி சுற்றித்திரியவே கூடாது! இதுபோன்ற ஒருசபையில் பிணக்கத்தை விதைத்து அல்லது குழப்பத்தை உண்டாக்குகிறவர்களை தேவன் ஒருபோதும் ஆசீர்வதித்திடவே முடியாது. தேவனால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரங்களுக்கு அடங்கி வாழ்ந்திடவே நாம் கற்றுக் கொள்ளவேண்டும்!!

### 6. மனதின் மறைவான நோக்கங்கள் கழுவப்படவேண்டும்:

நம்முடைய உள்ளான மனிதனுக்குள் காணப்படும் சகல பாவங்களையும் முற்றிலுமாய் கழுவிக்கொள்ள நாம் பிரயாசப்பட வேண்டும். குறிப்பாக, யாரோ சிலர் மீதுகொண்ட 'தவறான மனநோக்கங்களை' மிக கவனமாய் நம்மிடமிருந்து கழுவிக்கொள்ள வகை தேடுகிறவர்களாய் இருக்கவேண்டும். அப்படியில்லையென்றால், அந்த உள்ளான மனநோக்கங்கள் "**மறைந்திருக்கும் புற்றுநோயைப் போல்**" நம்மிடம் தங்கி ஒருநாள் நம்மை அழித்துவிடும்!

பழைய ஏற்பாட்டில் சவுல் ராஜாவின் உறவினனான 'சீமேயி'

*என்பவனைக் குறித்து நாம் வாசிக்கிறோம். சவுல் மரித்து, இஸ்ரவேலின் ராஜாவாய் தாவீது வந்தவுடன், இந்த மனுஷன் தன் இருதயத்தின் ஆழத்தில் தாவீதைக் குறித்து ஓர் கசப்பை வைத்திருந்தான். தாவீதை தேவனே ராஜாவாக நியமித்திருந்தபோதும், இந்த தாவீது தேவனுடைய ஜனத்தை ஆளுகைசெய்வதை இந்த சீமேயி விரும்பவில்லை! ஒருநாள் அப்சலோம் தன் தகப்பனுக்கு விரோதமாய் முரட்டாட்டம்செய்து, அதனிமித்தம் தாவீது எருசலேமைவிட்டு ஓடிய நாள் மட்டும் சீமேயின் இருதயத்தில்* **பொறாமையும் அதிருப்தியும்** *அந்த நீண்டகாலமாய் குடியிருந்தது (2சாமு.16:5-14). இவ்வாறு நீண்டநாட்களாய் சீமேயின் இருதயத்தில் மறைந்திருந்தவைகள் ஒருநாள் வெளியே வந்துவிட்டது! தன் ஜீவன் தப்ப தாவீது ஓடிக்கொண்டிருந்த சமயத்தில், இந்த சீமேயி தாவீதினிடத்தில் வந்து அவனைக் குற்றம்சாட்டியது மாத்திரமல்லாமல், சபிக்கவும், தேவனால் நியாயந்தீர்க்கப்பட்ட "இரத்தப்பிரியன்" என இழித்து அவன்மீது கற்களை எறியவும் தொடங்கினான்! பார்த்தீர்களா, உங்களுக்குப் பிடிக்காதவர்கள் ஒரு துன்பத்தில் அகப்படும்போது, உங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் சகல தீய எண்ணங்களும் வெளியரங்கமாகி கொட்டப்பட்டுவிடும்!!*

*ஆனால் தாவீதோ மிகுந்த கிருபை பொருந்தியவனாய், சீமேயின் சாபங்களை ஒருபொருட்டாய் எண்ணாதிருந்து விட்டான்! பிற்காலங்களில், அப்சலோம் கொல்லப்பட்டு தாவீது மீண்டும் ராஜாவாய் திரும்பிவந்த சமயம், சீமேயி பயந்து தாவீதிடம் மன்னிப்பு கேட்கும்படி ஓடிவந்தான். இந்த சமயத்தில் தாவீது அவன்மீது இரக்கம் செய்து அவனை மன்னித்து, "நான் உன்னைக் கொல்லமாட்டேன்" எனவும் அவனுக்கு வாக்கு தந்தான்!*

**இப்போது சக்கரம் மாற்றி சுழன்று, சீமேயின் மீதுகொண்ட உள்ளான கசப்பை, தாவீது தன்னிடமிருந்து கழுவிக்கொள்ள தவறி விட்டான்!**

*அதனிமித்தமாய் அவன் மரிப்பதற்கு முன்பாக தன் மகன் சாலமோனைப் பார்த்து, "சீமேயி உன்னிடத்தில் இருக்கிறான். என்னைத் தூஷித்த அவனை நான் கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தமேல் ஆணையிட்டுக் கொடுத்தேன். ஆகிலும், நான் தந்த வாக்கு உனக்குப் பொருத்தமாகாது. நீ ஞானமாய் நடந்து 'ஏதாகிலும் தந்திரமான வழியில்' சீமேயியை குற்றமுள்ளவனாய் கண்டு அவனைக் கொன்று போடு!" எனக்கூறினான் (1இராஜா.2:8-10). சாலமோனும் அவ்வாறாகவே சீமேயியை பழிவாங்கிய பின்பு, தாவீது மரித்துப் போனான்! இது எத்தனை துயரமான மரணம்.....* **ஓர் தேவனுடைய மனுஷனாய், பல வருடங்கள் வாழ்ந்துவிட்டு முடிவில் பழிவாங்கி அடையும் இழிவான மரணம்!**

*புதிய உடன்படிக்கையின் தரத்தின்படி நாம் தாவீதை நியாயந்தீர்த்திட முடியாது. பழைய உடன்படிக்கைக்கு உட்பட்டே தாவீது வாழ்ந்து வந்தவன். ஆனால் புதிய உடன்படிக்கையின்கீழ் நம்முடைய அழைப்போ மகா மேன்மை பொருந்தியதாகும்! இன்று நாமோ* **பழி வாங்குதல் கர்த்தருக்குரியது** *என்பதை அறிந்தவர்களாய் தீமைக்குதீமை செய்யாதிருக்கும்படியே, புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம்!! (ரோ. 12:17-21).*

*ஆகவே தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயங்களை சோதித்தறிந்து, அதில் 'யாரைக் குறித்தாகிலும்' பழிவாங்கும் விருப்பம் சிறிதாகிலும் தங்கி நிற்கிறதா? என்பதை அறிந்திடவேண்டியது நமக்கு மிகமிக முக்கியமான ஓர் செயலாய் இருக்கிறது!!*

*இக்கடைசி நட்களில், தங்கள் இருதயத்தை சுத்தமுள்ளதாய் பாதுகாத்து, தங்கள் வாழ்வின் இறுதிவரை* **தேவ கிருபையை பற்றிப் கொண்டு வாழ்பவர்கள் வெகுசிலரே!** *அவர்களில் ஒருவராவே நாம் இருந்திட வேண்டும்!!*

# 12

## ஞானத்தின் ஏழு தூண்கள் காண வேண்டும்!

**வே**தாகமத்தின் கடைசிப் பக்கங்கள் இரு பெரும் வித்தியாசங்களை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. அந்த வித்தியாசம், வெளிப்படுத்தின விசேஷம் 17,18 அதிகாரங்களில் காணப்படும் பாபிலோன் வேசிக்கும், வெளிப்படுத்தின விசேஷம் 21,22 அதிகாரங்களில் காணப்படும் எருசலேமாகிய கிறிஸ்துவின் மணவாட்டிக்கும் உள்ள வித்தியாசமேயாகும்!

யாரெல்லாம் "உலக சிநேகம்" கொண்டிருக்கிறார்களோ அவர்களை "**விபச்சாரிகள்**" **(வேசிகள்)** என யாக்கோபு 4:4-ம் வசனத்தில் வேதம் தெளிவாய் கூறுகிறது. இதற்கு நேர்மாறாக உலகத்தைவிட்டு வேறு பிரிந்து, தங்கள் பரலோக மணவாளனுக்காகத் தங்களை கற்புள்ளவர்களாகவும், தூய்மையுள்ளவர்களாகவும் காத்துக் கொண்டவர்களே "**மணவாட்டி**" என்றும் வேதம் சுட்டிக்காட்டுகிறது (2கொரி. 11:1,2).

மணவாளன் "**ஞானம்**" என அழைக்கப்பட்டதை நீதிமொழிகள் 8:1,27-ம் வசனங்களில் வாசிக்கிறோம். அதுபோலவே மணவாட்டியும் கூட "**ஞானம்**" என்றே அழைக்கப்படுவதை நீதிமொழிகள் 9:1-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஏனெனில் இந்த மணவாட்டி எல்லா வகையிலும் தன் மணவாளனுக்கு ஒப்பாகவே இருந்து, அவருடைய "ஞானம்" என்ற நாமத்தைத் (பெயரை) தன் நெற்றியிலும் தரித்து கொண்டவளாய் இருந்தாள். மேலும், தன் மணவாளனைப்போலவே ஜெயம் பெற்றவளாயும் இருந்தாள்! (வெளி.3:12, 21; 14:1).

இந்த மணவாட்டிக்கும், வேசிக்கும் உள்ள வித்தியாசத்தை நீதிமொழிகள் 9-ம் அதிகாரம் தெளிவாய் வேறுபடுத்திக் காட்டுகிறது.

**இந்த அதிகாரத்தின் முதல் 12 வசனங்களில், மணவாட்டி எல்லா புத்தியீனர்களையும், அவர்களின் புத்தியீன வழிகளை விட்டு விலகும் படி அழைத்து, ஞானத்தின் ஆரம்பமாகிய "கர்த்தருக்குப் பயப்படு வதைக்" காத்துக் கொள்ளும்படியும் அழைப்பதை நாம் காண்கிறோம் (வசனம் 6,10).**

அதேபோல், இந்த அதிகாரத்தின் கடைசி 6 வசனங்களில்

*"வேசியின் அழைப்பையும்" நாம் காண்கிறோம்! இந்த வேசியின் அழைப்பிற்கே ஏராளமான பேர் செவிகொடுத்து ஆவிக்குரிய நரக பாதாளத்தில் வீழ்ந்தார்கள் என்றும் 18-ம் வசனம் எடுத்துக் கூறுகிறது.*

*நீதிமொழிகள் புத்தகம் எடுத்துரைக்கும் ஞானத்தின் ஏழு தூண்களை யாக்கோபு 3:17-ம் வசனம் நேர்த்தியாய் வரிசைப்படுத்திக் கூறுவதைப் பாருங்கள்! எந்த ஒரு மெய்யான சபையும் இந்த ஏழு தூண்களின் மீதே கட்டப்பட வேண்டும்!! இங்கு விவரிக்கப்படும் ஞானத்தின் குணாதிசயங்களை உற்றுநோக்கி* "**யார் கிறிஸ்துவின் மணவாட்டி?**" *என்பதை எளிதில் கண்டுபிடித்திடவும் முடியும்!!*

1. **பரிசுத்தம்:**

*மெய்யான சபைக்கு, கிறிஸ்துவின் மணவாட்டிக்கு மிக முக்கியமான "முதல் தூணாய்" காணப்படவேண்டியது, இந்த பரிசுத்தமேயாகும்! வெளிப்புற பரிசுத்தத்தை மாத்திரம் காட்டி, உள்ளே 'வெற்று கூடாய்' காணப்படும் தூணல்ல இந்த பரிசுத்தம்! அப்படி இல்லவே இல்லை!! மாறாக, தூணின் உச்சித்தொடங்கி அதன் அடிப் பாகம் வரை "உறுதியான கெட்டியான" தூணாய் விளங்குவதே இந்த பரிசுத்தம். இந்த மெய் பரிசுத்தம் "இருதயத்தின் பரிசுத்தம்" ஆகும். "தெய்வ பயத்தின்" விதை ஆழமாய் இருதயத்தில் விழுந்து வளர்ந்ததே இந்த பரிசுத்தமாகும். ஆம், புத்திசாலியான மூளை அறிவு கொண்டவர்களை வைத்து அல்ல, சுத்த இருதயம் கொண்டவர்களை வைத்தே கிறிஸ்துவின் மெய்யான சபை கட்டப்படுகிறது!*

**தேவாதி தேவனைக் குறித்தும், அவருடைய வழிகளைக்குறித்தும் வெளிப்பாடு இல்லையென்றால், நாம் ஒருக்காலும் சபையைக் கட்டிட முடியாது!**

*அப்படியானால், இந்த வெளிப்பாடுகளை யாருக்கு தேவன் தருகிறார்? தங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரமே "தேவனை தரிசிக்கும்" வெளிப்பாடு பெறுவார்கள் என மத். 5:8-ம் வசனம் முரசொலிப்பதைப் பாருங்கள்!!*

2. **சமாதானம்:**

*நீதியும் சமாதானமும் எப்போதும் இணைந்தே செல்கிறது! ஆம், இவர்கள் இரட்டையர்கள்!! தேவனுடைய ராஜ்யம், நீதியும் சமாதானமுமாம்!! (ரோமர் 14:17). மெய்யான ஞானம் ஒருபோதும் வாக்குவாதம் கொண்டதும், சச்சரவுபண்ணுவதுமாய் இருப்பதே இல்லை! அது சண்டையிடுவதற்கு முன்செல்லாது! 'தன்னால் முடிந்த வரை' யாவரோடும் ரம்மியமான உறவையே நாடும்! ஒருவன் திவ்விய ஞானத்தினால் நிறைந்திருந்தால்,* **அதுபோன்றவனிடம் சச்சரவைத்**

**தூண்டிவிட யாராலும் முடியாது!!** ஏனென்றால், அந்த மனிதன் சமாதான புருஷன்!! அவன் உறுதிகொண்டவனாய் இருக்கலாம்! ஒத்த வேஷக்காரர்களால் வெறுக்கவும்படலாம்! ஆனால் அவனோ, எப்போதும் சமாதான புருஷன்! சுவிசேஷத்தைப் பிரசங்கித்திட தன் சீஷர்கள் செல்லும் போது "சமாதான புருஷர்கள்" இருக்கும் வீட்டில் மாத்திரமே தங்கும்படி இயேசு அவர்களிடம் கூறினார்(லூக்.10:5-7). தேவனுடைய வீட்டை நாம் கட்டுவதாயிருந்தால், நாம் கண்டிப்பாய் சமாதான புருஷர்களாகவே இருந்திட வேண்டும்!

3. **சாந்தமுள்ள கரிசனை:**

கிறிஸ்துவின் மணவாட்டி மற்றவர்களிடம் எப்போதுமே நல்லவர்களாயும், மென்மையுள்ளவர்களாயும், பொறுமையுள்ளவர்களாயும், சகித்துக்கொள்பவர்களாயும், மரியாதை காண்பிக்கும் குணம் கொண்டவர்களாயும் இருப்பார்கள்! கடினமாகவோ அல்லது கரடு முரடாகவோ ஒருபோதும் நடந்து கொள்ளாமல், பிறருடைய உணர்வுகளை மதித்து நடப்பார்கள்! இந்த தூணை சபை பெற்றிருந்தால் மாத்திரமே, சபை மக்களில் சிலர் மந்தமுள்ளவர்களாய் இருந்தாலும் அவர்களைத் தாங்கிக்கொள்வது எளிதாய் இருக்கும்! உண்மை என்னவென்றால், பிரச்சனை நம் சகோதர சகோதரிகளின் கரடு முரடான நாகரீகத்தில் இல்லை...... நம்மில் வாசமாயிருக்கும் "பொறுமையின்மையே" காரணம் என்பதை இந்த "**சாந்தமுள்ள கரிசனை**" ஞானத்தைப் பெற்றவர்கள் விளங்கியிருப்பார்கள்! ஆகவே இவர்கள் தங்களின் உண்மையான சத்துருவாகிய "சொந்த ஜீவனை" எதிர்த்து போரிடுவார்களேயல்லாமல், தங்கள் சகோதர சகோதரிகளிடம் ஒருபோதும் போரிடமாட்டார்கள்!!

4. **இணங்குவதற்கு விருப்பம்:**

எச்சரிப்பையும், புத்திமதியையும் ஏற்றுக்கொள்ள முடியாதவன் அல்லது புத்திமதியை கேட்கும் நிலைக்கு தன்னை அப்பாற்பட்டவன் என எண்ணுகிறவன் ஆகிய இவர்கள், மூப்பர்களாயிருந்தாலும் அல்லது வயது சென்றவர்களாயிருந்தாலும்...... அவர்கள் மூடர்கள் (பிர.4:13). "வயது சென்றவர்கள் ஞானமுள்ளவர்களாயிருப்பார்கள்!" என்ற புறஜாதியாரின் எண்ணத்தையே இன்றும் நம் இந்திய தேசத்தில் அனேகர் கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணம் ஒருவேளை பூமிக்குரிய காரியங்களுக்குச் சரியாக இருக்கலாம்! ஆனால் நிச்சயமாய் ஆவிக்குரிய காரியங்களுக்கு இந்த எண்ணம் பொருத்தமானது அல்லவே அல்ல! தேவாலயத்திலுள்ள வயது சென்ற ஜனங்களைத் தன் அப்போஸ்தலர்களாய் இயேசு தெரிந்துகொள்ளாமல், இளம் வாலிபர்களையே தெரிந்துகொண்டார்!!

*சபையில் மூப்பராகவும், தேவபக்தியில் அதிக வளர்ச்சியும் பெற்ற 'இளம்' மூப்பர்களின் புத்திமதியை ஏற்றுக் கொள்வதற்கு அந்த சபையிலுள்ள வயது முதிர்ந்தவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏன் தெரியுமா?* "**அவர்களின் பெருமையே**" *காரணம், அதுதான் உண்மை! ஆலோசனையைக் கேட்பதற்கு விருப்பம் கொண்டவர்கள் மாத்திரமே ஞானவான்களாய் மாறுகிறார்கள் என நீதிமொழிகள் 13:10 கூறுகிறது. ஒரு சபையிலுள்ள சகோதர சகோதரிகள்* **புத்திமதியையும், திருத்தப் படுவதையும் ஏற்றுக்கொள்ள** *மனப்பூர்வமான மனதுடையவர்களாய் இருந்தால், அந்த சபை நிச்சயமாய் "மகிமையுள்ள சபையாய்" கட்டப்பட்டுவிடும்!*

*தனக்கு புத்தி சொல்வதற்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பவர் களை, ஞானவான் நேசிப்பான்.... அவர்களின் ஐக்கியத்தையும் நாடுவான்! இணங்குவதற்கு விருப்பம் கொண்ட இந்த ஞானத்தின் தூணில் "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" என்ற வசனம் நிச்சயமாய் எழுதப்பட்டிருக்கும்!! (எபேசியர்.5:21).*

5. **மிகுந்த இரக்கமும் அதன் நற்கனிகளும்:**

*அவ்வப்போது கொண்ட இரக்கத்தினால் அல்ல, கிறிஸ்துவின் மணவாட்டி எப்போதுமே இரக்கத்தினால் நிறைந்திருப்பாள்! யாரையும் நிபந்தனையின்றி, மகிழ்ச்சியுடன், மனப்பூர்வமாய் மன்னிப்பதற்கு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு கஷ்டமாய் இருப்பதே இல்லை! பிறரை ஒருபோதும் நியாயந்தீர்க்கவோ அல்லது ஆக்கினைக்குட்படுத்தவோ மாட்டாள்...... மாறாக, அவர்களிடம் தன் மணவாளன் இயேசுவைப்போல* "**மனதுருக்கம் கொண்டிடவே**" *நாடுவாள்! இந்த இரக்கத்தை அவள் வெறுமனே தன் மனதில் மாத்திரம் கொண்டிராமல், தன் செயல்களிலே இரக்கத்தின் நற்கனிகளை வழங்கிடுவாள்! ஜனங்களுக்கு, தன்னால் இயன்ற எல்லா வழியிலும் நன்மை செய்வாள்! தன்னால் இயன்ற எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்வாள்! தன்னால் இயன்ற எல்லா நேரத்திலும் நன்மை செய்வாள்!*

6. **என்றும் மாறாத உறுதி:**

*திவ்விய ஞானம் பெற்ற ஒரு சகோதரன், எல்லா நேர்மையற்ற தந்திரத்திலிருந்தும் விடுதலை பெற்றிருப்பான்! அவன் முழு இருதயம் கொண்டவனும், நேர்வழி கொண்டவனும், நெறிதவறா கண்ணுடைய வனுமாய் இருந்து...... அலசடிபடும் சந்தேகங்களுக்கும் கோழையான தயக்கங்களுக்கும் முற்றிலும் விடுதலை பெற்றிருப்பான்! இவன் தன் சொந்த பெலவீனங்களையே பார்த்துக் கொண்டிராமல், தேவனுடைய வாக்குதத்தங்களையே தன் சிந்தையில் கொண்டிருப்பான்!! இவ்வாறு*

தேவனுடைய வாக்குதத்தங்களில் உறுதி கொண்ட சகோதரர்கள் மாத்திரமே, தங்கள் எல்லா அறிந்த பாவங்களிலேயும் ஜெயம் பெற்று வாழ்வது இந்த பூமியில் இப்போதே சாத்தியமானது என்பதை ருசித்திருப்பார்கள்.

இவ்வித உறுதிகொண்ட சகோதரர்களே நம்பிக்கைக்குப் பாத்திர வான்களாய் எப்போதும் இருப்பார்கள். "சொன்ன வார்த்தையின்படி நடப்பார்கள்" என்ற நம்பகம் இவர்களிடத்தில்தான் காணப்படும்!!

**இவர்களின் உறுதியை எந்த சத்துவமும் அசைத்துவிட முடியாது! இவர்கள் தங்கள் நெஞ்சில் பெற்ற விசுவாசத்தைவிட்டு விலகும்படி யாராலும் அவர்களை வளைத்துவிடவும் முடியாது!**

அல்லது, வேறு யாதொரு விஷயத்திலும் அவர்களை 'ஒத்தவேஷம் தரித்திடச்' செய்வதும் ஒருவராலும் முடியாது!! ஆம், இவர்களே நிமிர்ந்தவர்களும், 'பனை'போன்று அசைவில்லாதும் இருப்பவர்கள்!!

**7. மாயமற்ற தன்மை:**

மற்றவர்கள் வெளியே காண்பதைவிட, தன் "உள்ளே" அதிகமான ஆவிக்குரிய களஞ்சியம் பெற்றவளாய் இருப்பாள், இந்த ஞான மணவாட்டி! அவளுடைய வெளிப்புற ஜீவியத்தை வைத்து மற்றவர்கள் கூறும் அபிப்பிராயத்தைக் காட்டிலும் அவளின் மறைவான அந்தரங்க ஜீவியம் அதிக புகழ்ச்சியுடையதாகவே இருக்கும்! "ஆவிக்குரிய வேசியோ" இந்த மணவாட்டியின் குணாதிசயத்திற்கு நேர் - எதிராய் இருக்கிறாள். அவளின் ஆவிக்குரிய தன்மை என சொல்லப்படுவ தெல்லாம், "மனுஷர்களுடைய புகழ்ச்சியைப்" பெறுவதற்காக ஆடிய நாடகங்களேயாகும்! இந்த ஆவிக்குரிய - வேசி உண்மையில் பெற்றிருந்தது, 'மார்க்கவாதமே' அல்லாமல் 'ஆவிக்குரிய தன்மைகள்' அல்லவே அல்ல! இந்த சீர்மிகு மணவாட்டியோ, தன் வெளிப்புற வார்த்தைகள் செயல்களைவிட **தன் அந்தரங்க சிந்தைகளிலும், மனநோக்கங்களிலுமே அதிக விழிப்புடன்** கவனமாய் இருக்கிறாள்! தன் அந்தரங்க ஜீவியத்திற்கு "தேவனுடைய அங்கீகாரம்" வேண்டுமே என வாஞ்சித்து ஏங்குவாள்...... தன் வெளிப்புற ஜீவியத்திற்கு வரும் "மனுஷருடைய அங்கீகாரத்தைக்" குறித்தோ, துச்சமென மதித்து அதைக்குறித்து அக்கறையற்றிருப்பாள்!!

ஞானத்தின் இந்த 7- குணாதிசயத்தின் சோதனையில் தன்னை உண்மையாய் சோதித்தறிபவன் யாராயிருந்தாலும், அவன் மணவாட்டியில் பங்கு கொண்டவனா? அல்லது, ஆவிக்குரிய - வேசியில் பங்கு கொண்டவனா? என்பதை நிச்சயமாய் கண்டுகொள்ள முடியும்!!

ஞானத்தின் வித்து, கிறிஸ்துவின் மணவாட்டி இருதயத்தில் ஆழமாய் வேரூன்றியிருக்கிறபடியால், ஞானத்தின் மேற்கண்ட ஏழு

*குணாதிசயங்களும் வருடங்கள்தோறும் மென்மேலும் அவளுக்குள் வளர்ந்துகொண்டே இருக்கும். அவள் "பூரணத்திற்கு" இன்னமும் தூரமாய் நின்றுகொண்டிருந்தாலும், அவளோ பூரணத்தை நோக்கி பிரயாசத்துடன் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறாள். ஆனால் மேற்கண்ட ஞானத்தின் குணாதிசயங்கள் காணப்படாத ஒருவன் அல்லது ஒரு 'சபை' தன்னை கிறிஸ்துவின் மணவாட்டியாக எண்ணிக் கொண்டிருந்தால், அது கொடிய வஞ்சகமேயாகும்! எங்கெல்லாம் சண்டைகளும், பொறாமைகளும், அசுத்தங்களும், அவிசுவாசமும், பெருமையும் இருக்கிறதோ, அங்கெல்லாம் 'வேசிதான்' இருக்கிறாளே யல்லாமல், 'மணவாட்டி' அங்கு இல்லவே இல்லை!*

நாம் ஞானத்தைப் 'புதயலைத்' தேடுவதுபோல் தேடினால் *மாத்திரமே கண்டடைய முடியும் என வேதம் தெளிவாய் கூறுகிறது (நீதிமொழிகள்.2:4).* பரலோக இராஜ்ஜியத்தைக் குறித்து இயேசு *கூறும்போது, அது "நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்திற்கு ஒப்பாயிருக்கிறது" என்றும், அதைக் கண்டவன், அதை அடையும் பொருட்டு "தனக்குண்டான எல்லாவற்றையும் விற்றான்" என்றும் கூறினார் (மத்தேயு.13:44).* இவ்வாறு "திவ்விய ஞானத்திற்கு" ஒப்படும் போது பூமியிலுள்ள மற்ற அனைத்தும் "குப்பைகள்" என பவுலைப் போல *(பிலிப்பியர்.3:8)* யாரெல்லாம் எல்லாவற்றையும் தேவனிடத்தில் வெறுத்து விட்டுவிட்டு வந்தார்களோ, அவர்களே இந்த ஞானத்தைப் பெற்று, அதன் ஏழு தூண்களையும் கட்டிட முடியும். இதுபோன்ற ஜனங்களால் மாத்திரமே மெய்யான இயேசுகிறிஸ்துவின் சபை கட்டப்படவும் முடியும்!!

வேதஅறிவைப் பெருக்குவதோ அல்லது கவர்ச்சியான பிரசங்கியாய் மாறுவதோ மிகவும் எளிது. ஆனால், இவையாவும் உங்களை ஒரு "வேதபாரகனாய்" மாத்திரமே மாற்றிட முடியும். இயேசுவோ, ஒவ்வொரு வேதபாரகனும் "ஓர் சீஷனாய்" மாறிட வேண்டும் என இயேசு உபதேசித்தார் (மத்தேயு.13:52). இந்த இனிய மாற்றம் ஏற்பட வேண்டுமென்றால், இந்த வேதபாரகன் தனக் குண்டான எல்லாவற்றையும் வெறுத்துவிட வேண்டும்.

**ஆம், அவன் தன் சொந்த ஆதாமின் ஜீவனையும், தன் சுயமாய் தன் வழியைத் தெரிந்து கொள்ளும் உரிமையையும்கூட அவன் வெறுத்திட வேண்டும் (லூக்கா.14:26,33).**

அப்போது மாத்திரமே, அவன் தேவன் வழங்கும் ஐசுவரியமாகிய திவ்விய ஜீவனையும், திவ்விய ஞானத்தையும் பெற்றிட முடியும். அவ்வாறு அவன் பெற்றுவிட்டால், இப்போது அவன் பிறருக்கு இந்த ஐசுவரியங்களைத் தன் இருதயத்திலிருந்து வாரிக் கொடுத்திட

*முடியும்....... தன் 'தலையிலிருந்து' அல்ல!! இப்போது, சீஷனாய் மாறிய இந்த "வேதபாரகன்" பிறருக்கு தான் பெற்ற பொக்கிஷத்திலிருந்து புதிய ஞானத்தையும், தேவனுடைய வார்த்தையில் பெற்ற புதிய வெளிப்பாடுகளையும் வழங்கிடுவான். மேலும், தான் ஏற்கனவே பெற்று வாழ்ந்த பழைய சத்தியங்களையும் எவ்வாறு உடன்படிக்கைப் பெட்டியில் 40 வருடங்களாய் தேவனுடைய பிரசன்னத்தில் 'மன்னா' ஊசிப்போகாமல் பசுமையாய் இருந்ததோ, அதைப்போலவே பசுமையோடு புதியதாய் பிறருக்கு வழங்கிடுவான்! (மத்தேயு.13:52).*

*"ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்..... " (ஞானம் நிறைவாய் பெற்றிருக்கிறேன் என நம்மில் யார் கூறிடமுடியும்?) அவன் தேவனிடத்தில் கேட்கக்கடவன் என்றல்லவா யாக்கோபு கட்டளை யிடுகிறார்! (யாக்கோபு.1:5). தேவன் ஒருவரே ஞானத்தைத் தரமுடியும் (நீதி.2:6) ஆனால் நாமோ, அதை விசுவாசத்தோடு கேட்கவேண்டும். நாம் விசுவாசத்தோடு கேட்டால், நிச்சயமாய் இந்த ஞானத்தின் ஏழு தூண்களையும் நம் ஜீவியத்தில் பெற்றிடுவோம்! இதன் மூலமாய்,* **தேவனுடைய வீடு** *நமக்குள்ளும், நம் மூலமாயும் கட்டப்படும், இது உறுதி!!*

# 13

## அந்நிய பாஷையின் மேன்மை காண வேண்டும்!

*“நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமை நிழலும் இல்லை” என யாக்.1:17 கூறுவதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.*

தேவன் ஒருபோதும் தவறு செய்வதேயில்லை! அவர் ஒன்றை கொடுத்தால் அது “பூரண வரமாய்தான்” (Perfect Gift) எப்போதும் இருக்கும். இந்த அவருடைய குணாதிசயங்கள் என்றென்றும் நிலைத் திருக்கும், அதில் அவர் மாறுவதில்லை என யாக்கோபு கூறினார். ஆகவே பெந்தெகொஸ்தே நாளில் தேவன் சபைக்கு “அந்நியபாஷை பேசும் வரத்தை” (Tongues-டங்க்ஸ்) அளித்தபோது, தான் சபைக்கு செய்திருக்கும் செயலை நன்கு அறிந்திருந்தார். “இப்படி, இந்த வரத்தைத் தந்து விட்டோமே!” என சிந்தித்து அவர் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்ளவேயில்லை! ஆம், அவர் என்றென்றும் மாறாதவராகவே இருக்கிறார். **ஆகவே அந்நியபாஷை வரம் திட்டமும் தெளிவுமாக “பூரணமான வரமேயாகும்!!”.**

இந்த வரத்தின் பின்னணியில், அதுவும் குறிப்பாக நாம் வாழும் இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில், ஏராளமான குளறுபடிகள் இவ்வரத்தினிமித்தம் உண்டாகும் என்பது தேவனுக்கு நன்றாகத் தெரியும். இருப்பினும், சபை தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்று வதற்கு இந்த வரம் மிகவும் தேவையானது என்பதையும் தேவன் அறிந்திருந்தார்!

பிரதான சத்தியங்களாகிய திரித்துவம், கிறிஸ்துவின் தெய்வத் தன்மை, கிறிஸ்துவின் மனித தன்மை, பரிசுத்தாவியின் ஆள்தன்மை... போன்ற சத்தியங்கள் கிறிஸ்தவ சரித்திரத்தில் பலவிதத்தில் எதிர்க்கப் பட்டு குளறுபடிகளைச் சந்தித்திருக்கிறது. ஆகவே, தேவன் தந்த வரமாகிய “நவ நாவுகளும்” (Tongues) குளறுபடியாகியிருப்பது, எந்த

ஆச்சரியத்தையும் நமக்குத் தந்துவிட, நாம் அனுமதிக்கவே கூடாது.

இதுபோன்ற எல்லா உபதேச சத்தியங்களிலும், அவைகளைக் குறித்து **வேதாகமம்** என்ன சொல்லுகிறது என்பதில் மிகுந்த கவனம் செலுத்துவதே மிக முக்கியமானதாகும். ஆகவே, "அந்நியபாஷை பேசுவதைக்குறித்து" இதுவரை நீங்கள் கொண்டிருந்த மனப் பான்மையை சற்று தள்ளி வைத்துவிட்டு, இதைக்குறித்து வேதாகமம் சொல்லும் ஒவ்வொரு வசனத்தையும் மிகுந்த கவனமாய் இப்போது பார்க்கக்கடவோம்!

**சத்தியம் எண்:–1**

மாற்கு 16:17-ம் வசனத்தில் இயேசு கூறும்போது, "**விசுவாசிக்கிற வர்களால்** நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்; **நவமான பாஷைகளைப்** பேசுவார்கள்; வியாதியஸ்தர்கள்மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" எனக் கூறினார்.

இவ்வசனத்தில் இயேசு குறிப்பிட்டது என்னவென்றால், "சில அடையாளங்கள் விசுவாசிக்கிறவர்களால்-Those who have believed நடைபெறும்" என்பதுதான். இவ்வாறு நடைபெறும், பிசாசுகளைத் துரத்துதல், வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குதல் போன்ற அடை யாளங்களில், நவமான பாஷைகளைப் (New Tongues) பேசுவதும் ஒன்றாகும். இங்கு இயேசு குறிப்பிடும்போது, இந்த எல்லா அடையாளங்களும் **ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும்** - EVERY BELIEVER நடைபெறும் எனக் கூறவேயில்லை. அதற்கு மாறாக, இந்த அடை யாளங்கள் "**விசுவாசிக்கிறவர்களால்**" நடைபெறும் என்றே கூறினார்.

ஆகவே இங்கு குறிப்பிடப்பட்ட எல்லா வரங்களையும் ஒவ்வொரு விசுவாசியும் பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அதேபோல், ஒவ்வொரு சபையும் இந்த எல்லா வரங்களையும் பெற்றிருக்க வேண்டியதும் அவசியமில்லை. ஆனால், இந்த வரங்கள் யாவும் "உலகம் தழுவிய" முழு சபையிலும் காணப்படும் என்பது உறுதி! எந்த வரத்தை யாருக்குத் தரவேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவரே தம்முடைய சர்வ ஞானத்தின்படி தீர்மானிக்கிறார்.

**சத்தியம் எண்:–2**

"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.... எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து... நாம் நம்முடைய

பாஷைகளிலே இவர்கள் 'தேவனுடைய மகத்துவங்களைப்' பேசக் கேட்கிறோமே என்றார்கள்" என அப்போஸ்தலர் நடபடிகள் **2:4,7,11** வசனங்களில் காண்கிறோம்.

முதல் தடவையாய் விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டபோது அவர்கள் "எல்லாரும்"(All) நவமான பாஷைகளைப் பேசினார்கள். இங்கு குறிப்பிடப்பட்ட நவமான பாஷைகள்-TONGUES, அதைக்கேட்ட மற்றவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வெவ்வேறு மொழிகளாகவே-LANGUAGES இருந்தது. ஆகவே இந்த இடத்தில் "வியாக்கியானம் செய்யும் வரம்" அவசியமாய் இருக்கவில்லை!

நான்காம் வசனத்தில் "அவர்களெல்லாரும்.... வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பாருங்கள். அதாவது "**அவர்கள்தான்**" அந்நியபாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.... பரிசுத்த ஆவியானவர் அல்ல!

**ஆம், பரிசுத்த ஆவி அவர்களுடைய நாக்குகளைப் பிடித்து அசைக்க வில்லை!! அதற்கு மாறாக, ஆவியானவர் வரத்தைத் தந்தருள...... "அவர்கள்" வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள்.**

எந்த வரத்திலும், "தெரிந்து கொள்ளும் சுயாதீனத்தை" பரிசுத்த ஆவியானவர் நம்மிடமிருந்து எடுத்துக் கொள்வதேயில்லை. இன்னமும் சொல்லப்போனால் ஆவியின் கனியானது "சுய அடக்கமே-SELF CONTROL"ஆகும் (கலாத்தியர் **5:23**). தமிழில் இச்சையடக்கம் எனக் கூறப்பட்டிருப்பது ஆங்கிலத்தில் "சுய-அடக்கம்" என்றே கூறப் பட்டுள்ளது. பிசாசின் ஆவி பிடித்த ஜனங்கள் மாத்திரமே தங்கள் சுய-அடக்கத்தை இழக்கிறார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர் களோ, யாரைக்காட்டிலும் தங்களை அடக்கியாளுவதற்கு அதிக திறன் பெற்றிருப்பார்கள். "தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறது" என்றே வேதம் கூறுகிறது (1கொரிந்தியர். **14:32**).

**சத்தியம் எண்:-3**

"அவர்கள் பல பாஷைகளைப் (TONGUES) பேசி தேவனைப் புகழ்ந்தார்கள்" என அப்போஸ்தலர்கள் **10:46**-ல் வாசிக்கிறோம்.

கொர்நேலியு வீட்டில் கூடியிருந்த அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். இவர்கள் மனந்திரும்பிய அதே சமயத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்று விட்டார்கள். இவர்கள் தாங்கள் பெற்ற அந்நிய பாஷையினால்-TONGUES தேவனைத் **(தேவனிடத்தில்)** துதித்து புகழ்ந்தார்கள் என்று காண்கிறோம். அதாவது, அன்று பெந்தேகொஸ்தே நாளில் அபிஷேகம் பெற்ற நிகழ்ச்சியைப்

போல் "**ஜனங்களிடத்தில்** அந்நிய பாஷையினால் பேசவில்லை" என்பதைக் கவனியுங்கள்!

**சத்தியம் எண்:-4**

"பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்" என வாசிக்கிறோம் (அப்.19:6).

பவுல் எபேசு விசுவாசிகளின் மீது கைகளை வைத்தவுடன் அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கினார். இங்கு குறிப்பிடப்பட்ட **அந்நியபாஷை "தீர்க்கதரிசனம் சொல்லுவதாய்"** இருப்பதை நாம் காண்கிறோம்.

மேற்கண்ட அப்போஸ்தலர் நடபடிகளின் சம்பவங்களில் கீழ்காணும் உண்மைகளை நாம் கவனிப்பது நல்லது:

(i) அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில், தண்ணீர் ஞானஸ்நானத் திற்கு **பிறகு** பரிசுத்தஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு **முன்பே** பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டார்கள்!

(ii) அப்போஸ்தர் 2-ம், 10-ம் அதிகாரங்களில் யாரும் கைகளை வைக்காமலே பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். அப்போஸ்தலர் 19-ம் அதிகாரத்திலோ பவுல் அவர்கள் மீது கைகளை வைத்த பிறகு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள்.

(பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு, இப்படித்தான் பெற வேண்டு மென்ற ஓர் நிலையான வரையறை எதுவும் இல்லை என்பதையே இவ்வசனங்கள் நிரூபிக்கின்றன. அதாவது, தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்போ அல்லது பின்போ; கைகளை வைத்தோ அல்லது வைக்கா மலோ பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.)

(iii) அப்போஸ்தலர் 8:16-18 வசனங்களில் சமாரியா சீஷர்கள் பரிசுத்த ஆவியைக் பெற்றுக்கொண்டபோது, அந்நிய பாஷையைப் பேசியதாக குறிப்பிடப்படவில்லை.

ஆனால் அவ்வாறு பரிசுத்தஆவி தந்தருளப்படுவதை மாயவித்தைக் காரனான சீமோன் கண்டான் என வாசிக்கிறோம்..... அப்படி அவன் "எதைக் கண்டான்" என்பதை வேதம் குறிப்பிடவில்லை! ஆனால் தான் கண்ட ஒன்று, தானும் அந்த வரத்தை பேதுருவைப்போல பெறவேண்டுமென்ற ஆவலை அவனுக்குள் தூண்டியது என நாம் காண்கிறோம், அவ்வளவுதான்!

**சத்தியம் எண்:-5**

*"ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற் கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியி னாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும்.... வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது" என 1 கொரிந்தியர். 12:7,8,10 வசனங்களில் வாசிக்கிறோம்.*

*இவ்வசனங்களில் "அவனவனுடைய பிரயோஜனம்" என்பது ஆங்கிலத்தில்* COMMON GOOD- *"பொது நன்மை" என்றே கூறப்பட்டி ருக்கிறது. அதாவது, அந்நியபாஷைவரம் "சபையின் நன்மைக்காகத்" தரப்பட்டிருக்கிறது என்பதே இதன் பொருளாகும். கொரிந்தியர்களுக்கு எழுதப்பட்ட இந்த நிருபம், பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டதாகும். இன்றும் ஆவியானவரால் தரப்படும் அந்நியபாஷை வரம் "சபையின் பொது நன்மைக்காகவே" தரப்படுகிறது.*

**சத்தியம் எண்:- 6**

*"இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" என 1கொரிந்தியர்.12:11-ல் வாசிக்கிறோம்.*

*அந்நியபாஷை வரம் உட்பட ஒவ்வொரு வரத்தையும் யார் யாருக்குத் தர வேண்டுமென்பதை ஆவியானவரே தம்முடைய சர்வ ஞானத்தின்படி தீர்மானிக்கிறார் என்பதை இந்த வசனம் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆகவே, யார் யாருக்கு எந்தெந்த வரத்தைக் கொடுக்க வேண்டுமென்பதை நாம் ஆவியானவருக்கு ஒருபோதும் கட்டளையிட முடியவே முடியாது!*

**சத்தியம் எண்:- 7**

*"தேவனானவர்* **சபையிலே** *முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும்...... பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" என 1 கொரிந்தியர் 12:28-ல் வாசிக்கிறோம்.*

*ஆகவே, குறிப்பிட்ட தம் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சபையில் அந்நியபாஷை பேசும் வரத்தை தேவனே ஏற்படுத்தினார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். எனவே நாம் தேவனுக்கு எதிர்த்து நிற்காதபடி, இந்த வரத்தையும் நாம் ஒருபோதும் எதிர்த்து நிற்கவே கூடாது! நம்மைவிட தேவனுக்கு அதிக ஞானம் உண்டு என்பதை*

*ஒருபோதும் மறந்து விடாதீர்கள்!!*

**சத்தியம் எண்:–8**

*"எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷை பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?" என 1 கொரிந்தியர் 12:30-ல் வாசிக்கிறோம்.*

*இந்த வசனம் கூறுகிறபடி எல்லா விசுவாசிகளுக்கும் குணமாக்கும் வரங்கள் தரப்படாதது போலவே.... எல்லா விசுவாசிகளும் அந்நிய பாஷை பேசுவதுமில்லை!*

*ஆகவே, பரிசுத்த ஜீவியத்திற்கோ அல்லது அவருடைய ஊழியத்திற்கோ "அந்நிய பாஷையை" ஓர் அத்தியாவசியமான வரமாக தேவன் கருதவில்லை என்பதை இந்த வசனம் வெளிப்படையாக நமக்கு கூறுகிறது. அதற்கு மாறாக, இதை முக்கியமான வரமாக தேவன் கருதியிருந்தால், இந்த வரத்தை தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுத்திருப்பார்!*

**சத்தியம் எண்:–9**

*"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்" என 1கொரிந்தியர் 13:1-ல் வாசிக்கிறோம்.*

**அன்பில்லாமல் அந்நியபாஷை பேசுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை!** *அந்நியபாஷை பேசுபவர்களிடத்தில் காணப்படும் பெருமையும், அந்நியபாஷை பேசாதவர்களை இவர்கள் தாழ்வாக காணும் மனப் பான்மையும்.... இவர்களின் அன்பின் தாழ்ச்சியையே காட்டுகிறது. பேரோசை கொண்ட வெண்கல சப்தத்திற்கு நாம் காதைப் பொத்திக் கொள்வதைப் போலவே, தேவனும் இவ்வித அன்பற்ற விசுவாசிகள் பேசும் அந்நியபாஷை சப்தத்திற்கு தன் காதைப் பொத்திக் கொள்கிறார்!!*

**சத்தியம் எண்:–10**

*"தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளா னாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம், நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்" என 1கொரிந்தியர் 13:8-10 வசனங்களில் வாசிக்கிறோம்.*

*கிறிஸ்துவின் வருகையில் நிறைவானது வரும்போது, அந்நிய பாஷை பேசவேண்டிய அவசியமேயிருக்காது! பரலோகத்தில் வேத அறிவும், தீர்க்கதரிசனமும் எவ்வாறு தேவையில்லையோ அதைப்*

*போலவே "அந்நியபாஷையும்" தேவையாய் இருக்காது!*

*ஆகவே இந்த பூமியில் நிலவும் குறைவான நிலைமைக்காக, அந்நியபாஷை தற்காலிகமாகத் தரப்பட்ட ஓர் வரமேயாகும். இந்த அந்நியபாஷை வரம் ஏன் இயேசுவிற்கு ஒருபோதும் தேவையாயிருக்கவில்லை என்பதற்கு இந்த வசனமே தெளிவான பதில் அளிக்கிறது. அவருடைய மனம்* **நிறைவான பரிசுத்தம்** *கொண்டதாயும், அவருடைய ஜீவியம் பிதாவோடு* **நிறைவான ஐக்கியம்** *கொண்டதாயும் எல்லா நேரங்களிலும் இருந்தபடியால்... குறைவான சூழலுக்குத் தேவையான அந்நியபாஷை இயேசுவிற்குத் தேவையற்றதாயிருந்தது!*

**சத்தியம் எண்:– 11**

*"அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்" என 1 கொரிந்தியர் 14:2 -ம் வசனத்தில் வாசிக்கிறோம்.*

*இங்கு குறிப்பிடப்பட்ட அந்நியபாஷை வரம், பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்பட்ட வரத்திற்கு முற்றிலும் வித்தியாசமானது என்பதை வெளிப்படையாகவே காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் அந்நியபாஷையில்* **ஜனங்களிடத்தில்** *பேசினார்கள், அதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். ஆனால் இங்கு குறிப்பிடப்பட்ட அந்நியபாஷைவரமோ, மனுஷரிடத்தில் பேசுவதாயிராமல் தேவனிடத்தில் பேசுவதாயிருக்கிறது. இவ்வாறு* **தேவனிடத்தில்** *அவன் பேசுகிறபடியால், அவன் என்ன பேசுகிறான் என்பதை ஒருவனும் அறிந்துகொள்ள முடியாது!*

**சத்தியம் எண்:– 12**

*"அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" என 1 கொரிந்தியர் 14:4-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.*

*ஒரு விசுவாசி ஆவிக்குரிய சோர்விலிருந்து ஸ்திரப்படுவதற்கு அந்நிய பாஷை வரம் அவனுக்கு உதவுகிறது.*

**சத்தியம் எண்:– 13**

*"நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்... சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரி*

*சனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?"* என பவுல் 1கொரிந்தியர் 14:5,6 வசனங்களில் வினவினார்.

**எல்லோரும்** *அந்நியபாஷை பேசும்படியே பவுல் விரும்பினார்! ஆகிலும், எல்லா விசுவாசிகளும் அந்நியபாஷை பேசவில்லை என்பதையே இந்த வசனம் மீண்டும் நமக்கு உறுதிப்படுத்துகிறது!*

இதேபோன்ற விருப்பத்தை 1கொரிந்தியர் 7:7-ல் பவுல் குறிப்பிடும் போது "**எல்லா மனுஷரும்** என்னைப்போலவேயிருக்க (திருமணமாகா திருக்க) விரும்புகிறேன்" எனக் கூறினார். இவ்வாறு திருமணமாகாமல் தனித்திருப்பதில் உள்ள சில நன்மைகளைப் பவுல் கண்டிருந்தார். அதேபோல், அந்நியபாஷை பேசுவதாலுண்டாகும் நன்மைகளையும் பவுல் கண்டிருந்தார். ஆனால், தேவன் தன்னுடைய சர்வஞானத்தின்படி சில விசுவாசிகளுக்கு மட்டுமே "திருமணமாகாமல் தனித்திருக்கும் வரத்தைத்" தந்ததுபோல்...... "அந்நியபாஷை பேசும் வரத்தையும்" இவ்விதமே சில விசுவாசிகளுக்கே தேவன் தந்திருக்கிறார் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். எல்லா விசுவாசிகளும் "பிரம்மச்சாரியாய்" இருக்கும்படி எதிர்பார்ப்பது எவ்வளவு மதியீனமோ...... அதேபோல, எல்லா விசுவாசிகளும் அந்நியபாஷை பேசும்படி எதிர்பார்ப்பதும் மதியீனமேயாகும்!!

சபைக்கூட்டங்களில் தீர்க்கதரிசனம் சொல்லுவதே அதிக பயனுள்ளதாயிருக்கும். தீர்க்கதரிசனம் சொல்லுவதென்பது, ஒருவன் தேவனுடைய வார்த்தையின் மூலமாய் பிறருக்கு "பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகப்" பேசுவதேயாகும் (1கொரி.14:3). இருப்பினும் சபையில் பேசப்படும் அந்நியபாஷை, வியாக்கியானம் செய்யப்பட்டால், அதுவும் தீர்க்கதரிசனத்தைப்போலவே சபைக்கு பக்திவிருத்தியுண்டாக்கும் என பவுல் கூறினார்.

**சத்தியம் எண்:-14**

*"நீங்கள் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் (நீங்கள் பேசிய அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்லப்படாவிட்டால்) பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்?...... அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத் தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்"* என 1 கொரிந்தியர் 16:9,13 வசனங்களில் வாசிக்கிறோம்.

*எனவே சபைக் கூட்டங்களில் பயன்படுத்தும் "அந்நியபாஷைகள்" கண்டிப்பாய் வியாக்கியானம் செய்யப்படவேண்டும்!*

**சத்தியம் எண்:– 15**

*"நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன, நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன், நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" என 1கொரிந்தியர் 14:14,15 வசனங்களில் வாசிக்கிறோம்.*

*ஒருவன் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது, அவன் என்ன ஜெபிக்கிறான் என்பதை மற்றவன் அறிந்துகொள்ள முடியாது. அவ்வாறிருப்பினும், ஒருவன் தன் சொந்த பாஷையில் எந்தளவிற்கு கருத்தோடு ஜெபிக்கிறானோ அல்லது பாடுகிறானோ.... அந்தளவிற்கு ஆவியோடு (அந்நியபாஷையில்) ஜெபிக்கவும், பாடவும் வேண்டுமென பவுல் உணர்ந்தார்!*

**சத்தியம் எண்:– 16**

*"உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன் இதற்காக என்தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" என 1கொரிந்தியர் 14:18-ல் வாசிக்கிறோம்.*

*தான் பெற்ற இந்த வரத்திற்காக பவுல் தேவனுக்கு நன்றியுள்ள வராயிருந்தார். ஆகவே, இந்த வரம் எவ்வளவாய்* **பவுலுக்கு உதவியிருக் கிறது** *என்பதைத் தெளிவாய் நாம் காண்கிறோம்.*

**சத்தியம் எண்:– 17**

*"அப்படியிருந்தும், நான்* **சபையிலே** *அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடு ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே அதிக விருப்பமாயிருக்கும்" என 1 கொரிந்தியர் 14:19ல் வாசிக்கிறோம்.*

*சபைக் கூட்டத்தில், நமக்குத்* **தெரிந்த பாஷையில்** *பேசுவதே எப்போதும் நல்லது!*

**சத்தியம் எண்:– 18**

*"அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது" என 1கொரி. 14:22ல் வாசிக்கிறோம்.*

*அன்று பெந்தெகொஸ்தே நாளைப்போலவே-இன்றும், அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கே ஓர் அடையாளமாக இருக்கிறது.*

**சத்தியம் எண்:–19**

*"ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய் கூடிவந்து, எல்லாரும்*

அந்நியபாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?'' என 1 கொரி. 14:23-ல் வாசிக்கிறோம்.

ஆகவே, சபைக்கூட்டத்தில் நாம் எல்லோரும் சேர்ந்து அந்நியபஷை பேசுவது பைத்தியக்காரத்தனமேயாகும்! ஏனெனில், இவர்கள் என்ன பேசுகிறார்களென ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது!! (சபையில் ஜனங்கள் கூடிவரும்போது, தனித்தனியாய் அந்நியபாஷை பேசுவதையே இந்த வசனம் தவறு என சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அதற்கு மாறாக, எல்லோரும் சேர்ந்து அந்நியபாஷையில் ஜெபித்துக் கொண்டிருப்பதை இந்த வசனம் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஏனெனில் அறிந்த பாஷையில் ஒருவர் அந்தரங்கத்தில் ஜெபிப்பதைக்கூட நாம் கவனிப்பதில்லையே!)

**சத்தியம் எண்:-20**

''நீங்கள் கூடிவந்திருக்கும் போது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷை பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான், சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது, யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்'' என 1 கொரிந்தியர் 14:26,27-ல் வாசிக்கிறோம்.

இவ்வசனம் கூறுகிறபடி, நாம் சபை கூடிவரும்போது இரண்டு அல்லது மூன்று பேருக்கு மேல் அந்நியபாஷை பேசக்கூடாது. மேலும் அவ்வாறு இரண்டு அல்லது மூன்று பேர் பேசினால் ''ஒவ்வொரு அந்நிய பாஷையும் வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்!'' வியாக்கியானம் செய்வதென்பது ''மொழிபெயர்ப்பிற்கு'' ஒப்பானது அல்ல, மொழி பெயர்ப்பு ''வார்த்தைக்கு வார்த்தை'' அப்படியே எடுத்துச் சொல்வதாகும், ஆனால் வியாக்கியானமோ ''ஒருவருடைய வார்த்தைகளுக்குப் பின்னால் அடங்கியிருக்கும் சிந்தைகளை'' வெளிப்படுத்துவதேயாகும்.

**சத்தியம் எண்:-21**

''இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நியபாஷைகளைப் பேசுகிறதற்கும் தடை பண்ணாதிருங்கள், சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது'' என 1கொரிந்தியர் 14:-39,40-ல் வாசிக்கிறோம்,

இந்த வாக்கியங்களை "முடிவுரையாக" பவுல் எழுதியிருப்பதை நாம் காண முடிகிறது, இவ்வசனம் நமக்கு எச்சரிக்கிறபடி அந்நியபாஷை பேசும் வரத்தை அப்பியாசப்படுத்துகிறவர்களை நாம் ஒருபோதும் தடை செய்யக்கூடாது. ஆனால் நீங்கள் வரத்தை விரும்பினால், அந்நியபாஷை வரத்தைவிட 'தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தையே' அதிகமாய் நாடுங்கள் என வேதம் நமக்கு ஆலோசனையாகக் கூறுகிறது.

**அந்நியபாஷை பேசுவதில் உண்மையும். . . போலியும்!**

அந்நியபாஷை வரத்தின் பின்னணியில், நம் கண்களுக்குப் புலப்படாத "ஓரளவு" இரகசியம் இருக்கத்தான் செய்கிறது. இன்று இந்த வரத்தைப் பெற்றிருப்பவர்கள் நேர்மையுள்ளவர்களாயிருந்தால், இந்த உண்மையை அவர்கள் அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். வேதம் கூறுகிறபடி நாம் எல்லாவற்றையும் அறிந்திட முடியாது! நாம் யாவரும் குறைவாய்த்தான் அறிந்திருக்கிறோம் (1 கொரிந்தியர் 13:12).

கடந்த 25 - ஆண்டுகளாய் அந்நியபாஷை பேசும் நான், இந்த வரத்தைக்குறித்து என் சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டதைக் கூறவிரும்புகிறேன்:

ஒருநபர் அந்நியபாஷை பேசும்போது, அவருடைய ஆவி (இருதயம்) ஏதோ பாஷைகளை **நேரடியாக இருதயத்திலிருந்து** தன் வாய் மூலம் பேசுவதையே அறிகிறோம். அதாவது, இவ்வாறு பேசுவது அவருடைய மனதைத் தள்ளிவைத்துவிட்டுப் பேசுவதாகவேயிருக்கிறது.

**இதனிமித்தமாய் அவன் தன் இருதயத்திலிருக்கிற யாவற்றையும் தேவனிடத்தில் ஊற்றி கொட்டிவிடுகிறான்! அது அவனுடைய மகிழ்ச்சியின் பெருக்கமாகவோ அல்லது ஏதோ துக்கத்தினாலோ அல்லது மனச் சோர்வினாலோ ஏற்பட்ட பாரமாகவோ இருக்கலாம்!!**

இதன் மூலமாய், அவனுடைய இருதயத்திலிருந்த பாரமான அழுத்தம் அவனை விட்டுப் போய்விடுகிறது. இவ்வாறாகவே அவன் பக்தி விருத்தியடைகிறான். நாம் ஏற்கனவே அப்போஸ்தலர் 2:4-ல் கண்டதுபோல் ஒருவன் அந்நியபாஷை பேசும் போது, அந்த நபர்தான் பேசுகிறாரேயல்லாமல் பரிசுத்த ஆவியானவர் பேசுவதில்லை! ஒருவன் எப்படி தனக்குத் தெரிந்த பாஷையைப் பேசுவதற்கு வார்த்தைகளை அமைக்கிறானோ, அதைப் போலவே அந்நியபாஷை பேசும் விசுவாசியும் வார்த்தைகளைக் கூட்டிச் சேர்த்துப் பேசுகிறான்!

**இங்குள்ள ஒரே வித்தியாசம் யாதெனில், அந்நியபாஷை பேசுபவர் தனக்குத் தெரிந்த பாஷையை பேசாததினால், ஆண்டவர் மீது தன் முழு கவனத்தையும் வைத்து, தன் மனதை (MIND) உதறிவிட்டு தன் இருதயத்திலிருந்து நேரடியாக வார்த்தைகளைத் தன் வாயின் மூலமாய் பேசுகிறார்!**

அவ்வாறு அவன் பேசுவதின் அர்த்தம் அவனுக்குப் புரியாவிட்டாலும், 'தன்னுடைய இருதயத்திலுள்ள ஏக்கங்களையும் பாரங்களையும்' தேவன் இச்சமயத்தில் அறிந்துகொண்டார் என்பதை நன்றாய் உணர்ந்திருப்பான்.

நெஞ்சத்தில் பாரம் உண்டாகும் சமயமெல்லாம், அந்தச் சுமையை நாம் மேற்கண்டதுபோல் தேவனிடத்தில் இறக்கி வைப்பது ஒரு விசுவாசிக்கு மிகுந்த பெலனுள்ள நேரமாகும்! குறிப்பாய், ஒரு விசுவாசியின் மனம் (MIND) தன்னுடைய சொந்த பாஷையில் ஜெபிப்பதற்கு களைப்படைந்திருக்கும் சமயமே, **அந்நியபாஷையின் ஜெபம் அவனுக்கு மிகுந்த ஆறுதலாயிருக்கிறது.** இது எவ்வாறு கிரியை செய்கிறது என்பதை நம்மால் விளக்கமுடியாவிட்டாலும், அந்தக் கிரியையை நாம் உணர முடியும்!

இப்போது **வியாக்கியான வரத்தைக் குறித்துப்** பார்ப்போம். நாம் ஏற்கனவே கண்டது போல் அந்நியபாஷையை வியாக்கியானம் செய்தல், தீர்க்கத்தரிசனம் சொல்லுவதற்கு சமமாகும். ஆகவே ஏற்கனவே தீர்க்கதரிசன வரம் பெற்ற ஒருவனுக்கு, ஆவியானவர் இந்த வரத்தையும் சேர்த்துத் தருவதைப் பொதுவாய் காண்கிறோம். ஒரு சபைக்கூட்டத்தில், யாரேனும் ஒருவர் அந்நியபாஷை பேசும்போது, தீர்க்கதரிசன வரம் பெற்ற ஒருவர் (அது அநேகமாய் மூப்பர்களில் ஒருவராய் இருக்கக்கூடும்), அவர் தேவனுடைய வெளிச்சத்தில் உண்மையாய் நடந்து வருபவராயிருந்தால், அந்த அந்நியபாஷை தேவனிடமிருந்து புறப்பட்ட மெய்யானதொன்றாயிருக்கும் பட்சத்தில், அதைக்குறித்த எண்ணங்களின் பிரதிபலிப்புகள் தன் மனதில் பளிச்சிடுவதை அந்த மூப்பர் காண்பார்! உடனே அவர், அவ்வேளையில் தான் பெற்ற எண்ணங்களை தன் சொந்த பாஷையினால் பேசி வெளிப் படுத்துவார்! ஏனெனில் இது ஓர் மொழி பெயர்ப்பாயில்லாமல் வியாக்கியானமாகவேயிருக்கிறது!

இவ்வேளையில், வியாக்கியான வரத்தைப் பெற்ற இன்னொரு மூப்பர் இதே அந்நியபாஷையை வியாக்கியானம் செய்தால், அதுவும் முதல் வியாக்கியானத்திற்கு ஒப்பானதாகவே இருக்கும்! சபையிலுள்ள இரண்டு மூப்பர்கள் தேவனோடு கொண்ட தொடர்பில் அனல் கொண்டவர்களாயிருந்தால் இவ்வாறு சம்பவிப்பதை நாம் காணலாம்!!

தேவனிடத்திலிருந்து உண்டாகும் எந்த வெளிச்சமும் வேதத்தில் எழுதப்பட்ட சத்தியங்களுக்கு ஒருபோதும் முரணாயிருக்காது. எல்லா உண்மையான தீர்க்கதரிசனங்களும் வேத வாக்கியங்களுக்கு ஒத்திருப்பதைப் போலவே, உண்மையான எல்லா வியாக்கியானமும் வேதவசனத்திற்கு ஒத்ததாகவேயிருக்கும்!

ஆவிக்குரிய வரங்களைக் குறித்து மாறுபாடான கருத்துகளைக் கொண்ட சிலர் கீழ்கண்ட கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்: "ஒரு கூட்டத்தில் நடந்த அந்நியபாஷை வியாக்கியானத்தை ஒரு ஒலி நாடாவில் பதிவு செய்து, இதே வரத்தைப் பெற்ற வேறொரு இடத்திலுள்ள நபரைக்கொண்டு வியாக்கியானம் செய்யச் சொன்னால், அந்த வியாக்கியானம் முதலில் வியாக்கியானம் செய்ததற்கு ஒப்பாகவே இருக்குமா?" இந்தக் கேள்விக்கு விடையாதெனில் "வியாக்கியானம் செய்த **இரண்டு நபர்களும் ஒரேவிதமாய் கர்த்தரின் சிந்தையைக் கொண்டிருந்தால்,** அவர்களின் வியாக்கியானம் ஒரே செய்தியாகத்தான் இருக்கும்" என்பதேயாகும். ஆனால் இவர்களின் வியாக்கியானம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்தால், கர்த்தரின் சிந்தையைப் பூரணமாய் அறிந்து கொள்வதற்கு, வியாக்கியானம் செய்த ஒருவரோ அல்லது இரண்டு பேருமோ தங்கள் ஆண்டவரோடு பூரணமான தொடர்பு கொண்டவர்களாய் இல்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது. இது ஒன்றும் நூதனமான பெரிய காரியம் அல்ல! ஏனெனில், ஆண்டவரின் சிந்தையை **பூரணமாய்** அறிந்துகொள்ளும் அளவிற்கு இந்த உலகிலுள்ள எந்த விசுவாசியும் அவரோடு அனல் கொண்ட பூரண தொடர்புடையவர்களாய் இல்லை என்பதேயாகும்!!

இந்த உண்மையை, கீழ்காணும் உதாரணம் உங்கள் சந்தேகத்தை முற்றிலும் அகற்றி நிரூபித்துக்காட்டும் என நம்புகிறேன்: ஒரு கூட்டத்தில் நீங்கள் செய்தி தர வேண்டியதிருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள்! அவ்வேளையில் ஒரு குறிப்பிட்ட செய்தி உங்கள் இருதயத்தை நிரப்ப...... நீங்களும், அக்கூட்டத்திற்கு அந்தச் செய்தியே கர்த்தருடைய பாரம் என ஊர்ஜிதம் செய்கிறீர்கள்! ஆனால் திடீரென்று ஏற்பட்ட சூழ்நிலையினால், உங்களால் அந்தக் கூட்டத்திற்குச் செல்ல முடியாமல் வேறொருவர் அங்கு செய்தி கொடுத்துவிட்டார்! இங்கு துல்லியமாய் சொல்ல வேண்டுமென்றால், அந்த சகோதரன் வேறொரு வேத வாக்கியத்தை வைத்தே அங்கு பேசியிருந்தாலும், உங்கள் இருதயத்திலிருந்த "**அதே செய்தியைத்தான்**" பிரசங்கித்திருக்க வேண்டும்! அவ்விதமாய் அந்த சகோதரன் பேசியிருக்கவில்லையென்றால், "உங்களில் ஒருவர்" கர்த்தருடைய மனதைப் பூரணமாய் அறிந்து கொள்ளும் இடத்தில் இல்லை என்பதையே அது சுட்டிக் காட்டுகிறது. ஆகவே, விசுவாசிகள் தங்கள் சொந்த பாஷையில் செய்தி கொடுக்கும் இந்தப் பரீட்சையில்கூட 'தோல்வியடைவதை' நாம் காண்கிறோமே!

ஆகவேதான், ஒரு தீர்க்கதரிசியின் செய்தியைக்கூட நிதானித்து சோதிக்கும்படி வேதம் நமக்குப் போதிக்கிறது (1கொரி 14:29). இதைப் போலவே, அந்நியபாஷையின் எல்லா செய்திகளையும் அதன்

*வியாக்கியானங்களையும் நாம் நிதானித்து சோதித்துப்பார்க்க வேண்டும். இங்கு நாம், எதை நிதானித்து சோதிக்க வேண்டும்? கூட்டத்தில் பேசப்பட்ட தீர்க்கதரிசனமோ, அந்நியபாஷைகளோ அல்லது வியாக்கியானங்களோ "வேதத்தின்படியும்" "கர்த்தரிடத்திலிருந்தும்" உண்டானதுதானா? இல்லையா? என்பதை என்னுடைய ஆவி, பரிசுத்தாவியோடு இணைந்து சாட்சி கொடுக்க வேண்டும்!*

*1யோவான் 4:1-ம் வசனத்தில், "எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்" என்ற எச்சரிக்கையை நாம் காண்கிறோம். ஆகவே, அந்நிய பாஷைகளையோ அல்லது வியாக்கியானங்களையோ கூட்டங்களில் நாம் எப்போதெல்லாம் கேட்கிறோமோ, அப்போதெல்லாம் அவைகளை* **நம்முடைய ஆவியின் சாட்சியோடு** *சோதித்துப் பார்க்க வேண்டும்! அனேக சமயங்களில், நாம் கேட்கும் "எழுச்சிமிகு இயற்கைக்கு அப்பாற்பட்ட அந்நியபாஷைகள்" அனேகமாய், தேவனிடமிருந்து வராததாயிருக்கக்கூடும். ஏதோ சில காரணத்தினிமித்தம், ஒரு தீர்க்கதரிசனத்தை அல்லது அந்நியபாஷையை அல்லது வியாக்கியானத்தின் ஒரு பகுதியை அல்லது முழுவதையுமே கூட ஏற்றுக்கொள்வதற்கு* **நம்முடைய ஆவியில் ஒருவிதமான தயக்கம்** *ஏற்பட்டால், அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் உதறித் தள்ளுவதற்கும் நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும்!*

*இவ்வாறு இல்லாமல், "இயற்கைக்கு அப்பாற்பட்ட எழுச்சியான யாவற்றையும் எந்தக் கேள்வியும் கேட்காமல் அப்படியே ஏற்றுக்கொண்டதின்" விளைவுதான், நாம் வாழும் இந்த நூற்றாண்டு கிறிஸ்தவ உலகில் ஏற்பட்டிருக்கும் ஏராளமான குழப்பங்களுக்குக் காரணமாயிருக்கிறது! அதுமாத்திரமல்லாமல், ஆண்டவருடைய நாமம் சொல்லி முடியா அளவிற்கு கனவீனமடைந்துமுள்ளது!*

*அப்போஸ்தலர் நடபடிகளின் காலத்தில் அந்நியபாஷை பேசிய எல்லாத் தருணங்களிலும் நாம் கண்ட, கீழ்காணும் உண்மைகளை எப்போதும் மனதில் வைத்திருப்பது நல்லது:*

*1)அவர்கள் அந்நியபாஷை பேசியபோதெல்லாம், வலுக்கட்டாயமாயில்லாமல் "தானாகவே" (SPONTANEOUS) பேசினார்கள்!*

*2)அவர்கள் சபையில் அந்நியபாஷை பேசியபோதெல்லாம், ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் (ALL) பேசினார்கள்!*

*3)அவர்கள் அந்நியபாஷை பேசியபோதெல்லாம், எவ்வாறு அந்நியபாஷை பேச வேண்டுமென்ற பயிற்சியோ அல்லது வற்புறுத்தலோ அல்லது வேறு எந்தக் குறிப்புகளோ அவர்களுக்குத் தரப்படவில்லை!*

*ஆனால் இன்று, அநேக இடங்களில் மேற்கண்ட குணாதியங்களில் ஒன்றுகூட காணப்படுவதில்லை. எங்கெல்லாம் அந்நியபாஷை வரம் எந்தப் பயிற்சியுமில்லாமல் தானாகவே பேசப்படுகிறதோ, அதுவே "உண்மையானதாயிருக்கக்கூடும்" என நாம் முடிவு செய்யலாம்.*

*இன்றைய நாள் வரை நான் கேட்ட "அந்நியபாஷையில்" மிகவும் அற்பமான சதவீதமே "உண்மையானது" என என்னுடைய ஆவி சாட்சி கொடுத்திருக்கிறது! மற்ற அனைத்தும், இந்த வரத்தை அப்படியே "காப்பியடிக்க" முயற்சித்ததாகவே நான் உணருகிறேன். தங்கள் குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கோ அல்லது அவர்களை கவர்ச்சிப்பதற்கோ இந்த வரத்தை காப்பியடிக்கவே ஜனங்கள் உந்தப் படுகிறார்கள்!! இன்னும் கணிசமான சதவீதத்தினரின் அந்நியபாஷை "சாத்தானின் ஆவியிலிருந்து" உருவானதாயிருக்கக்கூடும் என்று கூட நான் கருதியிருக்கிறேன்!! இவ்வித என்னுடைய கண்ணோட்டம், பல தேசங்களில் நான் கண்ட அநேக ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள கனியையும் அவர்களின் முடிவையும் ஆதாரமாய் கொண்டவைகளேயாகும்!*

**இன்றைய அநேக சபைகளில், அந்நியபாஷையில் பேசி...... அந்நிய பாஷையில் பாடும் நிகழ்ச்சிகள் "காட்சி அரங்கேற்றமாகவே" இருப்பதை நாம் காண்கிறோம். இவ்வித காட்சி அரங்கேற்றத்தில் பரவசமடைவது "சிறுகுழந்தைகளின்" குணாதிசயமேயாகும்!**

*நாம் வழும் இக்காலத்தில், விசுவாசிகளிடம் அதிகபட்சமான பொருளாதார லாபத்தைச் சுரண்டுபவர்கள், "அந்நியபாஷை பேசுகிறோம்" என தங்களை மேன்மை பாராட்டும் பிரசங்கிகளும் பாஸ்டர்களுமே என்பதை நாம் அனைவருமே நன்கு அறிந்திருக்கிறோம்! இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள அனேக "**மார்க்க கண் மூடிகள்**"(Cults), இந்த அந்நியபாஷை பேசும் குழுவினரிடமிருந்தே உருவெடுத்திருக்கிறார்கள்!*

*ஆகவே, விசுவாசிகளாகிய உங்கள் யாவருக்கும் நான் கூறும் புத்திமதியாதெனில்: "அந்நியபாஷை பேசுதல் மற்றும் சுகமளிக்கும் வரங்களை எந்த சபையிலெல்லாம் முக்கியத்துவப்படுத்துகிறார்களோ, அந்த சபைகளை விட்டு வெளியே வந்துவிடுங்கள்! ஏனெனில் இது போன்ற சபையினர் அபாயகரமான எதிர்முனைக்குச் செல்வது மாத்திர மல்லாமல், இங்குள்ள தலைவர்கள் ஆவிக்குரிய சிந்தை கொண்டவர் களாயும் இருப்பதில்லை! இவர்களுக்குப்பதிலாய்,*

**எந்த சபை பரிசுத்தத்தையும், சீஷர்களை உருவாக்குவதையும் முக்கியப் படுத்தி..... அதோடு, உண்மையான அந்நியபாஷை பேசும் வரத்தை ஏற்றுக் கொண்டு..... உங்கள் பணத்தை இச்சிக்காமலும், உங்கள் வாழ்க்கையை**

**ஆட்டிப்படைக்க விரும்பாமலும் இருக்கிறதோ, அந்த சபையோடு ஐக்கியப்படுவதற்கே நாடுங்கள்".**

*காரியத்தின் கடைத்தொகையாய் "அந்நியபாஷையைக் குறித்த" முடிவான ஆலோசனைகளைக் கேளுங்கள்:*

*"தேவன் உங்களுக்கு அந்நியபாஷை கொடுத்திருந்தால், அதைப் பெற்றுக்கொண்டு அப்பியாசியுங்கள். நீங்கள் தேவனோடு தனித்திருக்கும் போது, குறிப்பாக உங்கள்* **மகிழ்ச்சியினால்** *பொங்கும் போதோ அல்லது உங்கள் இருதயம்* **பற்பல சோர்வினால்** *பாரமடையும் போதோ, இருதயத்திலிருந்து தேவனிடத்தில் அந்நிய பாஷையினால் பேசுங்கள்! இவ்வாறு பேசும்படியான வரம் உங்களிடத்தில் இல்லை யென்றால் அதைக்குறித்து சஞ்சலம் அடையாதிருங்கள். கர்த்தரிடத்திலிருந்து இந்த வரத்தைப் பெறுவதற்கு எந்த நேரத்திலும் ஆயத்தமாயிருங்கள். இந்த வரத்திற்கு விரோதமாகவோ அல்லது எப்படியும் இதைப்பெற்றுவிட வேண்டுமென்ற வேகத்திலோ ஒருபோதும் செயல்படாதிருங்கள். எப்படியும் பெறவேண்டும் என்ற பதட்டம் இல்லாத பட்சத்தில் இந்த வரத்தை நீங்கள் பெற வேண்டுமென தேவன் விரும்பினால், அவர் அதை நிச்சயம் உங்களுக்குத் தருவார். மேலும் கிறிஸ்தவ உலகிலே நீங்கள் காண்கிற அல்லது கேட்கிற எதையும் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டது என அப்படியே நம்பிவிடாதிருங்கள்.* **ஒவ்வொன்றையும் சோதித்துப் பாருங்கள்.** *தேவன் உங்களுக்குத் தந்த பகுத்தறிவையும் ஐம்புலன்களையும் பயன்படுத்துங்கள். உங்களுக்கு அந்நிய பாஷை வரம் இல்லையென்றால், அதைப் பெற்றிருப்பவர்களை விட நீங்கள் தாழ்வானவர்கள் என எண்ணாதிருங்கள். இந்த வரத்தை நீங்கள் பெற்றவராயிருந்தால், இந்த வரம் இல்லாதவர்களைக் காட்டிலும் உங்களை உயர்வாகவும் அல்லது ஆவிக்குரியவர்களாகவும் எண்ணாதிருங்கள். பவுலும் கொரிந்திய கிறிஸ்தவர்களும் அந்நியபாஷை பேசினார்கள். ஆனால், பவுலோ ஆவிக்குரிய வல்லவராயிருந்தார்! கொரிந்தியக்கிறிஸ்தவர்களோ மாம்ஷீகமாய் இருந்தார்கள்!!*

### இங்கு அதிக முக்கியத்துவம் எது?

**நம் யாவருக்குமே இங்கு அதிக முக்கியத்துவமாய் இருக்க வேண்டியது "பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பி இருப்பதே" ஆகும்.**

*பரிசுத்த ஆவி அபிஷேகத்தின் அடையாளம் "வல்லமை" (POWER) மாத்திரமேயாகும்! அந்நியபாஷை பேசுவது அல்ல!! (அப்.1:8)*

*நாம் எவ்வாறு நம்முடைய பாவ மன்னிப்பை நம்முடைய சொந்த தகுதியின்படியல்லாமல், கிறிஸ்துவின் தகுதியின்படி* **விசுவாசத்தினால்**

**பெற்றோமோ,** *அதைப் போலவே பரிசுத்த ஆவியையும் விசுவாசத்தினாலேயே நாம் பெறவேண்டும் (யோவான் 7:37-39). அதாவது, பரிசுத்த ஆவியின் வரத்தை அல்லது பரிசை* (GIFT) *நம்முடைய உபவாசத்தினாலோ அல்லது நீடிய ஜெபத்தினாலோ அல்லது வேறெந்த கிரியையினாலோ பெற முடியாது. ஏனெனில், 'பரிசுத்தாவியானவர்' நமக்கு ஒரு பரிசாகவே இருக்கிறார்! (அப்போஸ்தலர் 2:38).*

*பசியுள்ள தன் மகனுக்கு இவ்வுலகத்தின் எந்தத் தகப்பனும் உடனடியாக உணவு தருவதைப் போலவே, தன்னிடத்தில் கேட்பவர்களுக்கும் 'உடனடியாகப் பரிசுத்தாவியைத் தருகிறார்' என்பதையறிந்து, தேவனிடம் பரிசுத்தாவியைக் கேட்டு-உடனடியாக விசுவாசத்தில் பெற்றுக் கொண்டு-அவருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்தவர்களாய் நாம் கடந்து செல்ல வேண்டும் (லூக்கா 11:13). நாம் பரிசுத்தாவியைப் பெற்றதைக் குறித்த நிச்சயம் இல்லாதிருந்தால், அந்த நிச்சயத்தை தேவன் நமக்குத் தரும்படி ஜெபித்தால்...... அந்த நிச்சயத்தை நமக்கு தேவன் தர ஒருபோதும் மறுக்கவே மாட்டார்!*

*இவ்வுலகத்தில் உன்னதமான கிறிஸ்தவர்களாய் திகழ்ந்தவர்கள், அந்நியபாஷை பேசினார்களோ இல்லையோ.... ஆனால், இவர்கள் தங்கள் ஆண்டவராகிய இயேசுவின் மீது முழு இருதயமான, சொல்லி முடியா நேசம் கொண்டிருந்தார்கள்! பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல் போன்ற சீஷர்கள் அந்நியபாஷை பேசினார்கள்! ஆனால், நமக்குத் தெரிந்தவரை ஜான்வெஸ்லி, சார்லஸ் பின்னி, D.L.மூடி, A.B.சிம்ஸன், வில்லியம் பூத், C.T.ஸ்டட், வாட்ச்மேன் நீ போன்ற தேவ மனிதர்கள் ஒருபோதும் அந்நியபாஷை பேசியதேயில்லை! ஆனால், அவர்கள் அனைவரும் தங்கள் ஆண்டவரை முழுஇருதயமாய் அன்பு கூர்ந்தார்கள்! அவர்கள் அனைவரும்* **சிலுவையின் வழியில்** *நடந்து சென்றார்கள்! ஆம், இவைகள்தான் அவர்கள் வாழ்வின் "மையமாய்" இருந்தது...... மற்ற அனைத்தும் அவர்களுக்கு இரண்டாவதாகவே இருந்தது!!*

*இந்த உத்தம தேவமனிதர்களின் நல்ல மாதிரியையே நாமும் பின்பற்றினால், நாம் ஒருபோதும் தவறாய் சென்றுவிடவே மாட்டோம்.*

*கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ, அவன் கேட்கக்கடவன்!!*